# பிரதேச சபைகள் முன்னுதாரணத் துணைவிதிகள்

I. கழிவுநீர் அகற்றல் பற்றிய துணை விதிகள்

II. முட்புதர்கள் மற்றும் குப்பைகூழங்கள் இன்றி காணியினைப் பராமரித்தல் தொடர்பான துணைவிதிகள்

III. மாடுகளை அறுக்கும் இடம் தொடர்பான துணைவிதிகள்

IV. கட்டிடங்கள் அமைத்தல் தொடர்பான துணை விதிகள

V. நீர் வழங்கல் மற்றும் நீர் வழங்கல் திட்டங்கள் தொடர்பான துணைவிதிகள

VI. பொது பாதைகள் மற்றும் பொது இடங்களில் நடந்து கொள்ளுதல் மற்றும் சுற்றித்திரிதல் தொடர்பான துணைவிதிகள்

VII. அசையாச் சொத்துக்கள், பாதைகள் மற்றும் வீதிகளை முறையற்ற விதத்தில் பிடித்தல், தடங்கல்களை ஏற்படுத்துதல் தொடர்பான துணைவிதிகள்

VIII. பொது மைதானம் தொடர்பான துணைவிதிகள்

IX. பிரதேச சபையினது கடன்கள் தொடர்பான துணைவிதிகள்

X. நுளம்புகள் மற்றும் நோய்க்கிருமிகளை அழித்தல் தொடர்பான துணைவிதிகள

XI. வரிப்பணம் மற்றும் கட்டணங்களை விதித்தல், அறவிடுதல் தொடர்பான துணைவிதிகள்

XII. ஒலிபெருக்கி உபகரணங்களை இயக்குதல் தொடர்பான துணைவிதிகள்

XIII. நடமாடும் வியாபாரிகள் தொடர்பான துணைவிதிகள்

XIV. மலசலகூடங்கள் தொடர்பான துணைவிதிகள்

XV. மிருக வதைகளைத் தடுத்தல் தொடர்பான துணைவிதிகள

XVI. உணவுப் பொருட்களை விற்பனை செய்தல் தொடர்பான துணைவிதிகள

XVII. பாற்பண்ணைகள் மற்றும் பால் விற்பனை பற்றிய துணை விதிகள்

XVIII. தங்குமிடங்கள் பற்றிய துணை விதிகள்

XIX. நூலகங்கள் தொடர்பான துணைவிதிகள

XX. பொதுவான குளிக்கும் இடங்கள் தொடர்பான துணைவிதிகள்

XXI. வாகனங்களைச் செலுத்துதல் தொடர்பான துணைவிதிகள்

XXII. சிற்றுண்டிச்சாலைகள் தொடர்பான துணைவிதிகள்

XXIII. வன விலங்குகள் மற்றும் காட்டுப் பறவைகள் தொடர்பான துணைவிதிகள்

XXIV. தொற்று நோய் மற்றும் தொடுகை நோய் பற்றிய துணை விதிகள

XXV. தனிப்பட்ட கிணறுகளை அமைத்தல் தொடர்பான துணைவிதிகள

XXVI. பொதுச் சந்தைகளைக் கொண்டு நடாத்துதல் பற்றிய துணை விதிகள்

XXVII. பிரதேச சபை நியாயாதிக்க பிரதேசத்திற்குள் வாகனங்களை நிறுத்தி வைத்தல் தொடர்பான துணை விதிகள

XXVIII. குளிர்பானத் தொழிற்சாலைகள் பற்றிய துணை விதிகள்

# I. கழிவுநீர் அகற்றல் பற்றிய துணை விதிகள்

1. 1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 126ஆவது பந்தியின் (ix) உபபந்தியின் கீழ் இத்துணைவிதிகளை உருவாக்குவதற்குப் பிரதேச சபைகளுக்கு அதிகாரம் கிடைத்துள்ளது.

2. இத்துணை விதிகள் பிரதேச சபை நியாயாதிக்கப் பிரதேசத்தினுள் கழிவுநீர் அகற்றல் சேவையைக் கொண்டு நடாத்துதல், அச்சேவைகளை முறைமைப்படுத்துதல், அதனுடன் தொடர்புடைய கட்டணங்களை விதித்தல் தொடர்பான துணை விதிகளென எடுத்துக்காட்டப்படும்.

3. இத்துணை விதிகள் பிரதேசசபை கழிவுநீர் அகற்றல் தொடர்பான துணை விதிகளெனக் கருதப்படுதப்படும்.

4. பிரதேச சபை நியாயாதிக்கப் பிரதேசத்தினுள் (இங்கு இதற்குப் பின்னர் நியாயாதிக்கப் பிரதேசம் எனக் குறிக்கப்படும்) ஏதேனும் வளவொன்றின் உரிமையாளரால் நிருமாணிக்கப்படுகின்ற எந்தவொரு மலசலகூட குழியும் அல்லது கழிவுநீர் தொட்டியும் பிரதேச சபையின் தலைவரால் அனுமதிக்கப்பட்ட திட்டத்திற்கமைவாக இருத்தல் வேண்டும்.

5. இத்துணைவிதிகளை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் தலைவரால் அனுமதிக்கப்பட்டுள்ள திட்டத்திற்குப் புறம்பாக நிருமாணிக்கப்படும் மலசலகூடக் குழி அல்லது கழிவுநீர் தொட்டி தொடர்பாக, அவ்விடத்தின் உரிமையாளருக்கு அல்லது வசிப்பவருக்கு தலைவரால் எழுத்துமூலம் ஒப்படைக்கப்படுகின்ற அறிவித்தலொன்றின் மூலம், அதில் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதிக்குள், உரிய மலசலகூடக் குழியை அல்லது கழிவுநீர் தொட்டியை அனுமதிக்கப்பட்ட திட்டத்திற்கு அமைவாக நிருமாணிக்குமாறு கட்டளையிட முடியும்.

6. நியாயாதிக்கப் பிரதேசத்தினுள் கழிவுநீர் அகற்றல் சேவைகளைப் (கல்லி சேவை) பேணிச் செல்லும் பிரதேச சபையானது, அச்சேவைக்காக அறவிடப்படுகின்ற கட்டணங்களை காலத்திற்குக் காலம் சபை மூலம் தீர்மானம் செய்து வர்த்தமானியில் வெளியிடுதல் வேண்டும்.

7. கழிவுநீர் அகற்றல் சேவைகளைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்த்து விண்ணப்பிக்கின்ற எந்தவொரு நபரும், நகரசபையினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற செயன்முறைகளுக்கு அமைவாக, அதற்கு விண்ணப்பித்தல் வேண்டும்.

8. மதத்தலங்கள், அரச பாடசாலைகள், அல்லது கழிவுநீர் அகற்றல் சேவைகளுக்காகக் கட்டணங்கள் அறவிடப்படக்கூடாது என பிரதேச சபையினால் ஏலவே தீர்மானிக்கப்பட்டுள்ள இடங்கள் தவிர, கழிவுநீர் அகற்றல் சேவைகளை எதிர்பார்க்கின்ற, நியாயாதிக்கப் பிரதேசத்திற்குள் உள்ள வேறு எந்தவொரு நபரும் மேலே 7ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் விண்ணப்பித்திருந்தால் மற்றும் அதற்கு உரியதாக மேலே 6ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் கட்டணமொன்றை சபைக்குச் செலுத்தியிருந்தால் அன்றி, கழிவுநீர் அகற்றல் சேவையொன்றை வழங்குதல் கூடாது.

9. கழிவுநீர் அகற்றல் சேவைகளுக்காக நபர்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும்போது, அவை பெறப்படுகின்ற வரிசைக்கிரமத்திற்கமைய பதிவேட்டில் பதியப்பட வேண்டுமென்பதுடன், விசேட காரணங்களின் அடிப்படையில் தலைவர் திருப்தியடையும் சந்தர்ப்பங்கள் தவிர, இயலுமானவரையில் பதிவேட்டில் பதியப்பட்ட வரிசைக்கிரமத்தில் கழிவுநீர் அகற்றல் சேவைகளை வழங்குதல் வேண்டும்.

10. கழிவுநீர் அகற்றல் சேவைகளுக்காக உரிய வளவிற்குள் கழிவுநீர் அகற்றல் இயந்திரங்களைக் கொண்டு செல்வதற்காக உரிய பிரவேச வழிகளை ஒதுக்கி வைத்திருக்கவேண்டியது விண்ணப்பதாரரது கடமையாவதுடன், அவ்வாறு ஒதுக்கப்படாத சந்தர்ப்பங்களில், உரிய கட்டணங்களைச் செலுத்தியிருந்தாலும், உரிய சேவையை வழங்க முடியாமற் போனதன் காரணமாக ஏற்படுகின்ற எந்தவித நட்டத்தினையோ அல்லது பொறுப்பினையோ பிரதேச சபை ஏற்காது என்பதுடன் அறவிடப்பட்ட கட்டணத்தில் சபைக்கு ஏற்பட்ட செலவுகளைக் கழித்துக் கொண்டு மிகுதியை விண்ணப்பதாரருக்குச் செலுத்துதல் வேண்டும்.

11. பிரதேச சபையானது எந்தவொரு நபருடனும் எந்தவொரு காலப்பகுதிக்காகவும் அதற்காக விசேட நிபந்தனைகளுடன் கூடிய ஒப்பந்தமொன்றின் கீழ் கழிவுநீர் அகற்றல் சேவைகளை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்திருப்பின், அவ்வாறு இணங்கிக் கொள்ளப்பட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் செயற்படுவதற்கு இத்துணைவிதிகளின் எந்தவொரு ஏற்பாடும் தடங்கலாக இருத்தல் கூடாது.

12. பதங்கள் சம்பந்தமாக வேறு பொருள்கோடல் அவசியப்பட்டாலேயொழிய இப்பகுதிக்கான துணைவிதிகளில் -

‘‘தலைவர்’’ என்பது, அக்காலப்பகுதியில் பிரதேச சபையின் தலைவர் பதவியை வகிப்பவரையும்,

‘‘கழிவுநீர் அகற்றல் சேவை’’ என்பது எந்தவொரு வளவிற்குள்ளும் அமைந்துள்ள மலசலகூடக் குழி, குப்பைத் தொட்டி அல்லது கழிவுநீர் அல்லது கழிவுகள் சேருவதற்காக அமைக்கப்பட்டுள்ள கழிவுத் தொட்டிகளுக்குள் சேகரிக்கப்பட்டுள்ளவற்றை அதிலிருந்து அகற்றுவதற்காக செய்யப்படுகின்ற சேவையையும்;

‘‘நபர்’’ என்பது எந்தவொரு நபரையோ, கம்பனியையோ, கூட்டுத்தாபனத்தையோ அல்லது அரசிற்குச் சொந்தமான நிறுவனத்தினையோ;

குறிக்கும்.

## II. முட்புதர்கள் மற்றும் குப்பைகூழங்கள் இன்றி காணியினைப் பராமரித்தல் தொடர்பான துணைவிதிகள்

01. 1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 126ஆவது பந்தியின் (ix) (என்) பந்தியின் கீழ் இத்துணைவிதிகளை உருவாக்குவதற்குப் பிரதேச சபைகளுக்கு அதிகாரம் கிடைத்துள்ளது.

02. பிரதேச சபை நியாயாதிக்கப் பிரதேசத்தினுள் காணப்படுகின்ற அனைத்து காணிகளையும் முட்புதர்கள் மற்றும் குப்பைகூழங்கள் இன்றி பராமரிக்கப்படுதலை முறைமைப்படுத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதல் நடவடிக்கைகளுக்காக இந்த துணைவிதிகளானது விதிக்கப்படுகின்றது.

03. இத்துணைவிதிகளானது முட்புதர்கள் மற்றும் குப்பைகூழங்கள் இன்றி காணியினைப் பராமரித்தல் தொடர்பான துணைவிதிகள் என அழைக்கப்படும்.

04. பிரதேச சபை நியாயாதிக்கப் பிரதேசத்தினுள் காணப்படுகின்ற அனைத்து காணிகளிலும் உரிமையாளர்கள் அல்லது பொறுப்பாளர்கள் அல்லது வசிப்பவர்களால் தத்தமது காணிகளை முட்புதர்கள் மற்றும் குப்பைகூழங்கள் இன்றியும் அக்காணிகளில் காணப்படுகின்ற குடிமனைகள் மற்றும் முற்றங்களை துப்பரவாகவும் சுகாதாரமாகவும் பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

05. எந்தவொரு காணியும் முட்புதர்கள் மற்றும் குப்பைகூழங்களுடன் காணப்படுகின்றதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக மு.ப.6.00க்கும் பி.ப.6.00க்கும் இடையிலான காலப்பகுதியில் தலைவருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தருக்கு, தேவையேற்படும் சந்தரப்பத்தில் அக்காணிக்குள் பிரவேசித்து பரிசோதனை செய்தல் சட்டரீதியானதாகும். அவ்வாறு மேற்கொள்ளப்படுகின்ற பரிசோதனை நடவடிக்கைகளுக்கு எந்தவொரு நபரும் இடையூறு செய்தல் கூடாது.

06. எந்தவொரு காணியும் முட்புதர்கள் மற்றும் குப்பைகூழங்களுடன் காணப்படுகின்றன என தலைவர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் திருப்தியடையும் எந்தவொரு சந்தரப்பத்திலும் அக்காணியை முட்புதர்கள் மற்றும் குப்பைகூழங்கள் அற்றதாகப் பேணுமாறு அக்காணியின் உரிமையாளருக்கு, பொறுப்பாளருக்கு அல்லது வசிப்பவருக்கு எழுத்துமூலம் அறிவித்தல் தலைவரது கடமையாக இருத்தல் வேண்டும்.

07. மேலே 06ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் ஏதேனும் அறிவித்தலொன்று கிடைக்கப்பெற்ற எந்தவொரு நபரும் அவ்வறிவித்தல் திகதியிலிருந்து பதினான்கு நாட்கள் செல்லுவதற்கு முன்னர் அக்காணியிலுள்ள முட்புதர்கள் மற்றும் குப்பைகூழங்களை அகற்றுதல் வேண்டும்.

08. எவ்வாறாயினும் உரிமையாளர் அல்லது வதிபவரால் ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களை முன்வைத்து எழுத்துமூலமான கோரிக்கையொன்றைத் தலைவருக்கு அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தருக்கு சமர்ப்பித்துள்ள சந்தர்ப்பங்களில், அந்நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட காலத்தினை மேலே கூறப்பட்ட அறிவித்தல் திகதியிலிருந்து ஆகக்கூடுதலாக 30 நாட்களுக்கு உட்பட்டு நீடிப்பதற்கு தலைவர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தருக்கு உரிமையுண்டு.

09. எந்தவொரு காணியிலிருந்தும் அகற்றப்பட்ட முட்புதர்களை அல்லது முட்புதர்களின் ஒரு பகுதியை மற்றும் குப்பைகூழங்களை பொது இடங்களில் அல்லது பாதைகளில் இடுதல்

கூடாது என்பதுடன் வேறு ஒரு நபருக்குச் சொந்தமான காணியிலும் அந்நபரது அனுமதியின்றி இடுதலும் கூடாது.

10. எந்தவொரு காணியிலிருந்தும் அகற்றப்படுகின்ற முட்புதர்கள் மற்றும் குப்பைகூழங்கள் என்பனவற்றை போதியளவு இடம் தமது காணியில் காணப்படுமாயின் ஒரு மீற்றருக்குக் குறையாத ஆழமான குழியில் இட்டு புதைத்தல் வேண்டும்.

11. எந்தவொரு காணியிலிருந்தும் அகற்றப்படுகின்ற முட்புதர்கள் மற்றும் குப்பைகூழங்களை பிரதேச சபையானது அகற்றுவதற்காகப் பொறுப்பேற்க முடியும் என்பதுடன், அதற்காக அறவிடப்படவேண்டிய கட்டணமானது பிரதேச சபையினால் காலத்திற்குக் காலம் பிரேரணைத் தீர்மானமொன்றின் மூலமாக தீர்மானிக்கப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

12. மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு 11ஆம் பந்தியின் கீழ் அறவிடப்படவேண்டிய உரிய கட்டணத்தை அறவிட்டதன் பின்னர் எந்தவொரு இடத்திலிருந்தும் அகற்றப்பட்ட முட்புதர்கள் மற்றும் குப்பைகூழங்களை அகற்றுவதற்காகப் பொறுப்பேற்கும் நடவடிக்கையும் பிரதேச சபையினால் செய்யப்பட வேண்டும்.

13. இத்துணைவிதிகளின் எந்தவொரு ஏற்பாடுகளும் மீறப்படுதல் குற்றமாவதுடன் அவ்வாறான குற்றமிழைக்கும் அனைத்து நபர்களுக்கும் உரிய நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டதன் பின்னர் 1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122ஆம் பந்தியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் அடிப்படையில் விதிக்கப்படுகின்ற தண்டணையின் மூலம் அவருக்குத் தண்டணை அளித்தல் வேண்டும். வேண்டும்.

14. பதங்கள் தொடர்பாக பிற அர்த்தங்கள் அவசியப்பட்டாலொழிய, இத்துணைவிதிகளில்;

> ‘‘தலைவர்’’ என்பது அக்காலப்பகுதியில் பிரதேச சபையில் தலைவர் பதிவியை வகிக்கும் நபரையும்;
>
> ‘‘உரிமையாளர் அல்லது வசிப்பவர்’’ என்பது பிரதேச சபை நியாயாதிக்கப் பிரதேசத்தினுள் உள்ள எந்தவொரு காணியினதும் சட்டரீதியான உரிமையாளர், பொறுப்பாளர், அல்லது அக்காணியில் வசிக்கின்ற எவரேனும் நபர் அல்லது காணியில் உள்ள நிறுவனத்தைப் பராமரித்துச் செல்லும் நபர்களையும்,

அரசாங்கத்திற்குச் சொந்தமான எந்தவொரு காணியையும், ஒப்பந்தத்தின் மூலம் குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுத்துள்ள எவரேனும் ஒரு நபரையும் ;

‘‘முட்புதர்கள்’’ என்பது, அலங்காரத்திற்காக வளர்க்கப்படுகின்ற ஏதேனும் பூச்செடிகள் அல்லது பொருளாதார அல்லது விவசாய நடவடிக்கைகளுக்காக வளர்க்கப்படுகின்ற அல்லது தானாகவே வளர்கின்ற எதேனுமொரு மரம் அல்லது பயிர்கள் என்பன இதில் உள்ளடக்கப்படாததுடன், எந்தவொரு நபரதும் கட்டுப்பாட்டை விஞ்சி நில மட்டத்திலிருந்து 20 சென்றிமீற்றருக்கும் மேலான உயரத்தில் தானாகவே வளர்கின்ற எந்தவொரு மரமும் அல்லது மரவகைகளையும் ;

‘‘பொது இடங்கள்’’ என்பது ஏதேனுமொரு பாதை, தெரு, வீதி, ஒழுங்கை, நடைபாதை, பொதுக் காணி, பாதைகளுக்காக ஒதுக்கப்பட்ட பிரதேசங்களையும், விளையாட்டு மைதானங்களையும், பொதுக் கட்டிடம், பொது மயானம், பஸ் தரிப்பிடம், புகையிரத நிலையம், வாய்க்கால், ஓடைகள், குளம், குட்டைகள், களப்பு, நீர்நிலைகள், நீர் வழியும் பிரதேசங்கள், மழைநீர் வழிந்தோடும் வடிகால்கள், கடற்கரை, சபைக்குச் சொந்தமான எந்தவொரு காணியையும் அல்லது பொதுப் பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட எந்தவொரு இடத்தினையும் ;

‘‘அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்’’ என்பது அந்நடவடிக்கைக்காக பிரதேச சபையின் தலைவரால் எழுத்துமூலமாக அதிகாரம் அளிக்கப்பட்ட எந்தவொரு பிரதேச சபை உத்தியோகத்தரையும் ;

‘‘சபை’’ என்பது, உரிய பிரதேச சபையையும் ;
குறிக்கும்.

## III. மாடுகளை அறுக்கும் இடம் தொடர்பான துணைவிதிகள்

1. 1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 126ஆவது பந்தியின் (xi)(ஐ) உபபந்தியின் கீழ் இத்துணைவிதிகளை உருவாக்குவதற்குப் பிரதேச சபைகளுக்கு அதிகாரம் கிடைத்துள்ளது

2. இத்துணைவிதியானது பிரதேச சபை நியாயாதிக்கப் பிரதேசத்தினுள் மாமிச உணவுக்காக மிருகங்களை அறுப்பதற்காகப் பேணிச்செல்லப்படுகின்ற மாடுகளை அறுக்கும் இடங்களை முறைமைப் படுத்துதல், கட்டுப்படுத்துதலுக்கான ஏற்பாடுகளை வகுப்பதற்காக இத்துணைவிதிகள் விதிக்கப்படுகின்றன.

3. இத்துணைவிதிகளானது பிரதேச சபையினது மாடுகளை அறுக்கும் இடம் தொடர்பான துணைவிதிகள் என அழைக்கப்படும்.

4. மாடுகளை அறுக்கும் இடத்திற்கு எடுத்துவரப்படுகின்ற எல்லா மாடுகளும் அறுக்கப்படுவதற்கு முன்னர் 24 மணித்தியால காலப்பகுதியுள் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவரால் அவை பரிசோதனை செய்யப்பட்டு, அவை அறுப்பதற்குப் பொருத்தமானவை என அனுமதிக்கப்பட்டால் அன்றி எந்தவொரு மிருகத்தினையும் மாடுகளை அறுக்கும் இடத்தில் அறுத்தல் கூடாது.

5. அறுப்பதற்காகக் கொண்டு வரப்படுகின்ற எல்லா மிருகங்கள் தொடர்பிலும், மாடுகளை அறுத்தல் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் மிருகங்களை அறுத்தல் தொடர்பாக வலுவிலுள்ள வேறு ஏதேனும் எழுத்துமூலமான சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் கீழ் உள்ள வரையறைகளைப் போன்றே, எந்தவொரு காரணத்தின் அடிப்படையிலும் அல்லது அறுப்பதற்காக எடுத்துவரப்பட்டுள்ள மிருகத்தினது மாமிசமானது மனிதர்களது உணவுக்கு உகந்ததல்ல என்ற காரணத்தின் அடிப்படையிலும், அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவரால் மிருகத்தை அறுப்பதற்கான அனுமதியை வழங்குவதை நிராகரிக்க முடியும்.

6. அறுப்பதற்குப் பொருத்தமற்றது என நிராகரிக்கப்பட்ட எல்லா மிருகங்களும், அவ்வாறு நிராகரிக்கப்பட்ட உடனேயே, மாடுகளை அறுக்கும் இடத்திலிருந்து உரிமையாளரால் அவை அகற்றப்படுதல் வேண்டும்.

7. அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரால் அறுப்பதற்காக அனுமதிக்கப்பட்டிருந்தாலும், அறுக்கப்பட்டதன் பின்னரும், அம்மிருகத்தினது மாமிசமானது மனிதர்களது உணவிற்குப் பொருத்தமானது என அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் சான்றுப்படுத்த வேண்டும்.

8. அறுப்பதற்காக இத்துணைவிதியின் 6ம் பந்தியின் அடிப்படையில் அனுமதிக்கப்பட்ட மிருகத்தினது மாமிசமானது மனிதர்களது பாவனைக்குப் பொருத்தமற்றது என அறுக்கப்பட்டதன் பின்னர் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரால் சான்றுப்படுத்தப்பட்டால், அம்மாமிசத்தை அழித்து விடுவதற்கு அல்லது வேறு விதத்தில் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

9. மனிதர்களது பாவனைக்குப் பொருத்தமற்றது என சான்றுப்படுத்தப்பட்ட, அறுக்கப்பட்ட மிருகம் அல்லது மிருகத்தினது பாகங்களை அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவரது அனுமதியின்றி எந்தவொரு நபரும் மாடுகளை அறுக்கும் இடத்திலிருந்து அவற்றை அகற்றுதல் முடியாது.

10. வேறு மிருகமொன்றின் முன்னால் அல்லது அறுக்கப்பட்ட மிருகம் அல்லது மிருகத்தினது பாகங்களின் முன்னால் அல்லது முன்னர் அறுக்கப்பட்ட மிருகத்தினது பாகங்களை அந்த இடத்தலிருந்து அகற்றும் வரை அல்லது மூடிவைக்கும் வரை வேறொரு மிருகத்தை அறுத்தல் கூடாது.

11. மிருகமொன்றை அறுக்கும் போது, மேற்கொள்ளப்படுகின்ற செயன்முறைகளானது அம்மிருகத்திற்கு ஆகக்குறைந்த துன்புறுத்தலாகவும், தலைவரால் அனுமதிக்கப்பட்ட ஒரு செயன்முறையாகவும் இருத்தல் வேண்டும்.

12. விற்பனை செய்யும் அனுமதிப்பத்திரதாரரால் மாடுகளை அறுக்கும் இடத்தில், அறுக்கப்பட்ட மிருகத்தினது இறைச்சியை, மாடுகளை அறுக்கும் இடத்திலிருந்து விற்பனை நிலையத்திற்கு எடுத்துச் செல்லும்போது, அதற்காக விசேடமான குளிர்சாதனப்பெட்டி வசதியைக் கொண்ட வாகனத்திலன்றி எடுத்துச் செல்லுதல் கூடாது.

13. பிரதேச சபையின் மாடுகளை அறுக்கும் இடத்தில் அல்லது பிரதேச சபையின் நியாயாதிக்கப் பிரதேசத்தினுள் தலைவரால் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொண்ட வேறு ஏதேனும் அறுக்கும் இடத்தில் அறுக்கப்பட்ட மிருகத்தினது இறைச்சியைத் தவிர வேறு எந்தவொரு மிருகத்தினது இறைச்சியையும் பிரதேச சபை நியாயாதிக்கப் பிரதேசத்தினுள் விற்பனைக்காக எடுத்துச் செல்லல் கூடாது.

14. நியாயாதிக்கப் பிரதேசத்தினுள் மாடறுக்கும் இடத்தில் அறுக்கப்பட்ட மிருகமொன்றினது இறைச்சியானது மனிதப் பாவனைக்குப் பொருத்தமானது என அதிகாரம் பெற்ற

உத்தியோகத்தர் ஒருவர் பரிசோதித்து இத்துணைவிதிகளின் ‘‘அ’’ படிவத்திற்கு அமைய சான்றிதழ் ஒன்றை வழங்கியிருந்தால் அன்றி, இறைச்சி விற்கும் எந்தவொரு அனுமதிப்பத்திரதாரரும் அவ்விறைச்சியை விற்பனைக்கு வழங்குதல் கூடாது.

15. அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவரால் மேலே உள்ள பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக செய்யப்படுகின்ற பரிசோதனைகளுக்காக அறவிடப்படுகின்ற கட்டணமானது சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

16. மாடுகளை அறுக்கும் எல்லா இடத்திலும் அறுக்கப்படுகின்ற மாடுகள் மற்றும் ஆடுகள் தொடர்பான விபரங்களை உள்ளடக்கிய இத்துணைவிதியின் ‘‘ஆ’’ உபஅட்டவணைக்கு அமைய தயாரிக்கப்பட்ட அட்டவணையொன்று பேணப்படுதல் வேண்டும்.

17. அறுப்பதற்காக எடுத்து வரப்படுகின்ற அனைத்து மிருகங்கள் தொடர்பிலுமான உரிமையை உறுதிப்படுத்தும் சான்றிதழொன்றைக் கொண்டு வருபவர், அதனை அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் அல்லது மாடுகளை அறுக்கும் இடத்திற்குப் பொறுப்பானவரிடம் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன் அது இரண்டு சாட்சியாளர்களது அடையாளத்துடன் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். மாடுகள் தொடர்பாகவெனின் அவ்வாறு உறுதிப்படுத்தும் நபர்களில் ஒருவர், மிருகத்தைப் பெற்றுக் கொண்ட பிரதேசத்திலுள்ள கிராம உத்தியோகத்தராக இருத்தல் வேண்டும்.

18. மாடுகளை அறுக்கும் இடத்திற்கு கொண்டுவரப்படுகின்ற மிருகம் தொடர்பில், அறுப்பதற்கு முன்னர் வேறொரு நபரால் உரிமை கோரப்பட்டால், உரிமை தொடர்பான பிரச்சினையை உரிய தரப்பினர் தீர்த்துக் கொண்டு வரும்வரை, அறுப்பதற்கான அனுமதியை வழங்காதிருப்பது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் அல்லது மாடுகளை அறுக்கும் இடத்திற்குப் பொறுப்பானவரின் கடமையாக இருத்தல் வேண்டும்.

19. பிரதேச சபையின் மாடுகளை அறுக்கும் இடத்தில் அறுக்கப்படுகின்ற மிருகங்கள் தொடர்பில், மிருகத்தினது வகை மற்றும் வழங்கப்படுகின்ற சேவைகளது இயல்பினை அடிப்படையாகக் கொண்டு சபையினால் காலத்திற்குக் காலம் சேவைக்கட்டணம் தீர்மானிக்கப்பட்டு பிரசுரிக்கப்படுதல் சட்டரீதியானதாகும்.

20. தலைவரிடமிருந்து பெற்றுக் கொண்ட குறித்த மாடுகளை அறுக்கும் அனுமதிப்பத்திரத்திற்கு அமைவாகவும் அவ்வனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாகவும் அன்றி, அனுமதிப்பத்திரம் பெறாத எந்தவொரு நபரும் எந்தவொரு மிருகத்தையும் அறுத்தல் சட்டரீதியற்றதாகும்.

21. அவ்வாறான எல்லா அனுமதிப்பத்திரங்களுக்கும் பிரதேச சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்பட்ட கட்டணங்களை அறவிடுதல் சட்டரீதியானதாகும்.

22. இத்துணைவிதியின் எந்தவொரு பந்தியேனும் மீறப்படும் வகையில் செயற்படுதல், அல்லது இத்துணைவிதியின் கீழ் தலைவரால் செய்யப்படுகின்ற கட்டளைகளுக்கு அமையாது செயற்படுதல் என்பன இத்துணைவிதியின் கீழ் தவறாகும் என்பதுடன், அத்தகையை தவறைச் செய்கின்ற அனைத்து நபர்களும், அத்தவறு தொடர்பாக உரிய அதிகாரத்தினைக் கொண்டுள்ள நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டதன் பின்னர் 1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122ஆம் பந்தியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தண்டனைக்கு உட்படுதல் வேண்டும்.

23. பதங்கள் தொடர்பாக பிற அர்த்தங்கள் அவசியப்பட்டாலொழிய, இத்துணைவிதிகளில்;

"தலைவர்" என்பது, அக்காலப்பகுதியில் பிரதேச சபையில் தலைவர் பதவியை வகிக்கும் நபரையும்;

"அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்" என்பது பிரதேச சபையின் தலைவரால் எழுத்து மூலமாக அதிகாரம் அளிக்கப்பட்ட எந்தவொரு உத்தியோகத்தரையும் ;

"மிருகம்" என்பது, மிருக கட்டளைச் சட்டத்தில் அதற்காக வழங்கப்பட்டுள்ள அர்த்தத்தினையும் ;
குறிக்கும்.

## IV. கட்டிடங்கள் அமைத்தல் தொடர்பான துணை விதிகள்

1. 1987 ஆம் ஆண்டு 15 வது இலக்க பிரதேச சபை சட்டத்தின் 122 வது பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய குறித்த சட்டத்தின் 126வது பந்தியின் (viii)ஆம் உப பந்தியின் கீழ் இத்துணைவிதிகளை ஆக்குவதற்குப் பிரதேச சபைக்கு அதிகாரம் கிடைத்துள்ளது.

2. கட்டிடம் அமைக்கப்படவேண்டிய பிரதேசம், கட்டிடம் அமைப்பதற்குரிய பொருட்கள், காற்றோட்டத்திற்குரிய நிபந்தனைகள், வடிகாலமைப்பு முறைகள், கழிப்பறை வசதிகள் மற்றும் அத்திவாரத்தின் வகைகள் என்பனவற்றை நிர்ணயம் செய்வதற்காகவும் கட்டிடத்தின் வரைபை பரிசீலித்தல், அனுமதி வழங்கல் தொடர்பான செயற்பாடுகள் மற்றும் அதற்குரிய கட்டணத்தை விதித்தல் என்பவற்றுக்கான ஏற்பாடுகள் இத்துணைவிதிகளில் விதிக்கப்படுகின்றன.

3. இத்துணைவிதிகள் கட்டிடங்கள் அமைத்தல் தொடர்பான துணைவிதிகளாகக் கருதப்படும்.

4. இத்துணைவிதிகளானது, பிரதேச சபை நியாயாதிக்க பிரதேசத்திற்குள் நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ், அபிவிருத்திக்குரிய பிரதேசமாகக் கணிக்கப்பட்ட வலயத்திற்கும் அல்லது அப்பிரதேசத்திற்கு வெளியே அமைந்துள்ள பிரதேசத்திற்கும் செல்லுபடியானதாக அமையும்.

5. இத்துணைவிதிகள் நடைமுறையிலுள்ள பிரதேசத்திற்குள், எந்தவொரு நபரும் வசிப்பதற்காக அல்லது வேறு காரணங்களுக்காக கட்டிடங்களை அமைக்க விரும்பினால், பிரதேச சபைக் காரியாலயத்தில் அதற்குரிய விண்ணப்பப்படிவத்தைப் பெற்று, முறைப்படி பூர்த்திசெய்து பிரதேச சபைக்குச் சமர்ப்பித்து, அதற்காக பிரதேச சபைத் தலைவரின் முன்னனுமதியைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

6. வசிப்பதற்காக அல்லது தங்குவதற்காக அமைக்கப்படுகின்ற ஒரு கட்டிடமானது பின்வரும் விதிமுறைகளுக்கு அமைவாக நிருமாணிக்கப்படுதல் வேண்டும்.

(அ) ஒரு மாடிக் கட்டிடமாயின் அதன் அத்திவாரமானது பூமியிலிருந்து 0.9 மீற்றருக்கு குறையாத ஆழத்திலும், பூமியிலிருந்து 0.3 மீற்றருக்கு குறையாத உயரத்திலும் இருத்தல் வேண்டுமென்பதுடன், அத்திவாரம் கருங்கல்லினால் அல்லது செங்கல்லினாலும் அனுமதிக்கப்பட்ட மணல், சீமெந்துக் கலவையினால் அல்லது கொங்கிறீற்றுக் கலவையினால் உறுதியாகக் கட்டப்படுதல் வேண்டும்.

(ஆ) பல மாடிக் கட்டிடமாயின் அதன் அத்திவாரமானது பொறியியலாளரினால் உறுதிப்படுத்தபட்ட தரத்திற்கு ஏற்றவாறு, குறித்த பொருட்கள் மற்றும் உறுதியாக்கிகளைக் கொண்டு அமைக்கப்படுதல் வேண்டும்.

(இ) அதன் ஒவ்வொரு மாடியினதும் சுவரானது குறைந்த பட்சம் 3.0 மீற்றர் உயரத்தில் அமைக்கப்படவேண்டியதுடன் களிமண், செங்கல், சீமெந்துக்கல், கருங்கல்

அல்லது கபூக்கல் அல்லது வேறு அனுமதிக்கப்பட்ட பொருட்களினால் அமைத்து முறையாக சாந்து பூசப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஈ) ஒவ்வொரு மாடித்தளத்தின் பாதமும் அதனை இணைக்கின்ற கொங்கிறீற் கூரையும் பொறியியல் தரத்திற்கேற்ப அனுமதிக்கப்பட்ட கொங்கிறீற் கலவையினாலும் அனுமதிக்கப்பட்ட உறுதியாக்கிகளினாலும் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும்.

(உ) ஒவ்வொரு அறைகளுக்கும் நல்ல காற்றோட்டம் கிடைக்கக் கூடியவாறு அறையின் தரையினது பரப்பளவின் பதினைந்தில் ஒரு பங்குக்குக் குறையாத சதுர அடியைக் கொண்ட திறக்கக்கூடிய ஜன்னல்கள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வாறில்லையாயின் அவ்வறைகளுக்குக் காற்றோட்டத்தை வழங்குவதற்காக, குளிரூட்டல் இயந்திரங்கள் அல்லது காற்றை வழங்கும் உபகரணங்கள் பொருத்தப்படுதல் வேண்டும்.

(ஊ) ஒவ்வொரு படுக்கை அறையும் குறைந்தபட்சம் 9.5 மீற்றர் சதுர அடியைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

7. வசிப்பிடமல்லாத, அல்லது தங்குமிடமல்லாத வேறு அலுவல்களுக்காக நிர்மாணிக்கப்படுகின்ற ஒவ்வொரு கட்டிடமும் கீழே குறிப்பிடப்பட்ட விதிமுறைகளுக்கேற்ப அமைக்கப்படுதல் வேண்டும்:-

(அ) ஒரு மாடிக் கட்டிடமாயின் அதன் அத்திவாரம் பூமியிலிருந்து 0.9 மீற்றருக்கு குறையாத ஆழத்திலும் பூமியிலிருந்து 0.3 மீற்றருக்கு குறையாத உயரத்திலும் இருத்தல் வேண்டுமென்பதுடன், அத்திவாரம் கருங்கல்லினால் அல்லது செங்கல்லினால் அல்லது அனுமதிக்கப்பட்ட மணல் சீமெந்துக் கலவையினால் அல்லது கொங்கிறீற்றுக் கலவையினால் உறுதியாக கட்டப்படுதல் வேண்டும்.

(ஆ) பல மாடிக் கட்டிடமாயின் அதன் அத்திவாரமானது பொறியியலாளரினால் உறுதிப்படுத்தபட்ட தரத்திற்கு ஏற்றவாறு குறித்த பொருட்கள் மற்றும் உறுதியாக்கிகளைக் கொண்டு அமைக்கப்படுதல் வேண்டும்.

(இ) அதன் ஒவ்வொரு மாடியின் சுவர்களும் குறைந்தபட்சம் 2.8 மீற்றருக்குக் குறையாத உயரத்தில் அமைக்கப்படவேண்டியதுடன் களிமண், செங்கல், சீமெந்துக்கல், கருங்கல் அல்லது கபூக்கல் அல்லது வேறு அனுமதிக்கப்பட்ட பொருட்களினால் அமைத்து முறையாக சந்துப்பூசப்படுதல் வேண்டும்.

(ஈ) ஒவ்வொரு மாடித்தளத்தின் பாதமும் அதனை இணைக்கின்ற கொங்கிறீற் கூரையும் பொறியியல் தரத்திற்கேற்ப, அனுமதிக்கப்பட்ட கொங்கிறீற் கலவையினாலும் அனுமதிக்கப்பட்ட உறுதியாக்கிகளையும் கொண்டும் பூர்த்தியாக்கப்படுதல் வேண்டும்.

(உ) ஒவ்வொரு அறைகளுக்கும் நல்ல காற்றோட்டம் கிடைக்கின்றவாறு, அறையினது தரையின் பரப்பளவின் 16/1க்குக் குறையாத சதுர அடியைக் கொண்ட, திறக்கக்கூடிய ஜன்னல்கள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வாறில்லையாயின் அவ்வறைகளுக்குக் காற்றோட்டத்தை வழங்குவதற்காகக் குளிரூட்டல் இயந்திரங்கள் அல்லது காற்றை வழங்கும் உபகரணங்கள் பொருத்தப்படுதல் வேண்டும்.

8. அனைத்து கட்டிடங்களின் கூரைகளும் உறுதியான மரங்களினால் அல்லது இரும்பினால் பூர்த்தியாக்கப்படவேண்டியதுடன் ஓடு, அஸ்பேஸ்டஸ், தகரம் அல்லது அனுமதிக்கப்பட்ட கூரைத் தகடுகளால் வேயப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வாறாயினும் முன்னேற்றமடைந்த பிரதேசமொன்றாகப் பிரகடனப்படுத்தப்படாத பிரதேசமாகவும், பிரதான வீதியிலிருந்து அல்லது மாகாண வீதியிலிருந்து 250 மீற்றருக்குள் உள்ளடங்காத பிரதேசத்தில் நிர்மாணிக்கப்படுகின்ற கட்டிடமொன்றின் கூரையினைத் தென்னோலையினால், வைக்கோலினால் அல்லது புற்களினால் வேய்வதற்கான அனுமதியை தலைவர் வழங்கலாம்.

9. எல்லாக் கட்டிடங்களுக்கும் போதுமானளவில் நீருடன் கூடிய அல்லது சுகாதார வசதியுடன் கூடிய பூர்த்தியாக்கப்பட்ட கழிப்பறைகள் நிர்மாணிக்கப்படுதல் வேண்டும்.

10. கட்டிடங்கள் அமைந்துள்ள அனைத்து வளவுகளுக்குள்ளும் மழைநீர் மற்றும் கழிவுநீர் வழிந்தோடக்கூடிய முறையான வடிகான் தொகுதிகள் அல்லது நிலத்தடி குழாய்த் தொகுதிகள் அமைக்கப்படவேண்டியதுடன், கழிவு நீரினை ஆறுகள், வாய்க்கால்கள் அல்லது பொது நீர்நிலைகள், குளங்கள் என்பனவற்றிற்கு வழிந்தோடக்கூடியவாறான வடிகான்கள் அல்லது குழாய்த் தொகுதிகள் நிர்மாணிக்கப்படலாகாது.

11. ஒவ்வொரு கட்டிடத்தின் கூரையிலும் விழுகின்ற மழை நீரானது, வழிந்தோடக்கூடிய பீலிகள் மற்றும் நீர் வழிந்தோடும் குழாய்கள் மூலம் பாதுகாப்பான மழைநீர் தொட்டிகளில் சேர்கின்றதும் பாவனைக்குகந்தவாறும் அனுமதிக்கப்பட்ட தரத்துக்கேற்பவும் நிர்மாணிக்கப்பட்ட மழைநீர் அகற்றும் முறைமையொன்று நிர்மாண வரைவுகளில் இல்லையாயின் அவ்வாறான கட்டிடங்களை அமைப்பதற்குத் தலைவர் அனுமதி வழங்குதல் ஆகாது.

12. மேலும், மேலே 11வது பந்தியில் குறிப்பிடப்பட்ட மழைநீர் வழிந்தோடும் அமைப்பானது பிரதேச சபையின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரினால் வழங்கப்பட்ட வழிகாட்டல்கள் மற்றும் ஆலோசனைகளுக்கேற்ப அமைக்கப்படுதல் வேண்டும்.

13. ஆறு, ஓடைகள், நீரூற்றுக்கள், வடிகான்கள், வாய்க்கால், குளம் அல்லது போக்குவரத்திற்காக அமைக்கப்பட்டுள்ள பாலம், மதகுகள் அல்லது மக்கள் செல்லும் ஒற்றையடிப்பாதைகள், பொதுவான படிக்கட்டுகள் என்பனவற்றுக்கு இடையூறு ஏற்படாத வகையில் கட்டிடங்கள் அமைக்கப்படுதல் வேண்டும்.

14. அனைத்து கட்டிடங்களும் 1987ஆம் ஆண்டு 15வது இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 49வது பந்தியில் குறிப்பிடப்பட்ட "கட்டிடங்களது எல்லைகளுக்கு" அப்பால் நிருமாணிக்கப்படுதல் வேண்டும்.

15. இத்துணைவிதியில் 5 வது பந்தியின்படி, கட்டிடமொன்றிற்கான விண்ணப்பப்படிவத்தைக் கையளிக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தின்போதும் அவ்விண்ணப்பப்படிவத்துடன், அமைக்கவிருக்கின்ற கட்டிடத்தின் அத்திவாரத்தின் வடிவம், சுவர் அமைப்பு மற்றும் கதவு ஜன்னல்களது அமைப்பு, மாடி அமைப்பு என்பன உள்ளடக்கப்பட்ட திட்டமொன்று சமர்ப்பிக்கப்படவேண்டியதுடன் அது தனிமாடிக் கட்டிடமாக இல்லாத சந்தர்ப்பத்தில், உரிய திட்டவரைவு மற்றும் அளவுப்படம் என்பன, அங்கீகரிக்கப்பட்ட பொறியியலாளர், தொழிநுட்ப உத்தியோகத்தர் அல்லது கட்டிட வடிவமைப்பாளர் ஒருவரினால் தயாரிக்கப்பட்டு சான்றுப்படுத்தப்பட்ட ஒன்றாக இருத்தல் வேண்டும்.

16. மேற்குறிப்பிட்ட 15வது பந்தியில் குறிப்பிடப்பட்டவாறு திட்டவரைவு மற்றும் அளவுப்படம் என்பவற்றிற்குப் புறம்பாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை அதன் மூலப்பிரதிகளுடன் சமர்ப்பித்தல் வேண்டும்:-

    (அ) கட்டிடம் அமையவுள்ள இடத்தின் உரிமையை உறுதிப்படுத்துகின்ற வீட்டு உறுதியின் பிரதியொன்று,

    (ஆ) இடத்தின் எல்லை வரைபின் பிரதி,

    (இ) நீர் வழங்கல், நீர் வடிகான்கள், மின்சாரம், பிரவேசிக்கும் பாதை மற்றும் கழிப்பறை வசதிகள் என்பனவற்றை அமைக்கும் விதத்தினை உறுதிப்படுத்தும் ஆவணங்களும் திட்ட வரைபுகளும் மற்றும்,

(ஈ) தலைவரினால் வேண்டப்படும் பிற ஆவணங்களது பிரதிகளும்.

இவ்வாறு சமர்ப்பிக்கப்படுகின்ற பிரதிகள் உண்மையானவை என உறுதிப்படுத்திக் கொண்டதன் பின்னர் மூலப் பிரதிகளை மீண்டும் விண்ணப்பதாரரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

17. இத்துணைவிதியின் 5வது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தினை முன்வைக்க எண்ணுகின்ற அல்லது முன்வைக்கும் ஒவ்வொரு நபரும், காலத்திற்குக் காலம் பிரதேச சபைகளின் வரைவுகள் சட்டமாக்கப்பட்டு, அதிகாரமளிக்கப்பட்டு வருடந்தோறும் அரச வர்த்தமானியில் வெளியிடப்படுகின்ற –

(அ) விண்ணப்பப்படிவக் கட்டணமொன்றையும்

(ஆ) வரைபினைப் பரிசீலிக்கும் கட்டணமொன்றினை அல்லது முன்கட்டணமொன்றினை சபைக்குச் செலுத்துதல் வேண்டும்.

18. வசிப்பிடத்திற்காக அல்லது வேறு காரணத்திற்காகப் பயன்படுத்திய, அல்லது பயன்படுத்திக் கைவிடப்பட்ட அல்லது பாதி பூர்த்தியடைந்த நிலையில், மூன்று வருடத்திற்கும் மேற்பட்ட காலமாகக் கைவிடப்பட்டுள்ள ஏதேனும் கட்டிடங்கள், எந்தவொரு காரணத்தினாலும் மனிதர்கள் வசிப்பதற்கு உகந்ததல்ல அல்லது வேறு கருமங்களுக்கு உகந்ததல்ல என்பதை தலைவர் அறிந்துகொண்டால், அக்கட்டிடத்தினை எந்தவொரு கருமத்திற்கும் எடுப்பதைத் தடுப்பதற்கு, அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் மூலம் நீதிமன்றத்திற்கு விண்ணப்பிப்பதற்கு தலைவர் ஆவனசெய்தல் வேண்டும்.

19. நீதிபதியானவர் பொருத்தமெனக் கருதுகின்ற பரிசீலனையின் பின்னர் மேலே குறிப்பிட்டவாறு தடையுத்தரவொன்றையோ அல்லது பொருத்தமெனக் கருதுகின்ற வேறு கட்டளையொன்றையோ பிறப்பிக்க முடியும்.

20. மேலே 19ஆம் பந்தியின் கீழ் வழங்கப்பட்ட கட்டளையொன்றின் மூலமாக பயன்பாட்டிற்கு எடுப்பதைத் தடைசெய்துள்ள கட்டிடமொன்று, அது பொருத்தமற்றதென நிருபணமாவதற்கு ஏதுவான காரணங்கள், திருப்தியுறும் வகையில் மீள மாற்றம் செய்யப்பட்டுள்ளது எனத் தலைவர் உறுதிப்படுத்தும் வரை, அல்லது மேலே குறிப்பிடப்பட்ட தடை உத்தரவானது நீதிபதியினால் எழுத்து மூலமாக அகற்றப்படும்வரை அதன் உரிமையாளர் அக்கட்டிடத்தினை எந்தவொரு நடவடிக்கைக்காகவும் பயன்படுத்துவதற்கு அல்லது குத்தகைக்கு விடுவதற்கு இடமளித்தல் கூடாது.

21. வசிப்பிடமாக அல்லது வேறு கருமங்களுக்காகப் பயன்படுத்தப்படும் ஏதாவது கட்டிடமொன்று அல்லது கட்டிடத்தொகுதியொன்று அல்லது அதற்குரிய வளவானது –

(அ) போதுமான உயரத்துடன் காணப்படாமை;

(ஆ) உரிய வடிகாலமைப்புக்களுடன் காணப்படாமை;

(இ) கழிவுப் பொருட்களை முறையாக அகற்ற முடியாமை;

(ஈ) அவற்றைப் பயன்படுத்துபவர்களுக்கு தொற்று நோய் ஏற்படுவதற்கான ஆபத்துக்கள் காணப்படுகின்றமை;

(உ) பொதுமக்களது சுகாதாரம் அல்லது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருத்தல் ;

(ஊ) தீப்பற்றும் அல்லது உடைந்து விழக்கூடிய ஆபத்துக்கள் காணப்படுகின்றமை;

ஆகிய காரணங்களுள் ஒன்றோ அல்லது பலவோ காணப்படுகின்றது என தலைவர் உறுதிப்படுத்திக் கொண்டால், அவரால் அச்சொத்தின் உரிமையாளருக்கு, வதிவிடதாரருக்கு அல்லது குத்தகைதாரருக்கு, பிரசித்தமாகத் தெரியக்கூடிய ஒரு இடத்தில் ஒட்டப்பட்ட அறிவித்தல் அல்லது பதிவுத்தபாலில் அனுப்பப்பட்ட அறிவித்தலொன்றின் மூலம் உரிய கட்டிடத்தினை அல்லது அதன் பகுதியொன்றினை உடைத்து அகற்றுமாறு அல்லது அறிவித்தலில் குறிப்பிட்டுக் கூறப்பட்டுள்ள மாற்றங்களை, திருத்தங்களை, நிருமாணங்களை உரிய காலப்பகுதியில் செய்து முடிக்குமாறு கட்டளையொன்றைப் பிறப்பிக்க முடியும்.

22. எந்தவொரு நபரும் எந்தவொரு பாதையினதும் இருமருங்கிலும் தண்ணீர் வழிந்தோடுவதற்காக நிருமாணிக்கப்பட்டுள்ள வடிகானொன்றின் மீது ஏதேனும் பாலமொன்றையோ மேடையொன்றையோ அல்லது வேறு ஏதேனுமொரு நிருமானமொன்றையோ செய்வதாயின், இத்துணைவிதியின் 5ஆம் பந்திக்கமைய விண்ணப்பப்படிவமொன்றைச் சமர்ப்பித்து, தலைவரது அனுமதியைப் பெற்றுக் கொண்டு அந்நிருமாணிப்பினைச் செய்தல் வேண்டும்.

23. இத்துணைவிதிகளின் ஏற்பாடுகளை மீறும் வகையில் நிருமாணிக்கப்படுகின்ற கட்டிடமொன்றை உரிய நியமங்களுக்கமைய உடைத்து அகற்றுமாறு அதன் உரிமையாளருக்கு எழுத்து மூலமாக அறிவித்து, 30 நாட்களுக்குள் அதனைச் செய்யாதுவிடின் அக்கட்டிடத்தை உடைத்து அகற்றும் நடவடிக்கையை பிரதேச சபை செய்தல் சட்டரீதியானதாகும்.

24. மேலே 22ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முன் அனுமதியொன்றைப் பெற்றுக்கொள்ளாது செய்யப்படுகின்ற நிருமாணிப்புக்கள் அனைத்தும் அத்துமீறிய நிருமாணிப்புக்களாகக் கருதப்படுவதுடன் -

(அ) அவை தலைவரால் விதிக்கப்படுகின்ற குறித்த காலப்பகுதிக்கமைவாகவும் அவரால் வழங்கப்படுகின்ற அறிவுறுத்தல்களுக்கமைவாகவும் மாற்றங்களைச் செய்யுமாறும், மறுசீரமைக்குமாறும் அல்லது உடைத்து அகற்றுமாறும்,

(ஆ) இத்துணைவிதியின் 5ஆம் பந்தியின் பிரகாரம் முறையான விண்ணப்பப்படிவமொன்றைச் சமர்ப்பித்து, 15ஆம் பந்தியின் பிரகாரம் விதிக்கப்படுகின்ற திட்டவரைபுகளைப் பரிசீலிக்கும் கட்டணம் மற்றும் அதற்கு 50%மான மேலதிகக் கட்டணம் என்பனவற்றைச்செலுத்தி, குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் அதனை சட்டரீதியானதாக்குமாறும்,

அதனை நிருமாணித்த நபருக்கு விதிப்பதற்குத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.

25. மேலே 24ஆம் பந்தியின் கீழ் செய்யப்படுகின்ற விதிப்புக்கள், அதில் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதிக்குள் நிறைவேற்றப்படாவிடின் எந்தவித நட்டவீடோ அல்லது இழப்பீடோ செலுத்தப்படாது அதனை உடைத்து அகற்றுவதற்குத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.

26. எந்தவொரு கட்டிட வளாகத்திற்குள்ளும், கட்டிடங்களுக்கிடையிலும், அல்லது கட்டிட வரிசைகளுக்கிடையிலும் உள்ள குறுகிய பாதையிலிருந்து தண்ணீர் வழிந்தோடுவதற்குப் பாதையின் இருமருங்கிலும் உள்ள வடிகாண் தொகுதி வரை, நிரந்தர வடிகாண் தொகுதியொன்றை அல்லது குழாய்த் தொகுதியொன்றை, பிரதேச சபையின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவரின் அறிவுத்தல்கள் மற்றும் மேற்பார்வையின் கீழ் நிருமாணிக்குமாறு அச்சொத்தின் உரிமையாளருக்குக் கூறுவதற்குத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.

27. மேலே 26ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கமைவாக வடிகாண்களை அல்லது குழாய்த் தொகுதிகளை, இருமருங்கிலும் உள்ள வடிகாண்வரை அமைக்கும்போது வேறு சொத்துடைமையாளர்களுக்குரிய பூமிப் பிரதேசத்திற்குக் குறுக்காக நிருமாணிப்புக்கள் மேற்கொள்ளப்படவேண்டுமெனத் தெரிய வந்தால், அச்சொத்து உரிமையாளர்களுடன் கலந்துரையாடி அதற்குத் தேவையான ஏற்பாடுகளை விதித்தல் வேண்டும் என்பதுடன் அச்சொத்து உரிமையாளர்களுக்கு நியாயமான முறையில் நட்டஈட்டை வழங்கி அதற்காக அனுமதியைப் பெற்றுக் கொடுப்பதற்கும் தலைவருக்கு அதிகாரம் உண்டு.

28. இத்துணைவிதியின் 5ஆம் பந்தியின் கீழ் சமர்ப்பிக்கப்படுகின்ற கட்டிட விண்ணப்படிவமொன்று தொடர்பாக பரிசீலனைக் கட்டணமொன்று அல்லது முன்கட்டணமொன்று செலுத்தப்பட்ட திகதியிலிருந்து 30 நாட்கள் கடக்குமுன்னர் விண்ணப்பப்படிவத்தை அனுமதித்தல் அல்லது நிராகரித்தல் தொடர்பான தமது தீர்மானத்தை தலைவர் விண்ணப்பதாரருக்கு எழுத்துமூலம் அறிவித்தல் வேண்டும்.

29. மேலே 28ஆம் பந்திக்கு அமைவாக விண்ணப்பப்படிவம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கும்போது, வேறு ஏதேனுமொரு நிறுவனத்தின் விதப்புரைகள் வழங்கும் செயற்பாடுகள் தாமதமாகும் பட்சத்தில் அது தொடர்பாகத் தீர்மானம் எடுப்பதற்கு 30 நாட்களுக்கும் மேலாக தாமதமடைந்தால், அது தொடர்பாக விண்ணப்பதாரருக்கு இடைக்காலப் பதிலொன்றின் மூலம் அறிவித்தல் வேண்டும்.

30. இத்துணைவிதிகளில் எந்தவொரு பந்தியும் மீறப்படுகின்றவகையில் செயற்படுதல் அல்லது இத்துணைவிதிகளின் கீழ் தலைவரால் செய்யப்படுகின்ற கட்டளைகளுக்கு அமையாது செயற்படுதல் என்பன, இத்துணைவிதிகளின் கீழ் குற்றமாவதுடன், அவ்வாறு குற்றமிழைத்த அனைத்து நபர்களும் அக்குற்றம் தொடர்பாக உரிய அதிகாரத்தினைக் கொண்ட நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டதன் பின்னர் 1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122ஆம் பந்தியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தண்டணைக்கு உட்படுதல் வேண்டும்.

31. பதங்கள் தொடர்பாக பிற அர்த்தங்கள் அவசியப்பட்டாலொழிய, இத்துணைவிதிகளில்;

''கட்டிட நிருமாணம்'' என்பது புதிதாக கட்டிடமொன்றை நிருமாணித்தல், தற்போது காணப்படுகின்ற கட்டிடமொன்றுக்கு ஒரு பகுதியை இணைத்தல், கட்டமைப்பை அல்லது திட்டவரைபை மாற்றுதல், மதில்கள் அல்லது நுழைவாயில்களை அமைத்தல் அல்லது மாற்றுதல், புதிதாக மலசலகூடங்கள் அல்லது தண்ணீர்த் தொட்டிகளை அமைத்தல், கட்டிடத்தைச் சுற்றி நீர் வழிந்தோடக்கூடிய வடிகாண்களை அமைத்தல் என்பவற்றையும்:

''பாதைகள்'' என்பது பெருந்தெருக்கள் கட்டளைச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அர்த்தத்தினையும்:

''தலைவர்'' என்பது அக்காலப்பகுதியில் பிரதேச சபையில் தலைவர் பதவியை வகிக்கும் நபரையும்;

“அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்’’ என்பது அந்நடவடிக்கைக்காக பிரதேச சபையின் தலைவரால் எழுத்து மூலமாக அதிகாரம் அளிக்கப்பட்ட எந்தவொரு பிரதேச சபை உத்தியோகத்தரையும் ;

குறிக்கும்.

## V. நீர் வழங்கல் மற்றும் நீர் வழங்கல் திட்டங்கள் தொடர்பான துணைவிதிகள்

1. 1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 126ஆவது பந்தியின் (xiii)(இ) பந்தியின் கீழ் இத்துணைவிதிகளை உருவாக்குவதற்குப் பிரதேச சபைகளுக்கு அதிகாரம் கிடைத்துள்ளது

2. பொதுமக்களது மகிழ்ச்சியை உறுதிப்படுத்துவதற்கும், வசதிகளையும், நலனோம்பல் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கும் பிரதேச சபைக்குள்ள பொறுப்புக்களை அடைந்து கொள்வதற்கும், பிரதேச சபையால் தாபிக்கப்பட்ட அல்லது பராமரிக்கப்படுகின்ற நீர் திட்டங்களிலிருந்து நீர் வழங்கலை முறைமைப்படுத்துதல், நிருவகித்தல், பராமரித்தல், பாதுகாத்தல், நீர் விரயமாவதைத் தடுத்தல், நீர் மாசடைதல் மற்றும் முறையற்ற பாவனையைத் தடுத்தல், நீர் வழங்கலுக்காகப் பயன்படுத்தப்படுகின்ற பொருட்கள் மற்றும் உபகரணங்களது தரங்களை உறுதிப்படுத்துதல், நீர் வழங்கலுக்கான கட்டணங்களை விதித்தல், மற்றும் நீர் வழங்கல் திட்டங்களுக்குரிய எல்லாவிதமான சிறுபகுதிகளுக்குமான ஏற்பாடுகளை விதித்தலுக்காக இத்துணைவிதிகளானது விதிக்கப்படுகின்றது.

3. இத்துணைவிதிகளானது **“நீர் வழங்கள் மற்றும் நீர் வழங்கல் திட்டங்கள் தொடர்பான துணைவிதிகள்’’** என அழைக்கப்படும்.

### தனியார் நீர் வழங்கல் சேவைகள்

4. பிரதேச சபையினால் தாபிக்கப்பட்ட அல்லது பராமரிக்கப்படுகின்ற நீர் வழங்கல் திட்டங்களிலிருந்து, தனிப்பட்ட நீர் வழங்கல் சேவையொன்றினைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கின்ற அனைவரும், சபையினால் விதிக்கப்பட்டுள்ள முறையான விண்ணப்பப் பத்திரத்தைப் பூரணப்படுத்தி சபைச் செயலாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

5. தனியார் நீர் வழங்கல் சேவையைப் பெற்றுக் கொள்ளுவதற்கு எதிர்பார்க்கின்ற இடத்தில் கீழே காட்டப்பட்டுள்ள விதிமுறைகளுக்கமைய நீரைப் பயன்படுத்துவதற்கான ஏற்பாடுகள் விண்ணப்பதாரரால் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

    (1) தனியார் நீர்வழங்கல் சேவையை நிருமாணிப்பதற்காக அவ்விடத்தில் பயன்படுத்தப்படுகின்ற எல்லா நீர்குழாய்களும் பீ.வீ.சீ.பொருட்களால் நிருமாணிக்கப்பட்டதும், இலங்கை தரச்சான்றிதழைப் பெற்ற குழாய் வகையாகவும், அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரொருவரால் சான்றுப்படுத்தப்பட்டதுமான, குழாய் வகையாக இருத்தல் வேண்டும்.

    (2) பயன்படுத்தப்படுகின்ற நீர் குழாய்கள், நிறுத்தும் குழாய்கள் மற்றும் ஏனைய உதிரிப்பாகங்களானது அங்கீகரிக்கப்பட்ட தரத்திலும் அனுமதிக்கப்பட்டதுமாக இருத்தல் வேண்டும்.

    (3) அனைத்து நீர்க் குழாய்களதும் வெளிப்புற வாய் திறந்துள்ள வகையிலும் தெளிவாக தெரியக்கூடியதாகவும் அது நீர் விழுகின்ற தொட்டியில் பாத்திரத்தில் அல்லது பேசனில் நிறையக்கூடிய தண்ணீர் மட்டத்தினை விட உயரமாக இருக்குமாறு பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

    (4) நீர் வழங்கல் சேவைக்காக பொருத்தப்பட்டுள்ள உதிரிப்பாகங்கள் மற்றும் நீர்க்குழாய்களது பொருத்துக்கள், இணைப்புக்கள், ஒட்டுதல்கள் என்பன தண்ணீர் கசியாதவாறு தொழிநுட்பத் தரத்திற்கேற்ப தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

    (5) எல்லா குளிக்கும் பாத்திரங்களிலும், மலசலகூட பேசன் மற்றும் கழுவும் பேசனது உட்செல்லும் முகப்பு மற்றும் வெளிச்செல்லும் முகப்பு என்பன நன்றாகத் தெரியக்கூடிய இடத்தில் இருக்க வேண்டியதுடன் உட்செல்லும் முகப்பானது அப்பாத்திரத்தில் நிறையக்கூடிய தண்ணீர் மட்டத்தினை விட உயரமாக இருக்குமாறு பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

    (6) சபையின் நீர்வழங்கள் திட்டத்திலிருந்து வழங்கப்படுகின்ற நீரானது ஏதேனுமொரு நீர்த் தொட்டிக்கோ அல்லது கொள்கலனில் சேரும் விதத்தில் நிருமாணிப்புக்கள் செய்யப்பட்டிருந்தால் அத்தொட்டியின் அல்லது கொள்கலனின் நிறுத்தும் குழாய்,

சமநிலை வால்வு மற்றும் போல் வால்வு எனபன பொருத்தப்பட்டிருக்க வேண்டும் என்பதுடன், அத்தொட்டியில் அல்லது கொள்கலனின் நீர் வெளியேறும் மட்டத்திற்கு 5 சென்றிமீற்றர் இருக்கும்போது நீர் வழங்கலை நிறுத்தும் விதத்தில் போல் வால்வு பெருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(7) அனைத்துத் நீர்த் தொட்டிகளிலும் அல்லது நீர் கொள்கலனிலும் வெளிக் குழாயானது கட்டிடத்திற்கு வெளியே இருக்க வேண்டியதுடன் தண்ணீர் வழிந்தோடுவது தெளிவாகத் தெரியக் கூடிய இடத்தில் அதனைப் பொருத்துதலும் வேண்டும்.

(8) குளிக்கின்ற பேசின், கழுவுகின்ற அல்லது முகங்கழுவுகின்ற பேசினிலிருந்து வெளியாகின்ற கழிவு நீர் மற்றும் குளியறையிலுள்ள கழிவு நீர் என்பன வெளியிலுள்ள வடிகாணுக்கு வழிந்தோடக்கூடிய விதத்தில் வெளிக் குழாய்கள் வெவ்வேறாகப் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(9) வீட்டு நடவடிக்கைகளுக்காக வழங்குகின்ற நீரில் ஒரு பகுதியை சேகரித்து வைக்கும் நோக்குடன் நீர்த்தொட்டிகள் அல்லது நீர் கொள்கலன்கள் என்பனவற்றைப் பொருத்துவதாயிருந்தால் அந்நீர்த்தொடடியின் அல்லது கொள்கலனின் கொள்ளளவானது 600 லீற்றருக்குக் குறைவாக இருத்தல் வேண்டும்.

(10)எல்லாவிதமான தனிப்பட்ட நீழ் வழங்கல் சேவைக்கும், சபையின் நீர் வழங்கல் முறையின் பிரதான குழாயிலிருந்து நீர்வழங்கலை வழங்குவதற்கு இயலுமான வகையில்;

(அ) தடிப்பான அடிப்பாகத்தைக் கொண்ட வலுவான பித்தளை அல்லது அனுமதிக்கப்பட்ட உலோகத்தால் செய்யப்பட்ட நிறுத்தற் குழாய் அல்லது

(அ) தொய்வான வால்வுடன் கூடிய சக்திமிக்க ஸ்குருப் நிறுத்தற் குழாயொன்று அல்லது

(ஆ) 5 சென்றிமீற்றர் விட்டத்திற்கும் அதிகமான குழாயொன்றில் நீரை வழங்கும் சந்தர்ப்பத்தில் நீர் வடிகால் ஒன்று பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(11)மேலே (10)இல் குறிப்பிடப்பட்ட நிறுத்தும் குழையை அல்லது வால்வினை பொருத்தும் போது நடைபாதையொன்று காணப்படின் அதற்குக் கீழாக சேவை வழங்கும் இடத்திற்கு இயலுமானவரை அண்மையில் பொருத்துதல் வேண்டுமென்பதுடன்,

தலைவரால் அனுமதிக்கப்பட்ட வகையைக் கொண்ட குழாயாக அல்லது வால்வாக இருத்தல் வேண்டும்.

(12)மேலே (10)இல் குறிப்பிடப்பட்ட நிறுத்தும் குழாயானது இலகுவாக சென்றடைவதற்கு இயலுமான இடத்தில் அமைக்கப்பட்டதாகவும் அங்கீகரிக்கப்பட்ட உலோகத்தினால் ஆன மூடப்பட்ட பெட்டியினாலும் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

6. தலைவரது எழுத்து மூலமான அங்கீகரத்தினைப் பெறாது:

(1) பிரதேச சபையின் பிரதான நீர் வழங்கல் குழாய்களிலிருந்து அல்லது நீர் வழங்கல் திட்டத்திலிருந்து ஏதேனுமொரு இடத்திற்கு நீரை வழங்குகின்ற சேவைக் குழாயை பொருத்துதல் அல்லது அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்; அல்லது

(2) பிரதேசசபையின் நீர்க் குழாய்களுக்கு அல்லது நீர் வழங்கற் சேவைகளுக்கு ஏற்கனவே இணைக்கப்பட்டுள்ள குழாயொன்றை நீட்டுதல், மாற்றுதல், அல்லது திருத்துதல் என்பன எந்தவொரு நபராலும் செய்யப்படுதல் கூடாது.

7. மேலே 6வது பந்தியின் கீழ் தலைவரால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனுமொரு நடவடிக்கைக்காக, அவரது முன்னனுமதியைப் பெற்றுக் கொள்ளாது ஏதேனுமொரு உதிரிப்பாகமொன்று, உபகரணமொன்று அல்லது பொருத்துதல்கள் மேற்கொள்ளப்படலாகாது.

8. ஏதேனுமொரு இடத்தில் நீரைச் சேமித்து வைக்கும் நடவடிக்கைக்காக நிருமாணிக்கப்படுகின்ற நீர்த்தொட்டி அல்லது நீர் கொள்கலனது மாதிரித்திட்டம் மற்றும் தரம் தொடர்பில் தலைவரது முன்னனுமதியைப பெற்றுக் கொண்டிருந்தால் அன்றி, அவ்வாறான நீர்த் தொட்டியொன்றை அல்லது நீர் கொல்கலனொன்றை நிருமாணித்தல் அல்லது பொருத்துதல் ஆகாது.

9. ஏதேனுமொரு இடத்தில் பயன்படுத்தப்படுகின்ற எந்தவிதத்திலுமான நீர்ப் பயன்பாட்டு உபயோகத்திலிருந்து, உதிரிப்பாகங்களிலிருந்து வெளியே வழிகின்ற நீரை எதேனுமொரு மலசலகூடக் கழிவுக்குழாயுடன் அல்லது வேறு மலசலகூட உபகரணத்தின் வெளிக் குழாயுடன் அல்லது வேறு ஏதேனுமொரு நீர்க் கொள்கலனினது வெளிக் குழாயுடன் தொடர்பு படுத்துதல் கூடாது.

10. ஏதேனுமொரு இடத்தில் நீர்வழங்கலுக்காக அமைக்கப்பட்டுள்ள நீர்க்குழாய்கள், நீர்த் தொட்டிகள் அல்லது நீர் கொள்கலன்கள் என்பனவற்றை வேறொரு இடத்திலுள்ள

சேவைக் குழாய்கள் அல்லது நீர்த் தொட்டிகள் அல்லது நீர் கொள்கலன்கள் அல்லது பாடசாலை, மதத்தலங்கள் மற்றும் பொது இடங்களில் அமைக்கப்பட்டுள்ள நீர் வழங்கல் குழாயுடன் இணைத்தல் கூடாது.

11. வீட்டுப் பாவனைக்காகப் பெற்றுக் கொண்ட நீர் இணைப்பை அல்லது அதன் பகுதியை ஏதேனும் பொய்லருக்கோ அல்லது கன்டென்சருக்கோ அல்லது இயந்திர அல்லது தொழிநுட்ப உபகரணத்திற்கோ நேரடியாக தொடர்புபடுத்துதல் கூடாது.

12. தலைவரது எழுத்துமூலமான அனுமதியின்றி, ஏதேனுமொரு இடத்தில் புதியதாக நிருமாணிக்கப்பட்டுள்ள நீர்ச் சேவையின் ஒரு பகுதியான குழாய் வால்வினை பொருத்துதல், நீக்குதல், மூடிவிடுதல் கூடாது.

**பொதுவான தண்ணீர்த் தூண்கள் மற்றும் குழாய்கள்**

13. பொதுமக்களதும் பிரயாணிகளதும் பயன்பாட்டிற்கு நீரைப் பெற்றுக் கொள்வதற்காக பாதைகளுக்கருகில் அல்லது சந்திகளில் அல்லது பாடசாலை, மதத்தலங்கள் அல்லது பொது இடங்களில் அமைக்கப்பட்டுள்ள தண்ணீர்த் தூண்களிலிருந்து அல்லது நீரக் குழாய்களிலிருந்து

    (1) ஒருகையினால் பிடித்துக் கொண்டு செல்லக்கூடிய பாத்திரம் அல்லாத வேறு பாத்திரத்தில் நீரைப் பெற்றுக் கொள்ளுதல்
    அல்லது

    (2) ஹோஸ் பைப், குழாய், தகரம், பீலி போன்ற வேறு ஏதேனும் உபகரணங்களைப் பொருத்தி நீரைப் பெற்றுக் கொள்ளுதல்
    கூடாது.

14. எந்தவொரு நபராலும்:

    (1) பொது தண்ணீர்த் தூண்களிலிருந்து வழங்குகின்ற நீரை விரயமாக்கும் ஏதேனும் செயற்பாடொன்றினை அல்லது

    (2) பொது தண்ணீர்த் தூண்களுடன் இணைக்கப்பட்டுள்ள தன்னியக்க வேல்வ், குழாய் அல்லது வேறு தன்னியக்க நீரைக் கட்டுப்படுத்தும் உபகரணமொன்றினை செயலிழக்கச் செய்தல் அல்லது தற்காலிகமாக செயற்பாட்டினை நிறுத்துகின்ற செயற்பாடொன்றை

செய்தல் கூடாது.

15. வீட்டுப்பாவனை தவிர்ந்த வேறு நடவடிக்கைகளுக்காகத் பொது தண்ணீர்த் தூண்களிலிருந்து நீரைப் பெற்றுக் கொள்ளுதல் கூடாது.

16. பொதுவான தண்ணீர்த் தூண்களிலிருந்து அல்லது அதற்கருகில் குளித்தல், உடலைக் கழுவுதல், உடைகள், பாத்திரங்கள், வீட்டுச் சாமான்களைக் கழுவுதல், மிருகங்களைக் குளிப்பாட்டுதல், வாகனங்கள், வண்டில்களைக் கழுவுதல், உணவுகள், மீன், இறைச்சி மரக்கறிகளை கழுவுதல் கூடாது.

17. ஏதேனும் நோய்த்தொற்று, தொடுகை அல்லது சரும நோயினால் பீடிக்கப்பட்டுள்ள அல்லது அத்தகைய நோயினால் அண்மையில் பீடிக்கப்பட்டிருந்த எந்தவொரு நபரும் அல்லது அத்தகைய நோயினால் பீடிக்கப்பட்டிருந்த ஒருவருக்கு அண்மையில் பணிவிடை செய்வதில் ஈடுபட்டிருந்த எந்தவொரு நபரும் பொது தண்ணீர்த் தூண்களிலிருந்து நீரைப் பெற்றுக் கொள்ளுதல் கூடாது.

**பிரதேசசபையின் அதிகாரங்களும் கடமைகளும்**

18. வீட்டுப் பாவனைக்காக அல்லது வீட்டுப் பாவனை தவிர்ந்த வேறு நடவடிக்கைகள்ககாக நீரை வழங்கும் செயற்பாடானது பிரதேசசபையின் தற்றுணிவின் பேரில் நீர் மீற்றரொன்றின் மூலமாக அல்லது வேறு விதத்தில் வழங்கப்படலாம்.

19. சபையின் நீர் வழங்கல் முறையின் மூலம் நீரை வழங்கியுள்ள எதேனுமொரு இடத்திற்கு, ஏதேனுமொரு தேவைக்காக தண்ணீர் மீற்றர்களைப் பொருத்தும் நடவடிக்கையானது நகர சபையினால் ஆற்றப்படக் கூடியதாகும்.

20. வீட்டுப் பாவனையல்லாத நடவடிக்கைகளுக்காக நீரை வழங்கியுள்ளதன் காரணமாக ஏதேனுமொரு வீட்டினது நடவடிக்கைகளுக்கான நீர் வழங்கலுக்குத் தடையேற்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படின் நீர் வழங்கல் சேவைக்காக கையொப்பமிடப்பட்ட ஒப்பந்தத்தில் எது குறிப்பிடப்பட்டிருந்தாலும், நட்டஈடு, அல்லது தண்டப்பணமொன்றைச் செலுத்தும் தேவைப்பாட்டிற்குட்படாது அந்நீர் வழங்கல் சேவையை நிறுத்துவதற்கு அல்லது குறைப்பதற்கு தலைவருக்கு அதிகாரம் உண்டும்.

21. கீழே குறிப்பிடப்பட்டுள்ள சம்பவங்களில் ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட சம்பவங்கள் இடம்பெறுகின்ற சந்தர்ப்பங்களில், ஏதேனுமொரு இடத்திற்கு வழங்கப்படுகின்ற நீரை

நிறுத்துவதற்கு, இடைநிறுத்துவதற்கு, குறைப்பதற்கு அல்லது துண்டித்து விடுவதற்கு தலைவரால் முடியும்.

(1) இடத்திலுள்ள உரிமையாளரது, குத்தகைதாரரது, அல்லது வதிவிடதாரரது கோரிக்கையின் பேரில்;
(2) இடத்திலுள்ள உரிமையாளரது, குத்தகைதாரரது, அல்லது வதிவிடதாரர் இத்துணைவிதிகளது ஏற்பாடுகளை மீறியுள்ள சந்தர்ப்பத்தில்;

(3) நீர்வழங்களுக்காகச் சபைக்குச் செலுத்தவேண்டிய கட்டணங்களை 21 நாட்களுக்கும் மேலாகக் கட்டாதுள்ள சந்தர்ப்பத்திலும் மற்றும் ;

(4) நீர் வழங்கல் திட்டங்களுக்கு நட்டமேற்படுத்துதல், நீரை அசுத்தப்படுத்துதல், விரயமாக்குதல், முறையற்றவிதத்தில் பயன்படுத்துதலுடன் தொடர்புடைய ஏதேனுமொரு செயற்பாடொன்றை இடத்தின் உரிமையாளர், குத்தகைதாரர், அல்லது வதிவிடதாரர் செய்துள்ள சந்தர்ப்பத்தில்.

22. நீர் வழங்கல் சேவைகள் வழங்கப்பட்டுள்ள இடத்திலுள்ள உரிமையாளர், குத்தகைதாரர், வதிவிடதாரரால் அச்சேவையின் ஒரு பகுதியான வால்விலிருந்து, குழாயிலிருந்து, மீங்டிரிலிருந்து அல்லது வேறு ஏதேனுமொரு உதிரிப்பாகத்திலிருந்து நீர் விரயமாகிச் செல்லுகின்றது என அறிந்தால் அதனைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். தம்மால் அதனை உடனடியாகத் திருத்த முடியாது விடின், அது தொடர்பாக உடனடியாக பிரதேசசபையின் தலைவருக்கு அல்லது உத்தியோகத்தரொருவருக்கு அறிவித்தல் வேண்டும்.

23. மேலே 22ஆம் பந்தியின் பிரகாரம் அறிவித்தலொன்றின் மூலம் அல்லது வேறு ஏதேனுமொரு விதத்தில் நீர் விரயமாகின்றதென அறிந்து கொண்டதன் பின்னர் உடனடியாகத் தலைவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரொருவரால் நகர சபை நீர் வழங்கல் சேவையிலிருந்து, அச்சேவையைத் துண்டித்தல் வேண்டுமென்பதுடன், அவ்விடத்திலுள்ள வதிவிடதாரரால் அவ்வாறு நீர் விரயமாகிச் செல்வதற்குக் காரணமான காரணத்தை கண்டறிந்து திருத்தும் வரை நீர் வழங்கல் சேவைத் தொடர்பை மீண்டும் வழங்குதல் கூடாது.

24. மேலே 23ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு துண்டிக்கப்பட்டுள்ள சேவையை மீள வழங்குவதற்காக பிரதேசசபையால் தாங்க வேண்டிய செலவினை உரிமையாளர், குத்தகைதாரர், அல்லது வதிவிடதாரர் நகரசபைக்குச் செலுத்துதல் வேண்டும்.

25. நீர் வழங்கள் சேவையின் கீழ் எவரேனும் வாடிக்கையாளரிடமிருந்து அறவிடப்படவேண்டிய நீர் வரி, மீற்றர் கட்டணம், வாடகை அல்லது நீர் கட்டணம் என்பனவற்றை அறவிடுவதற்கு உட்பட்டு, ஏதேனும் பிரதான நீர்க் குழாயின், பிரிக்கின்ற குழாயின், நீர்ப் பூவின், பொது தண்ணீர்த் தூணின் அல்லது சேவைக் குழாயின் நீர் வழங்கலை இடைநிறுத்துவதற்கு, மூடி விடுவதற்கு அல்லது திருப்புவதற்கு கீழே காட்டப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் தலைவருக்கு அதிகாரம் உண்டு:

(1) நீர் வழங்கல் திட்டத்தில் நீர் போதுமானளவில் காணப்படாமை

(2) திருத்தங்கள், சேவைகளை விரிவாக்கல் மற்றும் மாற்றங்களைச் செய்யவேண்டிய சந்தர்பபத்தில்

(3) நீர் வழங்கல்ன் போது ஏதேனும் குழாயிலிருந்து அல்லது கம்பத்திலிருந்து நீர் விரயமாவதைத் தடுப்பதற்காக மற்றும்

(4) தீ, மண்சரிவு, அல்லது வேறு சம்பவங்களின் காரணமாக நீர் வழங்கல் சேவைக்கு பாதிப்புக்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களில்.

26. மேலே 25ம் பந்தியின் கீழ் கூறப்பட்டவாறு நீர் வழங்கல் சேவையை இடைநிறுத்துதல், குறைத்தல், மூடிவிடுதல் மற்றும் திருப்புதல் போன்ற சந்தரப்பங்களில் நீரை வழங்குவதற்குத் தவறுதல் காரணமாக ஏற்படும் நட்டங்கள் மற்றும் நட்டஈடுகள் என்பனவற்றை கொடுப்பனவு செய்வதற்கு பிரதேச சபை கட்டுப்படாது.

27. தனியார் நீர் வழங்கல் சேவையினது நிறுத்தும் குழாய் அல்லது வால்வு, அக்குழாய் மற்றும் வால்விலிருந்து பிரதான குழாயை இணைக்கும் சந்தி வரையுமான சேவை குழாய், பொது தண்ணீர்த் தூண்கள் மற்றும் அவற்றின் உதிரிப்பாகங்கள், நீர் மீற்றர் மற்றும் தொடர்புடைய உதிரிப்பாகங்களும் பிரதேச சபையின் சொத்துக்கள் என்பதுடன் அவற்றினைப் பராமரிப்பதற்கும் திருத்துவதற்குமான செலவுகள் நிதியில் பொறுப்பேற்கப்படல் வேண்டும்.

**தனியார் நீர் வழங்கல் சேவைகளை வழங்குதல்**

28. இத்துணைவிதியின் 5ஆம் பந்தியின் கீழ் தனியார் நீர் வழங்கல் சேவையொன்றுக்காக முறையாக விண்ணப்பமொன்று வழங்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அதனை சபையானது தனது முன்னுரிமை அட்டவணையில் பதிந்து விண்ணப்பங்கள் வழங்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று வாரத்திற்குள் அதிகரம் பெற்ற உத்தியோகத்தரால்

செய்யப்படுகின்ற களப்பரிசோதனை அறிக்கையின் அடிப்படையில், தலைவரால் அது அனுமதிக்கப்படுதல் அல்லது நிராகரிக்கப்படுதல் முடியும் என்பதுடன் அது தொடர்பாக எழுத்து மூலமாக விண்ணப்பதாரருக்கு அறிவித்தல் வேண்டும்.

29. மேலே 28ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தனியார் நீர் வழங்கல் சேவைக்கு தலைவரால் அனுமதி வழங்கப்பட்டதன் பின்னர் விண்ணப்பதாரரால்,
    (1) முறைப்படி மதிப்பீடு செய்யப்பட்ட நீர் இணைப்புக் கட்டணம்
    (2) நீரை வழங்குவதற்கான உரிய பாதுகாப்பு உத்தரவாத வைப்புக் கட்டணம் ; மற்றும்
    (3) பிரதேசசபையால் தீரமானிக்கப்பட்ட வேறு ஏதேனும் மேலதிகக் கட்டணம் அல்லது வேறு விசேட கட்டணத்தினையும் ;

    பிரதேசசபைக்குச் செலுத்தி முறைப்படி ஒப்பந்தத்தை ஏற்படுதல் வேண்டும்.

30. மேலே 29ஆம் பந்தியின் கீழ் செலுத்தப்படவேண்டிய இணைப்புக் கட்டணம், பாதுகாப்பு உத்தரவாத வைப்பு, மேலதிக அல்லது விசேட கட்டணம் மற்றும் மாதாந்தம் பயன்படுத்தப்படுகின்ற நீரின் அளவினைப் பொறுத்து செலுத்தப்படவேண்டிய கட்டணம் என்பனவற்றை பிரதேசசபையானது முறையான பிரேரணைத் தீர்மானமொன்றின் மூலம் தீர்மானித்து வருடாந்தம் அரசாங்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் வெளியிடப்பட்ட கட்டணங்களுக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

31. மேலே 30ஆம் பந்தியின் கீழ் எவரேனும் விண்ணப்பதாரியினால் சபைக்குச் செலுத்தியுள்ள நீர் வழங்கல் இணைப்புக் கட்டணமானது, அந்நீர் வழங்கல் சேவை இணைப்பினை வழங்கியதன் விசேட காரணத்தின் அடிப்படையில் போதுமானதற்றதாகக் காணப்படுகின்ற சந்தர்ப்பங்களில், மேலதிக இணைப்புக் கட்டணத்தைச் செலுத்துமாறு பிரதேசசபைக்கு விதிக்கும் அதிகாரம் காணப்படுவதுடன் அதனை விண்ணப்பதாரி சபைக்குச் செலுத்துதல் வேுண்டும்.

32. மேலே 30 மறறும் 31இன் கீழ் கொடுப்பனவு செய்யப்படவேண்டிய அனைத்துக் கட்டணங்களையும் சரியாகக் கொடுப்பனவு செய்யாத அல்லது முறைப்படி ஒப்பந்தமொன்றில் கையெழுத்திடாத விண்ணப்பதாரிக்கு நீர் வழங்கல் தொடர்பை வழங்குதல் கூடாது.

33. ஒரு இடத்திற்கு நீரை வழங்குவதற்காக நீர் வழங்கல் திட்டத்திலுள்ள குழாய்களிலிருந்து இணைப்புக்களை வழங்கும் செயற்பாடானது சபையின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரால் மட்டுமே வழங்கப்படும்.

34. நீர் மீற்றர் மூலமாக வழங்கப்படுகின்ற ஒவ்வொரு இடங்களுக்கும் மாதத்திற்கு ஒருமுறை நீர் மீற்றரில் காட்டப்படுகின்ற நீரின் அளவிற்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட நீர் சிட்டையொன்று பிரதேசசபையினால் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

35. திருத்துவதற்காக அல்லது வேறு மீற்றரொன்றை இடுவதற்காக உள்ள மீற்றரை அகற்றுகின்ற சந்தர்ப்பங்களில், அதன் இறுதிக் கணக்கிடல்களுன் கூடிய நீர் சிட்டையொன்றை வாடிக்கையாளருக்கு வழங்க வேண்டியதுடன் மீற்றர் அகற்றியது தொடர்பான அறிவித்தலொன்றையும் அவ்விடத்தில் பிரசுரித்தல் வேண்டும்.

36. நீர் மீற்றரை அகற்றியுள்ள காலப்பகுதியில் மீற்றர் இல்லாது நீரை வழங்குவதற்காக அறவிடப்படவேண்டிய கட்டணமானது, முன்னைய 3 மாதத்தினது பயன்பாட்டினது சராசரி நாளாந்தக் கட்டணத்தின் அடிப்படையில் மீற்றர் இன்றி நீர் வழங்கப்பட்ட நாட்களின் எண்ணிக்கையினை அடிப்படையாகக் கொண்டு சிட்டைகளை வழங்குதல் வேண்டும்.

37. மீற்றரின் உண்மைத்தன்மை தொடர்பில் எவரேனும் வாடிக்கையாளர் ஒருவர் பரிசீலனையொன்றைச் செய்யுமாறு விண்ணப்பித்தால், அவ்வாறான நடவடிக்கைகளுக்காக சபையினால் அனுமதிக்கப்பட்டு வர்த்தமானியில் குறிப்பிட்டுக் கூறப்பட்டுள்ள பரிசீலனைக் கட்டணத்தைச் சபைக்குச் செலுத்துதல் வேண்டும்.

38. மேலே 37ஆம் பந்தியின் கீழ் பரிசீலனைக் கட்டணத்தை சபைக்குச் செலுத்தியதன் பின்னர் அதிகாரம் பெற்ற உத்தியோகத்திரின் மூலம் நீர் மீற்றர் பரிசீலனை செய்யப்பட்டதன் பின்னர் அது தொடர்பான அறிக்கையொன்றினை தலைவர் பாவனையாளருக்கு வழங்குதல் வேண்டும்.

39. மேலே 38ல் குறிப்பிடப்பட்ட பரிசீலனை அறிக்கையின் அடிப்படையில், மீற்றரில் குறிப்பிடப்பட்டுள்ள நீரின் அளவு மற்றும் உண்மையாகவே பயன்படுத்தப்பட்ட நீரின் அளவு என்பவற்றிற்கிடையே ஏதேனும் வேறுபாடுகள் அறிக்கையிடப்பட்டால் உரிய மீற்றரைத் திருத்துவதற்கு அல்லது புதிய மீற்றரொன்றைப் பொருத்துவதற்கு பிரதேச சபையானது நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அவ்வாறு அறிக்கையிடப்படுகின்ற வேறுபாடானது மூன்று வீதத்திற்கு மேல் செல்வதாயின் அவ்வேறுபாட்டிற்கு அமைவாக தற்போது வாடிக்கையாளருக்கு வழங்கப்பட்டுள்ள இறுதி சிட்டையைச் திருத்தி அதனடிப்படையில் நீர் வழங்கற் கட்டணத்தை அறவிடவேண்டியதுடன், வாடிக்கையாளரால் கொடுப்பனவு செய்யப்பட்ட பரிசீலனைக் கட்டணத்தினை அவருக்கு மீளச் செலுத்துதலும் வேண்டும்.

40. மேலே 39ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கமைய மீற்றரில் குறிப்பிடப்பட்டுள்ள நீரின் அளவு மற்றும் உண்மையிலேயே பயன்படுத்தப்பட்ட நீரின் அளவிற்கிடையேயான

வேறுபாடானது மூன்று வீதத்திற்குக் குறைவாகக் காணப்பட்டால், வழங்கப்பட்ட நீர்ச் சிட்டையை திருத்துதல் அல்லது பரிசீலனைக் கட்டணத்தை மீளச் செலுத்தவேண்டிய அவசியமில்லை.

41. இங்கு 21ஆம் பந்தியின் அடிப்படையின் பிரகாரம் நீர் இணைப்பானது துண்டிக்கப்பட்ட ஒரு சந்தரப்பத்தில் இத்துணைவிதிகளது ஏற்பாடுகளின் அடிப்படையில் காட்டப்பட்டுள்ள கட்டணங்களைச் செலுத்திய பின்னர், மீளவும் நீர் வழங்கல் சேவை இணைப்பை வழங்கும் போது 29 (i) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நீர் இணைப்பினை மீள வழங்குவதற்குத் தீர்மானிக்கும் உரிமை தலைவருக்கு உண்டு.

42. ஏதேனுமொரு இடத்தில் கட்டிடமொன்றை நிருமாணிப்பதற்கு முன்னர் அதன் நிருமானிப்புப் பணிகளுக்குப் பயன்படுத்துவதற்காக, தற்காலிக நீர் இணைப்பொன்றைப் பெற்றுக் கொள்ள முடியுமென்பதுடன் அதற்காக 18ஆம் பந்தி தொடக்கம் 41ஆம் பந்தி வரையான விதிமுறைகள் உரித்தாகும்.

## நிலத்திற்கடியிலான நீர் வழங்கல் சேவை

43. 500 வோல்ட் அல்லது அதற்கு அதிகமான கொள்ளளவைக் கொண்ட ஏதேனும் டிரான்போர்மர் அல்லது வேறு மின் உணபகரணங்களது மூடிகளுடன் தொடர்புபடும் வகையில் நீர் வழங்கல் அல்லது நீர்வழங்கலின் ஒரு பகுதியான குழாய்களுக்கோ அல்லது அந்நீர் இணைப்பின் உதிரிப்பாகங்களுக்கோ நிலத்திற்கடியில் எந்தவித இணைப்புகளையும் மேற்கொள்ளுதல் கூடாது.

44. மேலே 43இல் குறிப்பிடப்பட்டுள்ள மின் உபகரணமொன்றின் நிலத்தகடு அல்லது நிலத்திற்கடியிலுள்ள இணைப்புக்களது ஏதேனும் பகுதியில் இருந்து அறுபது மீற்றருக்குக் குறையாத தூரத்தில் நீர் வழங்கல் அல்லது நீர் சேவை குழாயொன்றை நிலத்திற்கடியில் தாபித்தல் கூடாது.

45. வானொலி அல்லது இலத்திரனியல் உபகரணத்திற்கு அல்லது உதிரிப்பாகத்திற்கான இணைப்பை நிலத்திற்கடியில் இணைக்கும் போது நீர் வழங்கல் அல்லது நீர்க் குழாயிலிருந்து ஏதேனும் ஒரு பகுதியான உபகரணத்திற்கோ அல்லது உதிரிப்பாகத்திற்கோ அறுபது சென்றிமீற்றருக்கு குறையாத தூரத்தில் அதனை தாபித்தல் வேண்டும்.

46. பிரதேச சபைக்குச் சொந்தமான நீர் வழங்கலுடன் தொடர்புடைய நீர் மீற்றர் பொருத்தப்பட்டுள்ள இடத்தில் நிலத்துக்கடியில் ஏதேனும் இணைப்பைச் செய்கின்ற

எவரேனும் நபரொருவர், மீற்றரின் உள்பக்கத்தில் அல்லது மீற்றருக்குக் குறுக்காக ஓடுகின்ற இலத்திரனியல் வளைவுடன் அதனை பொருத்துதல் வேண்டும்.

47. தொலைபேசி, மின்சாரம், வனொலி அல்லது தொலைக்காட்சி அல்லது தகவல் தொழிநுட்ப உதிரிப்பாகங்கள் மற்றும் உபகரணங்களுடன் தொடர்புடைய நிலத்தடி தட்டு, குழாய்கள், கேபிள்கள், அல்லது வயர்களுக்கருகிலோ அல்லது அதன் நிலத்தடி உதிரிப்பாகங்கள் அல்லது உபகரணங்களுக்குச் சமாந்தரமாக அல்லது அதனுடன் குறுக்கறுக்கின்ற விதத்தில் நீர் வழங்கல் அல்லது நீர் சேவைக்கான குழாய்களைத் தாபித்தல் கூடாது.

48. இத்துணைவிதியின் எந்தவொரு பந்தியேனும் மீறப்படும் வகையில் செயற்படுதல் அல்லது இத்துணைவிதியின் கீழ் தலைவரால் செய்யப்படுகின்ற கட்டளைகளுக்கு அமையாது செயற்படுதல் என்பன இத்துணைவிதியின் கீழ் தவறாகும் என்பதுடன், அத்தகையை தவறைச் செய்கின்ற அனைத்து நபர்களும், அத்தவறு தொடர்பாக உரிய அதிகாரத்தினைக் கொண்டுள்ள நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டதன் பின்னர் 1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122ஆம் பந்தியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தண்டணைக்கு உட்படுதல் வேண்டும்.

49. பதங்கள் தொடர்பாக பிற அர்த்தங்கள் அவசியப்பட்டாலொழிய, இத்துணைவிதிகளில்;

‘‘தலைவர்’’ என்பது அவ்வப்போது பிரதேசசபையின் தலைவர் பதவியை வகிக்கும் நபரும் ;

‘‘அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்’’ என்பது பிரதேசசபையின் தலைவரால் எழுத்து மூலமாக அதிகாரம் அளிக்கப்பட்ட எந்தவொரு உத்தியோகத்தரையும் ;

குறிக்கும்.

## VI. பொது பாதைகள் மற்றும் பொது இடங்களில் நடந்து கொள்ளுதல் மற்றும் சுற்றித்திரிதல் தொடர்பான துணைவிதிகள்

1. 1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 126ஆவது பந்தியின் (xxi) உபபந்தியின் கீழ் இத்துணைவிதிகளை உருவாக்குவதற்குப் பிரதேச சபைகளுக்கு அதிகாரம் கிடைத்துள்ளது

2. பிரதேச சபை நியாயாதிக்கப் பிரதேசத்தில் ஏதேனும் பாதையில், வீதியில், அல்லது பொது இடத்தில் எந்தவொரு நபராலோ அல்லது நபர்களாலோ ஒழுக்கமற்ற முறையில் நடந்து கொள்ளுதல் மற்றும் சுற்றித்திரிதல் மற்றும் துர்வார்த்தைகளைப் பயன்படுத்துதல் என்பனவற்றைத் தடுப்பதற்கான ஏற்பாடுகளை வகுப்பதற்காக இத்துணைவிதிகளானது விதிக்கப்படுகின்றது.

3. இத்துணைவிதிகளானது "பொது பாதைகள் மற்றும் பொது இடங்களில் நடந்து கொள்ளுதல் மற்றும் சுற்றித்திரிதல் தொடர்பான துணைவிதிகள்" என அழைக்கப்படும்.

4. எந்தவொரு நபராலோ அல்லது நபர்களாலோ பிரதேசசபை நியாயாதிக்கப் பிரதேசத்தினுள் ஏதேனும் பாதையில், வீதியில், அல்லது பொது இடத்தில் ஒழுக்கமற்ற முறையில் நடந்து கொள்ளுதல் மற்றும் சுற்றித்திரிதல் மற்றும் துர்வார்த்தைகளைப் பயன்படுத்துதல் கூடாது.

5. பிரதேச சபை நியாயாதிக்கப் பிரதேசத்தில் ஏதேனும் பாதையில், வீதியில் பயணம் செய்கின்ற அல்லது பொது இடத்தில் உள்ள எந்தவொரு நபருக்கோ அல்லது பிரதேசத்தில் வசிப்பவருக்கோ அல்லது போக்குவரத்துக்குத் தடையேற்படும் விதத்தில் எந்தவொரு நபரும் அவ்விடங்களில் ஒழுக்கமற்ற முறையில் நடந்து கொள்ளுதல் அல்லது வெறுமனே சுற்றித்திரிதல் கூடாது.

6. பிரதேச சபை நியாயாதிக்கப் பிரதேசத்தில் ஏதேனும் பாதையில், வீதியில், பொது இடத்தில் எந்தவொரு நபரும் கருத்துக்களை வெளிப்படுத்தும் போது மற்றும் உரையாற்றுதலின் போது கூட துர்வார்த்தைகளைப் பயன்படுத்துதல் மற்றும் அவ்வாறான இடத்தில் ஒழுக்கமற்ற விதத்தில் நடந்து கொள்ளுதல் கூடாது.

7. பிரதேச சபை நியாயாதிக்கப் பிரதேசத்தில் தலைவரிடமிருந்து பெற்றுக் கொண்ட ஒரு அனுமதிப்பத்திரம் இல்லாது உரையொன்றையோ, பேச்சையோ, கூட்டமொன்றையோ

நடாத்துதல் அல்லது இத்துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு பந்தியும் மீறப்படுகின்ற வகையில் செயற்படுதல் குற்றமாவதுடன், அவ்வாறு குற்றமிழைத்த அனைத்து நபர்களும் அக்குற்றம் தொடர்பாக உரிய அதிகாரத்தினைக் கொண்ட நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டதன் பின்னர் 1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122ஆம் பந்தியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தண்டணைக்கு உட்படுதல் வேண்டும்.

8. பதங்கள் தொடர்பாக பிற அர்த்தங்கள் அவசியப்பட்டாலொழிய, இத்துணைவிதிகளில்;

''தலைவர்'' என்பது அக்காலப்பகுதியில் பிரதேச சபையில் தலைவர் பதவியை வகிக்கும் நபரையும்;

''உரை'' என்பது, எந்தவொரு விடயத்தையும் முன்னிலைப்படுத்தி செய்யப்படுகின்ற விளக்கம், தெளிவுபடுத்தல்கள், கருத்துக்களை வெளிப்படுத்துதல், கோரிக்கைகளைச் செய்தல், அல்லது அதற்குச் சமமான நோக்கத்தைக் கொண்டு கூறப்படும் எந்தவொரு கருத்தையும்;

''பொது இடம்'' என்பது, பாதை, சந்தை, பஸ் தரிப்பிடம் போன்ற பொதுவாக மக்கள் பயன்படுத்துகின்ற எந்தவொரு இடத்தினையும்;

''வீதி'' என்பது, பிரதேச சபை நியாயாதிக்கப் பிரதேசத்தின் எந்தவொரு நிறுவனத்திற்கும் சொந்தமான பாதைகள், சந்திகள், அல்லது எந்தவொரு பொது இடம் அல்லது மண்டபத்தினையும்;

குறிக்கும்.

# VII. அசையாச் சொத்துக்கள், பாதைகள் மற்றும் வீதிகளை முறையற்ற விதத்தில் பிடித்தல், தடங்கல்களை ஏற்படுத்துதல் தொடர்பான துணைவிதிகள்

1. 1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 126ஆவது பந்தியின் (vi) உபபந்தி மற்றும் 126ஆவது பந்தியின் (vii) (உ) பந்தியின் கீழ் இத்துணைவிதிகளை உருவாக்குவதற்குப் பிரதேச சபைகளுக்கு அதிகாரம் கிடைத்துள்ளது.

2. பிரதேச சபைக்குச் சொந்தமான அசையாச் சொத்துக்கள், பாதைகள் மற்றும் வீதிகளது எல்லைகளை மாற்றியமைத்தல் மற்றும் அதனுடன் தொடர்பான விடயங்கள் தொடர்பில் ஏற்பாடுகளை விதிப்பதற்காக இத்துணைவிதிகள் விதிக்கப்படுகின்றன.

3. இத்துணைவிதிகளானதுஅசையாச் சொத்துக்கள், பாதைகள் மற்றும் வீதிகளை முறையற்ற விதத்தில் பிடித்தல், தடங்கல்களை ஏற்படுத்துதல் தொடர்பான துணைவிதிகள் என அழைக்கப்படும்.

4. பிரதேச சபை நியாயாதிக்கப் பிரதேசத்தினுள் பிரதேச சபைக்குச் சட்டரீதியாக உரிமையுள்ள ஏதெனுமொரு கட்டிடமொன்றை, காணியொன்றை, பாதையொன்றை, வேறு ஏதேனுமொரு அசையாச் சொத்து அல்லது பாதை தொடர்பிலான வீதிக் கோட்டினது எல்லையிலோ அல்லது பௌதீக ரீதியாகவோ ஏதெனுமொரு மாற்றத்தினைச் செய்தல் அல்லது அவ்வாறான பொதுச் சொத்தொன்றினது பகுதியொன்றை அதற்கு அருகிலுள்ள சொத்தொன்றிற்கு முறையற்ற விதத்தில் இழுத்துக் கொள்ளுதல் எந்தவொரு நபராலும் செய்யப்படுதல் கூடாது.

5. (1) பிரதேச சபை நியாயாதிக்கப் பிரதேசத்தினுள் பிரதேசச் சபைக்குச் சட்டரீதியாக உரிமையுள்ள ஏதேனுமொரு பாதை தொடர்பிலான வீதிக் கோட்டினது எல்லையில் அல்லது பௌதீக ரீதியான அமைவிடத்தில் எந்தவொரு மாற்றத்தையும் செய்தல் அல்லது அதில் ஏதேனுமொரு பகுதியை, அதற்கருகிலுள்ள சொத்தொன்றிற்கு முறையற்ற விதத்தில் இழுத்துக் கொண்டுள்ளதாக தலைவருக்குத் தெரியவருகின்ற சந்தர்ப்பத்தில், தலைவர், அவ்வாறான இழுத்துக் கொள்வதற்கு அல்லது மாற்றுவதற்குக் காரணமாகவிருந்த சொத்தினது உரிமையாளர் எனக் கூறுபவருக்கு அல்லது உரிமை கோருவோருக்கு, உரிமை அல்லது உரித்தெனக் கூறுவதற்குக் காரணமான உறுதி, நிருணயப் பத்திரம், நில அளவைத் திட்டம் இருந்தால் அவற்றினது மூல

ஆவணங்களையும் அவற்றினது சான்றுப்படுத்தப்பட்ட மேலதிகப் பிரதிகளையும் குறிப்பிட்ட காலப்பகுதியுள் தமக்குச் சமர்ப்பிக்குமாறு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

(2) இத்துணைவிதிகளின் கீழ் சான்றுப்படுத்தும் நடவடிக்கை தொடர்பான அதிகாரம் பெற்றவர்களாக, உறுதி அல்லது நிருணயப் பத்திரம் தொடர்பாக, சட்டத்தரணி அல்லது நொத்தாரிசு ஒருவரும், நில அளவைத் திட்டம் தொடர்பாக இருந்தால் அதிகாரம்பெற்ற அளைவையியலாளரும் கவனத்திற் கொள்ளப்படுதல் வேண்டும்.

6. அவ்வாறான அறிவித்தலொன்று கிடைக்கப்பெற்ற எந்தவொரு நபரும், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதிக்குள் கோரப்பட்ட ஆவணங்களை தலைவரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

7. தலைவரால் இத்துணைவிதிகளின் கீழ் கோரப்படுகின்ற ஏதேனும் உறுதியொன்றை, நிருணயப்பத்திரமொன்றை அல்லது நில அளவைத் திட்டமொன்றை தலைவர் அல்லது அது தொடர்பாக விசேட அறிவினைக் கொண்ட உரிய பொருத்தமான நபர் மூலம் பரிசீலித்துப் பார்த்தல் சட்டரீதியானதாகும்.

8. தலைவர் தமக்கு, இத்துணைவிதிகளின் கீழ் சமர்ப்பிக்கப்படுகின்ற உறுதி, நிருணயப் பத்திரம் அல்லது நில அளவைத் திட்டத்தினை அதற்குரிய உறுதிப்படுத்தப்பட்ட பிரதியுடன் மேலும் ஒப்புநோக்கி, அவ்வாவணங்களை சமர்ப்பிக்கும் நபருக்கு அம்மூல ஆவணங்களை மீள ஒப்படைத்தல் வேண்டும்.

9. தலைவருக்குச் சமரப்பிக்கப்படுகின்ற ஆவணங்களை ஒப்புநோக்கும்போது பிரதேச சபைக்குச் சட்டரீதியான உரிமையுள்ள ஏதேனுமொரு கட்டிடம், காணி, பாதை அல்லது வேறு ஏதேனுமொரு அசையாச் சொத்தினது எல்லை அல்லது பாதை தொடர்பாக உள்ள வீதி கோட்டில் வேறுபாடு காணப்படுகின்றது என அல்லது அதன்மூலம் முறையற்ற விதத்தில் இழுத்துக் கொள்ளப்பட்டுள்ளதென தலைவருக்குத் தெரியவருகின்ற சந்தரப்பங்களில், அதற்கு அமைவாக பரிசீலனை செய்யும் நடவடிக்கைக்காக அல்லது குறிப்பிட்ட அளவையினை மேற்கொள்ளும் நடவடிக்கைக்காக, உரிய சொத்தின் உரிமையாளர் எனக் கூறுகின்ற நபருக்கும் அல்லது உரிமை கோருபவருக்கும் முன்கூட்டிய எழுத்துமூலமான அறிவிப்பை வழங்கியதன் பின்னர் தலைவரால் அதற்கென குறித்து அதிகாரமளிக்கப்பட்ட நபருக்கு அல்லது அளவையியலாளருக்கு, அதிகாரத்தினைக் கையளிக்கப்பட முடியுமென்பதுடன் அவ்வாறு உரிய சொத்திற்குள் பிரவேசித்து பரிசோதனை செய்தல் மற்றும் அளவை செய்தல் சட்டரீதியானதாகும்.

10. இத்துணைவிதிகளின் கீழ் தலைவரது அதிகாரத்தின் மீது தயாரிக்கப்படுகின்ற ஏதேனும் அளவைத்திட்டம் அல்லது அளவிடும் செயற்பாடானது, உரிய சொத்து உடைமை அல்லது

உரிமை தொடர்பாக எழக்கூடிய வழக்கொன்றில் அத்தாட்சிப்படுத்தும் அளவிலான தீர்மானிக்கத்தக்கதொரு சாட்சியாக இருக்கலாம்.

11. இத்துணைவிதிகளின் கீழ் தலைவரது அதிகாரத்தின் கீழ் தயாரிக்கப்படுகின்ற அளவைத் திட்டம் மூலம் பிரதேசசபைக்கு சட்டரீதியான உரிமையுள்ள ஏதேனும் கட்டிடமொன்றினது,காணியினது, பாதையினது,அல்லது வேறு எந்தவொரு அசையாத் சொத்தினது அமைவிடத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளது அல்லது முறையற்ற விதத்தில் இழுத்துக் கொள்ளப்பட்டுள்ளது எனத் தலைவர் திருப்தியடைந்திருந்தால், அதனைச் சரிசெய்வதற்கு ஒரு மாதத் தவணையை வழங்கி, தயாரிக்கப்பட்டுள்ள அளவைத் திட்டத்தின் பிரதியுடன் உரிய சொத்தின் உரிமையாளர் எனக் கூறுபவருக்கு அல்லது உரிமை கோருவோருக்கு எழுத்துமூலம் அறிவிக்க வேண்டியது தலைவரது கடமையாகும்.

12. மேலே 11ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கமைய அறிவித்தலொன்றைப் பெறுகின்ற எந்தவொரு நபரும், அதில் குறிப்பிடப்பட்டுள்ள கால அவகாசத்திற்குள் அதற்கமைவாகச் செயற்படுதல் அல்லது உரிய நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தாக்கல் செய்து தமக்குள்ள உரிமை தொடர்பில் தீர்மானிப்பதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

13. மேலே 12ஆம் பந்தியின் கீழ் குறிப்பிடப்பட்ட நடைமுறைகள் செய்யப்படவில்லை எனத் தலைவருக்குத் தெரியவரும் பட்சத்தில், அது முறையற்றவிதத்தில் செய்யப்பட்ட இழுத்துக் கொள்ளுதல் எனக் காரணங்கள் முன்வைக்கப்பட்ட ஒரு சொத்தாகவிருந்தால், அச்சொத்தினது வெற்று காணியாட்சியை பிரதேச சபைக்குப் பெற்றுக் கொள்வதற்காக, அது தொடர்பான எழுத்துமூலமான சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மேலதிக நடவடிக்கைகளை பின்பற்றுதல், அல்லது சந்தர்ப்பத்திற்கேற்ற விதத்தில், தலைவர் அல்லது தலைவரால் எழுத்துமூலம் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரால் முறையற்ற விதத்தில் இழுத்துக் கொள்ளப்பட்ட சொத்தினைப் பிரதேச சபையின் கட்டுப்பாட்டிற்குக் கீழ் மீண்டும் கொண்டுவருவதற்காக பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் சட்டரீதியானதாகும்.

14. இத்துணைவிதிகளின் கீழ் உள்ள படிமுறைகளைப் பின்பற்றும்போது பிரதேச சபைக்குச் சொந்தமான பாதைகள், வீதிக் கோடுகள் என்பன மாற்றப்பட்டுள்ளதென அறியப்படுகின்ற சந்தர்ப்பங்களில் அவ்வீதிக் கோட்டினைக் குறித்த காலத்திற்குள் மீளத்தாபிக்குமாறு தலைவர் எழுத்துமூலம் அறிவித்தல் வேண்டும். அவ்வாறான அறிவிப்பின்போது விதிக்கப்பட்ட காலப்பகுதியில் உரிய சொத்தினது உரிமையாளர் அல்லது உரிமை கோருகின்ற நபர் அந்த அறிவித்தலுக்கமைய செயற்படுவாரெனின், தலைவரால் உரிய வீதிக் கோட்டினை முழுமையாக தாபிப்பதற்கு வழிமுறைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

15. இத்துணைவிதியின் எந்தவொரு பந்தியேனும் மீறப்படும் வகையில் செயற்படுதல் தவறாகும் என்பதுடன், அத்தகையை தவறைச் செய்கின்ற அனைத்து நபர்களும், அத்தவறு தொடர்பாக உரிய அதிகாரத்தினைக் கொண்டுள்ள நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டதன் பின்னர் 1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122ஆம் பந்தியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தண்டனைக்கு உட்படுதல் வேண்டும்.

16. பதங்கள் தொடர்பாக பிற அர்த்தங்கள் அவசியப்பட்டாலொழிய, இத்துணைவிதிகளில்;

"தலைவர்" என்பது, அக்காலப்பகுதியில் பிரதேச சபையில் தலைவர் பதவியை வகிக்கும் நபரையும்;

"உரிமையாளர் அல்லது உரிமை கோருவோர்" என்பது, இழுத்துக் கொள்ளப்பட்ட சொத்தினது அல்லது வீதிக் கோட்டினை மாற்றிய சொத்தினது உரிமைக்காக முன்வருகின்ற அல்லது தோற்றுகின்ற நபரையும்;

குறிக்கும்.

## VIII. பொது மைதானம் தொடர்பான துணைவிதிகள்

1. 1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 126ஆவது பந்தியின் (xiv) உபபந்தியின் கீழ் இத்துணைவிதிகளை உருவாக்குவதற்குப் பிரதேச சபைகளுக்கு அதிகாரம் கிடைத்துள்ளது.

2. இத்துணைவிதியானது பிரதேசசபை நியாயாதிக்கப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள பிரதேச சபைக்குச் சொந்தமான அல்லது பிரதேச சபையின் பொறுப்பிலுள்ள, பொதுமக்களது நலன்களுக்காகவும் மகிழ்ச்சிகரமான வாழ்க்கைக்காகவும் பொது மைதானமாகப் பயன்படுத்தப்படுகின்ற பிரதேசத்தினை, சிறப்பான வகையில் பேணுவதற்கும் அவற்றை முறையான விதத்தில் பராமரிப்பதனை உறுதிப்படுத்தும் நோக்கிலும் இத்துணைவிதிகள் விதிக்கப்படுகின்றன.

3. இத்துணைவிதிகளானது பொது மைதானம் தொடர்பான துணைவிதிகள் என அழைக்கப்படும்.

4. பிரதேச சபை நியாயாதிக்கப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள எல்லாப் பொது மைதானங்களும் இத்துணைவிதிகளின்கீழ் பிரதேச சபை அலுவலகத்தினால், பதிவேடுகளில் பதியப்பட்டு பராமரிக்கப்படுதல் வேண்டும்.

5. பிரதேச சபை நியாயாதிக்கப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள பொது மைதானமொன்றை, தலைவரால் வழங்கப்படுகின்ற ஆவணம் அல்லது அனுமதி இல்லாது, தலைவரால் பொது அறிவித்தலொன்றின் மூலம் 'முன்னனுமதியொன்றைப் பெறுதல் வேண்டும்' என விதிக்கப்பட்ட ஏதேனும் நடவடிக்கைக்காகப் பயன்படுத்துதல் கூடாது.

6. பிரதேச சபை நியாயாதிக்கப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள பொது மைதானத்தினை ஏதேனும் குறிப்பிட்டதொரு நடவடிக்கைக்காகப் பயன்படுத்தும் போது 'முன்னனுமதியைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்' என தலைவரால் விதிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அவ்வாறானதொரு நடவடிக்கைக்காக உரிய அனுமதியைப் பெற்றுக் கொண்டன்றி அம்மைதானத்தைப் பயன்படுத்துதல் கூடாது.

7. அவ்வாறானதொரு இடத்தினைப் பயன்படுத்தும் எந்தவொரு நபரும், அப்பிரதேசத்தை சட்டரீதியாகப் பயன்படுத்தும் இன்னுமொரு நபருக்கு இடைஞ்சல் ஏற்படக்கூடிய விதத்தில் அப்பிரதேசத்தில் நடந்து கொள்ளுதல் கூடாது.

8. பிரதேச சபை நியாயாதிக்கப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள பொது மைதானமானது மு.ப.6.00 தொடக்கம் பி.ப.6.00 மணி வரையான காலப்பகுதியில் பொதுமக்களது பாவனைக்காகத் திறந்து வைக்கப்படுதல் வேண்டும்.

9. எவரேனுமொரு நபர், ஏதேனுமொரு நிறுவனம் அல்லது ஏதேனுமொரு அமைப்பொன்று அவ்வாறான பொது மைதானமொன்றை பி.ப.6.00 மணியின் பின்னர் பயன்படுத்துவதற்கு எதிர்பார்ப்பதாயின், அதற்காக தலைவரது விசேட அனுமதியைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

10. ஏதேனுமொரு பொது மைதானமொன்று பாராமரித்துச் செல்லப்படுகின்ற பிரதேசத்திற்குள் தடாகம் அல்லது அலங்கார நீர்க்குழாய்கள் அமைந்துள்ள சந்தர்ப்பத்தில் அம்மைதானத்தைப் பயன்படுத்தும் எந்தவொரு நபரும், அத்தடாகத்தில் அல்லது அலங்கார நீர்க்குழாயில் குளித்தல் அல்லது அதிலுள்ள தண்ணீர் அழுக்கடையக்கூடிய விதத்தில் வேறு ஏதேனுமொன்றைச் செய்தல் கூடாது.

11. அவ்வாறானதொரு பிரதேசத்தை அல்லது இடத்தை பயன்படுத்தும் எந்தவொரு நபரும் அப்பிரதேசத்தில் அமைந்துள்ள எந்தவொரு பொருளுக்கோ அல்லது அப்பிரதேசத்தினுள் இருக்கின்ற எந்தவொரு நபருக்கோ எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்துதல் கூடாதென்பதுடன் அவ்விடத்தினுள் அமைந்துள்ள மரஞ்செடிகொடிகள் அல்லது பூக்கள் என்பனவற்றை தலைவரது அனுமதியின்றி பறித்தல் அல்லது அங்கு வளரும் மரங்களுக்கு அல்லது செடிகளுக்கு எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்துதல் கூடாது.

12. அவ்வாறான மைதானமொன்றிற்குள் பிரதேச சபையினால் வழங்கப்பட்டுள்ள ஆசனங்களில் எந்தவொரு நபரும் அமரும் நடவடிக்கை தவிர்ந்த வேறு எந்தவொரு நடவடிக்கைக்காகவும் அவற்றைப் பயன்படுத்துதல் கூடாது என்பதுடன் எந்தவொரு நபரும் அவ்வாசனங்களின் மீது பாதங்களை வைத்தல் அல்லது அழுக்காக்குதல் கூடாது.

13. எந்தவொரு நோய்த்தொற்றோ அல்லது தொடுகை நோய் உள்ள எந்தவொரு நபரும் பொது மைதானத்திற்குள் பிரவேசித்தல் கூடாது.

14. எந்தவொரு நபரும் பொது மைதானத்தில் அமைந்துள்ள மணல், மண், அல்லது அங்கு வளரும் தாவரங்கள் அல்லது செடிகளை வேறு இடத்திற்கு எடுத்துச் செல்லுதல் அல்லது அவ்வாறான மைதானத்தினது மேற்றளத்தினை சேதப்படுத்துதல் கூடாது.

15. பிரதேச சபை நியாயாதிக்கப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள பொது மைதானத்தில் பயன்படுத்தப்படுகின்ற விளையாட்டுப் பொருட்கள் அல்லது வேறு பொருட்களை உரிய செயற்பாடுகளின் முடிவில் உரியவாறு மீள ஒப்படைத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய எந்தப் பொருட்களுக்கும் எந்தவித சேதத்தினையும் விளைவித்தல் கூடாது.

16. ஏதேனுமொரு விதத்தில் அந்தப் பொருட்களுக்குச் சேதத்தினை ஏற்படுத்தியிருந்தால் அதற்குப் பதிலாக சபையினால் விதிக்கப்படுகின்றவாறு புதிய பொருளொன்றை வழங்குதல் அல்லது ஏற்பட்ட நட்டத்திற்கான பணத்தினைச் செலுத்துதல் என்பன உரிய நபரால் செய்யப்படவேண்டும்.

17. பொது மைதானத்திற்குள் அமைந்துள்ள நீர்க் குழாய்கள், குளியலறைகள், மலசலகூடங்கள் என்பனவற்றை மிகவும் சுகாதாரமாகப் பேண வேண்டியதுடன் அவ்விடங்களை அசுத்தப்படுத்துதலும் கூடாது.

18. பொது மைதானத்திற்கு பிரதேச சபையினால் வழங்கப்பட்டுள்ள நீர், மின்சாரம், போன்ற வசதிகளை பயன்பாட்டிற்கு எடுக்கும்போது சபையினால் விதிக்கப்பட்ட பணத்தினை அதற்காகச் செலுத்தவேண்டியதுடன், பொதுமக்களது நலன்களுக்காக நடாத்தப்படுகின்ற ஏதேனும் நிகழ்ச்சிகளுக்காக அம்மைதானத்தை பயன்படுத்தும் சந்தர்ப்பங்களில்

கொடுப்பனவு செய்யப்படவேண்டிய கட்டணங்களிலிருந்து விலக்களிப்பதற்கு தலைவருக்கு அதிகாரம் உண்டு.

19. இத்துணைவிதிகளின் எந்தவொரு ஏற்பாடுகளும் மீறப்படுதல் குற்றமாவதுடன் அவ்வாறான குற்றமிழைக்கும் அனைத்து நபர்களுக்கும் உரிய நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டதன் பின்னர் 1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122ஆம் பந்தியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் அடிப்படையில் விதிக்கப்படுகின்ற தண்டணையின் மூலம் அவருக்குத் தண்டணை அளித்தல் வேண்டும். வேண்டும்.

20. பதங்கள் தொடர்பாக பிற அர்த்தங்கள் அவசியப்பட்டாலொழிய, இத்துணைவிதிகளில்;

> ''தலைவர்'' என்பது, அக்காலப்பகுதியில் பிரதேச சபையில் தலைவர் பதவியை வகிக்கும் நபரையும்;
> குறிக்கும்.

## IX. பிரதேச சபையினது கடன்கள் தொடர்பான துணைவிதிகள்

1. 1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 126ஆவது பந்தியின் (iv)(ஈ) பந்தியின் கீழ் இத்துணைவிதிகளை உருவாக்குவதற்குப் பிரதேச சபைகளுக்கு அதிகாரம் கிடைத்துள்ளது.

2. இத்துணைவிதிகளானது பிரதேச சபையொன்று, தனது நடவடிக்கைகள், செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காகக் கடன்களைப் பெற்றுக் கொள்வதற்குள்ள சந்தர்ப்பங்களைத் தீர்மானிப்பதற்காகவும், அதற்கு உரித்தான முறைமைகளை முறைமைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை விதிப்பதற்காகவும் இத்துணைவிதிகளானது விதிக்கப்படுகின்றன.

3. இத்துணைவிதியானது பிரதேச சபையினது கடன்கள் தொடர்பான துணைவிதிகள் என அழைக்கப்படும்.

4. பிரதேச சபையினால் கீழே காட்டப்பட்டுள்ள செயற்பாடுகள் ஒன்றிற்காகவோ அல்லது பலவற்றிற்காக 1987ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 179ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் கீழ் கடன்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

(அ) பிரதேச சபைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய அல்லது வேறு ஏதேனுமொரு எழுத்து மூலமான சட்டத்திற்கு அமைய பொறுப்பேற்கப்படும் நிலையான இயல்புடைய ஏதேனுமொரு நடவடிக்கையைச் செற்படுத்துதல்.

(ஆ) பிரதேச சபைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய அல்லது வேறு ஏதேனுமொரு எழுத்து மூலமான சட்டத்திற்கு அமைய பொறுப்பேற்கப்படும் ஏதேனும் பொதுச் சேவையொன்றைத் தாபித்தல், பூரணப்படுத்துதல், அபிவிருத்தி செய்தல் அல்லது விருத்தியடையச் செய்தல்.

(இ) அவ்வாறான ஏதேனுமொரு செயற்பாடு அல்லது பொதுச் சேவை நடவடிக்கைகளுக்காக, அல்லது அதற்காகத் தேவைப்படுகின்ற ஏதேனும் காணியொன்றை அல்லது கட்டிடமொன்றை எடுத்தல் நடவடிக்கைகள்.

(ஈ) அவ்வாறான ஏதேனுமொரு செயற்பாட்டை அல்லது பொதுச் சேவையொன்றை நடாத்திச் செல்வதற்காகத் தேவைப்படுகின்ற ஏதேனுமோர் இயந்திர உபகரணங்களைப் பெற்றுக் கொள்ளுதல்.

(உ) பிரதேச சபைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய அல்லது வேறு ஏதேனுமொரு எழுத்து மூலமான சட்டத்திற்கு அமைய, பணத்தினைக் கடனாகப் பெற்றுக் கொள்வதற்கு சபைக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள வேறு ஏதேனுமோர் நடவடிக்கையொன்றைச் செயற்படுத்துவதற்கு.

(ஊ) 1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 188 மற்றும் 189ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் கீழ் அமைச்சரினால் செய்யப்படுகின்ற கட்டளையொன்றை செயற்படுத்துதல்.

5. பிரதேச சபையினால் கடனாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட பணம் மற்றும் அதற்கான வட்டியை மீளச் செலுத்துவதை உறுதிப்படுத்தும் ஒரு பிணைப்பத்திரமாக, இத்துணைவிதிகளின் கீழ் அறவிடப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட ஏதேனும் வரிப்பணம் அல்லது வரி அறவீடுகள் அல்லது அதன் ஏதேனுமொரு பகுதி அல்லது பிரதேச சபைக்குச் சொந்தமான சொத்து அல்லது பிரதேச சபைக்குத் திரட்டப்படுகின்ற

ஏதேனுமொரு வருமான மார்க்கம் அல்லது அதன் ஒரு பகுதியானது, பிரதேச சபையினால் அக்கடன் பணத்தை அல்லது அக்கடன்பணத்தின் ஒரு பகுதியை வழங்கிய கடன் வழங்குநருக்கு அல்லது கடன் வழங்குனர்களுக்கு அடகாக வைக்க முடியும்.

6. பிரதேச சபையினால் 1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேசச் சபை சட்டத்தின் 178ஆம் பந்தியின் கீழ் பெற்றுக் கொள்ளப்படுகின்ற கடன் தொகையை மீளச் செலுத்துவதற்காக வழங்கப்படுகின்ற அதிகபட்ச காலப்பகுதி 30 வருடங்களாக மட்டுமே இருத்தல் வேண்டும்.

7. பிரதேச சபையினால் பெற்றுக் கொள்ளப்பட்ட கடன்தொகை, மற்றும் முன்னைய உள்ளூராட்சி நிறுவனத்தினால் கடன் தொடர்பாக ஏற்படுத்தப்பட்டுள்ள பொறுப்புக்கள் தொடர்பான அறிக்கையொன்றை வழங்குமாறு அமைச்சர், பிரதேச சபையின் தலைவரிடம் கோரும் பட்சத்தில், அவ்வாறு கோரப்பட்ட திகதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் அமைச்சருக்கு அவ்வறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டியதுடன், அதனை பிரதேச சபைச் செயலாளர் சான்றுப் படுத்தியிருத்தல் வேண்டும்.

8. பிரதேச சபையினால் அல்லது முன்னைய உள்ளூராட்சி நிறுவனத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட கடன்தொகை தொடர்பில் பிரதேச சபையினால்:
(அ) செலுத்தப்படவேண்டிய ஏதேனுமொரு தவணைக் கொடுப்பனவு அல்லது வருடாந்தக் கொடுப்பனவு செய்யப்படவில்லையெனவோ; அல்லது
(ஆ) ஏதேனும் கடன்தொகையொன்றை விடுவிப்பதற்காக ஈடுபடுத்தப்படவேண்டிய ஏதேனும் தொகையொன்றை அவ்வாறு ஈடுபடுத்துவதிலிருந்து தவறுகின்றார்; எனவோ
அமைச்சருக்குத் தெரியவருகின்ற எந்தவொரு சந்தர்ப்பத்திலும், அமைச்சரினால் அப்பணத்தைக் கொடுப்பனவு செய்தல் தொடர்பாக பொருத்தமான விதிமுறையின் மூலம் சபைக்குக் கட்டளையிட முடியும்.

9. இத்துணைவிதிகளின் கீழ் மீளச் செலுத்தவேண்டிய கடன்தொகை தொடர்பான அனைத்து ஏற்பாடுகளும் அக்கடன் தவணையுடன் சேர்த்து அதற்காகச் செலுத்தப்பட வேண்டிய வட்டி தொடர்பிலும் உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

10. (1) இத்துணைவிதிகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிணையானது இயலுமான எல்லாச் சந்தரப்பத்திலும், பிணை உறுதி மூலம் ஏற்படுத்தப்படல் வேண்டும்.

(2) இத்துணைவிதிகளின் கீழ் பிணையொன்றிற்குப் பதிலாக கடன் வழங்குபர் அல்லது கடன் வழங்குபவர்களுடன் பிரதேச சபையானது ஏற்படுத்திக் கொள்ளும்

ஒப்பந்தமொன்றானது மேலே 9(1) உபபந்தியின் கீழ் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு முரணான செயற்பாடொன்றாகக் கருதப்படுதல் கூடாது.

11. பிரதேச சபையினால் தீர்மானிக்கப்பட்டு அமைச்சரின் அனுமதியுடன்:

(1) பிரதேச சபைக்கு கிடைக்கவேண்டிய தொகையானது கிடைக்கும் வரை செய்யப்படவேண்டிய செலவுகளைச் செய்வதற்காக; அல்லது

(2) 1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் கீழ் அதிகாரம் கிடைக்கப்பெற்றுள்ள கடன்தொகையொன்றை பெற்றுக் கொள்ளும் வரை செய்யப்படவேண்டிய செலவுகளை ஏற்கும் நடவடிக்கைக்காக;

வங்கி மேலதிகப் பற்றொன்றினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

12. (1) முன்னர் உள்ளூராட்சி நிறுவனத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்தொகை அல்லது இத்துணைவிதிகள் நடைமுறைப்படுத்தப்படும் திகதிக்கு முன்னர் பிரதேச சபையினால் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள கடன்தொகையை செலுத்தி முடிப்பதற்கான கடன்தொகையைப் பெற்றுக் கொள்வதற்கு, பிரதேச சபையானது தீர்மானமொன்றை எடுக்க முடியுமென்பதுடன் அவ்வாறான தீர்மானமானது அமைச்சரின் முழுமையான அனுமதியின் கீழ் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

(2) மேலே கூறப்பட்ட உபபந்தியின் கீழ் பிரதேச சபையானது தீர்மானமொன்றை மேற்கொள்ளும்போது, அத்தீர்மானத்தைச் செயற்படுத்துதல் ஏன் மிகுந்த பயனுடையதாகும் என்பதை, அமைச்சரின் அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்காக செய்யப்படுகின்ற கோரிக்கையில் உறுதிப்படுத்த வேண்டியது தலைவரது கடமைப்பொறுப்பாகும்.

13. பிரதேச சபையினால் கடனாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட முழுத் தொகையையும் கொடுப்பனவு செய்து முடிக்கும்வரை, முழுக் கடன்தொகை தொடர்பிலும் விதிக்கப்பட்ட உரிய ஏற்பாடுகள் அனைத்தும் அவ்வாறே உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

14. பிரதேச சபையினால் பெற்றுக் கொள்ளப்பட்ட கடன்தொகையை கொடுப்பனவு செய்து முடிப்பதற்காக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள காலப்பகுதியை நீடிக்கவேண்டுமாயின்:

(அ) கடன் கொடுத்தவர் அல்லது கடன் கொடுத்தவர்களது இணக்கப்பாட்டைப் பெற்றிருத்தல்;

(ஆ) மேலதிக நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ளப்படுதல் அன்றி இருத்தல்;

(இ) பிரதேச சபையின் சபைத்தீர்மானம் பெறப்பட்டிருத்தல் ;

(ஈ) அதற்கடுத்தபடியாக அமைச்சரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளுதல் ;
வேண்டும்.

அவ்வாறாயினும், அவ்வாறு நீடிக்கப்படுகின்ற காலப்பகுதியானது கடன் தொகையை மீளச் செலுத்துவதற்கு இத்துணைவிதிகளின் 5ஆம் பந்தியில் விதிக்கப்பட்டுள்ள அதிகபட்ச காலப்பகுதிக்கு மேற்படாததாக இருத்தல் வேண்டும்.

15. பதங்கள் தொடர்பாக பிற அர்த்தங்கள் அவசியப்பட்டாலொழிய, இத்துணைவிதிகளில்;

“அமைச்சர்” என்பது மாகாணத்தின் உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரையும் ;

“தலைவர்” என்பது அக்காலப்பகுதியில் பிரதேச சபையில் தலைவர் பதவியை வகிக்கும் நபரையும்;
குறிக்கும்.

## X. நுளம்புகள் மற்றும் நோய்க்கிருமிகளை அழித்தல் தொடர்பான துணைவிதிகள்

01. 1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 126ஆவது பந்தியின் (ix)(ச) பந்தியின் கீழ் இத்துணைவிதிகளை உருவாக்குவதற்குப் பிரதேச சபைகளுக்கு அதிகாரம் கிடைத்துள்ளது.

02. பொதுமக்களது சுகாதாரத்தைப் பாதுகாப்பதற்காகவும், மகிழ்ச்சியான வாழ்க்கையை மேம்படுத்துவதற்காகவும் அதற்கு மாறான துயரங்களைத் தடுப்பதற்காகவுமான பிரதேச சபைக்குள்ள கடமைப்பொறுப்புக்கள், நுளம்புகளால் தொற்றும் நோய்களைத் தடுத்தல்

மற்றும் நுளம்புகள் மற்றும் நோய்க்கிருமிகளை அழிப்பதற்காகவும் இத்துணைவிதிகள் விதிக்கப்படுகின்றன.

03. இத்துணைவிதிகளானது நுளம்புகள் மற்றும் நோய்க்கிருமிகளை அழித்தல் தொடர்பான துணைவிதிகள் என அழைக்கப்படும்.

04. பிரதேச சபை நியாயாதிக்கப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள எல்லா இடங்களிலுமுள்ள உரிமையாளர்கள், குத்தகைதாரர்கள். வதிவிடதாரர்கள் அல்லது அவ்விடத்தைப் பயன்படுத்துபவர்கள், நுளம்புகள் மற்றும் நோய்க்கிருமிகாளால் தொற்றும் நோய்களை ஒழிப்பதற்காகவும் தடுப்பதற்காகவும் இத்துணைவிதிகளில் கீழே காட்டப்பட்டுள்ள விதிமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

05. அனைத்துவிதமான தகரக் கொள்கலன்கள், போத்தல்கள், பூச்சாடிகள், பெட்டிகள், பிளாஸ்ரிக் அல்லது வேறு மக்கிப் போகாத பெருட்களாலான பைகள், றயர்கள், தேங்காய் மட்டைகள், சிறட்டைகள், இளநீர் மற்றும் இளநீர் ஓடுகள், மட்பாண்டத் துண்டங்கள், தயிர்ச் சட்டிகள், அல்லது தண்ணீர் தேங்கி நிற்கக்கூடிய மற்றைய எல்லாப் பொருட்கள், வெளியில் எறியப்படுகின்ற கழிவுப் பொருட்கள் என்பனவற்றை அகற்றுவதற்கு, அழிப்பதற்கு அல்லது வேறேதேனுமொரு விதத்தில் வெற்றிகரமாக அழிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

06. எல்லா மழைநீர் வழிந்தோடும் பீலிகளிலும் தண்ணீர் கீழே வழிந்தோடும் குழாய்களிலும் வடிகாண்களிலும் மழைநீர் வழிந்தோடுவதற்காக உள்ள அனைத்து தடைகளையும் அகற்றுதல்.

07. எல்லா கிணறுகள், தண்ணீர்த் தொட்டிகள் மற்றும் தண்ணீர்த் தடாகங்கள் என்பனவற்றை சுத்தமாகவும் சீரமைத்தும் பராமரிக்கப்படவேண்டியதுடன், நுளம்புகள் பரவுவதைத் தடுப்பதற்கான வழிமுறைகளைக் கையாண்டிருத்தலும் வேண்டும்.

08. தண்ணீர்ப் பாத்திரங்கள், தண்ணீர்த் தொட்டிகள் மற்றும் தண்ணீரைச் சேகரித்து வைக்கும் எல்லாப் பாத்திரங்களையும், நுளம்புகளிலிருந்து பாதுகாப்பதற்காக, பாதுகாப்பான மூடிகளைக் கொண்டு மூடிவைப்பதற்கும் அல்லது நுளம்புகள் பெருகாத வகையில் பராமரிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

09. செயற்கையான குளங்கள் மற்றும் அலங்காரத்திற்காக தண்ணீரைச் சேமித்து வைத்துள்ள அனைத்து இடங்களிலும் ஆகக் குறைந்தது 3 நாட்களுக்கு ஒரு தடவையேனும் தண்ணீரை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

10. கற்குழிகள், சுரங்கக் குழிகள், கழிவுநீரைத் தேக்கி வைக்கும் குழிகள் உட்பட தண்ணீர் தேங்கி நிற்கும் எல்லா இடங்களிலும், தண்ணீர் தேங்கி நிற்பதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

11. எந்தவொரு இடத்தைச் சுற்றியும் வழிந்தோடுகின்ற ஆறுகள், நீர்நிலைகள், வாய்க்கால்கள், வடிகாண்கள் என்பவற்றில் தண்ணீர் தேங்கி குளங்கள் உருவாவதை தடுப்பதற்கு, அவ்விடத்தின் உரிமையாளரால், பொறுப்பாளரால், அல்லது வதிவிடதாரரால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

12. பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் அல்லது விவசாய நடவடிக்கைகள் மற்றும் அலங்கார நடவடிக்கைகளுக்காக வளர்க்கப்படுகின்ற செடிகொடிகள் மற்றும் மரங்கள் தவிர்ந்த ஏனைய எல்லா சிறுபற்றைக் காடுகள், புற்புதர்கள், பயன்பாடற்ற செடிகொடிகள், மரங்கள் என்பனவற்றை தமது காணியிலிருந்து அகற்றி அழித்திருத்தல் வேண்டும். அவ்வாறாயினும் பயிர்ச்சைய்கை, விவசாயம் மற்றும் அலங்காரத்திற்காக வளர்க்கப்பட்டுள்ள செடியொன்றில் அல்லது மரத்தில் தண்ணீர் தேங்குகின்றதாயின் அவ்வாறான செடிகளை அகற்றுவதற்கு அல்லது அவ்வாறு தண்ணீர் தேங்கி நிற்பதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

13. பச்சை பாசிகள், எண்ணெய் பாசி, ஜப்பான் ஜபர, பரவா பாசி போன்ற தண்ணீரின் மேல் மிதக்கும் அனைத்து விதமான நீர்த்தாவரங்கள் அல்லது நுளம்புகள் பெருகுவதற்கான வாய்ப்புக் காணப்படுகின்ற வேறு தாவரங்களை அழித்தல் வேண்டுமென்பதுடன் அவை நீர்நிலைகளில் மிதந்து செல்லுவதைத் தடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

14. மலசலகூட குழிகள், தண்ணீரை உறிஞ்சும் குழிகள் உட்பட அனைத்து இடங்களும் நுளம்புகள் பெருகுவதற்கு இடமளிக்காதவாறு பேணப்படுதல் வேண்டும்.

15. தேங்காய் மட்டைகளை ஊறவைக்கும் குட்டைகள், கைத்தொழில் உற்பத்திகள் அல்லது வர்த்தக தேவைப்பாடுகளுக்காக உருவாக்கப்பட்ட எல்லாவிதமான குழிகளிலும் நுளம்புகள் பெருகுவதைத் தடுக்கும் விதத்தில் பராமரித்தல் வேண்டும்.

16. தலைவரது எழுத்து மூலமான அனுமதி, சபையின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரால் அங்கீகரிக்கப்பட்ட திட்டம் என்பனவற்றிற்கு அமைவாக, நுளம்புகள் பெருகுவதைத் தடுத்தல் தொடர்பாக வழங்கப்படுகின்ற ஆலோசனைகளுக்கு இணங்காதவகையில் எந்தவொரு நபரும், கிணறுகளை வெட்டுதல், தண்ணீர்த்தாங்கிகள், குளங்கள், நீர் அலங்காரங்கள், மீன் தொட்டிகள் அல்லது தண்ணீரைச் சேமித்து வைக்கும் வேறு ஏதேனும் நிருமானமொன்றைச் செய்தல் கூடாது.

17. பாதைகள், கட்டிடங்கள் மற்றும் பொது இடங்களுக்கருகில் தண்ணீர் வழிந்தோடுவதற்காக அமைக்கப்பட்டுள்ள வடிகாண்கள், நிலத்தடி நீர் வடிகாண்கள், நீர்வழிகள் அல்லது வேறு வடிகாலமைப்புக் கட்டமைப்பில் நீர் வழிந்தோடுவதைத் தடுக்கும் வகையில் குப்பைகூழங்கள், கழிவுப் பொருட்கள், செடிகொடிகள் அல்லது வேறு ஏதேனும் பொருட்களை எறிதல் அல்லது கொட்டுதல் கூடாது.

18. பிரதேச சபையால் அல்லது பிரதேசத்திலுள்ள சுகாதார வைத்திய அதிகாரியால் அல்லது வேறு அதிகாரம்பெற்ற நிறுவனத்தினால் அல்லது அதிகாரம்பெற்ற உத்தியோகத்தரால், மலேரியா மற்றும் டெங்கு போன்ற நோய் ஒழிப்பு மற்றும் பரவுவதைத் தடுத்தல், மற்றும் நுளம்புகள், நோய்த்தொற்றுக் கிருமிகள் பரவுவதைத் தடுப்பதற்காக எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளுக்கு, எந்தவிதத் தடைகளையோ அல்லது அந்நடவடிக்கைகளை நலிவடையச் செய்யக்கூடிய விதத்திலான எந்தவிதமான நடவடிக்கைகளையோ எந்தவொரு நபரும் செய்தல் கூடாது.

19. தலைவர் அல்லது அதிகாரம்பெற்ற உத்தியோகத்தரொருவர் அல்லது சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அல்லது பொது சுகாதாரப் பரிசோதகர், நுளம்புகள் மற்றும் நோய்த் தொற்றுக் கிருமிகள் பரவுவதைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுப்பதற்காக ஏதேனுமொரு இடத்திற்குள் பிரவேசித்தல், பரிசோதனை செய்தல், அறிவுறுத்தல்கள் வழங்குதல் மற்றும் விதிமுறைகளை ஏற்படுத்துதல் தொடர்பாக எந்தவொரு நபராலும் இடையூறுகள் ஏற்படுத்தப்படல் ஆகாது.

20. பிரதேச சபையின் தலைவர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரால் முற்பகல் 6 தொடக்கம் பிற்பகல் 6 வரையான காலப்பகுதியிலான எந்தவொரு நேரத்திலும், எந்தவொரு இடத்திற்கும் பிரவேசித்து, இத்துணைவிதிகளின் விதிமுறைகள் பின்பற்றப்படுகின்றதா எனப் பரிசோதனை செய்து பார்க்க முடியும்.

21. தலைவர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரால் மேலே 20ஆம் பந்தியின் கீழ் செய்யப்பட்ட பரிசோதனையின் பின்னர் விதிக்கப்படுகின்ற கால எல்லைக்குள் கீழே காட்டப்பட்டுள்ள நடவடிக்கைகளில் ஒன்றையோ அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையையோ நடைமுறைப்படுத்துமாறு வதிவிடதாரரைப் பணிக்கும் அதிகாரம் உண்டு:-

(1) கூரைகள், மழைநீர் வழந்தோடும் பீலிகள், குழாய்கள், வடிகாண்கள் மற்றும் கூரைப் பலகணிகள் என்பனவற்றைச் சீரமைத்தல்;

(2) தண்ணீர்த் தொட்டி, தடாகங்கள் மற்றும் குளங்கள் என்பனவற்றை காலத்திற்குக் காலம் வெற்றிடமாக்கி துப்பரவு செய்யக்கூடிய வகையில் மீள்நிர்மானித்தல் ;

(3) கிணறுகள், தண்ணீர்த் தொட்டிகள், குளங்களைத் துப்பரவு செய்தல் அல்லது மூடிவிடுதல் ;

(4) குழிகள், கைவிடப்பட்ட கிணறுகள், மலசலகூட குழிகள், அல்லது தண்ணீர் தேங்கி நிற்கக்கூடிய இடங்கள் என்பனவற்றை மண் நிரப்பி மூடி விடுதல் அல்லது தண்ணீர் வழிந்தோடக்கூடிய விதத்தில் மீளமைத்தல் ;

(5) சேற்று நிலங்கள், தண்ணீர் நிரம்பக் கூடிய இடங்களை மண்ணால் நிரப்பி விடுதல் அல்லது நுளம்புக் கொல்லிகள் அல்லது கிருமிநாசினிகளைத் தெளித்து நுளம்புகளையும் வேறு நோய்த்தொற்றுக் கிருமிகளையும் ஒழித்தல் ;

(6) தண்ணீர் தேங்கக்கூடிய அல்லது நுளம்புகள் பெருகக்கூடிய நீர்த்தாவரங்களை அழித்தல் மற்றும் நீர்நிலைகளில் மிதந்து செல்வனவற்றை நிறுத்துதல் ;

(7) நுளம்புகள் மற்றும் கிருமிகள் பரவுவதைத் தடுக்கும் வேறு ஏதேனும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

22. தமது இரத்தத்தில் மலேரியா, யானைக்கால் அல்லது டெங்கு நோய்த் தொற்றுக் கிருமிகள் அல்லது வைரஸ் உள்ளதெனக் கண்டுபிடிக்கப்பட்ட எந்தவொரு நபருக்கும், விதிக்கப்படுகின்ற வைத்தியசாலையில் அல்லது சிகிச்சை நிலையத்தில் உரிய அதிகாரிகள் கூறுகின்ற காலப்பகுதியில் சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று எழுத்துமூலமான அறிவித்தலொன்றை விடுப்பதற்குத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.

23. தலைவரது முறையான அனுமதியின்றி, ஏதேனும் புதிய கிணறொன்றை, குளமொன்றினை, தண்ணீர்த் தொட்டியொன்றினை, தடாகமொன்றை, நீர்ப் பூவொன்றை அல்லது வேறு தண்ணீரைத் தேக்கி வைக்கக்கூடிய ஏதேனுமொரு நிருமாணிப்பை மேற்கொண்டுள்ள சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் அதனை மூடிவிடுமாறு, நிரப்பிவிடுமாறு, தகர்த்தெறியுமாறு அவ்விடத்தின் உரிமையாளருக்கு, வதிவடதாரருக்கு, குத்தகைதாரருக்கு கட்டளை விதிக்க முடியும். அக்கட்டளையை எழுத்துமூலமாக அவ்விடத்தில் வதிகின்ற எந்தவொரு நபருக்கும் ஒப்படைப்பதற்கோ அல்லது அவ்விடத்தில் நன்றாகத் தெரியக்கூடிய விதத்தில் ஒட்டிவைத்தல் மூலமோ அவருக்கு அறியச் செய்தல் வேண்டும்.

24. மேலே 22ஆம் பந்தியின் கீழ் அறிவித்தலொன்று வழங்கப்பட்ட இடத்திலுள்ள உரிமையாளர்கள், குத்தகைதாரர்கள் அல்லது வதிவிடதாரர்கள் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதியுள், குறித்த விடயங்களைச் செய்வதற்குத் தவறும் பட்சத்தில், தலைவர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் முற்பகல் 6 தொடக்கம் பிற்பகல் 6 வரையான காலப்பகுதியில், எந்தவொரு நேரத்திலும், தேவையான இயந்திரவுபகரணங்கள் மற்றும் ஊழியர்களுடன் அவ்விடத்திற்குள் பிரவேசித்து, அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கையை மேற்கொள்ளுதல் சட்டரீதியானதாகும்.

25. மேலே 24ஆம் பந்தியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செயற்படுவதன் காரணமாக சபைக்கு ஏற்படுகின்ற செலவுகளை, அவ்விடத்தின் உரிமையாளர், குத்தகைதாரர் அல்லது வதிவிடதாரர் சபைக்குச் செலுத்துதல் வேண்டும். தலைவரால் எழுத்துமூலமான அறிவித்தலொன்று விடுக்கப்பட்டதன் பின்னரான பதினான்கு நாட்களுக்குள், இடத்தின் உரிமையாளர், குத்தகைதாரர் அல்லது வதிவிடதாரர் அச்செலவுகளைக் கொடுப்பனவு செய்வதற்குத் தவறினால், அதனை பிரதேச சபைக்குக் கிடைக்க வேண்டிய வரியொன்றாகக் கருதி அத்தொகையை அறவிடுதல் வேண்டும்.

26. நுளம்புகள் மற்றும் நோய்த்தொற்றுக் கிருமிகளை அழிப்பதற்காகப் பிரதேசத்தின் சுகாதார வைத்திய அதிகாரியின் விதப்புரைகளின் பேரில் தேவையான துப்பரவு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், மரஞ்செடிகொடிகளை வெட்டி அகற்றுதல், நிலத்தை மட்டமாக்குதல், நீர் தேங்கும் இடங்களை நிரப்பி விடுதல், குப்பைகூழங்களை அகற்றுதல், இது தொடர்பாக மக்களை அறிவுறுத்துதல், அதற்கேற்றவாறு பொதுச் சுகாதார மேம்பாட்டுடன் தொடர்புடைய நடவடிக்கைகளை எடுப்பதற்கு தலைவருக்கு அதிகாரம் உண்டு.

27. இத்துணைவிதிகளில் எந்தவொரு பந்தியும் மீறப்படுகின்றவகையில் செயற்படுதல் அல்லது இத்துணைவிதிகளின் கீழ் தலைவரால் செய்யப்படுகின்ற கட்டளைகளுக்கு அமையாது செயற்படுதல் என்பன, இத்துணைவிதிகளின் கீழ் குற்றமாவதுடன், அவ்வாறு குற்றமிழைத்த அனைத்து நபர்களும் அக்குற்றம் தொடர்பாக உரிய அதிகாரத்தினைக் கொண்ட நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டதன் பின்னர் 1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122ஆம் பந்தியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தண்டணைக்கு உட்படுதல் வேண்டும்.

28. பதங்கள் தொடர்பாக பிற அர்த்தங்கள் அவசியப்பட்டாலொழிய, இத்துணைவிதிகளில்;

“தலைவர்” என்பது அக்காலப்பகுதியில் பிரதேச சபையில் தலைவர் பதவியை வகிக்கும் நபரையும்;

“அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்” என்பது அந்நடவடிக்கைக்காக பிரதேச சபையின் தலைவரால் எழுத்துமூலமாக அதிகாரம் அளிக்கப்பட்ட எந்தவொரு உத்தியோகத்தரையும்;

“இடம்” என்பது ஏதேனுமொரு இடம், வீடு, கட்டிடம் அல்லது நிருமானங்கள் என்பன உள்ளடக்கப்படுவதுடன் அதில் அமைந்துள்ள குளம், தொட்டி, தடாகம், நீர்வழிந்தோடும் பாதை, வடிகாண்கள், அல்லது தண்ணீருக்கு மேலே உள்ள அல்லது வெளியே உள்ள தோணியையும்;

“நுளம்புகளால் பரவக்கூடிய நோய்கள்” என்பது மலேரியா, டெங்கு, யானைக்கால், மூளைக்காய்ச்சல் (ஜப்பனீஸ் என்செபளய்டீஸ்) மற்றும் நுளம்புகளால் தொற்றக்கூடிய வேறு எல்லா நோய்களையும்;

குறிக்கும்.

## XI. வரிப்பணம் மற்றும் கட்டணங்களை விதித்தல், அறவிடுதல் தொடர்பான துணைவிதிகள்

1. 1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 126ஆவது பந்தியின் (v) உபபந்தியின் கீழ் இத்துணைவிதிகளை உருவாக்குவதற்குப் பிரதேச சபைகளுக்கு அதிகாரம் கிடைத்துள்ளது.

2. பிரதேச சபை நியாயாதிக்கப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள அசையாத் சொத்துக்களுக்காக வரிப்பணம் விதித்தல், அறவிடுதல், மற்றும் அறிக்கைகளையும் தகவல்களையும் பெற்றுக் கொள்ளுதல் தொடர்பான ஏற்பாடுகளை விதித்தல் என்பவற்றுக்காக இத்துணைவிதிகள் விதிக்கப்படுகின்றன.

3. இத்துணைவிதியானது வரிப்பணம் மற்றும் கட்டணங்களை விதித்தல், அறவிடுதல் தொடர்பான துணைவிதிகள் என அழைக்கப்படும்.

4. (1) 1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 134ஆம் பந்தியின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசமாக, பிரதேச சபையினால் பிரகடனப்படுத்தப்பட்ட பிரதேசத்திற்குள் அமைந்துள்ள எந்தவொரு அசையாச் சொத்தினை,தம்வசம் எடுத்துக் கொள்ளும் அனைத்து நபர்களும், அவ்வசையாச் சொத்தினை எடுத்துக் கொண்ட திகதி தொடக்கம் 3 மாதத்திற்குள், அவ்வசையாச் சொத்துத் தொடர்பான தகவல்களைப் பிரதேச சபையில் பதிவு செய்து கொள்வதற்காக இத்துணைவிதியின் முதலாவது உபஅட்டவணைக்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவமொன்றை, செயலாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) மேலே (1)இல் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் விண்ணப்பப்படிவமொன்றை சமர்ப்பிக்கின்ற எந்தவொரு நபரும் அவ்விண்ணப்பப்பத்திரத்துடன், நொத்தாரிசு ஒருவரால் உறுதிப்படுத்தப்பட்ட கீழே காட்டப்பட்டுள்ள ஆவணங்களது சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளையும் சமர்ப்பித்தல் வேண்டும்:

(அ) அச்சொத்தினது உரிமை தொடர்பான உறுதி; மற்றும்

(ஆ) அதிகாரம் பெற்ற அளவையியலாளரால் வரையப்பட்ட அச்சொத்தினது திட்ட வரைபடம்; மற்றும்

(இ) அச்சொத்திற்குள் உள்ள எந்தவொரு கட்டிடத்தினது அல்லது கூட்டுரிமைக் கட்டிடத்தினது திட்டம்.

5. இத்துணைவிதியானது செயற்படும் திகதிக்கு முன்னராகவேனும்இப்பிரதேச சபை நியாயாதிக்கப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள எந்தவொரு அசையாச் சொத்தினையும் எடுத்துக் கொண்டுள்ள எந்தவொரு நபர்களும், இத்துணைவிதிசெயற்படுத்தப்படும் திகதியிலிருந்து ஆறு மாதம் செல்லுவதற்கு முன்னர் 4ஆவது பந்தியில் விதிக்கப்பட்டுள்ள விதத்தில் செயற்படுதல் வேண்டும்.

6. (1) இத்துணைவிதியின் விதிகளின் கீழ் எந்தவொரு அசையாச் சொத்தினையும் பிரதேச சபையில் பதிவு செய்து கொள்வதற்காக, விண்ணப்பப்பத்திரமொன்றைச் சமர்ப்பிக்கின்ற எந்தவொரு அசையாச் சொத்து உரிமையாளரும், பிரதேச சபையினால் விதிக்கப்படுகின்ற தொகையொன்றினைக் கட்டணமாகச் சபைக்குச் செலுத்துதல் வேண்டும்.

(2) மேலே 1ஆம் உபபந்தியின் கீழ், எந்தவொரு அசையாச் சொத்தினையும் பிரதேச சபையில் பதிவு செய்து கொள்வதற்காக, அவ்வசையாச் சொத்து உரிமையாளரால் பிரதேச சபைக்கு கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய கட்டணமானது, பிரதேச

சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்பட்டு அரச வர்த்தமானியின் மூலம் வருடாந்தம் பிரகடனப்படுத்தப்பட்டவாறு அமைதல் வேண்டும்.

7. இத்துணைவிதிகளில் விதிக்கப்பட்டுள்ள விதத்தில் பிரதேச சபையில் பதிவினைப் பெற்றுள்ள எந்தவொரு அசையாச் சொத்து உரிமையாளரும் தம்மிடம் உள்ள எந்தவொரு அசையாச் சொத்தினதும் உரிமையை:

(அ) வேறு எவரேனும் நபரொருவருக்கோ அல்லது பல நபர்களுக்கோ கையளித்திருந்தால் அல்லது அச்சொத்தினை வேறு எந்தவொரு நபருக்கும் அடகு வைத்திருந்தால் அல்லது குத்தகைக்கு அல்லது வாடகைக்கு வழங்கியிருந்தால்; அல்லது

(ஆ) அட்டோர்னித் தத்துவத்தின் மூலம் வேறு எவரேனும் நபரொருவருக்கு அல்லது பல நபர்களுக்கு அதிகாரத்தினைக் கையளித்திருந்தால்;

அவ்வாறு இடம்பெற்று ஒரு மாதகாலம் செல்லுவதற்கு முன்னர் அது தொடர்பாக செயலாளருக்கு எழுத்துமூலமான அறிவித்தலொன்றின் மூலம் அறிவித்தல், அசையாச் சொத்து உரிமையாளரது கடமையாகும்.

8. இத்துணைவிதிகளில் விதிக்கப்பட்டுள்ள விதத்தில் பிரதேச சபையில் பதிவுகளைப் பெற்றுள்ள எந்தவொரு அசையாச் சொத்து உரிமையாளரும் தம்மிடம் உள்ள எந்தவொரு அசையாச் சொத்தான ஒருகட்டிடத்தில் செய்துவந்துள்ள நடவடிக்கைகளை மாற்றியிருந்தால், அவ்வாறான மாற்றங்களைச் செய்து ஒரு மாதகாலம் கடப்பதற்கு முன்னர் அது தொடர்பாக செயலாளருக்கு எழுத்து மூலமாக அறிவித்தல், அவ்வசையாச் சொத்து உரிமையாளரது கடமையாகும்.

9. இத்துணைவிதிகளில் விதிக்கப்பட்டுள்ள விதத்தில் பிரதேச சபையில் பதிவு செய்யப்பட்ட அசையாச் சொத்தொன்றினை உப பகுதிகளாகப் பிரிப்பதற்கு முன்னர் அச்சொத்திற்குள் அமைந்துள்ள காணியில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு நடவடிக்கையையும் செய்வதற்கு முன்னர், அதற்கான அனுமதியைப் பிரதேச சபையினது, கட்டிடங்களை நிருமாணித்தல் தொடர்பான துணைவிதியின் அடிப்படையில் தலைவரிடமிருந்து பெற்றுக் கொள்ளுதல் அவ்வசையாச் சொத்து உரிமையாளரது கடமையாகும்.

(அ) புதிதாகக் கட்டடமொன்றை அமைத்தல்;

(ஆ) தற்போது உள்ள கட்டிடத்தின் மாதிரியில் மாற்றங்களைச் செய்தல் அல்லது புதிதாக ஒரு பகுதியைச் சேர்த்தல்;

(இ) தற்போது காணப்படுகின்ற ஒருபகுதியை உடைத்து அகற்றுதல்;

(ஈ) தற்போது காணப்படுகின்ற ஒருபகுதியை உடைத்து அகற்றி புதிதாகஒரு பகுதியைச் சேர்த்தல்;

(உ) முழுக் கட்டிடத்தையும் உடைத்து அகற்றி வேறு கட்டிடமொன்றை அமைத்தல்.

10. பிரதேச சபையிலிருந்து பதிவினைப் பெற்றுக்கொண்டுள்ள எந்தவொரு அசையாச் சொத்து உரிமையாளரினதும் முகவரி மாற்றடைந்திருந்தால், அம்மாற்றம் இடம்பெற்று ஏழு நாட்களுக்குள் அது தொடர்பான எழுத்துமூலமான அறிவித்தலைச் செயலாளருக்கு வழங்குதல் அவ்வசையாச் சொத்து உரிமையாளரது கடமையாவதுடன், அவ்வாறான எழுத்துமூலமான அறிவித்தலொன்று கிடைத்தவுடனேயே, அசையாச் சொத்து உரிமையாளர்களைப் பதிவு செய்யும் பதிவேட்டில் அதற்கேற்ப திருத்தங்களைச் செய்தல் மற்றும் அவ்வாறு திருத்தஞ் செய்யப்பட்டுள்ளதாக, அவ்வசையாத் சொத்து உரிமையாளருக்கு எழுத்துமூலமாக அறிவிக்க வேண்டியது செயலாளரது கடமையாகும்.

11. இத்துணைவிதியின் 4ஆம் 5ஆம் பந்தியின் கீழ் சமர்ப்பிக்கப்படுகின்ற எல்லா விண்ணப்பப்பத்திரங்கள் தொடர்பாகவும் "அசையாச் சொத்துக்களைப் பதிவு செய்யும் பதிவேடு" ஒன்றினை இத்துணைவிதியின் இரண்டாவது உபஅட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாதிரிக்கமைய தயாரித்து பேணிச் செல்லுதல் செயலாளரது கடமையாக இருத்தல் வேண்டும்.

12. பிரதேச சபையினால் பேணிச் செல்லப்படுகின்ற அசையாச் சொத்து உரிமையாளர்கள் பதிவேடு மற்றும் அவ்வுரிமையாளர்களிடம் உள்ள அசையாச் சொத்துக்களைப் பதிவு செய்யும் பதிவேடு என்பனவற்றைப் பரிசீலனை செய்ய விரும்பும் எந்தவொரு நபருக்கும் வாரத்தின் எந்தவொரு வேலைநாளிலும் அலுவலக நேரத்தில் அப்பதிவேட்டினைப் பரிசீலிப்பதற்கு கட்டணமெதுவும் அறவிடாது வாய்ப்பளித்தல் செயலாளரது கடமையாக இருத்தல் வேண்டும்.

13. பிரதேச சபை நியாயாதிக்கப் பிரதேசத்தினுள் பேணிச்செல்லப்படுகின்ற இத்துணைவிதியின் 3ஆம் உப அட்டவணையில் காட்டப்படுகின்ற, எந்தவொரு வர்த்தகம் அல்லது தொழிற்சாலை அல்லது வியாபாரம் தொடர்பாக பிரதேசச் சபைச் சட்டத்தின் கீழ் பிரதேச சபையினால் விதிக்கப்படுகின்ற ஏதேனும் கட்டணமொன்றினை அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏதேனும் அனுமதிப்பத்திரமொன்றின் அடிப்படையில் அறவிடப்படுகின்ற கட்டணமொன்றை அறவிடும்போது, பிரதேச சபைக்குச் செலுத்தவேண்டிய அக்கட்டணத்தினை அல்லது அனுமதிப்பத்திரக் கட்டணத்தினை

கணக்கிடுவதற்காகத் தேவைப்படுகின்ற, அவ்வர்த்தகத்தின் அல்லது தொழிற்சாலையின் அல்லது வியாபார நடவடிக்கைகளை நடாத்திக் கொண்டு செல்லும் போது:

(அ) எந்தவொரு வருடத்திலும் கிடைத்த பெறுவனவுகளின் தொகை; அல்லது

(ஆ) எந்தவொரு வருடத்தினதும் விற்பனைப் புரள்வு; அல்லது

(இ) எந்தவொரு வருடத்திலும் உழைக்கக்கூடிய இலாபம்;

(ஈ) எந்தவொரு விற்பனையின் மூலம் கிடைக்கப்பெற்ற பணம்;

என்பனவற்றை,சான்றுப்படுத்தப்பட்ட வருமான அறிக்கையின் மூலம் உறுதிப்படுத்துமாறு அத்தொழிற்சாலையின் அல்லது வர்த்தகத்தின் உரிமையாளரை அல்லது முகாமையாளரை எழுத்துமூலமான அறிவித்தலொன்றின் மூலம் செயலாளர் கோருதல் சட்டரீதியானதாகும்.

14. மேலே குறிப்பிடப்பட்டவாறு அறிவித்தலொன்றைப் பெற்ற எல்லா நபர்களும் அவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னராக உரிய வருமானத்தினது அறிக்கையைச் செயலாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

15. இத்துணைவிதியின் மேலே 13ஆம் பந்தியில் குறிப்பிடப்படுகின்ற ஏதேனுமொரு வர்த்தகம், தொழிற்சாலை, அல்லது வியாபாரமொன்றைச் செய்கின்ற எல்லா நபர்களுக்கும் பிரதேச சபை செயலாளரினால் அனுப்பப்படுகின்ற தகவல் படிவம் கிடைத்த திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் அப்படிவத்தின் மூலம் கோரப்பட்ட தகவல்களைச் செயலாளருக்கு வழங்குதல் வேண்டும்.

16. இத்துணைவிதியின் 13 மற்றும் 15ஆம் பந்தியின் கீழ் தமக்குக் கிடைக்கின்ற அனைத்து வருமான அறிக்கைகளையும், தகவல் படிவங்களையும் முறையான அட்டவணையில் பதிவு செய்தல் மற்றும் அவ்வறிக்கைகள் மற்றும் தகவல் படிவங்கள் கிடைக்கப் பெற்றதென அதனை வழங்கும் நபர்களுக்கு எழுத்துமூலம் அறிவித்தல் என்பன செயலாளரது கடமையாகும்.

17. இத்துணைவிதியின் எந்தவொரு பந்தியேனும் மீறப்படும் வகையில் செயற்படுதல் அல்லது தலைவரால் அல்லது செயலாளரால் விதிக்கப்படுகின்ற ஏற்பாடுகளுக்கு அமையாது செயற்படுதல் இத்துணைவிதிகளின் கீழ் தவறாகும் என்பதுடன், அத்தகையை தவறைச் செய்கின்ற அனைத்து நபர்களும், அத்தவறு தொடர்பாக உரிய அதிகாரத்தினைக் கொண்டுள்ள நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டதன் பின்னர் 1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122ஆம் பந்தியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தண்டனைக்கு உட்படுதல் வேண்டும்.

18. பதங்கள் தொடர்பாக பிற அர்த்தங்கள் அவசியப்பட்டாலொழிய, இத்துணைவிதிகளில்;

‘‘தலைவர்’’ என்பது, அக்காலப்பகுதியில் பிரதேச சபையில் தலைவர் பதவியை வகிக்கும் நபரையும்;

‘‘அசையாச் சொத்து’’ என்பது, எந்தவொரு காணியையும் அல்லது கட்டிடத்தையும் அல்லது எந்தவொரு கூட்டுரிமைக் கட்டிடத்தினையும்;

‘‘சொத்து உரிமையாளர்’’ என்பது, எந்தவொரு அசையாச் சொத்தினதும் தனி உரிமையையுடைய எந்தவொரு நபரும் அல்லது அவ்வசையாச் சொத்தானது தனியொரு நபருக்கு மேற்பட்ட எண்ணிக்கையிலான நபர்களுக்கு உரித்தானதாக இருக்கின்ற பட்சத்தில்,அந்த ஒவ்வொரு உரிமையாளரும் வெவ்வேறாகவோ அல்லது கூட்டாவோ அச்சொத்துத் தொடர்பான பொறுப்பினை வகிக்கின்ற அல்லது அச்சொத்திற்குள் வர்த்தமொன்றை, தொழிற்சாலையொன்றை, அல்லது விற்பனையொன்றைச் செய்கின்ற எந்தவொரு நபரையும்;

‘‘செயலாளர்’’ என்பவர், அக்காலப்பகுதியில் பிரதேச சபையில் செயலாளர் பதவியை வகிக்கும் நபரையும்;

குறிக்கும்.

**முதலாவது அட்டவணை**

**(**4ஆவது பந்தி)

அசையாச் சொத்துக்களை பதிவு செய்யும் விண்ணப்பப்படிவம்

(1) சொத்து உரிமையாளர் / உரிமையாளர்களது பெயர் -

(2) சொத்து உரிமையாளரது முகவரி / உரிமையாளர்களது முகவரி -

(3) சொத்து உரிமையுடைய பதிவு செய்யப்பட்ட கம்பனியின் பெயர்
கம்பனியினது பெயரும் பதிவு இலக்கமும் -

(4) சொத்து அமைந்துள்ள கிராமம்/நகரம் …………………வீதி அல்லது பாதை……..

(5) வரிப்பணம் இலக்கம் ………………………………… தபால் முகவரி……………….

(6) சொத்தினது அளவு ஏ………………..றூ……. பர்…………………./ ஹெக்டெயார்…

(7) உறுதி இலக்கம் …………….. பதிவு செய்யப்பட்ட திகதி…………………

(8) நொத்தாரிசினது பெயர் ……………………….. முகவரி………………………….

(9) சொத்தினது இயல்பு:- கட்டிடங்கள் உண்டு / இல்லை

(10)கட்டிடம் அல்லது சொத்தினைப் பயன்படுத்தும் இடம்: தங்குமிட/வர்த்தக/பயன்பாடற்ற

(11)வர்த்தகமாயின் செய்யப்படுகின்ற வர்த்தகத்தின் பெயர்:……………………………..
வர்த்தகத்தினது இயல்பு:…………………………..

(12)குத்தகை அல்லது வாடகை அடிப்படையில் பயன்படுத்தப்படுகின்றதெனின் குத்தகைதாரர் / வாடகைதாரரது பெயர்:……………

(13)வசிக்கின்ற வீடு ஒரு சொத்து எனின் வதிவிடதாரரது பெயர் ………… முகவரி…………

(14)வேறு விபரங்கள் ……………….

திகதி:…………………….                ……………………………………..
சொத்து உரிமையாளரது கையொப்பம்

**இரண்டாவது உப அட்டவணை**

சொத்தினைப் பதிவு செய்யும் அட்டவணை

(11ஆம் பந்தி)

**(இடது பக்கம்)**

கிராம அலுவலர் பிரிவு. ……………….

கிராமம்………………..

வீதி………………..

| பதிவு செய்த திகதி | இலக்கம் | சொத்து உரிமையாளரது | | குத்தகை/வாடகைதாரரது | | வரிப்பணம் இலக்கம் |
|---|---|---|---|---|---|---|
| | | பெயர் | முகவரி | பெயர் | முகவரி | |
| | | | | | | |

**(வலது பக்கம்)**

| உறுதியின் விபரம் | | நொத்தாரிசினது விபரம் | | சொத்தினது அளவு | பயன்படுத்தும் நடவடிக்கை | செய்யப்படுகின்ற வர்த்தகம் | செயலாளரது கையொப்பம் |
|---|---|---|---|---|---|---|---|
| இலக்கம் | பதிவு செய்த திகதி | பெயர் | முகவரி | | | | |
| | | | | | | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

**மூன்றாவது உப அட்டவணை**

(13ஆம் பந்தி)

வர்த்தகம், தொழிற்சாலை அல்லது வியாபாரம்

(1) பேக்கரி, ஹோட்டல், சாப்பாட்டுக் கடைகள்
(2) சிற்றுண்டிச் சாலை தேநீர் மற்றும் கோப்பிக் கடை
(3) பால் பண்ணைகள் மற்றும் பால் உற்பத்தி வர்த்தகங்கள்
(4) இறைச்சி, கோழி இறைச்சி, மீன் விற்பனை
(5) துன்பம் விளைவிக்கும் மற்றும் ஆபத்தான வியாபாரங்கள் என துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள வியாபாரங்கள்
(6) தேங்காய்மட்டை குட்டைகள் தொழில்
(7) மதுபானம், குளிர்பானங்கள் தொழில்
(8) கைத்தொழில் கழிவுகளை அகற்றும் அனைத்து உற்பத்தி தொழிற்சாலைகள்
(9) மாடு, குதிரை, ஆடு, செம்மறி, பன்றிக்கொட்டில்கள் வர்த்தகம்
(10)தனியார் விற்பனை நிலையங்கள், சுப்பர் மார்க்கட்
(11)குடிநீர் தொழிற்சாலை
(12)முடிவெட்டும் கடைகள், சலூன்கள், அழகுக்கலை நிலையங்கள்
(13)பிலியட் விளையாட்டு அரங்கம்
(14)ஆலைகள்
(15)தரகு வியாபாரம்
(16)பணத்தை கடனாக வழங்கும் வர்த்தகம்
(17)காணி ஏலவிற்பனையார்கள்
(18)சுற்றுலா ஹோட்டல்கள்

## XII. ஒலிபெருக்கி உபகரணங்களை இயக்குதல் தொடர்பான துணைவிதிகள்

1. 1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 126ஆவது பந்தியின் (xi)(ஊ) உபபந்தியின் கீழ் இத்துணைவிதிகளை உருவாக்குவதற்குப் பிரதேச சபைகளுக்கு அதிகாரம் கிடைத்துள்ளது

2. பொதுமக்களது சுகாதாரம் மற்றும் மகிழ்ச்சிகரமான வாழ்க்கையை மேம்படுத்துவதற்கும், பாதுகாப்பதற்கும் கிரமபோன், லவுட்ஸ்பீக்கர், அம்பிளிபயர், மற்றும் தன்னியக்க அல்லது இயந்திர ரீதியாக ஒலியை எழுப்பக்கூடிய அல்லது எதிரொலிக்கின்ற உபகரணங்களை இயக்கும் செயற்பாட்டை முறைமைப்படுத்துவதற்காகவும், கட்டுப்படுத்துவதற்காகவும் அவ்வாறான உபகரணங்களைப் பயன்படுத்துவதால் ஏற்படுகின்ற கஸ்டங்களைத் தடுப்பதற்காகவும் இத்துணைவிதிகளானது விதிக்கப்படுகின்றது.

3. இத்துணைவிதிகளானது ‘‘ஒலிபெருக்கி உபகரணங்களை இயக்குதல் தொடர்பான துணைவிதிகள்’’ என அழைக்கப்படும்.

4. எந்தவொரு நபராலும் பிரதேசசபை நியாயாதிக்கப் பிரதேசத்தினுள் கிரமபோன், ஒலிபெருக்கி, போனோகிராம், அல்லது தன்னியக்க அல்லது இயந்திர ரீதியாக சத்தத்தை எழுப்பக் கூடிய இயந்திரம் அல்லது எதிரொலி எழுப்புகின்ற உபகரணமொன்றை இயக்குதல் மூலம் அல்லது இயக்குவதற்கு வாய்ப்பினை வழங்குவதன் மூலம் அல்லது வேறொரு நபருக்கு இடமளிப்பதன் மூலம், அவ்வொலியின் அதிகளவான தன்மை, அல்லது மீண்டெழும் தன்மை அல்லது தொடர்ச்சியான தன்மை காரணமாக சுற்றியுள்ள இடங்களில் வசிப்பவர்களுக்கு அல்லது பாதையில் பயணம் செய்யும் பயணிகளுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தும் ஏதேனுமொரு ஒலியினை எழுப்புதல், அல்லது எதிரொலிக்கச் செய்தல் கூடாது.

5. மேலே 4ஆம் பந்தியில் கூறப்பட்ட செயற்பாடுகளைச் செய்கின்ற சந்தர்ப்பங்களில் அவ்வாறான ஒலி எழுப்புதலை அல்லது எதிரொலிக்கச் செய்தலை நிறுத்துமாறு எழுத்துமூலமான கட்டளையொன்றை விதிப்பதற்கோ அல்லது அவ்வாறான ஒலி எழுப்பும் அல்லது எதிரொலிக்கச் செய்யும் உபகரணங்களது பயன்பாட்டை இடைநிறுத்துமாறு எழுத்துமூலமாக கட்டளையொன்றை விதிப்பதற்கோ தலைவருக்கு அதிகாரம் உண்டு.

6. மேலே 5ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளையொன்றைப் பெற்றுக்கொண்டுள்ள நபரொருவர் அக்கட்டளையின் பிரகாரம் உடனடியாகச் செயற்படுதல் வேண்டும்.

7. அவ்வாறிருப்பினும், ஏதேனும் பாதை, பொது இடம், வியாபார நிலையம், மதத்தலம், அல்லது பொதுமக்களுக்காக திறந்துவிடப்பட்டுள்ள பொது இடங்கள் அல்லாத இடத்தில் மேலே 4ம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு இயந்திரத்தை அல்லது உபகரணத்தை இயக்குதல் அல்லது இயக்குவதற்கு இடமளித்தல் மூலம் அவ்வொலியின் அதிக தன்மை அல்லது அதன் எதிரொலி அல்லது தொடர்ச்சியான தன்மை காரணமாக தாம் துன்பத்துக்காளாயுள்ளதாக சுற்றியுள்ள வதிவிடதாரர்களின் மூன்றிற்குக் குறையாத எண்ணிக்கையானோரால் கையெழுத்திடப்பட்ட ஆவணத்தின் மூலம் அறிவித்துள்ள சந்தர்ப்பத்தில், தலைவரால் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரால் அவ்விடமானது பரிசீலிக்கப்பட்டதன் பின்னர் அவ்வுபகரணங்களை அல்லது இயந்திரங்களை இயக்கும் செயற்பாட்டை இடைநிறுத்துமாறு எழுத்துமூலமான கட்டளையொன்றின் மூலம் விதிப்பதற்கு தலைவருக்கு அதிகாரம் உண்டு.

8. மேலே 7ம் பந்தியில் குறிப்பிடப்பட்ட கட்டளையொன்றைப் பெற்ற நபரொருவர் அக்கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைகளை குறித்த காலப்பகுதியுள் நிறைவேற்றுதல் வேண்டும்.

9. இத்துணைவிதியின் எந்தவொரு பந்தியேனும் மீறப்படும் வகையில் செயற்படுதல் அல்லது இத்துணைவிதியின் கீழ் தலைவரால் செய்யப்படுகின்ற கட்டளைகளுக்கு அமையாது செயற்படுதல் என்பன இத்துணைவிதியின் கீழ் தவறாகும் என்பதுடன், அத்தகையை தவறைச் செய்கின்ற அனைத்து நபர்களும், அத்தவறு தொடர்பாக உரிய அதிகாரத்தினைக் கொண்டுள்ள நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டதன் பின்னர் 1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122ஆம் பந்தியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தண்டணைக்கு உட்படுதல் வேண்டும்.

10. பதங்கள் தொடர்பாக பிற அர்த்தங்கள் அவசியப்பட்டாலொழிய, இத்துணைவிதிகளில்;

‘‘தலைவர்’’ என்பது, அக்காலப்பகுதியில் பிரதேச சபையில் தலைவர் பதவியை வகிக்கும் நபரையும்;

‘‘அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்’’ என்பது பிரதேசசபையின் தலைவரால் எழுத்து மூலமாக அதிகாரம் அளிக்கப்பட்ட எந்தவொரு உத்தியோகத்தரையும் ;

குறிக்கும்.

## XIII. நடமாடும் வியாபாரிகள் தொடர்பான துணைவிதிகள்

1. 1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 126ஆவது பந்தியின் (x) உபபந்தியின் கீழ் இத்துணைவிதிகளை உருவாக்குவதற்குப் பிரதேச சபைகளுக்கு அதிகாரம் கிடைத்துள்ளது

2. பொதுமக்களது மகிழ்ச்சியை உறுதிப்படுத்துவதற்கும், வசதிகள், நலனோம்பல் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கும் பிரதேச சபைக்குள்ள பொறுப்புக்களை அடைந்து கொள்வதற்கும், பிரதேச சபை நியாயாதிக்கப் பிரதேசத்தினுள் நடமாடும் வியாபாரத்தினை மேற்பார்வை செய்தல், முறைமைப் படுத்துதல், கட்டுப்படுத்துதல், நிருவகித்தலுக்காக இத்துணைவிதிகளானது விதிக்கப்படுகின்றது.

**3.** இத்துணைவிதிகளானது "நடமாடும் வியாபாரிகள் தொடர்பான துணைவிதிகள்" என அழைக்கப்படும்.

4. பிரதேச சபை நியாயாதிக்கப் பிரதேசத்தினுள் நடமாடும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள எல்லா நபர்களும், பிரதேச சபையிலிருந்து பெற்றுக்கொள்ளவேண்டிய விண்ணப்பப்படிவமொன்றைப் பூரணப்படுத்தி, தமது இடுப்புக்கு மேல் உடல்பகுதி நன்றாகத் தெரியக்கூடியக்கூடிய விதத்தில் 2 ½ x 2 அங்குல இரண்டு புகைப்படங்களையும், தேசிய அடையாள அட்டையின் பிரதியொன்றையும் பிரதேச சபையின் தலைவருக்குச் சமர்ப்பித்து நடமாடும் வியாபாரத்துடன் தொடர்புடைய முறையான அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

5. நடமாடும் வியாபாரத்தை மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட ஒரு வாகனத்தில் வைத்து செய்வதாயின், பிரதேச சபையினால் கட்டணம் அறவிடப்பட்டு வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கு ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் அந்நடமாடும் வியாபாரத்திற்காகப் பயன்படுத்தும் வாகனத்தை நிறுத்தி வைத்து வியாபாரம் செய்வதாயின், பிரதேச சபையினால் விதிக்கப்பட்டுள்ள வாகனங்களை நிறுத்தி வைக்கும் துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய உரிய கட்டணத்தைச் செலுத்துதல் வேண்டும்.

6. நியாயாதிக்கப் பிரதேசத்தினுள் பஸ் தரிப்பிடமொன்றில் நிறுத்தப்பட்டுள்ள அல்லது நியாயாதிக்கப் பிரதேசத்தினுள் அல்லது நியாயாதிக்கப் பிரதேசத்தினை ஊடறுத்து பயணம் செய்கின்ற தனியார் அல்லது இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பிரயாணிகளை ஏற்றிச் செல்லும் பொது வாகனங்களுக்குள் ஏறி, நடமாடும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு நபர்களும் இத்துணைவிதிகளின் 5ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்துக்குப் புறம்பாக, உரியவாறு பொதுப் பிரயாண அதிகார சபையிடம் அல்லது தனியார் பஸ் உரிமையாளர்களிடம் அனுமதியைப் பெற்றுக் கொண்டிருத்தல் வேண்டும்.

7. நடமாடும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள அனைத்து நபர்களும், நாளாந்தம் நன்றாகக் கழுவித் துப்பரவு செய்யப்பட்ட ஆடைகளை அணிந்திருக்க வேண்டியதுடன், தனிப்பட்ட சுகாதாரத்தைப் பாதுகாத்துக் கொண்டு பொதுமக்களது ஆரோக்கியத்திற்குப் பொருத்தமானவகையில் வியாபாரத்தில் ஈடுபடுதல் வேண்டும்.

8. ஏதேனுமொரு வீதியில், நடைபாதையில், பாதையில், பொது இடத்தில், அல்லது வணக்கத்தலங்களுக்கு அருகில், நடமாடும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஒரு நபருக்கு எந்தவொரு காரணத்தின் அடிப்படையிலும் அவ்விடத்திலிருந்து, நடைபாதையிலிருந்து, அல்லது பாதையிலிருந்து அகலுமாறு, அதிகாரம்பெற்ற பிரதேச சபை உத்தியோகத்தர் ஒருவரால் அல்லது பொலிஸ் உத்தியோகத்தரால் கட்டளையிடப்படும் சந்தர்ப்பத்தில் உடனடியாக அகன்று செல்லுதல் வேண்டும்.

9. எந்தவொரு நடமாடும் வியாபாத்தை மேற்கொள்ளும் நபரும், உணவு, பானங்கள், பொருட்களை விற்பனை செய்வதாயிருந்தால் அவர் வியாபாரம் செய்யும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் கீழே காட்டப்பட்டுள்ள விதிமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும்:-

(அ) விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள உணவு அல்லது பானங்களை பூச்சிகளிலிருந்தும், இலையான்களிலிருந்தும், தூசுகளிலிருந்தும், அல்லது நீரினால் மாசடையாதவாறும் பாதுகாப்பாக, மூடப்பட்டதொரு பாத்திரத்தில் அல்லது பெட்டியில் வைத்து விற்பனை செய்தல் வேண்டும்.

(ஆ) உணவுகளை வைத்திருப்பதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற, பெட்டி அல்லது பாத்திரமானது நிலையான ஒரு மூலப்பொருளால் தயாரிக்கப்பட்டதாகவும், சரியான மூடியைக் கொண்டு அமைந்ததாகவும் இருக்க வேண்டுமென்பதுடன் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அதனை மூடி வைத்திருத்தல் வேண்டும்.

(இ)உணவுகளை விற்பனை செய்யும்போது, வாடிக்கையாளர்களுக்கு உணவுகளைப் பரிமாறும்போதும் துருப்பிடிக்காத உலோகத்திலான உணவு கிடுக்கியொன்றைப் பயன்படுத்துதல் வேண்டும்.

(ஈ) உணவுப் பொருட்களை விற்கும்போது துப்பரவான உறைகளில் அல்லது பைகளில் இட்டு விற்பனை செய்தல்.

(உ) வாடிக்கையாளர்களுக்கு அந்த நேரத்திலேயே உணவுகளை உட்கொள்வதற்காக வழங்குவதாயின் அதற்காக வெவ்வேறாக துப்பரவான பாத்திரங்களைப் பயன்படுத்துதல்.

(ஊ) உண்டதன் பின்னர், மீதப்படுகின்ற உணவுகள் மற்றும் வியாபாரம் காணமாக சேருகின்ற அனைத்து கழிவுகளையும் இடுவதற்காக வேறாக கொள்கலனொன்றை வைத்திருத்தல் வேண்டும் என்பதுடன், அதில் சேருகின்ற கழிவுப் பொருட்களை சபையின் விதிமுறைகளுக்கமைய அகற்றுதல் வேண்டும்.

10. நடமாடும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள அனைத்து நபர்களும் அதற்காக தமக்கு சபையினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தினை விற்பனையில் ஈடுபட்டுள்ள அனைத்து சந்தர்ப்பத்திலும் தம்வசம் வைத்திருத்தல் வேண்டும் என்பதுடன், பிரதேச சபையின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் அல்லது எவரேனும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் அல்லது வாடிக்கையாளர் சேவைகள் அதிகாரசபையின் உத்தியோகத்தரொருவர் அல்லது பொதுச் சுகாதாரப் பரிசோதகரொருவர் அதனைக் கோருகின்ற சந்தரப்பத்தில் அவ்வனுமதிப்பத்திரத்தை பரிசீலனையின் பொருட்டு வழங்குதல் வேண்டும்.

11. பிரதேசசபைத் தலைவரால் வழங்கப்பட்ட நடமாடும் வியாபாரத்திற்கான செல்லுபடியான அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொண்டுள்ள எந்தவொரு நபரும், அவ்வதிகாரப் பிரதேசத்திற்குள் நடமாடும் வியாபாரத்தில் ஈடுபடும்போது, ஹோட்டலொன்றில், கடையொன்றில், சந்தையில், நடைபாதையில், அல்லது வேறு அனுமதிப்பத்திரம் பெற்ற வர்த்தக, தொழிற்சாலை அல்லது விற்பனை நிலையத்தில் இவ்வாறான நடமாடும் வியாபாரத்தில் ஈடுபட முடியாது.

12. நடமாடும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள எந்தவொரு நபரும், பிரதான வீதிகளில் அல்லது உள்வீதிகளில் செலுத்தப்படுகின்ற வாகனங்களுக்கு அல்லது வீதியில் பயணம் செய்பவர்களுக்கு இடைஞ்சல்கள், தடைகள் அல்லது ஆபத்துக்கள் ஏற்படும் வகையில் விற்பனை நடவடிக்கைகளில் ஈடுபடுதல் கூடாது.

13. நடமாடும் வியாபாரத்திற்கான அனுமதிப்பத்திரத்தைப் பெற்றிருந்தாலும் ஏதேனும் நோய்த்தொற்று, தொடுகை அல்லது சரும நோயினால் பீடிக்கப்பட்டுள்ள அல்லது அத்தகைய நோயினால் அண்மையில் பீடிக்கப்பட்டிருந்த எந்தவொரு நபரும் அல்லது அத்தகைய நோயினால் பீடிக்கப்பட்டிருந்த ஒருவருக்கு அண்மையில் பணிவிடை செய்வதில் ஈடுபட்டிருந்த எந்தவொரு நபரும் அத்தகைய நோய்த்தொற்று அல்லது நோய்விருத்திக் காலம் நிறைவடைந்தாலொழிய நடமாடும் வியாபாரத்தில் ஈடுபட முடியாது.

14. நடமாடும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள எந்தவொரு நபரும் அவ்விற்பனை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பாடசாலை, வைத்தியசாலை, அரச அலுவலகங்கள், அரச விடுதிகள் என்பவற்றுக்குள் பிரவேசித்தல் கூடாது.

15. நடமாடும் வியாபாரத்தில் ஈடுபடும் எந்தவொரு நபரும், அந்த உணவுப் பொருட்களை இட்டு சைக்கிளில், மோட்டார் சைக்கிளில், தலையில் அல்லது கைகளில் வைத்துக்கொண்டு செல்கின்ற பெட்டியின் அல்லது கொள்கலனின் ஒரு பக்க நீளம் 0.75 மீற்றருக்கு மேற்படாததாகவிருத்தல் வேண்டும்.

16. நடமாடும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள எந்தவொரு நபரும், தமது பொருட்களை விளம்பரப்படுத்துவதற்காக மெகா போன், ஒலிபெருக்கி, லவுட்ஸ்பீக்கர், அம்பிளிபயர், அல்லது வேறு இலத்திரனியல் அல்லத மின்சார அல்லது அவ்வாறான உதிரிப்பாகங்கள் அல்லது பிரகாசமான மின்சார ஒளியைக் கொண்ட பலகைகளைக் கொண்ட உபகரணங்களைப் பயன்படுத்துதல் கூடாது.

17. நடமாடும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள எந்தவொரு நபரும்,

(அ) தமது அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுக் கூறப்பட்டுள்ள பிரதேசத்தைத் தவிர்ந்த வேறு எந்தவொரு பிரதேசத்திலும் வியாபாரத்தில் ஈடுபடுவதற்கோ,

(ஆ) தமக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தை வேறு நபருக்கு மாற்றுவதற்கோ அல்லது வழங்குவதற்கோ

(இ) வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தைப் பயன்படுத்தி தடைசெய்யப்பட்டுள்ள சட்டரீதியற்ற பொருட்களை விற்பனை செய்தலோ

கூடாது.

18. தொற்றுநோய்கள் அல்லது பரவும் நோய்கள், பரவக்கூடிய ஆபத்துக்கள் காணப்படுகின்றதென பிரதேசத்தின் சுகாதார உத்தியோகத்தரால் அறிக்கையிடப்பட்ட சந்தரப்பத்தில் பிரதேச சபைத் தலைவரால் -

(அ)நடமாடும் வியாபாரத்திற்காக எந்தவொரு நபரொருவருக்கும் வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தை குறித்த காலப்பகுதிக்கு இடைநிறுத்துவதற்கு அல்லது

(ஆ) நியாயாதிக்கப் பிரதேசத்தில் எந்தவொரு பகுதியிலும் நடமாடும் வியாபாரத்தில் ஈடுபடுவதைத் தடுப்பதற்கும்

(இ) வழங்கப்பட்ட நடமாடும் வியாபார அனுமதிப்பத்திரத்தினை மீளவும் தமது பொறுப்பில் ஒப்படைக்குமாறு கட்டளையிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுத்தல்

சட்டரீதியானதாகும்.

19. மேலே 18ஆம் பந்தியின் பிரகாரம் எந்தவொரு அனுமதிப்பத்திரமும் இடைநிறுத்தப்படுதல் அல்லது தலைவரது பொறுப்பில் எடுத்தல் காரணமாக அனுமதிப்பதிரதாரருக்கு ஏற்படும் நட்டம் அல்லது இழப்பு தொடர்பில் பிரதேச சபையின் தலைவர் அல்லது பிரதேசத்தின் சுகாதார வைத்திய அதிகாரி பொறுப்புடையவர்களாக மாட்டார்கள்.

20. நடமாடும் வியாபாரியினால் விற்பனை செய்யப்படுகின்ற உணவு, பானம் மற்றும் வேறு ஏதேனும் பொருட்களின் ஒரு அளவினை, தலைவரால் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரால் விலை செலுத்தப்பட்டு பெற்றுக் கொள்ளப்படுதல் சட்டரீதியாவதுடன் அவ்வாறு அப்பொருட்களை அவர்களுக்கு விற்கமுடியாதென அனுமதிப்பத்திரதாரரால் நிராகரிக்க முடியாது.

21. இத்துணைவிதிகளின் 5ஆம் பந்தியின் கீழ் விண்ணப்பமொன்றை எந்தவொரு நபரும் தலைவருக்குச் சமர்ப்பிக்கின்ற சந்தர்ப்பங்களில் அவர் விற்பனை செய்வதற்கு எதிர்பார்க்கின்ற பொருட்கள், அதற்காகப் பயன்படுத்துகின்ற உபகரணங்கள், வாகனங்கள், மற்றும் அனுமதிப்பத்திரம் கோரப்படுகின்ற பிரதேசம் என்பனவற்றைக் கவனத்திற் கொண்டு அது பொதுமக்களது நலனில் பாதகத்தையோ, தாக்கத்தையோ செலுத்தக் கூடியதொன்றாகக் காணப்பட்டால், அனுமதிப்பத்திரத்தை வழங்கும் செய்றபாட்டை தலைவரால் நிராகிரிக்க முடியும்.

22. இத்துணைவிதிகளின் 5ஆம் பந்தியின் கீழ், எந்தவொரு நபரும் விண்ணப்பமொன்றினைத் தலைவருக்குச் சமர்ப்பிக்கின்ற சந்தர்ப்பங்களில், அவ்வனுமதிப்பத்திரத்தை வழங்குதல் பொருத்தமென தலைவர் அனுமதித்துள்ள சந்தர்ப்பங்களில், காலத்திற்குக் காலம் பிரதேச

சபையினால், ஒவ்வொரு வகையான நடமாடும் வியாபாரம் தொடர்பாகவும், வருடாந்தம் அல்லது குறிப்பிட்ட காலப்பகுதிக்கு அறவிடவேண்டும் என தீர்மானிக்கப்பட்டு, அரசாங்க வரித்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அனுமதிப்பத்திரக் கட்டணத்தை அனுமதிப்பத்திரதாரரிடமிருந்து அறவிட்டு அனுமதிப்பத்திரத்தை வழங்குதல் வேண்டும்.

23. இத்துணைவிதிகளில் மேலே 22ம் பந்தியின் கீழ் வழங்கப்பட்ட அனைத்து வருடாந்த அனுமதிப்பத்திரங்களும், அது வழங்கப்பட்ட வருடத்தின் டிசம்பர் 31ஆந் திகதியுடனும், எல்லா தற்காலிக அனுமதிப்பத்திரங்களும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியிலும் முடிவடைதல் வேண்டும்.

24. குறிப்பிட்ட காலப்பகுதிக்கென வரையறுக்கப்படுகின்ற தற்காலிக அனுமதிப்பத்திரமானது கலாச்சார, சமய அல்லது வேறு விழாக்கள், கூட்டங்கள், கண்காட்சிகள், போட்டிகள், மற்றும் பொதுமக்கள் கூடுகின்ற செயற்பாட்டு பிரதேசத்தில் இடம்பெறுகின்ற காலகட்டத்திற்கு மட்டுமே வழங்கப்படும்.

25. பாடசாலை அல்லது சமயத் தலங்களில் இடம்பெறும் விழாக்கள், கண்காட்சிகள், ஊர்வலங்கள் அல்லது பொதுமக்கள் கூடுகின்ற சந்தர்ப்பங்களில் அப்பாடசலையில் அல்லது சமயத் தலங்களுக்குரிய இடத்தில் நடமாடும் வியாபாரத்திற்கான அனுமதிப்பத்திரத்தை வழங்கும் நடவடிக்கையானது, அவ்விடத்திலுள்ள நிருவாகத்தினரின் சிபாரிசுகளைப் பெற்றுக் கொண்டால் மாத்திரமே, மேற்கொள்ளப்படும்.

26. இத்துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளை எந்தவொரு அனுமதிப்பத்திரதாரரும் மீறப்பட்டுள்ளதாக தலைவரால் தீர்மானிக்கப்படுகின்ற எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவ்வனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்து வியாபாரத்தை இடைநிறுத்துவதற்கு தலைவருக்கு அதிகாரம் உண்டு.

27. இத்துணைவிதிகளில் எந்தவொரு பந்தியும் மீறப்படுகின்றவகையில் செயற்படுதல் அல்லது இத்துணைவிதிகளின் கீழ் தலைவரால் செய்யப்படுகின்ற கட்டளைகளுக்கு அமையாது செயற்படுதல் என்பன, இத்துணைவிதிகளின் கீழ் குற்றமாவதுடன், அவ்வாறு குற்றமிழைத்த அனைத்து நபர்களும் அக்குற்றம் தொடர்பாக உரிய அதிகாரத்தினைக் கொண்ட நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டதன் பின்னர் 1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122ஆம் பந்தியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தண்டணைக்கு உட்படுதல் வேண்டும்.

28. பதங்கள் தொடர்பாக பிற அர்த்தங்கள் அவசியப்பட்டாலொழிய, இத்துணைவிதிகளில்;

“தலைவர்’’ என்பது அக்காலப்பகுதியில் பிரதேச சபையில் தலைவர் பதவியை வகிக்கும் நபரையும்;

“நடமாடும் வியாபாரம்’’ என்பது, பாத்திரமொன்றில், பெட்டியொன்றில், ஏதேனும் தட்டொன்றில், தாங்கியில், சைக்கிளில், வண்டிலில், கைவண்டிலில், மோட்டார் சைக்கிளில், அல்லது வாகனமொன்றில் வைத்து இடத்திற்கு இடம் சென்று அல்லது ஒரு இடத்தில் தரித்து நின்று, பொதுமக்கள் உட்கொள்வதற்காக உணவு பானங்கள் அல்லது மக்களது பயன்பாட்டிற்கான பொருட்களை விற்பனை செய்தல் அல்லது விற்பனைக்காக காட்சிப்படுத்துதலையும்;

“அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்’’ என்பது அந்நடவடிக்கைக்காக பிரதேச சபையின் தலைவரால் எழுத்து மூலமாக அதிகாரம் அளிக்கப்பட்ட எந்தவொரு பிரதேச சபை உத்தியோகத்தரையும் ;

குறிக்கும்.

## XIV. மலசலகூடங்கள் தொடர்பான துணைவிதிகள்

1. 1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 126ஆவது பந்தியின் (viii)(ஊ) உபபந்தியின் கீழ் இத்துணைவிதிகளை உருவாக்குவதற்குப் பிரதேச சபைகளுக்கு அதிகாரம் கிடைத்துள்ளது.

2. பிரதேச சபை நியாயாதிக்கப் பிரதேசத்தினுள் ஏதேனுமொரு வளவிற்குள் மலசலகூடங்களை நிருமாணித்தல் மற்றும் பேணிச்செல்லுதல் தொடர்பான ஏற்பாடுகளை விதிப்பதற்காக இத்துணைவிதிகள் விதிக்கப்படுகின்றன.

3. இத்துணைவிதிகளானது மலசலகூடங்களை நிருமாணித்தல் மற்றும் பேணிச் செல்லுதல் தொடர்பான துணைவிதிகள் என அழைக்கப்படும்.

4. பிரதேச சபை நியாயாதிக்கப் பிரதேசத்தினுள் ஏதேனுமொரு வளவிற்குள் வசிப்பவர்களது பயன்பாட்டிற்காக நிருமாணிக்கப்பட்டுள்ள அனைத்து மலசலகூடங்களும் தலைவரால் அனுமதிக்கப்பட்ட திட்டமொன்றிற்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

5. இத்துணைவிதிகள் நடைமுறைப்படுத்தப்படும் திகதிக்கு முன்னர் தலைவரது அனுமதிப்பத்திரமொன்று இல்லாது நிருமாணிக்கப்பட்ட மறைவிடங்கள் அல்லது மலசலகூடம் தொடர்பில் அவ்விடத்திலுள்ள உரிமையாளருக்கு அல்லது வதிவிடதாரருக்கு தலைவரால் எழுத்துமூலம் வழங்கப்பட்ட அறிவித்தலொன்றின் மூலம், அதில் குறிப்பிடப்பட்டுள்ள கால எல்லைக்குள் உரிய மறைவிடங்களானது அல்லது மலசலகூடமானது அனுமதிக்கப்பட்ட திட்டத்திற்கமைய நிருமாணிக்கப்பட்ட ஒரு மலசலகூடமாகப் பேணப்படுதல் வேண்டுமென கட்டளையிடுதல் வேண்டும்.

6. பிரதேச சபை நியாயாதிக்கப் பிரதேசத்தினுள் வதிவிடதாரர்களால் நிருமாணிக்கப்பட்ட மலசலகூடங்கள் தொடர்பில் திட்டங்களை அனுமதிக்கும் போது (….. இலக்கம் …. கொண்ட) வீடுகள் மற்றும் நகர அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தினது அல்லது (….. இலக்கம் …. கொண்ட) நகர அபிவிருத்தி அதிகார சபையின் சட்டத்தின் ஏற்பாடுகளது அல்லது அதன் கீழ் தயாரிக்கப்பட்ட ஏதேனும் எழுதப்பட்ட சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள், இத்துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்குப் புறம்பாக, மேலதிகமாக சந்தர்ப்பத்திற்கேற்றவாறு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

7. பிரதேச சபை நியாயாதிக்கப் பிரதேசத்திலுள்ள எல்லா வளவுகளுக்குள்ளும் அமைந்துள்ள மலசலகூடங்களை துப்பரவாகவும் சுகாதாரமாகவும் வைத்திருத்தல் வளவு உரிமையாளரது, வதிவிடதாரரது அல்லது பொறுப்பில் உள்ளவரது கடமையாக இருத்தல் வேண்டும்.

8. தலைவரால் தமது நியாயாதிக்கப் பிரதேசத்தினுள் ஏதேனுமொரு உரிமையாளர், வதிவிடதாரர் அல்லது பொறுப்பில் உள்ளவருக்கு விடுக்கப்படுகின்ற அறிவித்தல் மூலம் உரிய மலசலகூடத்தை, உரிய விதத்திலும் முறையாகவும் பேணுதல் தொடர்பாகக் கட்டளையொன்றை விதிக்க முடியும். இல்லையேல் உரிய மலசலகூடத்தை அக்கட்டளைகளில் குறித்துக் கூறப்பட்டுள்ள கால எல்லைக்குள் திருத்தஞ் செய்யுமாறு அல்லது மூடி விடுமாறு கட்டளையிட முடியும்.

9. ஏதெனுமொரு வளவின் உரிமையாளர், வதிவிடதாரர் அல்லது பொறுப்பாளர் வளவிற்குள் உள்ள மலசலகூடத்தைப் பயன்படுத்தும் போது சுகாதாரமாகவும், பாதுகாப்பாகவும் சுற்றியுள்ளவர்களுக்கு அதன் மூலம் இடைஞ்சல்களை ஏற்படுத்தாத வகையில் பேணுவதற்கு எல்லாச் சந்தரப்பங்களிலும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

10. ஏதேனுமொரு வளவிற்குள் அமைக்கப்பட்டுள்ள மலசலகூடமொன்று –

(a) நிருமாணிக்கப்பட்டிருக்கின்ற விதம் முறையற்றது என்றோ அல்லது

(b) சுகாதாரத்திற்குப் பாதுகாப்பற்றதென்றோ அல்லது

(c) திருத்தஞ்செய்யப்பட வேண்டும் என்றோ அல்லது

(d) சுற்றியிருப்பவர்கள் அதன் மூலம் துன்பத்திற்குள்ளாகியுள்ளனர் என்றோ

தலைவர் உறுதிப்படுத்திக் கொள்ளும் எந்தவொரு சந்தரப்பத்திலும் உரிய மலசலகூடத்தை திருத்துவதற்கும் அல்லது அதனை உடைத்து விட்டு புதிதாக நிருமாணிக்குமாறும் வளவின் உரிமையாளருக்கு அல்லது வதிவிடதாரருக்கு அல்லது பொறுப்பாளருக்கு தலைவரால் எழுத்துமூலம் கட்டளையிடுதல் சட்டரீதியானதாகும்.

11. இத்துணைவிதியின் எந்தவொரு பந்தியேனும் மீறப்படும் வகையில் செயற்படுதல் தவறாகும் என்பதுடன், அத்தகையை தவறைச் செய்கின்ற அனைத்து நபர்களும், அத்தவறு தொடர்பாக உரிய அதிகாரத்தினைக் கொண்டுள்ள நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டதன் பின்னர் 1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122ஆம் பந்தியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தண்டனைக்கு உட்படுதல் வேண்டும்.

12. பதங்கள் தொடர்பாக பிற அர்த்தங்கள் அவசியப்பட்டாலொழிய, இத்துணைவிதிகளில்;

“தலைவர்” என்பது, அக்காலப்பகுதியில் பிரதேச சபையில் தலைவர் பதவியை வகிக்கும் நபரையும்;

“நபர்” என்பது எந்தவொரு வளவினதும் உரிமையாளர், வதிவிடதாரர் அல்லது குத்தகைதாரர் அல்லது வளவிற்குப் பொறுப்பாகவுள்ளவர் அல்லது முகாமையாளரையும் ;

“மலசலகூடம்” என்பது நீர் முத்திரையிடப்பட்ட மலசலகூடம் அல்லது நீர் மலசலகூடம் அல்லது பயன்பாட்டிற்கான வேறு எந்தவொரு மலசலகூடத்தையும்;

குறிக்கும்.

## XV. மிருக வதைகளைத் தடுத்தல் தொடர்பான துணைவிதிகள்

1. 1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 126ஆவது பந்தியின் (xi)(எ) உபபந்தியின் கீழ் இத்துணைவிதிகளை உருவாக்குவதற்குப் பிரதேச சபைகளுக்கு அதிகாரம் கிடைத்துள்ளது

2. மிருகங்களை வதைத்தலைத் தடுத்தலுக்காக இத்துணைவிதிகள் விதிக்கப்படுகின்றன.

3. இத்துணைவிதிகளானது ''மிருக வதைகளைத் தடுத்தல்'' என அழைக்கப்படும்.

4. பிரதேச சபை நியாயாதிக்கப் பிரதேசத்தினுள் எந்தவொரு நபராலும் -

(அ) ஏதேனுமொரு மிருகத்தினை கொடூரமாக அடித்தல், வதைத்தல், அளவுக்கு மீறிய வேகத்தில் அல்லது அசாதாரணமான தூரத்திற்கு மிருகத்தை ஓட்டிச் செல்லுதல் அல்லது துரத்துதல், அளவுக்கு மீறிய சுமையேற்படக்கூடிய விதத்தில் மிருகத்தின் மீது ஏறிச் செல்லுதல் அல்லது சுமையை ஏற்றுதல், முறையற்ற விதத்தில் மிருகங்களிடமிருந்து வேலை வாங்குதல் அல்லது அவ்வாறான எந்தவொரு வேலையையும் வாங்குவதற்கு இடமளித்தல் அல்லது அவ்வாறு செய்வித்தல்;

(ஆ) ஏதேனுமொரு மிருகத்திற்கு அநாவசியமாக வலி, துன்பத்தை ஏற்படுத்தும் விதத்தில் விற்பனை செய்வதற்காக அல்லது பணத்தினைச் சம்பாதிப்பதற்காக காட்சிப்படுத்துதல் ; மற்றும்

(இ) ஏதேனுமொரு மிருகத்திற்கு அநாவசியமாக வலி, துன்பத்தை ஏற்படுத்தும் விதத்தில் தோணியில், படகில், வாகனத்தில், கூட்டில், பெட்டியில், அல்லது வேறு ஏதேனும் பொதியில் எடுத்துச் செல்லுதல் அல்லது எடுத்துச் செல்வதற்கு இடமளித்தல் ;

கூடாது.

5. பிரதேச சபை நியாயாதிக்கப் பிரதேசத்தினுள் எந்தவொரு நபராலும் -

(அ) ஏதேனுமொரு மிருகத்தை பசியோடு, அல்லது தனித்துவிடப்பட்டு அல்லது வேறு விதத்திலான சித்திரவதைகளைச் செய்தல் ;

(ஆ) எந்தவொரு மிருகத்தையும் கொடூரமாக அடித்தல் அல்லது கொடூரமாக ஆயுதங்களால் அல்லது உபகரணத்தினால் அல்லது ஏதேனும் இரசாயன அல்லது விச பொருட்களைப் பயன்படுத்தி மரணத்திற்குள்ளாக்குதல் ; மற்றும்

(இ) ஏதேனும் நோய்கள், ஊனங்கள், காயங்கள், அல்லது முதிர்வயது நோய்கள் காரணமாக வேலையில் ஈடுபடுத்துவதற்கு பொருத்தமற்ற ஒரு மிருகத்தினை அவ்வாறு வேலையில் ஈடுபடுத்துதல் அல்லது வேலையில் ஈடுபடுத்துவதற்கு அனுமதி வழங்குதல் ; கூடாது.

6. தாம் உரிமையாளராக இருக்கும் எந்தவொரு மிருகமும் நோய் அல்லது பலவீனமுற்றதன் காரணமாக ஏதேனும் பாதையில், பொது இடத்தில் அல்லது பொதுமக்களுக்குத் திறந்து விடப்பட்டுள்ள இடத்தில் இறந்து போவதற்கு இடமளித்தல் கூடாது.

7. மேலே 4, 5, 6ம் பந்திகளில் செய்யக்கூடாது என குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் செயற்பாடொன்றைச் செய்வதாக தலைவரது கருத்தின்படி அவரால் அவதானிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் அச்செய்றபாட்டை உடனடியாக நிறுத்துமாறு அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவர் மூலம் விதிப்பதற்கு தலைவருக்கு அதிகாரம் உண்டு.

8. மேலே 7ல் குறிப்பிடப்பட்ட கட்டளையொன்றை எந்தவொரு நபரும் பின்பற்றத் தவறும் பட்சத்தில் தமது உபகரணங்கள் மற்றும் ஊழியர்களை ஈடுபடுத்தி அச்செயற்பாட்டை நிறுத்துவதற்கு அல்லது தடுப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு தலைவருக்கு அதிகாரம் உண்டு.

9. இத்துணைவிதியின் எந்தவொரு பந்தியேனும் மீறப்படும் வகையில் செயற்படுதல் அல்லது இத்துணைவிதியின் கீழ் தலைவரால் செய்யப்படுகின்ற கட்டளைகளுக்கு அமையாது செயற்படுதல் என்பன இத்துணைவிதியின் கீழ் தவறாகும் என்பதுடன், அத்தகையை தவறைச் செய்கின்ற அனைத்து நபர்களும், அத்தவறு தொடர்பாக உரிய அதிகாரத்தினைக் கொண்டுள்ள நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டதன் பின்னர் 1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122ஆம் பந்தியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தண்டணைக்கு உட்படுதல் வேண்டும்.

10. பதங்கள் தொடர்பாக பிற அர்த்தங்கள் அவசியப்பட்டாலொழிய, இத்துணைவிதிகளில்;

‘‘தலைவர்’’ என்பது, அக்காலப்பகுதியில் பிரதேச சபையில் தலைவர் பதவியை வகிக்கும் நபரையும்;

‘‘மிருகம்’’ என்பது, மிருக கட்டளைச் சட்டத்தில் அதற்காக வழங்கப்பட்டுள்ள அர்த்தத்தினையும் ;

‘‘அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்’’ என்பது பிரதேசசபையின் தலைவரால் எழுத்து மூலமாக அதிகாரம் அளிக்கப்பட்ட எந்தவொரு உத்தியோகத்தரையும் ;

குறிக்கும்.

## XVI. உணவுப் பொருட்களை விற்பனை செய்தல் தொடர்பான துணைவிதிகள்

01. 1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 126ஆவது பந்தியின் (ix) (ஓ) உபபந்தியின் கீழ் இத்துணைவிதிகளை உருவாக்குவதற்குப் பிரதேச சபைகளுக்கு அதிகாரம் கிடைத்துள்ளது

02. பிரதேச சபை நியாயாதிக்கப் பிரதேசத்தினுள் ஹோட்டல், கடைகள், மற்றும் பொதுச் சந்தைகள் அல்லாத இடங்களிலும் நடமாடும் வியாபாரிகளாலும் உணவு, பான வகைகளை விற்பனை செய்யும் முறைகளை முறைமைப்படுத்துதல், மேற்பார்வை செய்தல், பரிசோதனை செய்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் போன்ற நோக்கத்திற்காக இந்த துணைவிதிகளானது விதிக்கப்படுகின்றது.

03. இத்துணைவிதிகளானது உணவு, பான வகைகளை விற்பனை செய்தல் தொடர்பான துணைவிதிகள் என அழைக்கப்படும்.

04. நகர சபைக்குச் சொந்தமான பொதுச் சந்தையில், நகரசபை நியாயாதிக்கப் பிரதேசத்தில் அனுமதிப்பத்திரம் பெற்ற ஹோட்டலொன்று, அல்லது கடையொன்று தவிர்ந்த வேறு ஏதேனும் ஒரு இடத்தில் அல்லது பாத்திரத்தில், பெட்டியில், அல்லது வேறு ஏனுமொரு தாங்கியில், தட்டில், சைக்கிளில், மோட்டார் சைக்கிளில், வண்டிலில், கைவண்டியில், அல்லது வாகனத்தில் வைத்து இடத்திற்கு இடம் சென்று அல்லது ஏதேனுமொரு இடத்தில் தரித்திருந்து உணவு, பான வகைகளை விற்பனை செய்தல், அவ்வாறு விற்பதற்காக வைத்திருத்தல் அல்லது விற்பனைக்காக காட்சிப்படுத்தி வைத்திருக்கும் அனைத்து நபர்களும் இத்துணைவிதிகளின் 24ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள உரிய கட்டணத்தைச் செலுத்தி அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

05. நடமாடும் வியாபாரங்கள் உள்ளடங்கலாக ஏதேனுமொரு இடத்தில் உணவு, பான வகைகளை விற்பனை செய்தல், அவ்வாறு விற்பதற்காக வைத்திருத்தல் அல்லது விற்பனைக்காகக் காட்சிப்படுத்தி வைத்திருக்கும் அனைத்து நபர்களும் கீழே காட்டப்பட்டுள்ள விதிமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும்:-

(அ) அனைத்து உணவுப் பொருட்களையும் தூசிகள், இலையான்கள், அல்லது வேறு நோய்க்கிருமிகளிலிருந்து பாதுகாக்கும் விதத்தில் நிலையானதொரு பொருளால் தயாரிக்கப்பட்ட பெட்டியொன்றில், அலுமாரியில், அல்லது பாத்திரத்தில் அடுக்கி வைத்திருத்தல்;

(ஆ) உணவுப் பொருட்களை இடும் பெட்டி, அலுமாரி, அல்லது பாத்திரமானது மூடி வைத்திருக்கக்கூடியவாறான நிலையான மூடிகளைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், எல்லா நேரத்திலும் அவற்றை மூடிகளைக் கொண்டு மூடி வைத்திருத்தல்;

(இ) உணவுப் பொருட்கள் விற்பனை செய்யப்படும் இடமானது வெயில், மழை, தூசுகள் வராது பாதுகாக்கப்பட்டதும் குப்பை கூழங்களற்றதும், அடிக்கடி துப்பரவு செய்யப்பட்டதுமான ஒரு இடமாக இருத்தல் ;

(ஈ) நடமாடும் வியாபாரம் மூலம் உணவு, பானங்கள் விற்பனை செய்யப்படின், அவ்வாறு உணவு பானங்களை விற்பனை செய்கின்ற இடமானது, நகர சபையின் துணைவிதிகளின் பிரகாரம் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கான கட்டணம் அறவிடப்படும் ஒரு இடமாக இருப்பின், அதற்கு ஏற்றவாறு வாகனங்களை நிறுத்தி வைக்கும் கட்டணத்தைச் செலுத்துதல் ;

(உ) நடமாடும் வியாபாரம் மூலம் உணவு, பானங்கள் விற்பனை செய்யப்படின், பஸ் நிலையம் அல்லது புகையிரத நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள அல்லது பெருந்தெருக்களில் பிரயாணிகள் பயணம் செய்யும் வாகனத்தில் விற்பனை

செய்வதாகவிருந்தால் உரியவாறு இலங்கை போக்குவரத்துச் சபையின், புகையிரத திணைக்களத்தின் அல்லது பஸ் உரிமையாளர்களின் அனுமதியைப் பெற்றுக் கொண்டிருத்தல்;

(ஊ) ஏதேனுமொரு வீதியில், பாதையில், பொது இடத்தில் அல்லது அதற்கருகில் உணவு பானங்களை விற்பனை செய்கின்ற ஒரு நபரை அவ்விடத்திலிருந்து அகலுமாறு நகரசபையின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தரொருவர், எவரேனும் பொலிஸ் உத்தியோகத்தரொருவர் கட்டளையிட்டால் அந்நபர் உடனடியாக அவ்விடத்திலிருந்து அகலுதல் ;

(எ) உணவு பானங்களை விற்பனை செய்யும்போதும் வாடிக்கையாளர்களுக்கு உணவுகளைப் பரிமாறும்போதும் துருப்பிடிக்காத, துப்பரவான தட்டுகள் அல்லது களிமண் அல்லது கண்ணாடிகளால் உருவாக்கப்பட்ட பீங்கான் கோப்பைகள், பாத்திரங்கள் என்பனவற்றைப் பயன்படுத்துதல்;

(ஏ) உணவுப் பொருட்களை வெளியில் எடுத்துச் சென்று விற்கும்போது துப்பரவான உறைகளில் அல்லது பைகளில் இட்டு விற்பனை செய்தல்;

(ஐ) வாடிக்கையாளர்களுக்கு அந்த நேரத்திலேயே உணவுகளை உட்கொள்வதற்கு வழங்குவதாயின் அதற்காக ஒதுக்கப்பட்ட துப்பரவான பாத்திரங்களைப் பயன்படுத்துதல்;

(ஒ) உண்டதன் பின்னர், மீதப்படுகின்ற உணவுகளை அகற்றுவதற்காக, மூடியிடப்பட்ட கழிவகற்றல் கொள்கலன்களை வைத்திருத்தல் வேண்டும் என்பதுடன், அதில் சேருகின்ற கழிவுப் பொருட்களை நகரசபையின் விதிமுறைகளுக்கமைய அகற்றுதல் ;

(ஓ) உணவு, பானங்களை உட்கொள்ளும் முன்னரும் உட்கொண்டதன் பின்னரும் கைகளைக் கழுவுவதற்காக துப்பரவான நீர் மற்றும் சவர்க்காரம் என்பன வைக்கப்பட்டிருத்தல் ; மற்றும்

(ஔ) உணவு, பானங்களை விற்பனை செய்வதற்காக 4ஆம் பந்தியின் கீழ் பெற்றுக் கொண்ட அனுமதிப்பத்திரத்தினை விற்பனை இடம்பெறுகின்ற அனைத்து சந்தர்ப்பத்திலும் தம்வசம் வைத்திருத்தல்.

(6) நகரசபைத் தலைவரால் வழங்கப்பட்ட நடமாடும் வியாபாரத்திற்கான செல்லுபடியான அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொண்டுள்ள எந்தவொரு நபரும், அவ்வதிகாரப் பிரதேசத்திற்குள் நடமாடும் வியாபாரத்தில் ஈடுபடும்போது, ஹோட்டலொன்றில், கடையொன்றில், சந்தையில், நடைபாதையில், அல்லது வேறு அனுமதிப்பத்திரம் பெற்ற வர்த்தக, தொழிற்சாலை அல்லது விற்பனை நிலையத்தில் இவ்வாறான நடமாடும் வியாபாரத்தில் ஈடுபட முடியாது.

(7) முறையான அனுமதிப்பத்திரம் பெற்றிருந்தாலும், அனுமதிப்பத்திரம் பெற்ற எந்தவொரு நபரும், வீதியில் செலுத்தப்படுகின்ற வாகனங்களுக்கு அல்லது பாதைகளில் நடைபாதைகளில், வீதியில் பயணம் செய்பவர்களுக்கு இடைஞ்சல்கள், தடைகள் அல்லது ஆபத்துக்கள் ஏற்படும் வகையில் விற்பனை நடவடிக்கைகளில் ஈடுபடுதல் கூடாது.

(8) ஏதேனும் நோய்த்தொற்று, தொடுகை அல்லது சரும நோயினால் பீடிக்கப்பட்டுள்ள அல்லது அத்தகைய நோயினால் அண்மையில் பீடிக்கப்பட்டிருந்த எந்தவொரு நபரும் அல்லது அத்தகைய நோயினால் பீடிக்கப்பட்டிருந்த ஒருவருக்கு அண்மையில் பணிவிடை செய்வதில் ஈடுபட்டிருந்த எந்தவொரு நபரும் அத்தகைய நோய்த்தொற்று அல்லது நோய்விருத்திக் காலம் நிறைவடைந்தாலொழிய நடமாடும் வியாபாரத்தில் ஈடுபட முடியாது.

(9) உணவு, பானங்களை விற்பனை செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள எந்தவொரு நபரும் உணவு பானங்களை விற்பனை செய்வதற்காக –

(அ) அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்திலிருந்து அல்லது பிரதேசத்திலிருந்து வெளியிடத்திற்கோ அல்லது,

(ஆ) பாடசாலை, வைத்தியசாலை, அரச அலுவலகங்கள், அரச விடுதிகள், நீதிமன்ற வளாகத்திற்குள்ளோ பிரவேசித்தல் கூடாது.

10. உணவு, பானங்களை விற்பனை செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள எந்தவொரு நபராலும், அந்த உணவுப் பொருட்களை அதே தரத்தில் வைத்திருத்தல், அல்லது கவர்ச்சிகரமாகத் தயாரிப்பதற்காக அவ்வுணவுப் பொருட்களை சுகாதாரத்திற்குக் கேடு விளைவிக்கக் கூடிய வகையிலான பொருட்களால் அல்லது திரவத்தினால் கலத்தல், நிறமூட்டுதல், ஊறவைத்தல், ஊசியிடல், தெளித்தல், துணிக்கைகளாக்குதல் என்பன செய்யப்படக்கூடாதென்பதுடன் அவ்வாறு செய்யப்பட்ட உணவு பானங்களை விற்பனை செய்தலும் கூடாது.

11. காலங்கடந்த அல்லது பழுதடைந்த அல்லது மனிதப் பாவனைக்கு ஒவ்வாத உணவு, பானங்களை குளிரூட்டியில் வைத்திருத்தல், மீளத் தயாரித்தல், நல்ல பொருட்களுடன் கலத்தல் அல்லது தம்வசம் வைத்திருத்தல் கூடாது.

12. உணவு பானங்களை விற்பனை செய்யும் இடத்திலும் அதனைச் சுற்றியும் நாய்கள், பூனைகள், பன்றிகள், ஆடுகள், மாடுகள், எலிகள் அல்லது வேறு மிருகங்கள் நடமாடுவதற்கு இடமளித்தல் கூடாது.

13. உணவு பானங்களை விற்பனை செய்து நடமாடும் வியாபாரத்தில் ஈடுபடும் எந்தவொரு நபரும், அந்த உணவுப் பொருட்களை இட்டு சைக்கிளில், மோட்டார் சைக்கிளில், தலையில் அல்லது கைகளில் வைத்துக்கொண்டு செல்கின்ற பெட்டியின் அல்லது கொள்கலனின் ஒரு பக்க நீளம் 0.75 மீற்றருக்கு மேற்படாததாகவிருத்தல் வேண்டும்.

14. உணவு, பானங்களை விற்பனை செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள எந்தவொரு நபரும், எச்சந்தர்ப்பத்திலும் தமது விற்பனை நடவடிக்கைக்காக மெகா போன், ஒலிபெருக்கி, லவுட்ஸ்பீக்கர், அம்பிளிபயர், பிரகாசமான ஒளியைப் பாய்ச்சக்கூடிய மின் உபகரணங்களைப் பயன்படுத்துதல் கூடாது.

15. உணவு, பானங்களை விற்பனை செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள எந்தவொரு நபரும் கலால் வரி கட்டளைச் சட்டத்தின் கீழ் வருகின்ற மதுபானங்களை வைத்திருத்தல் அல்லது விற்றல் கூடாது.

16. உணவு பானங்களை விற்பனை செய்தல் தொடர்பாக பொதுமக்களிடமிருந்தும், சிவில் அமைப்புக்களிலிருந்தும் அல்லது வேறு எந்தவொரு நபரிடமிருந்தும் கிடைக்கின்ற முறைப்பாடுகள், நகரசபையினால் ஆவணப்படுத்தப்படவேண்டியதுடன், அம்முறைப்பாடு தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் நகரசபைத் தலைவரது கடமைப் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

17. தொற்றுநோய்கள் அல்லது பரவும் நோய்கள், பரவக்கூடிய ஆபத்துக்கள் காணப்படுகின்றதென பிரதேசத்தின் சுகாதார உத்தியோகத்தரால் அறிக்கையிடப்பட்ட சந்தரப்பத்தில் -

(அ) உணவு பானங்களை விற்பனை செய்வதற்கு ஏதேனும் நபரொருவருக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்வதற்கு அல்லது குறித்த காலப்பகுதிக்கு இடைநிறுத்துவதற்கு அல்லது

(ஆ) நியாயாதிக்கப் பிரதேசத்தில் ஏதேனுமொரு பிரிவில் உணவு பானங்களை விற்பனை செய்வதை நிறுத்துவதற்கு

நகரசபைத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.

18. மேலே கூறப்பட்ட 17ஆவது பிரிவின் கீழ் செயற்படுவதன் காரணமாக எவரேனும் நபரொருவருக்கு ஏற்படும் நட்டத்தை மீளச் செலுத்தும் பொறுப்பிற்கு, சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் தலைவர் கடப்பாடு உடையவர்களாக மாட்டார்கள்.

19. உணவு, பான விற்பனைகளில் ஈடுபட்டுள்ள எவரேனும் நபரொருவருவரிடமிருந்து, விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள உணவுப் பொருட்களில், ஒரு அளவினை, நகர சபையின் தலைவரால் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரால் விலை செலுத்தப்பட்டு பெற்றுக் கொள்ளப்படுதல் சட்டரீதியாவதுடன் அவ்வாறு அப்பொருட்களை அவர்களுக்கு விற்க முடியாதென எவரேனும் ஒருவரால் நிராகரிக்க முடியாது.

20. உணவு, பானங்களை விற்பனை செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள எந்தவொரு இடத்திற்குள்ளும் பிரவேசித்து, இத்துணைவிதிகளின் ஏற்பாடுகளை பரிசோதனை செய்வதற்கு, நகரசபையின் தலைவருக்கு அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தருக்கு அதிகாரம் உண்டு.

21. மேலே குறிப்பிடப்பட்டுள்ள 20ஆம் பந்தியின் கீழ் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட ஏதேனும் உணவு, பான வகைகள் மனித பாவனைக்கு உகந்ததல்லவென தெரிந்தால் அதனைத் தடைசெய்து, பிரதேசத்திலுள்ள சுகாதார வைத்திய அதிகாரிக்கு அனுப்புவதற்கு நகரசபையின் தலைவருக்கு அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தருக்கு அதிகாரம் உண்டு.

22. மேலே குறிப்பிடப்பட்டுள்ள 21ஆம் பந்தியின் கீழ் தடைசெய்யப்பட்டு தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட உணவு, பான வகைகள், மனித பயன்பாட்டிற்கு உகந்ததல்ல என சுகாதார வைத்திய அதிகாரி உறுதிப்படுத்தினால், அவ்வுணவு, பானங்களை தடைசெய்து அதன் உரிமையாளருக்கு அல்லது விற்பனையாளருக்கு நட்டம் அல்லது நட்டஈடு கொடுப்பனவு செய்யப்படாமல், அவற்றை அழிக்குமாறு தலைவர் கட்டளையிடுதல் வேண்டும். அவ்வாறானதொரு கட்டளை கிடைக்கப்பெற்றவுடன், அவ்வுணவுப் பதார்த்தங்களை உரிய உத்தியோகத்தர்களின் முன்னிலையில் அழிப்பதற்கு உரிமையாளர் அல்லது விற்பனையாளர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

23. இத்துணைவிதிகளின் 4ஆம் பந்தியின் கீழ் உணவு பானங்களை விற்பனை செய்யும் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பிக்கின்ற அனைத்து நபர்களும், நகர சபையினால் பிரேரணைத் தீர்மானமொன்றின் மூலம் தீர்மானிக்கப்பட்டு, வருடாந்தம்

அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்படுகின்ற அனுமதிப்பத்திரக் கட்டணத்தை நகரசபைக்குச் செலுத்துதல் வேண்டும்.

24. இத்துணைவிதிகளின் 4ஆம் பந்தியின் கீழ் வழங்கப்பட்ட அனைத்து அனுமதிப்பத்திரங்களும், அது முன்னரே இரத்துச் செய்யப்படாவிட்டால் அது வழங்கப்பட்ட வருடத்தின் டிசம்பர் 31ஆந் திகதியுடன் முடிவடையும்.

25. மேலே 24ஆம் பந்தியில் எது குறிப்பிடப்பட்டிருந்தாலும், பொதுமக்கள் கூடும் எந்தவொரு வகையான ஊர்வலம், சமய அல்லது கலாச்சார விழாக்கள், கண்காட்சிகள், விளையாட்டு விழாக்கள் என்பன இடம்பெறுகின்ற காலகட்டத்திற்கு வரையறுக்கப்பட்ட விதத்தில், தற்காலிகமாக உணவு, பான வகைகளை விற்பனை செய்யும் நடமாடும் வியாபாரத்திற்கான அனுமதிப்பத்திரத்தை வழங்கும் அதிகாரம் நகர சபையின் தலைவருக்கு உண்டு.

26. இத்துணைவிதிகளில் எந்தவொரு பந்தியும் மீறப்படுகின்றவகையில் செயற்படுதல் அல்லது இத்துணைவிதிகளின் கீழ் தலைவரால் செய்யப்படுகின்ற கட்டளைகளுக்கு அமையாது செயற்படுதல் என்பன, இத்துணைவிதிகளின் கீழ் குற்றமாவதுடன், அவ்வாறு குற்றமிழைத்த அனைத்து நபர்களும் அக்குற்றம் தொடர்பாக உரிய அதிகாரத்தினைக் கொண்ட நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டதன் பின்னர் 255ஆம் அத்தியாயமான நகர சபை கட்டளைச் சட்டத்தின் 153ஆம் பந்தியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தண்டணைக்கு உட்படுதல் வேண்டும்.

27. பதங்கள் தொடர்பாக பிற அர்த்தங்கள் அவசியப்பட்டாலொழிய, இத்துணைவிதிகளில்;

> ‘‘தலைவர்’’ என்பது அக்காலப்பகுதியில் நகர சபையில் தலைவர் பதிவியை வகிக்கும் நபரையும்;
>
> ‘‘உணவு பானங்கள்’’ என்பது இறைச்சி, மீன், கோழி இறைச்சி, மரக்கறிகள், சமைக்கப்பட்ட உணவுகள், குரக்கன் மா, அரிசி மா, அல்லது வேறு மா வகைகளால் தயாரிக்கப்பட்ட உணவுப் பொருட்கள், தின்பண்டங்கள் அல்லது இனிப்புப் பண்டங்கள், பொரித்த உணவுகள், பழங்கள், தயாரிக்கப்பட்ட பழங்கள், தோல் உரிக்கப்பட்ட அல்லது வேறு விதத்தில் பாவனைக்காகத் தயாரிக்கப்பட்ட பழங்கள் அல்லது மரக்கறிகள், சர்பத், இலைக்கஞ்சி, இனிப்புப் பானங்கள், பால், யோகட், தயிர் அல்லது மனிதர்களது உணவிற்காகப் பயன்படுத்துகின்ற விதத்தில்

தயாரிக்கப்பட்ட, இலகுவில் பழுதடையக்கூடிய அனைத்து விதமான உணவு, பான வகைகளையும் ; மற்றும்

“அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்” என்பது அந்நடவடிக்கைக்காக நகர சபையின் தலைவரால் எழுத்துமூலமாக அதிகாரம் அளிக்கப்பட்ட எந்தவொரு நகர சபை உத்தியோகத்தரையும் ;

குறிக்கும்.

## XVII. பாற்பண்ணைகள் மற்றும் பால் விற்பனை பற்றிய துணை விதிகள்

1. 1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 126ஆவது பந்தியின் (ix) (ஐ) உபபந்தியின் கீழ் இத்துணைவிதிகளை உருவாக்குவதற்குப் பிரதேச சபைகளுக்கு அதிகாரம் கிடைத்துள்ளது

2. இப்பகுதியின் துணை விதிகள் பிரதேச சபை நியாயாதிக்கப் பிரதேசத்தினுள் பாற்பண்ணைகளை ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணை விதிகளென எடுத்துக்காட்டப்படும்.

3. இத்துணை விதிகள் பிரதேசசபை நியாயாதிக்க பிரதேசத்தினுள் பாற்பண்ணைகள் மற்றும் பால் விற்பனை தொடர்பான துணை விதிகளெனக் கருதப்படுதப்படும்.

4. பாற்பண்ணைகளை கொண்டு நடாத்துதல் மற்றும் பால் விற்பனை செய்தல் போன்ற கருமத்திற்காக விநியோகிக்கப்பட்ட செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரமின்றி எந்தவோர் ஆளினாலும் பிரதேச சபை நியாயாதிக்க பிரதேசத்தினுள் பாற்பண்ணையொன்றைக் கொண்டு நடாத்துதல் அல்லது பால் விற்பனை செய்தல் ஆகாது.

5. இப்பகுதியின் துணைவிதிகளின் கீழ் விநியோகிக்கப்படும் எல்லா அனுமதிப் பத்திரங்களும் இப்பிரிவின் துணைவிதிகளின் ஏற்பாடுகளுக்கமைய முன்கூட்டியே இரத்துச்

செய்யப்பட்டாலன்றி, அது எவ்வருடத்திற்காக விநியோகிக்கப்பட்டதோ அவ்வருடத்தின் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

6. இத்துணை விதியில் காட்டப்பட்டுள்ள நிபந்தனைகள் பூரணப்படுத்தப்பட்டாலன்றி, எந்தவொரு நபருக்கும் பாற்பண்ணையை நடாத்திச் செல்வதற்கு தலைவரினால் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படல் ஆகாது.

அ. பாற்பண்ணையில் மிருகங்கள் தங்க வைக்கப்பட்டிருக்கும் இடம் -

i. ஒரு விலங்கினைத் தங்க வைப்பதற்குக் குறைந்த பட்சம் 03 மீற்றர் வீதம் பாற்பண்ணையிலுள்ள விலங்குகளைத் தங்க வைப்பதற்குப் போதுமான அளவு கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

ii. விலங்குகள் தங்க வைக்கப்பட்டுள்ள கூரை ஏதேனும் திடமான பொருட்களைக் கொண்டு அமைய வேண்டுமென்பதுடன், கூரையின் ஓரம் நில மட்டத்திலிருந்து ஆகக் குறைந்தது 2.14 மிற்றர் உயரம் இருத்தல் வேண்டும்.

iii. விலங்குகள் தங்க வைக்கப்பட்டுள்ள கட்டிடங்களின் சுவர்களின் உயரம் 1.83 மீற்றருக்குக் குறையாது இருத்தல் வேண்டுமென்பதோடு, செங்கற்கள் அல்லது சீமெந்துக் கற்களினால் அல்லது கபூக் கற்களினால் வலுவாக கட்டப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் சீமெந்தினால் பூசப்பட்டு இருத்தல் வேண்டும் என்பதுடன் சுவரின் இரு பக்கங்களும் சாந்து பூசப்பட்டிருத்தல் வேண்டும்.

iv. கட்டிடத்திற்குள் நல்ல காற்றோட்டமும் வெளிச்சமும் கிடைத்தல் வேண்டும்.

v. விலங்குகள் தங்க வைக்கப்பட்டுள்ள கட்டிடம் சுவரின் மேற்பாக எல்லையிலிருந்து கூரை வரை நிர்மாணிக்கப்படும் தூண்கள் பலம் வாய்ந்த மரத்தினாலோ அல்லது இரும்பினாலோ அல்லது கொங்கிறீற்றினாலோ கட்டப்படல் வேண்டுமென்பதோடு, அத்தூண்களின் மேல் எல்லை, நில மட்டத்திலிருந்து ஆகக் குறைந்தது 3 மீற்றர் உயரம் இருத்தல் வேண்டும். அத்துடன் அவை தூய்மையாகவும் வர்ணப்பூச்சு பூசப்பட்டும் வரல் வேண்டும்.

vi. விலங்குகளைத் தங்க வைத்துள்ள கட்டிடத்தின் தரை சீமெந்தினால் அமைதல் வேண்டும்.

vii. விலங்குகளைத் தங்க வைத்துள்ள கட்டிடங்கள் நன்றாகப் பழுதுபார்க்கப்பட்ட நிலையில் இருத்தல் வேண்டும்.

viii. வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டுமென இத்துணை விதியில் பணிக்கப்பட்டுள்ள அனைத்து பாகங்களுக்கும் குறைந்தது வருடத்திற்கு ஒரு தடவை என்ற வகையில் வர்ணப்பூச்சு பூசப்படுதல் வேண்டும்.

ix. பால் கறப்பதற்கு, பாலைச் சேமித்து வைக்கும், பாலை எடுத்துச் செல்வதற்கும் உபயோகிக்கப்படும் கொள்ள்கலன்கள் மெருகிடப்பட்ட களிமண், கல்வனைஸ் பண்ணப்பட்ட இரும்பு அல்லது தகரம், எனாமல் முலாமிடப்பட்ட இரும்பு, மிருதுவாக்கப்பட்ட அலுமினியம், போத்தல், அல்லது போசிலெயின் போன்ற வகை கொள்கலன்களை உபயோகிக்க வேண்டுமென்பதோடு, அவற்றை விலங்குகள் தங்க வைக்கப்பட்டிருக்கும் கட்டிடத்தினுள் களஞ்சியப்படுத்தி வைத்தல் ஆகாது.

x. பாற்பண்ணை மற்றும் அதன் சுற்றாடலில், வடிகான்கள், மரத்தளபாடங்கள், மற்றும் உபகரணங்கள் சுத்தமாகவும் நன்றாகப் பழுதுபார்க்கப்பட்ட நிலையிலும் வைத்திருத்தல் வேண்டும்.

xi. விலங்குகள் தங்க வைத்திருக்கும் கட்டிடத்திலிருந்து ஆகக் குறைந்தது ….. மீற்றருக்கு குறையாத தூரத்தில் நோய்வாய்ப்பட்ட விலங்குகளைத் தங்க வைப்பதற்காக தனிவேறான கட்டிடம் ஒன்று இருத்தல் வேண்டுமென்பதுடன், மிருகங்களைக் தங்க வைக்கும் கட்டிடத்திற்கான தேவைப்பாடுகளைக் கொண்டதாகவே இக்கட்டிடமும் இருத்தல் வேண்டும்.

xii. நோய்வாய்ப்பட்ட விலங்குகள் தங்க வைக்கும் கட்டிடத்திலிருந்து பாய்ந்தோடும் கழிவு நீர் ஏனைய விலங்குகள் தங்க வைக்கப்பட்டிருக்கும் கட்டிடத்தை நோக்கி பாயாதவாறு வடிகான் அமைக்கப்படல் வேண்டும்.

(ஆ) பாற்பண்ணையில் பால் கறக்கும் இடம் மற்றும் பாலை களஞ்சியப்படுத்தி வைக்கும் இடம்-

(i) பால் கறக்கும் இடம் மற்றும் பாலை களஞ்சியப்படுத்தும் இடம் என்பன விலங்குகள் தங்க வைக்கப்பட்டிருக்கும் இடத்திலிருந்து ஆகக் குறைந்தது 7.62 மீற்றருக்கு குறையாத தூரத்தில் அமைதல் வேண்டும்.

(ii) பால் கறக்கும் கட்டிடம் மிகத் தூய்மையாகப் பராமரித்து வரவேண்டும் என்பதுடன், செங்கற்களால், சீமெந்துக் கல்லினால் அல்லது கபூக் கல்லினால் கட்டப்பட்டு இரு பக்கங்களும் சீமெந்தினால் சாந்துப்பூச்சிடப்பட்டிருத்தல் வேண்டும். அச்சுவர்களின் ஆகக் குறைந்தது 2.14 மீற்றர் உயரத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதோடு, சுவரின் மேலோரத்திலிருந்து கூரை வரை கட்டப்படும் தூண்கள் பலம் வாய்ந்த மரத்தினாலோ அல்லது இரும்பினாலோ அல்லது கொங்கிறீற்றினாலோ கட்டப்பட்டு வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டும்.

(iii) பால் கறக்கும் கட்டிடத்தின் தரை சீமெந்தினால் நிர்மாணிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு, தரையும் சுவரும் இணையுமிடங்கள் வட்டவளைவாக அமைதல் வேண்டும். அதே போன்று கட்டிடத்தின் கூரை விளிம்பு நில மட்டத்திலிருந்து குறைந்த பட்சம் 2.14 மீற்றருக்கு மேலாக இருத்தல் வேண்டும்.

(iv) பால் கறக்கும் கட்டிடத்தில் மேசை ஒன்று இருத்தல் வேண்டுமென்பதுடன், அதன் மேற்பாகம் மாபிள் ஓடுகளால் அல்லது இடைவெளிகள் அற்ற துருப்பிடிக்காத உலோகத் தகடுகளால் அல்லது வேறு ஏதேனும் ஊடுருவமுடியாத பொருளால் விரிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(v) பால் கறக்கும் இடத்தில் கழிவுப்பொருள் கொள்கலன் ஒன்று வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(vi) பால் கறக்கும் கட்டிடம், ஏதேனும் மலசலகூடம், கழிவுகளை இடும் கிடங்கு, பசளைக் குவியல் அல்லது பசளைக் கிடங்கு, திறந்த கழிவு வடிகான் போன்றவற்றிலிருந்து குறைந்த பட்சம் 30.5 மீற்றர் தூரத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.

(vii) பால் சேகரிக்கும் பாத்திரங்கள் சுத்தமாக வைத்திருக்கப்பட வேண்டுமென்பதோடு, அவை தினந்தோறும் கிருமி நீக்கம் செய்யப்படுதல் வேண்டும்.

(viii) பால் கறத்தலை இயந்திர பாவனை மூலம் மேற்கொள்வதாயின் அந்த இயந்திரங்கள் தினந்தோறும் கிருமி நீக்கம் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்குத் தேவையான உபகரணங்கள் வழங்கப்பட்டிருத்தலும் வேண்டும்.

இ. பாற்பண்ணைகளைக் கொண்டுநடாத்துவதற்கு அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான பொதுவான தேவைப்பாடுகள் -

(i) விலங்குகளின் சாணம், எஞ்சியுள்ள புல் மற்றும் ஏனைய தீன் வகைகளை அகற்றுவதற்கு தனிவேறான இடமொன்று அமைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன், அந்த இடம் விலங்குகள் தங்கியுள்ள கட்டிடங்கள் மற்றும் பால் அறையிலிருந்து குறைந்தது 30.5 மீற்றர் தூரத்தில் இருத்தல் வேண்டும். அதே போன்று இவ்வாறான இடம் பொது நீர் வழிகள் அல்லது நீரைப் பாவிக்கும் கிணற்றிலிருந்து குறைந்த பட்சம் 12 மீற்றர் தூரத்தில் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(ii) பாற்பண்ணையில் விலங்களுக்குக் குடிப்பதற்கும், மிருகங்களைக் குளிப்பாட்டுவதற்கும், கட்டிடத்தைக் கழுவுவதற்கும் மாசடையாத போதுமான அளவு நீர் வசதி வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(iii) விலங்குகளைக் குளிப்பட்டிய பின்னர் அகற்றும் நீர், மிருகங்கள் தங்க வைக்கப்பட்டுள்ள கட்டிடத்தைக் கழுவிய நீர், சிறுநீர் மற்றும் சாணம் உறிஞ்சியிழுக்கக்கூடிய கிடங்கிற்கு இலகுவில் பாய்ந்து செல்லக்கூடியவாறு சீமெந்தினாலோ அல்லது கொங்கிறீற்றினாலோ வடிகான்கள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

7. (i) ஏதேனும் நோய்த்தொற்று, தொடுகை அல்லது சரும நோயினால் பீடிக்கப்பட்டள்ள அல்லது அத்தகைய நோயினால் அண்மையில் பீடிக்கப்பட்டிருந்த எந்தவோர் ஆளும் அல்லது அத்தகைய நோயினால் பீடிக்கப்பட்டிருந்த ஒருவருக்கு அண்மையில் பணிவிடை செய்வதில் ஈடுபட்டிருந்த எவரேனும் ஆளும் அத்தகைய நோய்த்தொற்று அல்லது நோய்விருத்திக் காலம் நிறைவடைந்திருந்தாலேயொழிய எந்தவொரு அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் எவ்வகைத்துமான கருமங்களில் அல்லது அத்தகைய கருமங்களில் ஈடுபட்டுள்ள ஒருவரின் உதவியாளராகவோ ஈடுபடுதல் அல்லது ஈடுபடுத்தப்படல் அல்லது ஏதேனும் கருமத்தில் ஈடுபட இடமளித்தல் ஆகாது.

(ii) நன்றாக கழுவி சுத்தஞ் செய்யப்பட்ட உடைகளை அணிந்திருந்தாலன்றி எந்தவொரு ஆளினாலும் இத்துணைவிதியின் கீழ் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்ட இடத்தில் எவ்வகையிலும் பணியில் ஈடுபடுவதற்கு அல்லது ஈடுபடுத்த இடமளித்தல் ஆகாது.

(iii) இத்துணைவிதியின் கீழ் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்ட இடத்தில் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சகல ஊழியர்களையும் குறைந்தது வருடத்திற்கு ஒரு தடவை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தல் அனுமதிப் பத்திரம் பெற்றுள்ளவரின் கடமையாகும்.

8. பாற்பண்ணையில் பணியில் ஈடுபடும் சகல ஊழியருக்கும் பாதுகாப்பான முகக்கவசம், கைக் கவசம் மற்றும் தேவைப்படும் வேறு பாதுகாப்பு அணிகள் வழங்கப்படுதலும், அவ்வூழியர் அப்பணியில் ஈடுபட்டுள்ள எல்லாச் சந்தர்ப்பத்திலும் பாதுகாப்பு அணிகள் அணிந்திருப்பதை உறுதி செய்து கொள்ளலும், பால் கறக்கும் பணியில் ஈடுபட முன்னர் ஊழியர்கள் தமது உடலை நன்றாக கழுவி சுத்தம் செய்துள்ளனர் என்று அனுமதிப்பத்திரம் பெறுநர் உறுதி செய்து கொள்ளல் வேண்டும்.

9. விலங்குகள் தங்கவைத்துள்ள இடத்தில் சேரும் சாணம் மற்றும் எஞ்சியுள்ள புல் போன்றவற்றை குறைந்த பட்சம் நாளொன்றுக்கு ஒரு தடவையேனும் அகற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அந்த இடங்கள் தினந்தோறும் நீரினால் கழுவிச் சுத்திகரிக்கப்படல் வேண்டும்.

10. விலங்குகள் தங்க வைக்கப்பட்டிருக்கும் கட்டிடங்கள் மற்றும் கறக்கும் அறையின் தரை மேசை ஆகியவை குறைந்தது தினந்தோறும் ஒரு தடவை வீதம் கழுவுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

11. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் பாவிக்கப்படும் எல்லா பாத்திரங்களும் பால் கறத்தல் இயந்திரம் மூலம் மேற்கொள்ளப்படுவதாயின் அந்த உபகரணங்களும் குறைந்தது நாளொன்றுக்கு ஒரு தடவை வீதம் கிருமி நீக்கம் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், ஏனைய வேறு பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பனவற்றை தினந்தோறும் சுத்தம் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் அனுமதிப்பத்திரதாரரின் பணியாகும்.

12. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் பாவிக்கப்படும் பாத்திரங்கள், அவற்றுக்குரிய கருமங்களைத் தவிர்ந்த வேறு கருமங்களுக்கு உபயோகிக்காதிருப்பதற்கு அனுமதிப்பத்திரதாரர் பொறுப்புடையவராயிருத்தல் வேண்டும்.

13. பால் கறத்தலை ஆரம்பிப்பதற்கு முன்னர்-

(i) எந்தவொரு கறவைப் பசுவினதும் மடிகளைச் சுத்தமான நீரினால் கழுவியிருந்தால்,

(ii) பால் கறப்பவர் சவர்க்காரம் அல்லது சவாக்காரத் திரவத்தினால் கைகள் இரண்டையும் கழுவியிருந்தால்,

(iii) இயந்திரங்கள் மூலம் பால் கறப்பதாயின் அந்த உபகரணங்கள் யாவும் கிருமி நீக்கம் செய்யப்பட்டிருந்தால்,

அன்றி பால் கறப்பதற்கு இடமளித்தல் ஆகாது.

14. பாற்பண்ணையில் வளர்க்கப்படும் எல்லா விலங்குகளும் குறைந்தது வருடத்திற்கு மூன்று தடவைகள் ஒரு மிருக வைத்தியரால் அல்லது அவரால் பெயர் குறிக்கப்பட்ட எவரேனும் பிரதிநிதியின் மேற்பார்வைக்கு உட்படுத்தி அவசியமான வைத்திய ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளவும் அத்தகைய ஆலோசனைகளுக்கு அமைய செயற்படல் அனுமதிப்பத்திரம் பெறுநரின் கடமையாகும்.

15. பாற்பண்ணையில் எந்தவொரு விலங்கிற்கும் ஏதேனும் நோய் பீடிக்கப்பட்டுள்ளதென அறிந்த உடனேயே அந்த விலங்கை விலங்குகள் தங்க வைக்கப்பட்டுள்ள கட்டிடத்திலிருந்து அகற்றி நோயுற்ற விலங்குகள் தங்கவைக்கும் கட்டிடத்தில் தங்கவைத்து அது சம்பந்தமாக மிருக வைத்தியருக்கு அறிவிக்க வேண்டிய பொறுப்பு அனுமதிப்பத்திரம் பெறுநரின் கடமையாகும்.

16. பால் மடியில் அல்லது வேறு இடத்தில் உண்டாகும் காச நோய், பால் மடி, குளப்பு மற்றும் வாய் சார்ந்த நோய்கள், அன்திரெக்ஸ் நோய் அல்லது பால் மடியில் அன்ரினொமைகோஸிஸ் நோயினால் பீடிக்கப்பட்ட அல்லது புருசெல்லோசிஸ் நோயினால் பீடிக்கப்பட்டுள்ளதென மிருக வைத்தியரால் தீர்மானிக்கப்பட்ட எந்தவொரு மிருகத்தினதும் பாலை விற்பதற்கு அல்லது விற்பதற்கு இடமளித்தல் அல்லது மனித பாவனைக்காக உள்ள வேறு ஏதேனும் விலங்குகளின் பாலில் கலத்தலோ அல்லது அவ்வாறு செய்வதற்கு இடமளித்தலோ எந்தவோர் ஆளினாலும் மேற்கொள்ளப்படல் ஆகாது.

17. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் பாவணைக்குரிய புல் மற்றும் வைக்கோல் தவிர்ந்த ஏனைய மிருக உணவுகளை எலிகள் புகாதவாறு பொருத்தமான பாத்திரங்களில் வைத்தல் வேண்டும்.

18. பாலைக் களஞ்சியப்படுத்தி வைத்தல் மற்றும் தயாரித்தல் கருமங்கள் தவிர்ந்த வேறு எந்தவொரு கருமத்திற்கும் பால் அறையை உபயோகித்தல் அல்லது உபயோகிக்க இடமளித்தல் ஆகாது.

19. எந்தவோர் ஆளினாலும் நீர் அல்லது புறப்பொருள் அல்லது பொருட்களைக் கலந்து பாலின் தரத்தைக் குறைத்தல் ஆகாது.

20. (i) அனுமதிப் பத்திரம் பெற்ற இடத்தில் பிறப்பிக்கப்படுகின்ற சகல விதமான கழிவுப் பொருட்களும் மீண்டும் பாவனைக்கு எடுக்கப்படுமாயின் அன்றி, அக்கழிவுப் பொருட்கள்-

(அ)உயிர்ச் சிதைவுக் கழிவுப் பொருட்கள்,
(ஆ) கண்ணாடிப் பொருட்கள்,
(இ) கடதாசியும் கடதாசி சார்ந்த பொருட்களும்,
(ஈ) பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் அல்லது பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் சார்ந்த பொருட்கள்,
(உ) இரும்பு மற்றும் ஏனைய உலோகப் பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் ஏனைய உலோகப் பாகங்கள்,
(ஊ)உற்பத்திக்காக உபயோகிக்கப்படும் ஏனைய மூலப் பொருட்களிலிருந்து எஞ்சும் பாகங்கள் அல்லது உற்பத்தியின் போது கிடைக்கின்ற துணை உற்பத்திப் பொருட்கள் அல்லது பாகங்கள்,
(எ) ஊறுவிளைவிக்கக்கூடிய கழிவுப் பொருட்கள்,

என்றவாறு வகைப்படுத்த முடியுமென்பதுடன், அத்தகைய ஒவ்வொரு வகையான கழிவுப் பொருட்களைச் இடுவதற்குள்ள தனித்தனியான பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில்சேர்த்தல் அனுமதிப்பத்திரம் பெற்றுள்ளவரின் பொறுப்பாகும்.

(ii). (i) ம் பிரிவில் கூறியவாறு வகைப்படுத்தப்பட்ட பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில் போடப்பட்ட கழிவுப் பொருட்கள் பிரதேச சபை கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ வேலைத்திட்டத்தின் கீழ் அப்புறப்படுத்தவதாயினன்றி தலைவரினால் கட்டளையிடப்பட்டவாறு இறுதியான அப்புறப்படுத்துகை இடம்பெறல் வேண்டும்.

(iii). (ii)ம் பந்தியில் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருப்பினும் (i) பந்தியில் (அ) உபபிரிவில் கூறப்பட்டுள்ள உயிர்ச் சிதைவு கழிவுப் பொருட்களாகக் கொள்ளப்படுகின்ற விலங்குகளின் சாணம் மற்றும் எஞ்சிய புற்களின் பாகங்களை பசளையாக உபயோகிப்பதற்கு அத்தகைய பணிப்பு தடையாக அமைதல் ஆகாது. எனினும், அத்தகைய கழிவுப் பொருட்களை பாற்பண்ணையிலிருந்து வெளியே எடுத்துச் செல்வதாயின் மூடி எடுத்துச் செல்வதாயினன்றி பாற்பண்ணை அமைந்துள்ள வளவுக்கு வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது.

21. கறக்கப்பட்ட பால் சேமித்து வைப்பதற்கு அதற்காகவே ஒதுக்கப்பட்ட வேறான அறையொன்று இருத்தல் வேண்டுமென்பதோடு அந்த அறை காற்றோட்டமுள்ளதும் இலையான்கள் அல்லது பிற பூச்சிகள், வண்டுகள் மற்றும் எலிகள் புகாதவாறு பாதுகாப்புடன் கூடியதாக இருத்தல் வேண்டும்.

22. இப்பிரிவின் துணைவிதிக்கமைய அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட எந்தவொரு இடத்திலும், எந்தவோர் ஆளும் நித்திரை செய்தல் ஆகாதென்பதோடு, பாற்பண்ணைச் செயற்பாடுகளுக்காக உபயோகிக்கப்படும் உபகரணங்கள் அல்லது பொருட்கள் தவிர்ந்த வேறு எந்தவிதமான பொருட்களையும் வைத்தல் அல்லது களஞ்சியப்படுத்ததல் ஆகாது. எனினும் பாற்பண்ணையில் சேவையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு வேறாக ஒதுக்கப்பட்டுள்ள ஓய்வெடுக்கும் அறை அல்லது சாப்பாட்டறை இதில் உள்ளடங்காது.

23. பாற்பண்ணையில் சேவையில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் பொருட்டு குறைந்தது பத்துப்பேருக்கு ஒன்றென்ற வகையில் மலசலகூடங்கள் இருத்தல் வேண்டுமென்பதுடன், பெண்கள் மற்றும் ஆண்களுக்கென வெவ்வேறாக மலசலகூடங்கள் இருத்தல் வேண்டும், அத்துடன் மலசலகூடங்கள் பாற்பண்ணையில் விலங்குகள் தங்கவைக்கப்பட்டிருக்கும் கட்டிடங்கள், பால் கறக்கும் இடங்கள் மற்றும் பாலைச் சேகரித்து வைக்கும் அறைகளிலிருந்து குறைந்தது 15 மீற்றர் தூரத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.

24. பாற்பண்ணையின் செயற்பாடுகளுக்காக பாவிக்கப்படும் நீர், நிலத்துக்கடியிலுள்ள நீர்த் தொட்டியில் களஞ்சியப்படுத்துவதாயின் அவ்விடத்திலிருந்து 15 மீற்றருக்குக் குறைந்த தூரத்தில் குப்பைக் கிடங்கு, பசளைக் கிடங்கு அல்லது சாம்பல் கிடங்கு இருத்தல் ஆகாது.

25. பாற்பண்ணையில் சேவையில் ஈடுபட்டுள்ள அனைத்து ஊழியர்களுக்கும் சுத்தமான நீர், சுத்தமான துவாய், நகங்களைச் சுத்தப்படுத்தும் தூரிகைகள் மற்றும் சவர்க்காரம் அல்லது சவர்க்காரத் திரவம் போன்றவை வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

26. ஏதேனும் பாற்பண்ணையில் பெறப்பட்ட பாலை தூசி அல்லது வேறு கழிவுப் பொருட்கள் உட்புகாதவாறு நன்றாக மூடப்பட்ட பாத்திரங்களிலன்றி அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்திலிருந்து வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது.

27. எந்தவொரு பாற்பண்ணை உரிமையாளரும் தனது பெயரையும் ''அனுமதிப்பத்திரமுடைய பாற்பண்ணை'' என்ற வாசகத்தையும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தெளிவாக எழுதப்பட்டுள்ள அறிவித்தல் பலகையினை பாற்பண்ணை கொண்டுநடாத்தப்படும் இடத்திற்கு வெளியே தெரியக்கூடியவாறு பொருத்திவைத்திருத்தல் வேண்டும்.

28. பாற்பண்ணை அனுமதிப்பத்திரம் உடையவரால் இப்பிரிவின் துணை விதிகளின் பிரதி மற்றும் பணிப்புகளுக்குரிய பாற்பண்ணையினை பரிசீலிப்பதற்கு உகந்தவாறு வைத்திருத்தல் வேண்டுமென்பதுடன், பாற்பண்ணையில் பணிபுரியும் சகல ஊழியர்களினதும் பெயர்களும் விலாசமும் அடங்கிய பட்டியலினை தலைவருக்கு அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தருக்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பரிசோதனை மேற்கொள்ளக்கூடியவாறு பாற்பண்ணையில் வைத்திருத்தல் வேண்டும்.

**வெளியிலிருந்து வாங்கப்படும் பாலினை விற்றல்**

29. பிரதேச சபை நியாயாதிக்க பிரதேசத்தினுள் வெளியிலிருந்து வாங்கப்படும் பாலினை விற்பதற்கு எண்ணுகின்ற நபரொருவர் பிரதேச சபையின் தலைவரிடம் 4 ம் பந்தியில் உள்ளவாறு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

30. தலைவரினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் உடையவராலன்றி, வேறு எவராலும் நகரசபை நியாயாதிக்க பிரதேசத்தினுள் எந்தவோர் இடத்திலும் வெளியிலிருந்து வாங்கப்படும் பாலினை விற்பதற்கு முற்றாக தடை விதிக்கப்பட்டள்ளது.

31. பாலினை பெற்றுக்கொள்ளும் பாற்பண்ணை அமைந்துள்ள மாகாண உள்ளூராட்சி நிறுவனத்தின் தலைவர் அல்லது நகர முதல்வரினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் அல்லது குறித்த நியாயாதிக்க பிரதேசத்தின் மிருக வைத்தியரினால் வழங்கப்பட்ட சான்றிதழையுடைய பாற்பண்ணையிடமல்லாது, வெளியிலிருந்து வாங்கப்படும் பாலினை விற்பதற்கு 29வது துணைவிதியின் கீழ் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு எவருக்கும் உரிமைகள் இருத்தல் ஆகாது.

32. செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரத்தின் கீழ் நகரசபை நியாயாதிக்க பிரதேசத்தினுள் பால் விற்பனை செய்வதற்கு அதிகாரம் பெற்றுள்ள நபரினால் தனது பாலினை விற்கும் ஊழியர்கள் அல்லது பிரதிநிதிகளை பிரதேச சபையில் பதிவு செய்து பதிவுச் சான்றிதழ் பெறப்பட்டிருத்தல் வேண்டும்.

33. அப்பதிவு சான்றிதழில் பின்வரும் விபரங்கள் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்-

    a. சேவை வழங்குனரின் பெயரும் பதிவு இலக்கமும், மற்றும்
    b. ஊழியர்கள் அல்லது பிரதிநிதிகளின் பெயர் மற்றும் கையொப்பம் அல்லது பெருவிரல் அடையாளம்.

34. நகரசபை நியாயாதிக்க பிரதேசத்தினுள் பால் விற்பனை செய்வதற்கு பொறுப்பாயுள்ள பிரதிநிதி அல்லது விற்பனைக்காக கொண்டு செல்கின்ற அல்லது ஒவ்வோர் இடமாகச் சென்று வியாபாரம் செய்பவர் குறித்த நகர சபைத் தலைவரினால் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரால் கேட்கப்படும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அப்பதிவுச் சான்றிதழை சமர்ப்பிக்க கூடியவாறு தம்வசம் வைத்திருக்க வேண்டிய கடப்பாட்டில் உள்ளார்.

35. தலைவரினால் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரால் ஏதேனும் பாற்பண்ணையில் பாலை அல்லது விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள ஏதேனும் மாதிரியொன்றை, அதற்கான விலை கொடுத்து பெற்றுக்கொள்ளல் சட்டரீதியானதாக அமையுமென்பதோடு, எந்தவோர் அனுமதிப்பத்திரம் பெறுநராலும் அத்தகைய கொள்வனவு செய்வதை நிராகரித்தல் அல்லது தடை செய்தல் ஆகாது.

36. இத்துணைவிதியின் கீழ் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள ஏதேனும் பாற்பண்ணை நடாத்தப்படும் இடம் 6 வது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு பணிப்பிற்கும் அமைய நிலவுதல் முடிவுறுமாயின் அல்லது இப்பிரிவின் துணை விதிகளில் வேறு ஏதேனும் துணைவிதியின் பணிப்புக்களுடன் முரண்பாடு எழும் சந்தர்ப்பத்தில் திட்டவட்டமாக குறிப்பிட்ட தினத்திற்கு முன்னர் அந்த இடத்தை அந்த பணிப்பிற்கு அமைவான நிலைக்கு கொண்டுவருவதற்கு தேவையான சகலவற்றையும் மேற்கொள்ளுமாறு அனுமதிப்பத்திரம் பெறுநருக்கு கட்டளையிடும் அறிவித்தலொன்றை தலைவர் அந்த அனுமதிப்பத்திரம் பெறுநருக்கு வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அவ்வாறான அறிவித்தலை பாற்பண்ணை நடாத்தப்படும் இடத்தில் ஒட்டி வைத்திருந்தாலும் அல்லது அனுமதிப்பத்திரம் பெறுநருடைய இடத்தில் பணியாற்றும் ஊழியருக்கு ஒப்படைத்திருந்தாலும் அது அனுமதிப்பத்திரம் பெறுநருக்கு முறையாக ஒப்படைக்கப்பட்டுள்ளதெனக் கருதப்படும்.

37. 36 வது துணைவிதியில் குறிப்பிட்டவாறான அறிவித்தலொன்றைப் பெற்றுக்கொண்ட எவரேனும் அனுமதிப்பத்திரம் பெறுநரால் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினத்திற்கு முன்னர் அவ்வறிவித்தலில் பணிக்கப்பட்டள்ளவாறு செயற்பட வேண்டும். ஏற்றுக்கொள்ளக்கூடியவாறு விடயங்களை எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனும் சந்தர்ப்பத்தில் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினத்தை நீடிப்பதற்கான தத்துவம் தலைவருக்கு இருத்தல் வேண்டும். எப்படியாயினும் அவ்வாறு நீடிக்கப்படும் காலம் பதின்நான்கு நாட்களை விஞ்சாததாக இருத்தல் வேண்டும்.

38. 36 வது துணைவிதியில் குறிப்பிட்டவாறு அறிவித்தலொன்றைப் பெற்றுக்கொண்ட எவரேனும் அனுமதிப்பத்திரம் பெறுநரால் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினம் அல்லது நீடிக்கப்பட்ட தினத்திற்கு முன்னர் அவ்வறிவித்தலில் பணிக்கப்பட்டுள்ளவாறு செயற்படுவதை தவறவிட்டுள்ள சந்தர்ப்பத்தில், அவ்விடத்திற்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் தலைவரினால் இரத்துச்செய்யப்படுதல் சட்டமுறையானதாதல் வேண்டும்.

39. இத்துணைவிதியின் கீழ் குறிப்பிடப்பட்டள்ள பந்திகளில் கூறப்பட்டுள்ள கருமங்களை பரிசோதனை செய்வதற்கு தலைவருக்கு அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தருக்கு அதிகாரம் இருப்பதுடன், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எந்தவொரு பாற்பண்ணைக்குள்ளும் சென்று பரிசோதனை மேற்கொள்ள அவருக்கு இயலும். இங்கு ‘‘எந்தவொரு சந்தர்ப்பத்திலும்’’ என்பது அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற எந்தவொரு நேரத்திலும் என பொருள்படும்.

40. அனுமதிப்பத்திரம் பெறுநர் தனது பாற்பண்ணையினை பரிசோதனை செய்ய வரும் தலைவருக்கு அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தருக்கு எவ்வேளையிலும் ஒத்துழைப்பு வழங்க கடப்பாடுடையவர்.

41. இத்துணைவிதிகளில் எந்தவொரு பந்தியும் மீறப்படுகின்றவகையில் செயற்படுதல் அல்லது இத்துணைவிதிகளின் கீழ் தலைவரால் செய்யப்படுகின்ற கட்டளைகளுக்கு அமையாது செயற்படுதல் என்பன, இத்துணைவிதிகளின் கீழ் குற்றமாவதுடன், அவ்வாறு குற்றமிழைத்த அனைத்து நபர்களும் அக்குற்றம் தொடர்பாக உரிய அதிகாரத்தினைக் கொண்ட நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டதன் பின்னர் 1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122ஆம் பந்தியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தண்டணைக்கு உட்படுதல் வேண்டும்.

42. பதங்கள் சம்பந்தமாக வேறு பொருள்கோடல் அவசியப்பட்டாலேயொழிய இப்பகுதிக்கான துணைவிதிகளில்-

‘‘தலைவர்’’என்பது,பிரதேச சபையின் தலைவர் என்பதையும்,

‘‘பாற்பண்ணை’’ என்பது, பாலைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் பாலை விற்பனை செய்தல் போன்ற முக்கிய கருமங்களை மேற்கொள்வதற்காக ஒரே இன விலங்குகள் அல்லது பல்லின விலங்குகளைத் தங்க வைக்கும் கட்டிடங்களும் அதன் சுற்றாடலும் என கருதப்படுவதோடு, அந்த விலங்குகளையும்,

‘‘எந்தவொரு சந்தர்ப்பத்திலும்’’ என்பது, அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எந்த நேரத்தையும்,

‘‘அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்’’ என்பது, தலைவரினால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள சபையின் உத்தியோகத்தரையும்,

‘‘மிருக வைத்தியர்’’ என்பது, தொடர்புடைய நியாயாதிக்க பிரதேசத்தினுள் உள்ள அரச மிருக வைத்தியரையும்,

‘‘விலங்கு’’என்பது,பசு மாடு, எருமை மாடு, செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடு போன்ற இனங்களைச் சேர்ந்த விலங்குளையும்,
குறிக்கும்.

## XVIII. தங்குமிடங்கள் பற்றிய துணை விதிகள்

1. 1987 ஆம் இலக்க 15 வது பிரதேச சபை சட்டத்தின் 122 வது பந்தியுடன் வாசிக்க வேண்டிய குறித்த சட்டத்தின் 126 வது பந்தியின் (ix) (உ) உப பந்தியின் கீழ் இத்துணைவிதிகளை ஆக்குவதற்கு பிரதேச சபைக்கு அதிகாரம் கிடைத்துள்ளது.

2. பிரதேச சபையின் நியாயாதிக்க பிரதேசத்திற்குள் அமைந்துள்ள கட்டணம் அறவிட்டு வாடகைக்கு விடப்படும் வீடுகள், கட்டிடங்கள் மற்றும் தங்குமிட விடுதிகளில் வசிப்பதனை ஒழுங்குமுறைப்படுத்தல் மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணை விதிகளென இது எடுத்துக்காட்டப்படும்.

3. இத்துணைவிதிகள் தங்குமிடங்கள் தொடர்பான துணைவிதிகளாகக் கருதப்படும்.

4. பிரதேச சபையின் நியாயாதிக்க பிரதேசத்திற்குள் எந்தவொரு கட்டிடத்திலும் வசிப்பவர்களின் எண்ணிக்கையினை வரையறுக்கும் அதிகாரம் பிரதேச சபையின் தலைவருக்கே உண்டு.

5. தலைவரினால் மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளை விதிக்கும்போது அக்கட்டிடத்தின் -

(அ) சதுர அடி,
(ஆ) கட்டிடத்தின் உயரம்,
(இ) கட்டிடத்திற்கு காற்றோட்டம் கிடைக்கின்ற பாதை,
(ஈ) கட்டிடத்திற்கு வெளிச்சம் கிடைக்கின்ற பாதை,
(உ) கட்டிடத்திற்கு உள்ளே மற்றும் வெளியே வசிப்பதற்கு தகுந்த சூழல் இருத்தல்,
(ஊ) வழங்கப்பட்டுள்ள நீர் வசதிகள், மற்றும்
(எ) வழங்கப்பட்டுள்ள கழிப்பறை வசதிகளின் அளவு,

தொடர்பாக கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

6. கட்டிடத்தில் வசிக்கக்கூடிய எண்ணிக்கைக்கு மேலதிகமாக அக்கட்டிடத்தில் வசிப்பதாக ஏற்றுக்கொள்ளக்கூடிய தகவல்கள் தலைவருக்கு முன்வைக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில், கட்டிடத்தில் வசிக்கும் மேலதிக நபர்களை கட்டிடத்திலிருந்து வெளியேறச் செய்வதற்கு தலைவர் கட்டளையிடுதல் சட்டமுறையானதாகும்.

7. மேற்குறிப்பிட்ட 6 வது பந்தியின் பணிப்புக்களின் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கட்டிடத்தில் வசிப்போர்களது எண்ணிக்கை தலைவரினால் குறிக்கப்பட்ட எண்ணிக்கையிலும் அதிகமாக காணப்படும் சந்தர்ப்பத்தில், அக்கட்டிட உரிமையாளர் குற்றதிற்கு குற்றவாளியாகக் கருதப்படுவார்.

8. வசிப்பதற்குள்ள கட்டிடம், அங்கு வசிப்போரின் சுகாதாரத்திற்கு கேடு விளைவிக்கக் கூடியவாறான அளவுக்கதிகமான நபர்களைக் கொண்டிருக்கும் குற்றத்திற்கு குற்றவாளியாகக் காணப்பட்ட பின்னரும் இன்னும் அக்குற்றத்தினைச் செய்கிறார் என தலைவருக்கு அறியக்கிடைத்தால் தலைவரால் அல்லது அவரது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரினால் நீதவான் நீதிமன்றத்திற்கு முன்வைக்கப்படுகின்ற விடய அறிக்கையின் அடிப்படையில் நீதிபதியால் முடிவுறுத்தல் கட்டளையொன்றை வழங்க முடியும்.

9. ஏதாவது கட்டிடத்தின் குத்தகை பெறுநர் அதனை கீழ்க் குத்தகைக்கு வழங்கியிருந்தால் அங்கு தங்கியுள்ளவர்கள், வாடகை வீட்டுக்காரர்கள் அல்லது வசிப்போரின் பொருட்டு அக்குத்தகை பெறுநர் மேற்குறித்த 8 வது பந்தியின் விடயத்திற்கான கட்டிட உரிமையாளராக கருதப்பட முடியும்.

10. இத்துணை விதிகளின் கீழான கட்டளைகளுக்கு இணங்க உரிமையாளரால் அல்லது குத்தகை பெறுநரால் அங்கிருந்து வெளியேறுமாறு பணிக்கப்பட்டிருந்தால், தங்கியிருப்போர் அல்லது வசிப்போர் அக்கட்டிடத்திலிருந்து வெளியேறுதல் வேண்டும்.

11. எந்தவொரு காரணத்தினாலும் இத்துணை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள பிழைகளை புரிந்த ஒவ்வொரு நபரும் 1987 ஆம் இலக்க 15 வது பிரதேச சபை சட்டத்தின் 122 வது பந்தியின் பிரகாரம் குறித்த தண்டனைக்கு உள்ளாதல் வேண்டும்.

12. பதங்கள் சம்பந்தமாக வேறு பொருள் கோடல் அவசியப்பட்டாலேயொழிய இப்பகுதிக்கான துணைவிதிகளில் -

"தலைவர்" என்பது குறித்த காலத்தில் பிரதேச சபையில் தலைவர் பதவியை வகிக்கும் நபரையும்,

"கட்டிடம்" என்பது வாடகையின் கீழ் தங்குமிடவசதி வழங்குகின்ற, வீடு, கட்டிடங்கள் என்பனவற்றையும்,

"அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்" என்பது, தலைவரினால் எழுத்து மூலமாக குறித்த கருமத்திற்காக அதிகாரம் கையளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தரையும்

குறிக்கும்.

## XIX. நூலகங்கள் தொடர்பான துணைவிதிகள்

1. 1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 126ஆவது பந்தியின் (xiv) உப பந்தியின் கீழ் இத்துணைவிதிகளை உருவாக்குவதற்குப் பிரதேச சபைகளுக்கு அதிகாரம் கிடைத்துள்ளது.

2. பிரதேச சபை நியாயாதிக்கப் பிரதேசத்தினுள் நூலக சேவைகளை வழங்குவதற்காக பிரதேச சபையினால் இத்துணைவிதிகளானது விதிக்கப்படுகின்றது.

3. இத்துணைவிதிகளானது நூலகங்கள் தொடர்பான துணைவிதிகள் என அழைக்கப்படும்.

4. பிரதேச சபைகளால் பராமரிக்கப்படுகின்ற நூலகங்கள் கீழே காட்டப்பட்டுள்ள பிரிவுகளைக் கொண்டிருக்கும்.
   (1) இரவல் வழங்கும் பிரிவு;
   (2) உசாவுகைப் பிரிவு;
   (3) வாசிக்கும் மண்டபம் ;
   (4) சிறுவர் பிரிவு; மற்றும்
   (5) இலத்திரனியல் பிரிவு;

5. **நூலகம்** -
   (1) மேற்பார்வை மற்றும் நிருவாக நடவடிக்கைகள் என்பன நூலக கமிட்டிக்கு வழங்கப்படுவதுடன், அக்கமிட்டியானது கீழே காட்டப்பட்டுள்ள நபர்களைக் கொண்டிருக்கும்.
   (அ) பிரதேச சபையின் தலைவர்.
   (ஆ)சபையினால் தீர்மானிக்கப்படுகின்றவாறான இரண்டு உறுப்பினர்களுக்கு மேற்படாத உறுப்பினர்களது எண்ணிக்கை.
   (இ) சபைக் கூட்டத்தின் போது சபையினால் பெயரிடப்படுகின்ற, நியாயாதிக்கப் பிரதேசத்தினுள் வசிக்கின்ற புத்திஜீவிகள் இருவர்.
   (ஈ) உரிய நூலகத்தின் வாசகர் சங்கத்தின் தலைவர் மற்றும்
   (உ) உரிய நூலகத்தின் நூலகர்.

   (2) பிரதேச சபையின் தலைவர் நூலக கமிட்டியின் தலைவராவார்.

   (3) நூலகத்திற்குப் பொறுப்பாக இருப்பதற்காக உரிய நியமன அதிகாரியினால் நூலகர் ஒருவர் நியமிக்கப்படமுடியும் என்பதுடன் நூலகத்தை ஒழுங்குமுறையில் பேணுவதற்காக நூலகத்தினது சொத்துக்கள் தொடர்பில் நூலகரும் அவரது ஆளணியினரும் பொறுப்பாளர்கள் ஆவர்.

6. தலைவர் நூலகக் கமிட்டியின் தலைமைப் பொறுப்பைத் தாங்க வேண்டியதுடன், ஏதேனும் கூட்டமொன்றிற்குத் தலைவர் வராத சந்தரப்பங்களில், சமூகமளித்துள்ள கமிட்டியின் அங்கத்தவர்களுள் தெரிவு செய்யப்படுகின்ற அங்கத்தவர் ஒருவர் அக்கூட்டத்திற்குத் தலைமை தாங்குதல் வேண்டும். எந்தவொரு கூட்டத்திலும் தலைமை தாங்கும் நபருக்கு ஒரு அடிப்படை வாக்கும், ஏதேனுமொரு பிரச்சினை தொடர்பில் ஆளுங்கட்சியினதும் எதிர்க்கட்சியினதும் வாக்குகளின் எண்ணிக்கை சமமாகக் காணப்படும் சந்தர்ப்பத்தில் தீர்மானிக்கும் வாக்கு ஒன்றும் உள்ளது.

7. இக்கமிட்டியின் ஆகக்குறைந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை மூன்றாகக் காணப்படவேண்டியதுடன் அவ்வெண்ணிக்கை பூரணப்படுத்தப்பட்டிருந்தால் அன்றி கமிட்டியின் எந்தவொரு கூட்டத்திலும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படல் ஆகாது.

**இரவல் வழங்கும் பிரிவு**

8. எவரேனும் ஒரு நபர் -

(1) 12 வயதிற்குக் குறைந்த நூலக அங்கத்தவராக இருந்தால் சிறுவர் வாசகர் எனவும், 12 வயதிற்கு மேற்பட்ட நூலக அங்கத்தவரெனின் வளர்ந்தோர் வாசகர் எனவும் கவனத்திற் கொள்ளப்படுவார்.

(2) (அ) பிரதேச சபை நியாயாதிக்கப் பிரதேசத்தினுள் வசிப்பவர்களாயின் அல்லது நியாயாதிக்கப் பிரதேசத்திலுள்ள நிறுவனமொன்றில், அலுவலகத்தில், பாடசாலையில், வர்த்தகமொன்றில் அல்லது பொதுமக்கள் அமைப்புக்களில் அங்கத்தவர்களாக இருந்தால், மற்றும்

(ஆ) பிரதேச சபையினால் தீர்மானிக்கப்பட்டு, விதிக்கப்பட்ட நூலக அங்கத்துவக் கட்டணத்தைச் செலுத்தி அங்கத்தவராக ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தால் அன்றி எந்தவொரு நபரும் நூலகத்தின் இரவல் வழங்கும் பிரிவிற்கான அனுமதியைக் பெற்றுக் கொண்டுள்ள ஒரு நபராகக் கணிக்கப்படல் ஆகாது.

(3) எந்தவொரு நபரும் இரவல் வழங்கும் பிரிவின் அங்கத்தவராக இணைவதற்கு எதிர்பார்த்தால் நூலகரிடமிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய நூலகக் கமிட்டியினால் அனுமதிக்கப்பட்ட விண்ணப்பப்படிவமொன்றின் கீழ் விண்ணப்பித்தல் வேண்டும்.

(4) நூலக அங்கத்துவத்திற்காக விண்ணப்பிக்கின்ற விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்டுள்ள தேவைப்பாடுகளை அதேவாறு பூரணப்படுத்தி, நூலக அங்கத்துவத்திற்காக செலுத்தப்படவேண்டிய கட்டணமாக பிரதேச சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ள உரிய கட்டணத்தைச் செலுத்திய ஒரு நபராக இல்லாதவிடத்து அங்கத்துவத்தை வழங்குதல் கூடாது.

9. நூலக அங்கத்தவராக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள ஒவ்வொரு நபருக்கும் நூலகரால் அடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய அட்டையொன்றை வழங்கவேுண்டியதுடன்,

அவ்வட்டையின் கீழ் குறிப்பிட்டுக் கூறப்பட்ட அளவிற்கு இரவல் வழங்கும் பிரிவிலிருந்து புத்தகங்களைப் பெற்றுக் கொள்வதற்கு அவருக்கு முடியும்.

10. நூலக அங்கத்தவருக்கு வழங்கப்பட்ட அட்டையின் கீழ் அங்கத்தவர் ஒருவரால் பெற்றுக் கொள்ளப்படுகின்ற எல்லாப் புத்தகங்கள் தொடர்பிலும் அவ்வங்கத்தவர் தனிப்பட்ட ரீதியில் பொறுப்புடையவராவார்.

11. நூலகத்தின் இரவல் வழங்கும் பிரிவின் அங்கத்தவரொருவருக்கு மேலே 8ஆம் பந்தியின் கீழ் வழங்கப்பட்டுள்ள அங்கத்துவ அட்டையானது அவரிடமிருந்து தொலைந்து போயுள்ள ஒரு சந்தர்ப்பத்தில் அது தொடர்பாக அவ்வங்கத்தவர் நூலகருக்கு அறிவித்தல் வேண்டும். அவ்வட்டைக்கு இரவல் வழங்கும் பிரிவிலிருந்து புத்தகங்கள் வழங்கப்படவில்லை என நூலகர் திருப்தியடையும் சந்தர்ப்பத்தில், புதிய அட்டையொன்றை வழங்க முடியும். அட்டை தொலைந்துள்ளதாக அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து ஆகக்குறைந்தது 30 நாட்கள் கடந்திருந்தால் அன்றி நூலகரால் புதிய அட்டையொன்று வழங்கப்படுதல் கூடாது.

12. இரவல் வழங்கும் பிரிவின் அங்கத்தவரொருவரால் பெற்றுக் கொள்ளப்பட்ட புத்தகமொன்று அது பெற்றுக் கொள்ளப்பட்ட திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் நூலகருக்கு மீண்டும் ஒப்படைக்கப்படுதல் வேண்டும். அவ்வாறான ஏதெனுமொரு புத்தகத்தை பிறிதொரு நபர் கோராவிட்டால் அல்லது அதனைப் பெற்றுக் கொண்ட நபர் அப்புத்தகத்தை மீள ஒப்படைப்பதற்காக மேலதிக காலமொன்றைக் கோரும் சந்தர்ப்பத்தில் நூலகரால் அதற்காக மேலதிகமான 14 நாட்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்க முடியும்.

13. இரவல் வழங்கும் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட ஏதேனுமொரு புத்தகமானது உரிய காலப்பகுதியில் அல்லது மேலதிகமாகப் பெற்றுக் கொண்ட காலமுடிவின் போது ஒப்படைக்காது இருந்தால், அவ்வாறான சந்தர்ப்பங்களில் அப்புத்தகத்தை மீண்டும் ஒப்படைக்கும் வரையான காலப்பகுதிக்கு, சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ள விதத்தில் தண்டப்பணமொன்றை அறவிடுதல் சட்டரீதியானதாகும்.

14. இரவல் வழங்கும் பிரிவிலிருந்து தம்மால் பெற்றுக் கொள்ளப்பட்ட புத்தகமொன்றை ஒரு அங்கத்தவர் 30 நாட்களுக்குள் மீள ஒப்படைப்பதற்குத் தவறும் சந்தர்ப்பத்தில் அப்புத்தகமானது தொலைந்ததொன்றாகக் கருதப்படல் வேண்டும்.

15. அங்கத்தவரொருவரால் பெற்றுக்கொள்ளப்பட்ட புத்தகமொன்று தொலைந்து போயுள்ள சந்தரப்ப்த்தில் அப்புத்தகத்தை மீள வாங்குவதற்கு ஆகும் செலவையும் புத்தகத்தினது தற்போதைய பெறுமதியின் 25%மான திணைக்களக் கட்டணத்தினையும் அவ்வங்கத்தவர்

செலுத்துதல் வேண்டும். தொலைந்து போன அப்புத்தகமானது கட்டி எடுக்கப்பட்ட ஒரு புத்தகமாயின் அப்புத்தகத்தைக் கட்டுவதற்கு செலவாகும் கட்டணமும் வேறாக அறவிடப்படல் வேண்டும்.

16. எவரேனும் அங்கத்தவர் ஒருவரால் இரவல் வழங்கும் பிரிவிலிந்து பெற்றுக் கொள்ளப்பட்ட புத்தகத்திற்கு பாதிப்பை ஏற்படுத்துதல் அல்லது ஏதேனுமொரு விதத்தில் அதனை உருக்குலைத்தல் கூடாது.

17. இரவல் வழங்கும் பிரிவிலிருந்து தாம் பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கின்ற புத்தகத்திற்கு ஏதேனும் சேதம் அல்லது உருக்குலைவு ஏற்பட்டிருந்தால், அப்புத்தகத்தை தாம் பெற்றுக் கொள்ளப்போகும் சந்தர்ப்பத்தில், அது தொடர்பில் நூலகருக்கு அறிவித்தல் எல்லா அங்கத்தவரதும் கடமையாகும். அவ்வாறு ஏற்பட்ட சேதம் அல்லது உருக்குலைவு தொடர்பாக நூலகருக்கு எந்தவொரு அங்கத்தவரும் அறிவிக்கத் தவறும் பட்சத்தில் அப்புத்தகமானது சேதமின்றியும் உருக்குலைவற்றும் அவ்வங்கத்தினருக்கு வழங்கப்பட்டதொன்றாகக் கருதப்படல் வேண்டும்.

18. அங்கத்தவரொருவரால் மீளவும் ஒப்படைக்கப்படுகின்ற ஒரு புத்தகமானது பிறிதொரு அங்கத்தவருக்கு மீளவும் வழங்க முடியாதளவுக்கு அங்கத்தவரொருவர் அதனை சிதைவடையச் செய்து அல்லது உருக்குலையச் செய்துள்ளதாக நூலகர் திருப்தியடையும் சந்தர்ப்பத்தில் அப்புத்தகத்தினை மீளக் கொள்வனவு செய்வதற்கு ஆகும் செலவினை அங்கத்தவர் ஏற்றல் வேண்டும். அப்புத்தகத்தை மீளப் பெற்றுக் கொண்டதன் பின்னர் சேதமடைந்த புத்தகத்தினை, “பொது நூலகத்தில் சேதடைந்த புத்தகம் விற்கப்பட்டது” என்ற முத்திரையை இட்டு மீளவும் அவ்வங்கத்தவருக்கு வழங்குதல் வேண்டும்.

19. இரவல் வழங்கும் பிரிவிலிருந்து பெற்றுக் கொண்ட புத்தகமொன்றை அல்லது அட்டையொன்றை அங்கத்தவரொருவர் இன்னுமொருவருக்கு உரித்தாக்குதல் கூடாது.

20. ஏதேனும் நோய்த்தொற்று, தொடுகை அல்லது சரும நோயினால் பீடிக்கப்பட்டள்ள ஒருவரால் பயன்படுத்தப்பட்டதாகத் தெரிந்த புத்தகமொன்றை எந்தவொரு அங்கத்தவரும் இரவல் வழங்கும் பிரிவிற்கு மீளவும் ஒப்படைத்தல் கூடாது என்பதுடன் அப்புத்தகத்துக்கான செலவினையும் அவ்வங்கத்தவர் பொறுப்பேற்றல் வேண்டும்.

21. ஒரு புத்தகமொன்றை பல அங்கத்தவர்கள் கோருகின்ற சந்தர்ப்பத்தில், ஏதேனும் கருத்து முரண்பாடு ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் அப்புத்தகமானது எந்த அங்கத்தவருக்குக் கிடைக்க வேண்டும் என்பது தொடர்பில் நூலகரது தீர்மானம் இறுதித் தீர்மானமாக அமையும்.

22. பிறிதொரு அங்கத்தவரால் பெற்றுச் சென்றுள்ள ஏதேனும் ஒரு புத்தகத்தினை வேறொரு நபர் பெறுவதற்கு எதிர்பார்த்தால், அவர் தனது பெயரையும் புத்தகத்தின் பெயரையும் அவ்விடயத்திற்காக வைக்கப்பட்டுள்ள பதிவேட்டில் குறித்தல் வேண்டும். அப்புத்தகத்தை ஏற்கனவே பெற்றுக் கொண்டுள்ள அங்கத்தவர் மீளவும் புத்தகத்தை ஒப்படைத்ததன் பின்னர் நூலகரால் அப்பதிவேட்டில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள அங்கத்தவருக்கு வழங்குதல் வேண்டும். ஏதேனும் ஒரு புத்தகத்தைப் பெற்றுக் கொள்வதற்கு ஒன்றுக்கு மேற்பட்ட அங்கத்தவர்கள் தமது பெயரைக் குறிப்பிட்டுள்ள சந்தர்ப்பத்தில் அப்பதிவேட்டில் பெயர்கள் குறிப்பிட்டுள்ள வரிசைக் கிரமத்தின் அடிப்படையில் அவர்களுக்கு அப்புத்தகத்தை வழங்குதல் வேண்டும்.

23. இரவல் வழங்கும் பிரிவில் அங்கத்துவத்தைப் பெறுவதற்கு தேவையான தகைமைகளிலிருந்து விலகுகின்ற எந்தவொரு அங்கத்தவரும் தனது அங்கத்துவத்தை முடிவுறுத்திக் கொள்வதற்காக உரிய அங்கத்துவ அட்டையை நூலகருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

24. இரவல் வழங்கும் பிரிவானது செயற்படுகின்ற நேரம் மற்றும் திகதி என்பனவற்றை சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்க முடியுமென்பதுடன், அதற்காக நூலகக் கமிட்டியின் விதப்புரைகளைப் பெற்றுக் கொள்ளுதலும் வேண்டும். மேலும் அதற்கேற்றவகையில் அனைத்து அங்கத்தவர்களையும் உரியவாறு அறிவுறுத்தி வைத்திருத்தல் நூலகரது கடமையாகும்.

25. எவரேனும் நபரொருவரால் பெற்றுக்கொள்ளப்பட்ட நூலொன்று கீழே காட்டப்பட்டுள்ள காரணங்களின் அடிப்படையில் மீண்டும் ஒப்படைக்கப்படாத சந்தர்ப்பத்தில், அப்புத்தகம் தொடர்பாக கட்டணங்களை அறவிடுதல் அல்லது பதிவேடுகளிலிருந்து நீக்கி விடுதல் தொடர்பாக தீர்மானம் எடுக்கும் செயற்பாட்டிற்கு நூலகக் கமிட்டியின் விதப்புரைகளின் அடிப்படையில் சபையின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும் -

ை. அங்கத்தவர் இறந்திருந்தால்;

ைை. வெள்ளப்பெருக்கு, தீ, மண்சரிவு, சூறாவளி போன்ற இயற்கை அனர்த்தங்களால் புத்தகம் தொலைந்து போயுள்ள சந்தரப்பத்தில்; மற்றும்

ைைை. அங்கத்தவர்களால் பெற்றுக் கொள்ளப்பட்டு இற்றைவரை மீண்டும் ஒப்படைக்கப்படாத, எனினும் நிரந்தர வதிவிடத்தை மாற்றியுள்ள, அங்கத்தவர் இருக்கின்ற இடத்தைக் கண்டுபிடிக்க முடியாத சந்தர்ப்பத்தில், அவ்வாறே அப்புத்தகத்தை மீளப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான எல்லா நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு முடியாது என உறுதிப்படுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில்.

**உசாவுகைப் பிரிவு**

26. உசாவுகைப் பிரிவானது திறந்து வைக்கப்படவேண்டிய நேரத்தினை, நூலகக் கமிட்டியின் விதப்புரையின் பேரில் பிரதேச சபை தீர்மானிக்கப்பட வேண்டியதுடன், அதனைத் தெளிவாக அறிவித்தலில் இடுதல் வேண்டும். உசாவுகைப் பிரிவைப் பயன்படுத்துவதற்கு நூலகரது அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதுடன் உசாவுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பதிவேட்டில் கையொப்பமிட்டிருந்தால் மட்டுமே எந்தவொரு நபரும் உசாவுகைப் பிரிவைப் பயன்படுத்த முடியும்.

27. வாசிப்பதற்காக தமக்கு வழங்கப்படுகின்ற எந்தவொரு நூலையும் எந்தவொரு நபரும் உசாவுகைப் பிரிவிலிருந்து வெளியே எடுத்துச் செல்லுதல் கூடாது.

28. உசாவுகைப் பிரிவில் கீழே காட்டப்பட்டுள்ள தொகுதிகளுக்குரிய நூல்கள் உள்ளடக்கப்படுதல் வேண்டும் -

   ை. உசாவுகைப் பிரிவிற்குப் பொருத்தமானது என ஏலவே நூலக சேவைச் சபையினால் விதப்புரை செய்யப்பட்ட நூல்கள்
   ைை. நாவல்கள் மற்றும் சிறுகதைகள் தவிர்ந்த மிகுந்த பெறுமதிமிக்க அரியவகையிலான புத்தகங்கள்
   ைைை. தொழில்சார் மற்றும் உயர்கல்விப் பாடங்களுடனும் விசேட பாடங்களுடனும் தொடர்புடைய நூல்கள் மற்றும்
   ைஎ. உசாவுகைப் பிரிவில் உள்ளடக்கப்படவேண்டும் என நூலகரால் சிபாரிசு செய்யப்பட்டதும் நூலகக் கமிட்டியினரால் அனுமதிக்கப்பட்டதுமான நூல்கள்.

**வாசிக்கும் மண்டபம்**

**29.** எட்டு வயதிற்கு மேற்பட்ட எந்தவொரு நபருக்கும் வாசிக்கும் மண்டபத்தை பயன்படுத்துவதற்கான அனுமதியை வழங்க முடியும். அவ்வாறாயினும் எந்தவொரு நபரும் காலத்திற்கேற்றவாறு நூலகரது அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரது அனுமதியைப் பெற்றுக் கொண்டு வாசிக்கும் மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ள பதிவேட்டில் கையொப்பமிடப்பட்டிருந்தால் அன்றி வாசிக்கும் மண்டபத்தைப் பயன்படுத்த முடியாது.

**30.** வாசிக்கும் மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ள அல்லது வாசிக்கும் மண்டபத்திற்கு உரிய எந்தவொரு பத்திரிகை, வார வெளியீடுகள், சஞ்சிகைகள், வரைபடம், வர்த்தமானி

அறிவித்தல் அல்லது அதன் ஒரு பகுதியை அல்லது வேறு ஏதேனுமொரு ஆவணத்தை எந்தவொரு நபரும் வாசிக்கும் மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துச் செல்லுதல் கூடாது.

அவ்வாறாயினும், வாசிக்கும் மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ள ஏதேனுமொரு ஆவணத்தினது பிரதியொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு எவரேனும் ஒரு வாசகர் கோருமிடத்து அதற்காக சபையினால் தீர்மானிக்கப்பட்ட கட்டணமொன்றை அறவிட்டு அப்பிரதிகளை வழங்க முடியும்.

**சிறுவர் பிரிவு**

31. 12 வயதிற்குக் கீழ்ப்பட்ட சிறுவர்கள் வாசிப்பதற்காக சிறுவர் பிரிவொன்று புறம்பாகப் பேணப்படுதல் வேண்டும்.

32. சிறுவர்களது வாசிக்கும் ஆர்வத்தைத் தூண்டக்கூடிய வகையிலான சிறுவர் நூல்கள் இப்பிரிவில் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

33. சிறுவர் பிரிவினது அபிவிருத்திக்காக நூலகக் கமிட்டியின் விதப்புரைகளின் அடிப்படையில் விசேட நிகழ்ச்சிகளைச் செயற்படுத்துதல் வேண்டும்.

**இலத்திரனியல் பிரிவு**

34. நூலகத்தில் இலத்திரனியல் நூலக சேவைகளை வழங்குவதற்காகவும் பேணுவதற்காகவும் நூலகக் கமிட்டியின் விதப்புரைகளின் பேரில், பிரதேச சபையினால் பொருத்தமென கருதப்படும் விதத்தில் காலத்திற்குக் காலம் ஏற்பாடுகள் விதிக்கப்படல் வேண்டும்.

35. சபையினால் விதிக்கப்படக்கூடிய கட்டணத்திற்கு உட்பட்டு வாசகர்கள் தகவல் தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி இணையத்தள வசதிகளைப் பெற்றுக் கொள்ளுதல், தகவல்களைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் வேறு வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கான இயலுமை காணப்படும்.

**நடமாடும் நூலகம்**

36. பிரதேச சபையினால் சமூக சபைகளை நோக்கமாகக் கொண்டு நடமாடும் நூலகச் சேவைகளைப் பேணிச் செல்ல முடியும்.

37. பிரதேச சபையினால் நடமாடும் நூலக சேவையைப் பேணுதல் தொடர்பில் நூலக கமிட்டியின் விதப்புரைகளுக்கு உட்பட வேண்டியதுடன், அது சமூக சபைகளது அடிப்படை மற்றும் இலத்திரனியல் என்ற வகையில் இருக்க முடியும்.

38. சமூக சபையானது, அடிப்படை நடமாடும் சேவைகளை நடாத்திச் செல்லும் போது சமூக சபைகளது மேற்பார்வையின் கீழ் செயற்படுகின்ற, சமூக சபைகள் மூலம் நியமிக்கப்படுகின்ற நூலகப் பொறுப்பாளர் ஒருவர் இருத்தல் வேண்டும்.

39. நடமாடும் நூலகத்தினது செயற்பாடுகள் தொடர்பான வருடாந்த அறிக்கைகள் மற்றும் நூல்களை வழங்குதல் மற்றும் பெற்றுக் கொள்ளுதல் தொடர்பான அறிக்கைகளை நூலகக் கமிட்டிக்கு சமர்ப்பித்தல் நூலகப் பொறுப்பாளரது கடமையாகும்.

40. வருடந்தோறும் நூலகத்தின் சொத்துக்கள் தொடர்பான சுற்றாய்வொன்றை உரிய உள்ளூராட்சி நிறுவனம் நடாத்துதல் வேண்டும்.

41. சுற்றாய்வுச் சபையின் அங்கத்தவர்களை நியமித்தல் மற்றும் ஆய்வினை நடாத்தி அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் என்பன 1988ஆம் ஆண்டு பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதிமுறைகளுக்கு அமைய செயற்படுத்தப்படுதல் வேண்டும்.

42. சுற்றாய்வுச் சபையின் அறிக்கைகள் கிடைக்கப்பெற்றதன் பின்னர் அதனை சபையின் அனுமதிக்காகச் சமர்ப்பித்து பின்னர் 03 மாதங்களுக்குள் ஆய்வுச் சபையின் விதப்புரைகளைச் செயற்படுத்தி, உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அறிக்கையிட வேண்டியது நூலகரது கடமையாகும்.

43. ஏதேனும் நோய்த்தொற்று, தொடுகை அல்லது சரும நோயினால் பீடிக்கப்பட்டுள்ள அல்லது அத்தகைய நோயினால் அண்மையில் பீடிக்கப்பட்டிருந்த எந்தவோர் ஆளும், அல்லது அத்தகைய நோயினால் பீடிக்கப்பட்டிருந்த ஒருவருக்கு அண்மையில் பணிவிடை செய்வதில் ஈடுபட்டிருந்த எவரேனும் ஆளும், அத்தகைய நோய்த்தொற்று அல்லது நோய்விருத்திக் காலம் நிறைவடைந்திருந்தாலேயொழிய, நூலக வளாகத்திற்குள் பிரவேசித்தல் கூடாது.

44. எந்தவொரு நபராலும் -

ை. நூலகத்திற்குச் சொந்தமான இடத்தின் உள்ளேயோ அல்லது அதற்கருகிலேயோ வெறுமனே திரிதல் அல்லது பிரச்சினையைத் தோற்றுவிக்கக்கூடிய ஏதேனுமொரு காரியத்தைச் செய்தல்;

ைை. நூலகத்திற்குள் அல்லது அதற்கருகில் பிரதேச சபையின் கட்டிடத்தில் எந்தவொரு பாகத்திற்கும் அல்லது சொத்துக்கும் பாதிப்போ அல்லது நட்டமோ அல்லது எந்தவொரு விதத்திலும் உருக்குலைவை ஏற்படுத்துதல்;

ைைை. தம்மைப் பற்றி ஏற்றுக் கொள்ளத்தக்க விபரங்களைக் கூறாது நூலகம் மூடப்பட்டதன் பின்னர் அந்நூலகத்திற்குச் சொந்தமான இடத்தில் தரித்திருத்தல் அல்லது வெறுமனே அலைந்து திரிதல் ;

ைஎ. நூலக வளாகத்திற்குள் மதுபானம் அல்லது போதை மருந்துகளைப் பயன்படுத்துதல், புகைத்தல், அல்லது துப்புதல் ;

எ. நூலகத்திற்குச் சொந்தமான இடத்தில் டாம் கட்டைகள் விளையாடுதல் ;

எை. சூதாடுதல் அல்லது வேறு ஏதேனும் செய்றபாட்டைச் செய்தல் ;

எைை. நூலகத்திற்குள் சத்தமிடுதல், பாடுதல், அல்லது வேறு எந்த விதத்திலேனும் சத்தமிடுதல் மூலம் நூலகத்தைப் பயன்படுத்துபவருக்கு இடைஞ்சல்களை ஏற்படுத்துதல் ;

எைைை. துப்பரவற்ற விதத்தில் நூலகத்திற்குள் பிரவேசித்தல் ;

ைஒ. நூலகத்திற்குச் சொந்தமான பிரதேசத்திற்குள் நாய்கள் அல்லது வேறு மிருகங்களைக் கொண்டு செல்லுதல் ;

ஒ. நூலகத்திற்குச் சொந்தமான பிரதேசத்திற்குள் நித்திரை செய்தல் அல்லது உணவருந்துதல்;

ஒை. இத்துணைவிதிகளின் கீழ் தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை சட்டரீதியாகப் பயன்படுத்துவதற்கு நூலகருக்கு அல்லது அவரது கட்டளையின் பிரகாரம் செயற்படும் பிறிதொரு நபருக்கு இடைஞ்சல்களை ஏற்படுத்துதல்;

கூடாது.

45. இத்துணைவிதிகளின் 43ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு ஏற்பாடுகளும் மீறப்படுதல் குற்றமாவதுடன் அவ்வாறான குற்றமிழைக்கும் அனைத்து நபர்களுக்கும் உரிய நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டதன் பின்னர் 1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122ஆம் பந்தியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் அடிப்படையில் தண்டனைக்கு உட்படுதல் வேண்டும்.

46. பதங்கள் தொடர்பாக பிற அர்த்தங்கள் அவசியப்பட்டாலொழிய, இத்துணைவிதிகளில்;

‘‘நூலகம்’’ என்பது பிரதேச சபையினால் பேணப்படுகின்ற மத்திய நூலகமொன்றை, பொது நூலகமொன்றை அல்லது வேறு ஏதேனுமொரு நூலகமொன்றையும்;

‘‘தலைவர்’’ என்பது, அக்காலப்பகுதியில் பிரதேச சபையில் தலைவர் பதவியை வகிக்கும் நபரையும்;

‘‘அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்’’ என்பது, தலைவரினால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள சபையின் உத்தியோகத்தரையும்,

குறிக்கும்.

## XX. பொதுவான குளிக்கும் இடங்கள் தொடர்பான துணைவிதிகள்

1. 1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 126ஆவது பந்தியின் (ix)(ண) உபபந்தியின் கீழ் இத்துணைவிதிகளை உருவாக்குவதற்குப் பிரதேச சபைகளுக்கு அதிகாரம் கிடைத்துள்ளது.

2. பொது மக்களது சுகாதாரம் மற்றும் பொதுமக்களது நலன்களை விருத்தி செய்வதற்காகவும், பாதுகாப்பதற்காகவும் அதனுடன் தொடர்புடைய உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காகவும் பொதுவான குளிக்கும் இடங்களை அமைத்தல், விருத்தி

செய்தல், முறைமைப்படுத்துதல், கட்டுப்படுத்துதலுக்காக இத்துணைவிதிகள் விதிக்கப்படுகின்றன.

3. இத்துணைவிதிகளானது பொதுவான குளிக்கும் இடங்கள் தொடர்பான துணைவிதிகள் என அழைக்கப்படும்.

4. நீரானது குளிப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றதும், பொதுமக்களது பயன்பாட்டிற்கென உள்ளதுமான எல்லாக் கிணறுகளுக்கும், பீலிகளுக்கும், ஊற்றுக்களுக்கும் 75 சென்றிமீற்றருக்குக் குறையாக உயரத்தில் பாதுகாப்பான சுவர் அமைக்கப்பட்டிருக்க வேண்டுமென்பதுடன் சுவரின் இருபுறமும் சீமெந்து பூசப்பட்டு மெருகூட்டப்பட்டிருக்க வேண்டும்.

5. ஆண், பெண் இருபாலாரும் குளிப்பதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற எல்லா கிணறுகளுக்கும், பீலிகளுக்கும், ஊற்றுக்களுக்கும் மேலே 4இல் குறிப்பிடப்பட்டதற்கமைய பாதுகாப்பான சுவரை அமைக்கும் போது இருபாலாரும் வெவ்வேறாகக் குளிப்பதற்கு வசதியான வகையில் பிரிக்கப்பட்ட வகையில் சுவரகள் அமைக்கப்படுதல் வேண்டும்.

6. நீரைக் குளிப்பதற்காகப் பயன்படுத்தும் நதிக்கரையோரம், வாய்க்கால் ஓரம், குளக்கட்டு, ஓடை, நீர்வீழ்ச்சிக்கருகில் அமைந்துள்ள அங்கீகரிக்கப்பட்ட குளிக்கும் இடங்களில் நிலத்திலிருந்து நீரில் இறங்குவதற்காக சீமெந்தினாலும், கருங்கல்லினாலும் அல்லது கொன்கிறீற்றினால் ஆன படிக்கட்டுகள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

7. மேலே 4ஆம், 5ஆம், 6ஆம் பந்திகளின் கீழ் செய்யப்படுகின்ற எல்லா நிருமாணிப்புக்களும் நிலமட்டத்திலிருந்து 75 சென்றிமீற்றருக்குக் குறையாத ஆழத்தில் அமைந்த நிலையான கொன்கிறீற் அத்திவாரத்தின் மீது அமைக்கப்படுதல் வேண்டும்.

8. எல்லா பொது குளிக்கும் இடங்களிலும் ‘‘பொது குளிக்கும் இடங்கள்’’ என சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் தெளிவாக வாசிக்கக் கூடிய விதத்தில் அழிக்கமுடியாத மையினால் எழுதப்பட்ட நிலையான பெயர்ப்பலகையொன்றை பொருத்துதல் வேண்டும்.

9. நீரை குளிப்பதற்காகப் பயன்படுத்தும் எல்லா கிணறுகளைச் சுற்றியும் குளிக்கின்ற நீர் மீண்டும் நிலத்திற்குள் உரிஞ்சப்படாத வண்ணம் வடிகாண் ஒன்றை அமைத்து வெளியே வழிந்து செல்லுமாறு சாய்வாக கொன்கிறீற் இட்டு சீமெந்தினால் மெருகூட்டப்பட்டு இருத்தல் வேண்டும்.

10. நீரைக் குளிப்பதற்காகப் பயன்படுத்தும் எல்லா பொது குளிக்கும் இடங்களும் துப்பரவாகவும் குப்பை கூழங்கள், முட்புதர்கள், அல்லது காட்டுப் புதர்கள் அற்றதாக முறையாகப் பராமரிக்கப்படுகின்ற இடமாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அது

குளிக்கின்ற கிணராக இருப்பின் ஆறு மாதங்களுக்கொருமுறை கிணறு இறைக்கப்பட்டு சேறு, சகதிகள் என்பன அகற்றப்பட்டு துப்பரவு செய்யப்படுதல் வேண்டும்.

11. எல்லா பொது குளிக்கும் இடங்களுக்கும் குளிப்பதற்காக வழங்கப்பட்டுள்ள வாளிகள் ஆறு மாதங்களுக்கொருமுறை தீந்தை பூசப்படவேண்டியதுடன் அவ்வாளிகள் நாளாந்தம் தூய்மைப்படுத்தப்படல் வேண்டும்.

12. பெண்களது பாவனைக்காக மட்டும் அல்லது ஆண்களது பாவனைக்காக மட்டும் ஒதுக்கப்பட்டுள்ள குளிக்கும் இடங்களில் அவ்வாறு ஒதுக்கப்பட்ட தரப்பினர் தவிர்ந்த வேறு எந்தவொரு தரப்பினராலும் குளித்தல், கழுவுதல் அல்லது வேறு நடவடிக்கைகளுக்காக அத்தண்ணீரைப் பயன்படுத்துதல் கூடாது.

13. பொது குளிக்கும் இடங்களில் இருந்து 30 மீற்றர்களுக்குள் எந்தவொரு நபராலும் பொது அல்லது தனிப்பட்ட மலசலகூடமொன்றை அல்லது மலசலகூடக் குழியொன்றை அமைத்தல் கூடாது.

14. பொது குளிக்கும் இடங்கள், தண்ணீர் வழிந்தோடுகின்ற ஆறுகள், வாய்க்கால்கள், ஓடைகள் அல்லது நீர்வீழ்ச்சிகளுக்கருகில் குளிக்கும் இடங்கள் அமைந்துள்ள சந்தரப்பத்தில் அது அமைந்துள்ள இடத்திற்கு மேலே 500 மீற்றருக்குள் அவ்வாற்றிற்கு, ஓடைக்கு, அல்லது வடிகாணுக்கு கழிவுகள் அல்லது கழிவுநீர் வழந்தோடக்கூடிய விதத்தில் வடிகாண்கள் அல்லது குழாய்கள் அல்லது நீர்வழிந்தோடும் அணைகளை அமைத்தல் கூடாது.

15. ஏதேனும் நோய்த்தொற்று, தொடுகை அல்லது சரும நோயினால் பீடிக்கப்பட்டுள்ள அல்லது அத்தகைய நோயினால் அண்மையில் பீடிக்கப்பட்டிருந்த எந்தவோர் ஆளும் பொது குளிக்கும் இடங்களில் குளித்தல், கழுவுதல், அல்லது அதிலுள்ள தண்ணீரை வேறு பயன்பாட்டிற்கு எடுத்தல் கூடாது.

16. பொது குளிக்கும் இடங்களிலுள்ள நீரை குடிப்பதற்காகப் பெற்றுக் கொள்ளுதல் அல்லது பயன்படுத்துதல் கூடாது.

17. பொது குளிக்கும் இடங்களில் பயன்படுத்தும் தண்ணீரை பயிர்ச்செய்கைக்காக, நீர்ப்பாசன நடவடிக்கைகள் அல்லது வேறு ஏதேனும் கைத்தொழில் அல்லது வர்த்தக நிறுவனத்தின் தண்ணீர்த் தேவைக்காகப் பம்ப் செய்தல் அல்லது வேறு விதத்தில் பயன்படுத்துதல் கூடாது.

18. பொது குளிக்கும் இடங்களில் அல்லது அவ்விடங்களுக்கருகில் எந்தவொரு நபராலும் -

(அ) மாடு, எருமை மாடு, ஆடு, நாய், யானை அல்லது வேறு பிராணிகளை நிறுத்தி வைத்தல், குளிப்பாட்டுதல், நீர் அருந்துவதற்காக ஓட்டி வருதல்;

(ஆ) அசுத்தமான உடைகள், பாய்கள், அல்லது வேறு அசுத்தமான பொருட்களைக் கழுவுதல் ;

(இ) வாகனங்கள், இயந்திரங்கள், டிரக்டர்கள், அல்லது இயந்திர உபகரணங்களைக் கழுவுதல் ;

(ஈ) உணவு சமைப்பதற்காகவும் தயாரிப்பதற்காகவும் பயன்படுத்துகின்ற பாத்திரங்கள், கிடாரங்கள், வேறு உபகரணங்களைக் கழுவுதல் ; அல்லது

(உ) நீரை அசுத்தப்படுத்தும் வேறு எந்தவித நடவடிக்கையையும் மேற்கொள்ளுதல் கூடாது.

19. பொதுவான குளிக்கும் இடங்களில் அதற்கருகில் குப்பைகூழங்களைக் கொண்டுவந்து இடுதல், பசளைகள், சாணங்கள், அல்லது இரசாயனப் பொருட்களை குவித்தல் என்பன எந்தவொரு நபராலும் செய்யப்படுதல் கூடாது.

20. பொதுவான குளிக்கும் இடங்களை சபையின் பிரேரணைத் தீர்மானமொன்றின் மூலம் வழங்கப்படுகின்ற அனுமதியின்றி மூடி விடுதல், பயன்படுத்துவதைத் தடுத்தல் என்பன எந்தவொரு நபராலும் மேற்கொள்ளப்படுதல் கூடாது.

21. சபையின் நியாயாதிக்கப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள எந்தவொரு பொது குளியல் இடங்களும் சபையின் தலைவர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரினால் பகற் காலங்களில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பரிசோதனை செய்து பார்த்தல் மற்றும் இத்துணைவிதிகளில் குறிப்பிடப்பட்ட விதிமுறைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் சட்டரீதியானதாகும்.

22. பிரதேச சபை நியாயாதிக்கப் பிரதேசத்திலுள்ள குளிக்கும் இடங்களது அமைவிடங்கள், அதன் நிலைமைகள், மற்றும் வேறு விபரங்களைக் காட்டுகின்ற பொதுவான குளிக்கும் இடங்களது பட்டியடிலான்று சபையினால் இற்றைவரைப்படுத்தி பேணப்படுதல் வேண்டும்.

23. பொது குளிக்கும் இடமாகப் பிரதேச சபையினால் பிரகடனம் செய்யப்பட்ட இடத்தில், அதனைப் பயன்படுத்துவோர், சபையின் அனுமதியின்றி கட்டணங்களை அறவிடுதல், நிதி சேகரித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுதல் கூடாது.

24. எந்தவொரு குளிக்கும் இடங்களிலும் அதனைப் பயன்படுத்துவோரிடமிருந்து சேவைக் கட்டணம் அறவிடும் நடவடிக்கையானது, ஊழியரொருவரை அல்லது குத்தகைதாரரொருவரை ஈடுபடுத்திச் செய்ய வேண்டுமென சபையினால் சபைத்

தீர்மானமொன்றின் மூலம் தீர்மானிக்கப்பட்டால் அக்கட்டணங்கள் தொடர்பான விபரங்கள் அரசாங்க வர்த்தமானியின் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

25. பொது குளிக்கும் இடங்களிலுள்ள உரிமையாளர் அல்லது குத்தகைதாரர் இத்துணைவிதிகளிலுள்ள ஏற்பாடுகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

26. இத்துணைவிதிகளின் ஏற்பாடுகளை எந்தவொரு நபரும் மீறியிருக்கும் சந்தரப்பத்தில், அந்நபர் இதற்கு முன்னர் இத்துணைவிதிகளின் பந்தியின் கீழ் தவறொன்றைச் செய்யாதவரெனின், அச்சந்தர்ப்பத்தில் தவறிழைத்தவரிடமிருந்து கோரிக்கையொன்று காணப்பட்டால், பிரதேச சபைச் சட்டத்தின் 122 (3) ஆம் பந்தியின் கீழ் தலைவரால் அத்தவறு மத்தியஸ்தம் செய்யப்படுதல் வேண்டும்.

27. இத்துணைவிதிகளின் ஏற்பாடுகள் மீறப்படுதல் குற்றமாவதுடன் அவ்வாறான குற்றமிழைக்கும் அனைத்து நபர்களும், உரிய நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டதன் பின்னர் 1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122ஆம் பந்தியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் அடிப்படையில் தண்டனைக்கு உட்படுதல் வேண்டும்.

28. பதங்கள் தொடர்பாக பிற அர்த்தங்கள் அவசியப்பட்டாலொழிய, இத்துணைவிதிகளில்;

‘‘தலைவர்’’ என்பது, அக்காலப்பகுதியில் பிரதேச சபையில் தலைவர் பதவியை வகிக்கும் நபரையும்;
‘‘அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்’’ என்பது, தலைவரினால் எழுத்து மூலமாக குறித்த கருமத்திற்காக அதிகாரம் கையளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தரையும் ;

‘‘ஊழியர்’’ என்பது சபையினால் சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ள அல்லது சபையினால் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள ஒரு நபரையும் ;

குறிக்கும்.

## XXI. வாகனங்களைச் செலுத்துதல் தொடர்பான துணைவிதிகள்

01. 1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 126ஆவது பந்தியின் (vii)(இ) பந்தியின் கீழ் இத்துணைவிதிகளை உருவாக்குவதற்குப் பிரதேச சபைகளுக்கு அதிகாரம் கிடைத்துள்ளது.

02. இத்துணைவிதிகளானது பிரதேச சபை நியாயாதிக்கப் பிரதேசத்திலுள்ள பாதைகளில் மோட்டார் வாகனமொன்றை அல்லது மோட்டார் சைக்கிளொன்றை, சைக்கிளொன்றை, முச்சக்கர வண்டியொன்றை, வண்டிலொன்றை, அல்லது கைவண்டிலொன்றை ஓட்டிச் செல்லும் போது, செலுத்தும் போது, தள்ளிக் கொண்டு செல்லும்போது அல்லது இழுத்துக் கொண்டு போகும் போது அல்லது ஏதேனும் மிருகத்தின் மீது செல்லும் போது பாதைகளைப் பயன்படுத்துதல் தொடர்பான விதிமுறைகளை வழங்குவதற்காகத் தயாரிக்கப்பட்ட துணைவிதிகளாகும்.

03. இத்துணைவிதிகளானது பிரதேச சபை நியாயாதிக்கப் பிரதேசத்திலுள்ள பாதைகளில் வாகனங்களைச் செலுத்துதல் தொடர்பான துணைவிதிகள் என அழைக்கப்படும்.

04. பிரதேச சபை நியாயாதிக்கப் பிரதேசத்திலுள்ள பாதைகளில் மோட்டார் வாகனமொன்றை, சைக்கிளொன்றை, முச்சக்கரவண்டியொன்றை, மோட்டார் சைக்கிளொன்றை, வண்டியொன்றை, கை வண்டியொன்றை (இங்கு / இதன்பின்னர் உரிய வாகனம் எனக் குறிக்கப்படும்) ஓட்டும் போது, தள்ளிக் கொண்டு போகும்போது, இழுத்துக் கொண்டு போகும்போது அல்லது மிருகமொன்றின் மேல் செல்லும் போது, ஒன்றையொன்று முன்னோக்கிக் கடந்து செல்லும் சந்தர்ப்பத்தைத் தவிர, பாதையின் இடதுபக்க எல்லைக்கு அருகாமையில் அமைந்தவாறு அல்லது பாதையின் இடதுபக்கமாக வாகனத்தை ஓட்டுதல், மிதித்துச் செல்லுதல், தள்ளிக் கொண்டு செல்லுதல், இழுத்துக் கொண்டு செல்லுதல் அல்லது மிருகமொன்றின் மீது செல்லுதல் வேண்டும்.

05. பாதையில் உரிய வாகனத்தை ஓட்டிக் கொண்டு, மிதித்துக் கொண்டு, இழுத்துக் கொண்டு அல்லது மிருகமொன்றின் மீது செல்லுகின்ற வேளையில், ஒன்றையொன்று

கடந்து செல்லும் போது பாதையின் வலது பக்கத்தில் அல்லது வலதுபக்க பாதையில் அவ்வாறு கடந்து சென்று மீண்டும் இடது பக்க எல்லைக்கு அல்லது இடது பக்கத்திற்கு வருதல் வேண்டும்.

06. பாதையில் செல்லுகின்ற வாகனத்தில் ஒருவர் ஏறுவதற்கு அல்லது இறங்குவதற்கு எடுக்கின்ற காலத்தைத் தவிர்த்து, வாகனங்களைச் செலுத்துவதற்காக உள்ள பகுதியில் அல்லது பாதையில் எந்தவொரு வாகனமும் நிறுத்தி வைக்கப்படல் கூடாது.

07. பாதையில் வண்டியொன்று அல்லது கைவண்டியொன்று ஏதேனும் திசையில் பயணிக்கும் போது அத்திசையில் பயணிக்கும் வண்டியொன்று எந்தவித காரணத்தினாலும்

08. பாதையில் உரிய வாகனத்தைச் செலுத்தும் போது, மிதித்துக் கொண்டு செல்லும் போது, இழுத்துக் கொண்டு செல்லும் போது, தள்ளிக் கொண்டு செல்லும் போது, மிருகத்தின் மீது செல்லும் போது, பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரால் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு வழங்குகின்ற சைகைக்கு முன்னுரிமையளித்து செய்றபட வேண்டியதுடன், அதற்குப் புறம்பாக பாதையில் உரிய வாகனத்தைச் செலுத்துபவன், தள்ளுபவன், இழுத்துக் கொண்டு செல்பவன், மிருகத்தின் மீது செல்பவன் கீழே காட்டப்பட்டுள்ள முறைகளுக்கு அமைவாக வாகனங்கள் பயணிப்பதைக் கட்டுப்படுத்தும் விளக்கு சமிக்ஞைகளுக்கு அமைந்து நடத்தலும் வேண்டும்.

09. இங்கு இதன் பின்னர் ‘‘நிறுத்தி வைக்கும் கோடு’’ என்பதன் மூலம் குறிக்கப்படுகின்ற வெள்ளைக் கோடானது, பாதையின் எந்தவொரு பகுதிக்குக் குறுக்காகவும் வரையப்பட்டு அதற்கு முன்னால் சமிக்ஞை விளக்குகள் வழங்கப்பட்டுள்ளன.

10. சமிக்ஞைகள் மூலம் கட்டுப்படுத்துவதற்கு எதிர்பார்ப்பது ஏதேனும் திசைநோக்கி வருகின்ற வாகன அணியாக இருந்தால், அவ்வாகன அணிக்கு முகப்பாக கீழே காட்டப்பட்டுள்ள சமிக்ஞை விளக்குகள் ஒன்றையோ அல்லது பலவற்றையோ, சமிக்ஞைகள் வழங்கும் நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்த முடியும்.

i. விளக்கினது வில்லையில் ‘‘நிறுத்தவும்’’ என்ற சொல்லுடன் அல்லது சொல் இல்லாது சிவப்பு ஒளி: மஞ்சள் ஒளி;

ii. விளக்கினது வில்லையில் ‘‘போகவும்’’ என்ற சொல்லுடன் அல்லது சொல் இல்லாது பச்சை நிற ஒளி;

iii. ஒளிர்விக்கப்பட்ட பச்சை நிற அம்புக்குறி.

11. நிற வெளிச்சத்தைக் கொண்ட மேலே கூறப்பட்ட விளக்குகள் அல்லது சமிக்ஞைகள் நிலைக்குத்தாகவோ அல்லது கிடையாகவோ இருக்கலாம்.

12. வாகனப் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைக்காக சமிக்ஞை ஒளியைக் காட்டுகின்ற வரிசைக் கிரமமானது கீழே காட்டப்பட்டுள்ள விதத்தில் அமைதல் வேண்டும்.

i. சிவப்பு அல்லது பச்சை நிற அம்புக்குறி மற்றும் சிவப்பு நிறம் ஒரே தடவையில் ;

ii. மஞ்சள் நிறம் மற்றும் சிவப்பு நிறம் ஒரே தடவையில் ;

iii. பச்சை நிறம் ;

iv. மஞ்சள் நிறம் ;

13. மேலே கூறப்பட்ட ஒளி சமிக்ஞைகளில் காணப்படும் முக்கியத்துவம் கீழே காட்டப்பட்டுள்ளன -

i. சிவப்பு சமிக்ஞை குறிப்பது யாதெனில், 9ஆம் பந்தியில் குறிப்பிடப்படும் 'நிறுத்தும் கோட்டிற்கு' அப்பால் எந்தவொரு வாகனப் போக்குவரத்தும் இடம்பெறக் கூடாது என்பதும்;

ii. மஞ்சள் நிறம் மற்றும் சிவப்பு நிறம் என்பன ஒரே தடவையில் எரியும் சமிக்ஞையின் மூலம் குறிப்பது யாதெனில், வாகனத்தைச் செலுத்துவதற்குத் தயாராக இருக்க வேண்டுமென்பதும்;

iii. பச்சை நிற சமிக்ஞையின் மூலம் குறிப்பது யாதெனில் வாகனத்தினை முன்னோக்கிச் செலுத்தவேண்டும் என்பதும் ; மற்றும்

iv. மஞ்சள் நிற சமிக்ஞையின் மூலம் குறிப்பது யாதெனில், வாகனத்தை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதும்.

14. பதங்கள் தொடர்பாக பிற அர்த்தங்கள் அவசியப்பட்டாலொழிய, இத்துணைவிதிகளில்;

"மோட்டார் வாகனம்" என்பது மோட்டார் வாகனக் கட்டளைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வரைவிலக்கணத்தினையும்:

"பொலிஸ் உத்தியோகத்தர்" என்பது பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் கீழ் விளக்கப்பட்டுள்ள எந்தவொரு பதவியையும் சேர்ந்த உத்தியோகத்தரொருவரையும்:

குறிக்கும்.

## XXII. சிற்றுண்டிச்சாலைகள் தொடர்பான துணைவிதிகள்

1. 1987 ஆம் இலக்க 15 வது பிரதேச சபை சட்டத்தின் 122 வது பந்தியுடன் வாசிக்க வேண்டிய குறித்த சட்டத்தின் 126 வது பந்தியின் (ix) (ஏ) உப பந்தியின் கீழ் இத்துணைவிதிகளை ஆக்குவதற்கு பிரதேச சபைக்கு அதிகாரம் கிடைத்துள்ளது.

2. இத்துணைவிதிகள் பிரதேச சபையின் நியாயாதிக்க பிரதேசத்திற்குள் சிற்றுண்டிச்சாலைகளை ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணை விதிகளென எடுத்துக்காட்டப்படும்.

3. இத்துணைவிதிகள் சிற்றுண்டிச்சாலைகளை தொடர்பான துணைவிதிகளாகக் கருதப்படும்.

4. தலைவரினால் இத்துணை விதிகளின் கீழ் விநியோகிக்கப்பட்ட செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரமின்றி எந்தவோர் ஆளினாலும் பிரதேச சபை பிரதேசத்தினுள் சிற்றுண்டிச்சாலையொன்றை நடாத்துதல் ஆகாது.

5. இப்பகுதியின் துணை விதிகளின் கீழ் விநியோகிக்கப்படும் எல்லா அனுமதிப் பத்திரங்களும் இப்பிரிவின் துணை விதிகளின் ஏற்பாடுகளுக்கமைய முன்கூட்டியே இரத்துச் செய்யப்பட்டாலன்றி, அது எவ்வருடத்திற்காக விநியோகிக்கப்பட்டதோ அவ்வருடத்தின் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவுறுத்தப்படல் வேண்டும்.

6. இத்துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் பூரணப்படுத்தப்பட்டாலன்றி, எந்தவொரு சிற்றுண்டிச்சாலையினையும் நடாத்துவதற்கு தலைவரினால் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படல் ஆகாது.

    (1) கூரை ஏதேனும் நிலையான பொருட்களை உபயோகித்து வேயப்பட்டிருத்தல் வேண்டும்.

    (2) சிற்றுண்டிச்சாலையின் தரை சீமெந்திடப்பட்டு சீமெந்தினால் மெருகூட்டப்பட்டோ அல்லது மாபிள் ஓடுகள் பதிக்கப்பட்டோ இருத்தல் வேண்டும்.

    (3) சிற்றுண்டிச்சாலையினுள் பிறப்பிக்கப்படும் கழிவுகளைச் சேகரிப்பதற்காக கழிவுப் பாத்திரங்கள் இருத்தல் வேண்டுமென்பதோடு, சமையலறையினுள் வைக்கப்படும் கழிவுப் பாத்திரங்கள்

இலையான்கள் அல்லது வேறு பூச்சிகள், விலங்குகள் உட்புகாதவாறு மூடிவைக்கக்கூடிய மூடிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) சிற்றுண்டிச்சாலையினுள் பிறப்பிக்கப்படும் கழிவுகளை அப்புறப்படுத்தல் இத்துணைவிதிகளின் பணிப்புக்களுக்கமைய செயலாற்றும் விதத்தில் அவசியமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(5) சிற்றுண்டிச்சாலையினுள் பாவிக்கப்படும் அனைத்து உபகரணங்களும் முழு நிறைவுடன் இருக்க வேண்டுமென்பதுடன், மேசைகள் மற்றும் கதிரைகள் மரத்தினால் அல்லது உலோகத்தினால் செய்யப்பட்டு மெருகூட்டப்பட்டும் மேசைகள் கண்ணாடியினால் ஆக்கப்பட்டும் இருத்தல் வேண்டும்.

(6) வாடிக்கையாளர்களால் பாவிக்கப்பட்ட பாத்திரங்களைக் கழுவுவதற்கு தனிவேறான பகுதியொன்றை அவ்விடத்தில் பேணிச்செல்லல் வேண்டும்.

(7) வாடிக்கையாளர்கள் மற்றும் ஊழியர்களின் பாவனைக்காக போதியளவு மலசலகூடங்கள் இருத்தல் வேண்டுமென்பதோடு, பெண்கள் மற்றும் ஆண்களுக்கென தனிவேறாக மலசலகூடங்கள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(8) வாடிக்கையாளர்களின் பாவனைக்காக ஒதுக்கப்பட்டுள்ள பகுதியில், வாடிக்கையாளர்களின் கைகளைக் கழுவுவதற்கு துருப்பிடிக்காத உலோகத் தகடுகளால் அல்லது மாபிள் களியினால் நிர்மாணித்து மெருகூட்டப்பட்ட அல்லது செங்கல்லினால் அல்லது சீமெந்துக்கல்லினால் கட்டப்பட்டு மாபிள் ஓடு பதிக்கப்பட்ட பேசின் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(9) இடத்தில் எந்தவொரு பகுதியிலும் பாவனையின் பின்னர் வெளியேற்றப்படும் கழிவு நீர் தடையின்றி பாய்ந்து செல்வதற்குப் பொருத்தமான வடிகான் முறைமையொன்று இருத்தல் வேண்டும். ஒருபோதும் கழிவு நீர் வடிகானை பொது நுழைவாயிலுக்கருகில் வெளியேற்றுதல் கூடாது.

(10) இடத்தில் போதுமான தீயணைப்புக் கருவிகள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(11) இடத்தில் தேநீர், கோப்பி அல்லது பால் தயாரிக்கும் பிரிவு இடைவெளியற்றதும் துருப்பிடிக்காததுமான உலோகத் தகடுகளினால் அல்லது மாபிள் ஓடுகள் பதிக்கப்பட்ட அல்லது வேறு ஊடறுக்க முடியாத பொருளால் நிர்மாணிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

7. சிற்றுண்டிச்சாலைக்கான சகல நிலையான நிர்மாணிப்புகளும் தலைவரினால் அனுமதிக்கப்பட்ட திட்டத்திற்கு ஏற்றவாறு நிர்மாணிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

8. இடம் நன்றாக பழுதுபார்க்கப்பட்ட நிலையில் பேணப்படுதல் வேண்டும்.

9. இடத்தின் அனைத்து அறைகளின் சுவர்களும் 2.5 மீற்றருக்குக் குறையாத உயரத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய சுவர்கள் செங்கல், சீமெந்துக்கல் அல்லது கபூக் கல்லினால் கட்டப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, இரு பக்கங்களுக்கும் சாந்து பூசப்பட்டு வர்ணப்பூச்சு பூசப்பட்டிருந்தலும் வேண்டும்.

10. சிற்றுண்டிச்சாலையின் உட்புறத்தில் அனைத்து அறைகளுக்கும் உட்கூரைகள் அமைந்திருத்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய உட்கூரைகள் நிலத்திலிருந்து குறைந்த பட்சம் 2.5 மீற்றர் உயரத்தில் இருத்தல் வேண்டும்.

11. அனைத்து அறைகளுக்கும் திறந்து வைக்கக்கூடிய ஜன்னல்கள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, ஒவ்வொரு அறைகளினதும் ஜன்னல்களைக் திறக்கும் போது அத்தகைய ஜன்னல்களின் பரப்பளவு அறையின் தரையின் பரப்பளவின் பதினைந்தில் ஒரு பங்குக்குக் குறையாதிருத்தல் வேண்டும். ஆயினும், ஏதேனும் அறை குளிரூட்டப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் இப்பிரமாணம் ஏற்புடையதாகாது.

12. சிற்றுண்டிச்சாலையின் அனைத்து இடங்களும் வர்ணப்பூச்சு பூசப்பட்டு நன்றாக பேணிவரப்படுதல் அனுமதிப்பத்திரம் பெறுநரின் பணியாதல் வேண்டும்.

13. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடம் குறைந்த பட்சம் நாளொன்றுக்கு இருதடவை வீதம் நீரினால் கழுவிச் சுத்தம் செய்யப்படுதல் வேண்டுமென்பதோடு, கழிவு நீர் பாய்ந்தோடும் வடிகான்கள் நாளொன்றுக்கு இரு தடவை வீதம் நீரினால் கழுவிச் சுத்தம் செய்யப்படுதல் வேண்டும்.

14. சிற்றுண்டிச்சாலையினுள் செல்லப்பிராணிகளான நாய் அல்லது பூனை போன்றவற்றை வளர்க்காதிருப்பதுடன், வெளியிலிருந்து அவ்வாறான பிராணிகள் சிற்றுண்டிச்சாலைக்குள் உட்பிரவேசித்தலைத் தடுக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

15. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்திலுள்ள மலசலகூடங்களும் அலம்பகங்களும் குறைந்த பட்சம் நாளொன்றுக்கு இரு தடவை வீதம் நீரினால் கழுவிச் சுத்தம் செய்யப்பட்டு கிருமி நாசினிகள் உபயோகிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு, துர்நாற்றம் வீசாது பார்த்துக் கொள்ளல் வேண்டும்.

16. சிற்றுண்டிச்சாலையில் உணவுகளை வைப்பதற்கும் மற்றும் உணவுகளை பரிமாறுவதற்கும் உகந்த பாத்திரங்களைப் பாவிக்க வேணடுமென்பதுடன், அவையனைத்தும் நன்றாக கழுவி தூய்மையாக பேணிவருதலும் வேண்டும்.

17. (அ) சிற்றுண்டிச்சாலையில் பிறப்பிக்கப்படுகின்ற அனைத்து கழிவுகளும் -

(i) உயிர்ச் சிதைவுக் கழிவுப் பொருட்கள்,

(ii) கண்ணாடிப் பொருட்கள்,

(iii) கடதாசியும் கடதாசி சார்ந்த பொருட்களும்,

(iv) பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் அல்லது பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் சார்ந்த பொருட்கள்,

(v) இரும்பு மற்றும் ஏனைய உலோகப் பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் ஏனைய உலோகப் பாகங்கள்,

என்றவாறு வெவ்வேறாக சேகரிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) சிற்றுண்டிச்சாலையில் மேற்குறிப்பிட்ட (அ) பிரிவில் குறிப்பிட்டவாறு வகைப்படுத்தப்பட்ட பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில் போடப்பட்ட கழிவுப் பொருட்கள் நியாயாதிக்க பிரதேசதத்திற்குள் நடைமுறைப்படுத்தப்படுகின்ற கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ வேலைத்திட்டத்தின் கீழ் அப்புறப்படுத்துவதாயினன்றி பிரதேச சபையின் பணிப்பிற்கமைய இறுதியான அப்புறப்படுத்துகை இடம்பெறல் வேணடும்.

18. (அ) ஏதேனும் நோய்த்தொற்று, தொடுகை அல்லது சரும நோயினால் பீடிக்கப்பட்டுள்ள அல்லது அத்தகைய நோயினால் அண்மையில் பீடிக்கப்பட்டிருந்த எந்தவோர் ஆளும் அல்லது அத்தகைய நோயினால் பீடிக்கப்பட்டிருந்த ஒருவருக்கு அண்மையில் பணிவிடை செய்வதில் ஈடுபட்டிருந்த எவரேனும் ஆளும் அத்தகைய நோய்த்தொற்று அல்லது நோய்விருத்திக் காலம் நிறைவடைந்திருந்தாலொழிய எந்தவொரு சிற்றுண்டிச்சாலையிலும் எவ்வகையான கருமத்திலும் அல்லது அத்தகைய கருமத்தில் ஈடுபட்டுள்ள ஒருவரின் உதவியாளராகவோ ஈடுபடுதல் அல்லது ஈடுபடுத்தப்படுதல் அல்லது ஏதேனும் கருமத்தில் ஈடுபட இடமளித்தல் ஆகாது.

(ஆ) நன்றாகக் கழுவி சுத்தஞ் செய்யப்பட்ட உடைகளை அணிந்திருந்தாலன்றி எந்தவொரு ஆளினாலும் சிற்றுண்டிச் சாலையில் எவ்வகையிலும் பணியில் ஈடுபடுதல் அல்லது ஈடுபடுத்தப்படுதல் ஆகாது.

(இ) அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அனைத்து ஊழியர்களையும் வருடத்திற்கு ஒரு தடவை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்துதல் அனுமதிப்பத்திரம் பெறுநரின் பணியாதல் வேண்டும்.

19. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் உணவு மற்றும் பானங்கள் தயாரிக்கும் பணியில் ஈடுபடும் சகல ஊழியருக்கும் மேலங்கிகள் வழங்கப்படுதலும், அத்தகைய ஊழியர் பணியில் ஈடுபட்டுள்ள எல்லாச் சந்தர்ப்பத்திலும் மேலங்கிகள் அணிந்திருப்பதை உறுதி செய்து கொள்ளலும் அனுமதிப்பத்திரம் பெறுநரின் பொறுப்பாகும்.

20. தலைவரினால் அல்லது தலைவரின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரால் ஏதேனும் அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் தயாரிக்கப்படும் அல்லது விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள

ஏதேனும் மாதிரியொன்றை, அதற்கான விலை கொடுத்து பெற்றுக்கொள்ளல் சட்டரீதியானதாக அமையுமென்பதோடு, எந்தவோர் அனுமதிப்பத்திரம் பெறுநராலும் அத்தகைய கொள்வனவை நிராகரித்தல் அல்லது தடை செய்தல் ஆகாது.

21. துலைவர் அல்லது தலைவரால் அவ்வேலைக்காக அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் சிற்றுண்டிச்சாலையினுள் பிரவேசித்து பரீசீலனை செய்தல் சட்டமுறையானதென்பதுடன், அவ்விடத்திற்குள் பிரவேசித்து பரிசீலனை செய்வதற்கு அனுமதிப்பத்திரம் பெறுநர் அல்லது அதற்கு பொறுப்பாக உள்ள எவரேனும் ஒருவர் அதற்கு இடமளித்தல் வேண்டுமென்பதோடு தேவையான அனைத்து ஒத்துழைப்பையும் வழங்குதலும் வேண்டும்.

22. இத்துணைவிதியின் கீழ் குறிப்பிடப்பட்ட சட்டதிட்டங்கள் சிற்றுண்டிச்சாலையினுள் மீறப்பட்டுள்ளதென்றும், அவை மீறப்பட்டுள்ளதென தலைவரினால் அறிவித்தலொன்றைப் பெற்றுக்கொண்ட எவரேனும் அனுமதிப்பத்திரம் பெறுநரால் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிட்டுள்ள தினம் அல்லது நீடிக்கப்பட்ட தினத்திற்கு முன்னர் அவ்வறிவித்தலில் பணிக்கப்பட்டுள்ளவாறு செயற்படுவதை தவறவிட்டுள்ள சந்தர்ப்பத்தில், அவ்விடத்திற்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமானது தலைவரினால் இரத்துச்செய்யப்படுதல் சட்டமுறையானதாதல் வேண்டும்.

23. இத்துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவோரு பிரிவையும் மீறும் வகையில் செயற்படுதல் அல்லது துணைவிதிகளின் கீழ் தலைவரின் பணிப்புக்களுக்கு முரணாக நடத்தல், அத்துணைவிதிகளின் கீழ் குற்றமாகக் கருதப்படுவதோடு, அவ்வாறு குற்றம் புரிந்த ஒவ்வொரு நபரும் அக்குற்றம் தொடர்பாக இவற்றுக்கு அதிகாரமுடைய நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்ட பின்னர் 1987 ஆம் இலக்க 15 வது பிரதேச சபை சட்டத்தின் 122 வது பந்தியின் பிரகாரம் தண்டனைக்குள்ளாதல் வேண்டும்.

24. பதங்கள் சம்பந்தமாக வேறு பொருள் கோடல் அவசியப்பட்டாலேயொழிய இப்பகுதிக்கான துணைவிதிகளில் -

‘‘தலைவர்’’ என்பது பிரதேச சபையின் தலைவர் என்பதையும்,

‘‘அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்’’ என்பது, தலைவரினால் எழுத்து மூலமாக குறித்த கருமத்திற்காக அதிகாரம் கையளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தர் ஒருவரையும்,

‘‘சிற்றுண்டிச்சாலை’’ என்பது நியாயாதிக்க பிரதேசத்தினுள் அமைந்துள்ள தங்குமிடங்கள் வழங்காததும், வாடிக்கையாளர்களுக்காக தயாரிக்கப்படுகின்ற உணவுகள் அல்லது சமைத்த உணவுகளை பாவனைக்காக பணம் செலுத்தி பெற்றுக் கொள்வதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுத்த அனைத்து சாப்பாட்டுக்கடை, சிற்றுண்டிச்சாலை, தேநீர் அல்லது கோப்பிக் கடையையும்

குறிக்கும்.

## XXIII. வன விலங்குகள் மற்றும் காட்டுப் பறவைகள் தொடர்பான துணைவிதிகள்

1. 1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 126ஆவது பந்தியின் (xi)(உ) உபபந்தியின் கீழ் இத்துணைவிதிகளை உருவாக்குவதற்குப் பிரதேச சபைகளுக்கு அதிகாரம் கிடைத்துள்ளது

2. சுற்றாடலின் அழகையும் சமச்சீர் தன்மையையும் பாதுகாப்பதன் வழியாக சிறந்த வாழ்க்கையைக் கட்டியெழுப்புதல் மற்றும் வாழ்க்கை நிலைகளை மேம்பாடடையச் செய்யும் சபையினது கடமைப்பொறுப்புக்களுள், வன விலங்குகள் மற்றும் காட்டுப் பறவைகளைப் பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல் மூலம் பங்களிப்பைச் செய்வதற்காக இருக்கின்ற துணைவிதிகளாகும்.

3. வன விலங்குகளையும் பறவைகளையும் கொல்லுதல், அவற்றைப் பிடித்தல், அவற்றை வளர்த்தல் அல்லது அவற்றைச் சித்திரவதை செய்தல் என்பனவற்றைத் தடுப்பதற்காகவும் அவைகளின் உயிர்வாழ்க்கைக்கு பாதிப்புக்களை ஏற்படுத்துவதைத் தடுப்பதற்காக இத்துணைவிதிகள் விதிக்கப்படுகின்றன.

4. இத்துணைவிதிகளானது வன விலங்குகள் மற்றும் காட்டுப் பறவைகள் தொடர்பான துணைவிதிகள் என அழைக்கப்படும்.

5. 2009ஆம் ஆண்டு 22ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் திருத்தஞ் செய்யப்பட்ட வனவிலங்குகள் மற்றும் வன விருட்சங்கள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் அடிப்படையில் வனசீவராசிகள் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட அனுமதிப்பத்திரமொன்று இல்லாது பிரதேச சபை நியாயாதிக்கப் பிரதேசத்தினுள் எந்தவொரு நபராலும் வனவிலங்கொன்றை அல்லது காட்டுப் பறவையொன்றைக் கொண்டு செல்லுதல், கொல்லுதல், பிடித்தல், அவற்றைச் சித்திரவதை செய்தல் அல்லது அவற்றிற்குத் தடைகளை ஏற்படுத்துதல் கூடாது.

6. மேலே 5ஆம் பந்தியின் கீழ் ஏதேனும் செயலொன்றைச் செய்கின்ற ஒவ்வொரு நபர் தொடர்பாகவும் தலைவர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் வனசீவராசிகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவித்து பொருத்தமான வகையில் நடவடிக்கை எடுத்தல் சட்டரீதியானதாகும்.

7. எந்தவொரு வனவிலங்கினதும் அல்லது பறவையினதும் கூட்டினை, குட்டிகளை, குஞ்சுகளை அல்லது முட்டைகளைக் கொண்டு செல்லுதல், அழித்தல், அல்லது தம்மிடம் வைத்திருத்தல் எந்தவொரு நபராலும் செய்யப்படுதல் கூடாது.

8. வனவிலங்கிற்கு அல்லது காட்டுப் பறவைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் விதத்தில் எந்தவொரு நபராலும் துப்பாக்கிகள், கவண் அல்லது வேறு ஆயுதங்களைப் பற்ற வைத்தல் அல்லது பயன்படுத்துதல் கூடாது.

9. ஏதேனும் வீட்டுத் தோட்டமொன்றில், பொது இடமொன்றில், நதிகள், ஓடைகளில், குளங்களில் அல்லது விவசாய நிலங்களில் மனிதருக்கு தீங்கிழைக்கின்ற அல்லது ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய விதத்தில் வனவிலங்கொன்று அல்லது பறவையொன்று நடமாடித் திரிந்தால், எந்தவொரு நபரும் அவ்விலங்கு தொடர்பாகப் பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கும் பொருட்டு அதனைப் பற்றி வனசீவராசிகள் திணைக்களத்தின் அதிகாரியொருவருக்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

10. இத்துணைவிதியின் எந்தவொரு பந்தியேனும் மீறப்படும் வகையில் செயற்படுதல் தவறாகும் என்பதுடன், அத்தகையை தவறைச் செய்கின்ற அனைத்து நபர்களும், அத்தவறு தொடர்பாக உரிய அதிகாரத்தினைக் கொண்டுள்ள நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டதன் பின்னர் 1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122ஆம் பந்தியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தண்டனைக்கு உட்படுதல் வேண்டும்.

11. பதங்கள் தொடர்பாக பிற அர்த்தங்கள் அவசியப்பட்டாலொழிய, இத்துணைவிதிகளில்;

> ‘‘தலைவர்’’ என்பது, அக்காலப்பகுதியில் பிரதேச சபையில் தலைவர் பதவியை வகிக்கும் நபரையும்;
>
> ‘‘அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்’’ என்பது பிரதேச சபையின் தலைவரால் எழுத்து மூலமாக அதிகாரம் அளிக்கப்பட்ட எந்தவொரு உத்தியோகத்தரையும் ;

குறிக்கும்.

## XXIV. தொற்று நோய் மற்றும் தொடுகை நோய் பற்றிய துணை விதிகள்

1. 1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 126ஆவது பந்தியின் (ix)(...) பந்தியின் கீழ் இத்துணைவிதிகளை உருவாக்குவதற்குப் பிரதேச சபைகளுக்கு அதிகாரம் கிடைத்துள்ளது.

2. பொதுமக்களது சுகாதாரம் மற்றும் மகிழ்ச்சிகரமான வாழ்க்கை முறைகளை விருத்தியடையச் செய்வதற்காகவும் பாதுகாப்பதற்காகவும் சபைக்கு உள்ள கடமைப்பொறுப்புக்களை நிறைவேற்றும் போது தொற்றுநோய், பரவும் நோய், ஆண்டு முழுவதும் தோன்றக்கூடிய நோய், மற்றும் தொடுகை நோய் என்பனவற்றைத் தடுத்தல், ஒழித்தல் மற்றும் அந்நோய் தாக்கத்தின் காரணமாக இறந்து போன நபர்களை உடனடியாக அடக்கம் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்காக விதிக்கப்படுகின்ற துணைவிதியாகும்.

3. இத்துணை விதிகள் பிரதேச சபை நியாயாதிக்க பிரதேசத்தினுள் தொற்று நோய், தொடுகை நோய் தொடர்பான துணை விதிகளெனக் கருதப்படும்.

4. தொற்று நோய் அல்லது தொடுகை நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக வைத்திய அதிகாரியினால் உறுதிப்படுத்தப்பட்ட நபரொருவரை, அவர் வசிக்கின்ற வீட்டிலிருந்து அல்லது வசிக்கின்ற இடத்திலிருந்து உடனடியாக வெளியேற்றி ஏதேனும் வைத்தியசாலைக்கோ அல்லது சிகிச்சை நிலையத்திற்கோ அனுப்புமாறு சுகாதார வைத்திய அதிகாரி அல்லது அரசாங்க வைத்திய அதிகாரி விதிக்கும் பட்சத்தில் அவ்வீட்டில் அல்லது இடத்தில் வசிக்கின்ற நபர்கள் அல்லது பொறுப்பாளர்கள் அல்லது பிரதான குடியிருப்பாளர் அக்கட்டளையின் பிரகாரம் உடனடியாக செயற்படுதல் வேண்டும்.

5. மேலே 4ஆம் பந்தியின் கீழ் விதிக்கப்பட்டுள்ள வைத்தியசாலை அல்லது சிகிச்சை மத்திய நிலையம், நோய் தடுப்பு நிலையங்களின் கீழ் வைத்தல் வேண்டும்.

6. மேலே 4ஆம் பந்தியின் கீழ் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வைத்தியசாலைக்கு அல்லது சிகிச்சை நிலையத்திற்கு அதன் பிரதான வைத்திய அதிகாரியின் அனுமதியுடன் அன்றி, சுகாதார திணைக்களத்தின் அல்லது வைத்திய ஆளனியைச் சாராத எந்தவொரு நபரும் அந்த இடத்திற்குள் பிரவேசித்தல் கூடாது.

7. தொற்று நோய் அல்லது தொடுகை நோயினால் பீடிக்கப்பட்டுள்ள அல்லது அந்நோயிலிருந்து குணமடைந்து வருகின்ற நோயாளிகளுக்கென ஒதுக்கப்பட்டுள்ள குளிக்கும் இடங்களில் அன்றி வேறு எந்தவொரு இடத்திலும் குளிப்பதற்கு அந்நபர்களுக்கு இடமளித்தல் கூடாது.

8. தொற்று நோய் அல்லது தொடுகை நோய்களினால் பீடிக்கப்பட்டுள்ள அல்லது சிகிச்சை பெற்று வருகின்ற நபரொருவர் பொது குளிக்கும் இடங்களில் குளித்தல், கழுவுதல், அல்லது அங்குள்ள தண்ணீரைப் பயன்படுத்துதல் கூடாது.

9. வைத்தியசாலைகளில் அல்லது சிகிச்சை நிலையங்களில் சிகிச்சை பெற்றுவரும் எந்தவொரு நபரும் அவ்வைத்தியசாலையில் அல்லது சிகிச்சை நிலையங்களில் வைத்திய அதிகாரியின் விதப்புரையின் பேரில் அன்றி அவ்வைத்தியசாலையிலிருந்து அல்லது சிகிச்சை நிலையத்திலிருந்து விடுவித்தல் அல்லது அவ்வாறான நபரொருவருக்கு வெளியேறிச் செல்ல அனுமதித்தல் கூடாது.

10. தொற்று நோய் அல்லது தொடுகை நோய் பீடிக்கப்பட்டிருந்த ஒரு நபரை ஏதேனும் வீடொன்றிலிருந்து அல்லது ஒரு இடத்திலிருந்து வெளியேற்றியிருந்தால் அவ்வீட்டினை அல்லது கட்டிடத்தினை துப்பரவாக்கும் நடவடிக்கைக்காக 7 நாட்களுக்குக் குறையாத காலத்திற்கு நோய் தடுப்பின் கீழ் வைப்பதற்குத் தலைவருக்கு அல்லது பிரதேசத்தின் சுகாதார வைத்திய அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

11. மேலே 10ஆம் பந்தியின் அடிப்படையில் நோய்த் தடுப்பு நிலையங்களின் கீழ் வைக்கப்பட்ட இடத்திற்கு –

    i. வைத்திய அதிகாரியின் அனுமதியின்றி எந்தவொரு நபரும் உட்பிரவேசித்தல் கூடாது.
    ii. எந்தவொரு நபரும் உட்பிரவேசிப்பதைத் தடுப்பதற்காக அதனை வேலியினால் மூடுவதற்கு தலைவருக்கு அல்லது சுகாதார வைத்திய அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

12. மேலே 10ஆம் பந்தியின் கீழ் நோய்த்தடுப்பு செய்யப்பட்ட வீட்டில் அல்லது கட்டிடத்தில் வசிக்கின்ற நபர்களை நோய்த்தடுப்பு காலவரையறைக்குள் பராமரிக்கின்ற செலவுகளை சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் பிரதேச சபை பொறுப்பேற்றல் வேண்டும்.

13. மேலே 10ஆம் பந்தியின் கீழ் அல்லது 5ஆம் பந்தியின் கீழ் நோய்த்தடுப்பிற்கென ஒதுக்கப்பட்ட இடத்திற்குள் பொதுமக்கள் ஒன்றுகூடுதல் அல்லது தரித்திருப்பதைத் தடைசெய்வதற்கு தலைவருக்கு அதிகாரம் உண்டு.
14. தொற்று நோய் அல்லது தொடுகை நோயினால் இறந்த நபரொருவரது சடலத்தை அந்நபர் மரணமடைந்து 24 மணித்தியாலத்திற்குள் அடக்கம் செய்வதற்கு அல்லது இறுதிக் கிரியைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

15. மேலே 14ஆம் பந்தியின் கீழ் அடக்கம் செய்யப்பட்ட சடலமொன்றினை 2 மீற்றருக்குக் குறைந்து ஆழத்தில் அடக்கம் செய்தல் கூடாது.

16. தொற்று நோய், தொடுகை நோய் பீடிக்கப்பட்டுள்ள அல்லது அண்மையில் குணமடைந்த எந்தவொரு நபரும் வைத்தியரால் வெளியே போகக்கூடாது என விதந்துரைக்கப்பட்ட காலப்பகுதி முடிவடையும்வரை பொது குளிக்கும் இடங்கள், ஹோட்டல்கள், சந்தைகள், சிற்றுண்டிச்சாலைகள், மதத்தலங்கள், பாடசாலை, அல்லது பொதுமக்கள் கூடும் இடங்களில் நடமாடித்திரிதல், அதற்குள் பிரவேசித்தல் அல்லது அங்கு எந்தவொரு நடவடிக்கையிலும் ஈடுபடுதல் கூடாது.

17. தொற்று நோய் அல்லது தொடுகை நோய் பரவுவதைத் தடுப்பதற்காக ஏதேனும் சிற்றுண்டிச்சாலைகள், பேக்கரி, ஹோட்டல், சாப்பாட்டுக்கடைகள், அல்லது கோப்பிக் கடைகள் அல்லது தயாரிக்கப்பட்ட அல்லது சமைக்கப்பட்ட உணவுகளை விற்கும் இடங்களை, குறிப்பிட்ட காலப்பகுதிக்கு மூடிவிடுமாறு அல்லது இறைச்சி, கோழி இறைச்சி அல்லது மீன் அல்லது ஏதேனும் உணவுப்பண்டமொன்றை விற்பனை செய்யவேண்டாமென தலைவருக்கு அல்லது சுகாதார வைத்திய அதிகாரிக்கு கட்டளை விதிக்க முடியும்.

18. தொற்று நோய் அல்லது தொடுகை நோய் பரவுதல், அவற்றைத் தடுத்தல், ஒழித்தல் மற்றும் நோய்த்தடுப்பிற்காக சிற்சில இடங்களை ஒதுக்குவதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக மக்களை அறிவுறுத்துதல், அதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல், மற்றும் பொதுமக்களது சுகாதாரத்திற்கு தேவையான கட்டளைகளை விதிப்பதற்கு தலைவருக்கு அல்லது சுகாதார வைத்திய அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

19. இத்துணைவிதிகளில் எந்தவொரு பந்தியும் மீறப்படுகின்றவகையில் செயற்படுதல் அல்லது இத்துணைவிதிகளின் கீழ் தலைவரால் செய்யப்படுகின்ற கட்டளைகளுக்கு அமையாது செயற்படுதல் என்பன, இத்துணைவிதிகளின் கீழ் குற்றமாவதுடன், அவ்வாறு குற்றமிழைத்த அனைத்து நபர்களும் அக்குற்றம் தொடர்பாக உரிய அதிகாரத்தினைக் கொண்ட நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டதன் பின்னர் 1987ஆம் ஆண்டு 15ஆம்

இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122ஆம் பந்தியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தண்டணைக்கு உட்படுதல் வேண்டும்.

20. பதங்கள் சம்பந்தமாக வேறு பொருள்கோடல் அவசியப்பட்டாலேயொழிய இப்பகுதிக்கான துணைவிதிகளில் -

"தலைவர்" என்பது, பிரதேச சபையின் தலைவர் என்பதையும்,

"அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்" என்பது, தலைவரினால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள சபையின் உத்தியோகத்தரையும்,

குறிக்கும்.

## XXV. தனிப்பட்ட கிணறுகளை அமைத்தல் தொடர்பான துணைவிதிகள்

1. 1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 126ஆவது பந்தியின் (xiii)(இ) உபபந்தியின் கீழ் இத்துணைவிதிகளை உருவாக்குவதற்குப் பிரதேச சபைகளுக்கு அதிகாரம் கிடைத்துள்ளது.

2. பொதுமக்களது சுகாதாரம் மற்றும் பாதுகாப்பை பேணுகின்ற விதத்தில் தனிப்பட்ட கிணறுகளை அமைத்தல் மற்றும் அவற்றைப் பராமரித்தல், முறைமைப்படுத்துதல் என்பவற்றுக்காக இத்துணைவிதிகள் விதிக்கப்படுகின்றன.

3. இத்துணைவிதிகளானது தனிப்பட்ட கிணறுகளை அமைத்தல் தொடர்பான துணைவிதிகள் என அழைக்கப்படும்.

4. தனியார் காணிகளில் குடிப்பதற்காக அல்லது குளிப்பதற்காக அல்லது வேறு வீட்டுத் தேவைகளுக்காக அல்லது வீட்டுத் தேவைகளல்லாத வர்த்தக நடவடிக்கைகளுக்காக நீரைப் பெற்றுக் கொள்வதற்காக கிணறுகளை அமைத்தல் மற்றும் அவற்றைப் பராமரித்தல் என்பவற்றை முறைமைப்படுத்தும் நோக்கில் அதற்கான அனுமதியைப் பெற்றுக் கொடுப்பதற்காக இத்துணைவிதிகள் விதிக்கப்படுகின்றன.

5. குடித்தல், குளித்தல் அல்லது வேறு ஏதேனும் வீட்டுத் தேவைகளுக்காக அல்லது விவசாய நடவடிக்கை தவிர்ந்த வர்த்தக அல்லது தொழிற்சாலை நடவடிக்கைகளுக்காக நீரைப் பெற்றுக் கொள்வதற்கு, பிரதேச சபையின் நியாயாதிக்கப் பிரதேசத்தினுள் தனிப்பட்ட கிணறுகளை அகழ்தல், மற்றும் அதனுடன் தொடர்புடைய நிருமாணிப்புக்களை மேற்கொள்ளுகின்ற அனைத்து நபர்களும் இத்துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து ஏற்பாடுகளையும் பின்பற்றுதல் வேண்டும்.

6. கிணறுகளை அகழ்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய நிருமாணப் பணிகளை மேற்கொள்ளுகின்ற அனைத்து நபர்களும், பிரதேச சபையிலிருந்து பெற்றுக்கொள்ளப்படவேண்டிய அனைத்து விண்ணப்பப்பத்திரங்களையும் பூர்த்திசெய்து சமர்ப்பிப்பதன் மூலம் பிரதேச சபையின் தலைவரது அனுமதியைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

7. கிணறுகளை அகழ்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற காணியானது பிரதேச சபைச் சட்டத்தின் 134ஆம் பந்தியின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசத்திற்குள் அமைந்திருப்பின், அக்காணியில் தற்போது உள்ள அனைத்துக் கட்டிடங்கள், வீடுகள், மலசலகூடங்கள், கிணறுகள், வடிகாண்கள், தொழிற்சாலைகள் போன்ற அனைத்து நிருமாணங்களதும் அமைவிடம் மற்றும் அமைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற கிணற்றினது அமைவிடம் என்பன குறிக்கப்பட்ட நில அளவைத் திட்டமொன்றினை, மேலே 6ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

8. கிணறுகளை அமைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற காணியானது பிரதேச சபைச் சட்டத்தின் 134ஆம் பந்தியின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்படாத பிரதேசத்திற்குள் அமைந்திருப்பின், அக்காணியில் தற்போது இருக்கின்ற வீடுகள், கட்டிடங்கள், மலசலகூடங்கள், கிணறுகள், தொழிற்சாலைகள் உள்ளிட்ட அனைத்து கட்டிடங்களதும் அமைவிடம் மற்றும் அமைக்க இருக்கின்ற கிணற்றினது அமைவிடம் என்பனவற்றைக் குறித்துக் காட்டுகின்ற அண்ணளவான திட்டமொன்றினை, மேலே 6ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

9. கிணற்றினை அகழ்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற காணி தொடர்பாக விண்ணப்பதாரருக்கு இருக்கின்ற உரிமை அல்லது கிணற்றினை அமைப்பதற்காக காணி உரிமையாளரால் விண்ணப்பதாரருக்கு விருப்பம் தெரிவித்து வழங்கப்பட்ட ஆவணத்தினை, மேலே 6ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். உத்தேசிக்கப்பட்டுள்ள கிணற்றினை அகழ்வதற்கு உரிய தொழிநுட்ப திட்ட விவரக்கூற்று

மற்றும் அளவுப்பட்டியலை பிரதேச சபை விதிக்கின்ற முறையில் தயாரித்து, விண்ணப்பப்பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

10. குடித்தல், குளித்தல் அல்லது வேறு ஏதெனுமொரு தேவைக்காக நீரை வழங்குவதற்காக அமைக்கப்பட்டுள்ள கிணறு அமைந்துள்ள காணியின் உரிமையாளர், குத்தகைதாரர் அல்லது வதிவிடதாரரால் -

    (அ) எத்தகைய தூரத்திலிருந்தும் மேற்புறமாக மழை நீர் அல்லது கழிவு நீர் ஒரேயடியாக கிணற்றுக்குள் வழிந்து செல்லுதல்;

    (ஆ)கிணற்றுக் கட்டிலிருந்து 5 மீற்றர் தூரத்திலிருந்து மழை நீர் கிணற்றிற்குள் கசிதல்; மற்றும்

    (இ) கிணறு அமைந்துள்ள காணியின் நில மட்டத்திலிருந்து 3 மீற்றருக்குக் குறைந்த ஆழத்திலிருந்து கிணற்றிற்குள் நீர் கசிதலைத் தடுத்தல்;

    தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

11. குடித்தல், குளித்தல் அல்லது வேறு வீட்டுத் தேவைகள் போன்றன தவிர்ந்த வேறு கைத்தொழில் அல்லது விவசாயத் தேவைகளுக்காக நீரைப் பெற்றுக் கொள்ளுவதற்கு உள்ள அனைத்துக் கிணறுகளும் அமைந்துள்ள காணியினது உரிமையாளர், பொறுப்பாளர், குத்தகைதாரர், அல்லது வதிவிடதாரரால் -

    (i) எந்தவொரு தூரத்திலிருந்தும் மேற்பாகமாக, மழைநீர் அல்லது கழிவு நீர் ஒரேயடியாக கிணற்றிற்குள் வழிந்தோடுவதைத் தடுப்பதற்காக;

    (ii) கிணறு அமைந்துள்ள காணியின் நில மட்டத்திலிருந்து ஒரு மீற்றருக்குக் குறையாத உயரத்தில் உள்ளவாறு, நிலையான பாதுகாப்புச் சுவரொன்றை அமைத்து, கிணற்றை முற்றாக மூடக்கூடிய விதத்தில் கொன்கிறீற் தட்டினால் மூடுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

12. எல்லாக் கிணறுகளிலிருந்தும் 30 மீற்றர் தூரத்திற்குள் அமைந்துள்ள அனைத்து நீர் வழிந்தோடும் வடிகாண்களும் அடிக்கடி துப்பரவு செய்யப்பட்டு பேணப்படுதல் வேண்டும்.

13. குடிப்பதற்கு நீரைப் பெற்றுக் கொள்ளும் அனைத்துக் கிணறுகளும் நில மட்டத்திலிருந்து ஆகக்குறைந்தது 1.5 மீற்றர் உயரத்தில் அமைந்த சுவரொன்றினால் கட்டப்பட

வேண்டியதுடன் அக்கிணறானது குளிப்பதற்காகப் பயன்படுத்தப்படுமாயின் சிறுவர்களும், மிருகங்களும் கிணற்றை அண்டிச் செல்லமுடியாத வகையில் பாதுகாப்பான வேலியினால் அல்லது சுவரினால் கட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

14. அனைத்துக் கிணறுகளும் ஆகக் குறைந்தது 6 மாதத்திற்கொரு தடவையாவது இறைக்கப்பட்டு துப்பரவாக்கப்படுதல் வேண்டும்.

15. குடிப்பதற்கு, குளிப்பதற்கு, அல்லது வேறு வீட்டுத் தேவைகளுக்காக நீரைப் பெற்றுக் கொள்ளும் அனைத்து கிணறுகளிலிருந்தும் 30 மீற்றர் தூரத்திற்குள் -

    (i) சேதன அல்லத அசேதனப் பசளைகள் அல்லது கழிவுகளை சேகரிக்கும் இடமோ; அல்லது

    (ii) தகர்ந்த அல்லது உடைந்த அல்லது திறந்து விடப்பட்ட காண் ஒன்றோ;

    நிருமாணிக்கப்படுதல், பேணிச் செல்லப்படுதல், அல்லது அவ்வாறு இருப்பதற்கு இடமளித்தல் கூடாது.

16. கிணற்றிலிருந்து நீரைப் பெற்றுக் கொள்வதற்கு துப்பரவற்ற வாளிகளை அல்லது பாத்திரங்களைப் பயன்படுத்துதல் கூடாது.

17. குடிநீரைப் பெற்றுக் கொள்ளும் எந்தவொரு கிணற்றிலிருந்தும் 4.5 மீற்றருக்குள் உடைகளைக் கழுவுதல், மிருகங்களைக் கழுவுதல் கூடாது.

18. உக்கிப் போகின்ற இலைகள், கிளைகள், பூக்கள், அல்லது காய்கள் கிணற்றிற்குள் விழுகின்றவாறு கிணற்றினது வாயை திறந்து வைத்திருத்தல் கூடாது.

19. இத்துணைவிதியின் 6ஆம் பந்தியின் கீழ் எந்தவொரு நபரும் விண்ணப்பப்பத்திரமொன்றை நகரசபைக்குச் சமர்ப்பித்து 21 நாட்களுக்குள் உரிய இடத்தை பரிசீலனை செய்து அறிக்கையொன்றைச் சமர்ப்பித்ததன் பின்னர் அதற்கான அனுமதியை வழங்குதல் அல்லது நிராகரித்தல் என்பன தலைவரால் செய்யப்படுதல் வேண்டும்.

20. ஏதேனும் மலசலகூட குழியொன்றில், கழிவு நீர் குழியில், நீர் வழிந்தோடும் குழியில், மிருகங்களது கொட்டில்களில், அல்லது கழிவு நீர் வழிந்தோடும் வாய்க்காலில் அல்லது வடிகாணில் இருந்து 30 மீற்றர் தூரத்திற்குள் கிணறுகளை அமைப்பதற்கான திட்டத்தினை அங்கீகரிக்கும் அல்லது அனுமதி வழங்கும் செயற்பாடானது பிரதேச சபையினால் செய்யப்படுதல் கூடாது.

21. நீரைப் பயன்பாட்டிற்கு எடுக்கின்ற கிணறொன்றை இறைக்குமாறு, துப்பரவாக்குமாறு, திருத்தஞ் செய்யுமாறு அல்லது மூடிவிடுமாறு, தலைவரால் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரால் கிணறு அமைந்துள்ள காணியின் உரிமையாளருக்கு, பொறுப்பாளருக்கு, குத்தகைதாரரருக்கு அல்லது வசிப்பவருக்கு எழுத்து மூலமான அறிவித்தலொன்றின் மூலம் அறிவிக்கப்பட முடியும். அவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்ட காலப்பகுதிக்குள் அதன் உரிமையாளர், பொறுப்பாளர், குத்தகைதாரர், அல்லது வதிவிடதாரர் அவ்வறிவித்தலின் அடிப்படையில் செயற்படுதல் வேண்டும்.

22. வெள்ளப்பெருக்கு, மண்சரிவு, தொற்று அல்லது வேறு ஏதேனும் அனர்த்த நிலைமைகள் காரணமாக ஏதேனும் கிணறொன்றை மூடிவிடுமாறு, துப்பரவாக்குமாறு, இறைக்குமாறு, அல்லது திருத்தஞ் செய்யுமாறு, அக்கிணறு அமைந்துள்ள காணியின் உரிமையாளருக்கு, பொறுப்பாளருக்கு, குத்தகைதாரரருக்கு, வசிப்பவருக்கு, பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியினால் அல்லது பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் அல்லது நகரசபையின் தலைவரால் கட்டளையிட முடியும். அவ்வாறு கட்டளையிடப்பட்ட நபர் உரிய காலப்பகுதியில் குறித்த நடவடிக்கையை பூர்த்தி செய்தல் வேண்டும்.

23. இத்துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கிணற்றினை அமைப்பதற்கு விண்ணப்பிக்கின்ற அனைத்து நபர்களும் காலத்திற்குக் காலம் நகரசபையின் பிரேரணைத் தீர்மானமொன்றின் மூலமாக விதிக்கப்பட்டு அரச வர்த்தமானியில் வெளியிடப்படுகின்ற பரிசோதனைக் கட்டணமொன்றைப் பிரதேச சபைக்குச் செலுத்துதல் வேண்டும்.

24. விவசாய நடவடிக்கைகள் அல்லது பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காக நீரைப் பெற்றுக் கொள்வதற்காக அமைக்கப்படுகின்ற கிணறுகளுக்கு இத்துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் ஏற்புடையதாகாது.

25. வைத்தியசாலைகள், பாடசாலைகள், அல்லது வழிபாட்டுத் தலங்கள், அல்லது அதன் உரிமையாளர், குத்தகைதாரர், அல்லது வதிவிடதாரர் மேலே 23ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட பரிசோதனைக் கட்டணத்தைச் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளார்.

26. இத்துணைவிதிகளில் எந்தவொரு பந்தியும் மீறப்படுகின்றவகையில் செயற்படுதல் அல்லது இத்துணைவிதிகளின் கீழ் தலைவரால் செய்யப்படுகின்ற விதிமுறைகளுக்கு அமைவாகச் செயற்படாமை குற்றமாவதுடன், அவ்வாறு குற்றமிழைத்த அனைத்து நபர்களும் அக்குற்றம் தொடர்பாக அதிகாரம் பெற்ற நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டதன் பின்னர் 1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122ஆம் பந்தியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தண்டனைக்கு உட்படுதல் வேண்டும்.

27. பதங்கள் சம்பந்தமாக வேறு பொருள் கோடல் அவசியப்பட்டாலேயொழிய இப்பகுதிக்கான துணைவிதிகளில் -

''தலைவர்'' என்பது, பிரதேச சபையின் தலைவரையும்,

''அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்'' என்பது, தலைவரினால் எழுத்து மூலமாக குறித்த கருமத்திற்காக அதிகாரம் கையளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தர் ஒருவரையும்,

குறிக்கும்.

## XXVI. பொதுச் சந்தைகளைக் கொண்டு நடாத்துதல் பற்றிய துணை விதிகள்

1. 1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 126ஆவது பந்தியின் (xiii)(இ) பந்தியின் கீழ் இத்துணைவிதிகளை உருவாக்குவதற்குப் பிரதேச சபைகளுக்கு அதிகாரம் கிடைத்துள்ளது

2. பிரதேச சபையினால் நிர்மாணிக்கப்பட்டு பேணிவரப்படுகின்ற பொதுச் சந்தையினை கொண்டு நடாத்துதல், ஒழுங்குமுறைப்படுத்துதல், விற்பனை செய்யும் பொருட்களை மேற்பார்வை செய்தல், பரிசோதித்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணைவிதிகளென இது எடுத்துக்காட்டப்படும்.

3. இத்துணைவிதிகள் பொதுச் சந்தைகளைக் கொண்டு நடாத்துதல் பற்றிய துணை விதிகளாகக் கொள்ளப்படும்.

4. பிரதேச சபையினால் நிருமாணிக்கப்பட்டு பேணிவரப்படுகின்ற எந்தவொரு பொதுச் சந்தையினதும் கட்டிடத்தில் -

    (1) எந்தவொரு கடையொன்றையும் பயன்படுத்துவதற்கு,

        I. இப்பகுதியின் துணைவிதிகளின் ஏற்பாடுகளின் கீழ் பிரதேச சபையுடன் கையொப்பமிடப்பட்ட குத்தகை ஒப்பந்தமொன்றிற்கு வந்துள்ள நபரொருவராக

அல்லது அவரது ஊழியரொருவராக அல்லது அவரது பிரதிநிதியொருவராக இருத்தல் வேண்டும்.

II. அந்நபர் இப்பகுதியின் துணைவிதிகளில் மற்றும் அதன் குத்தகை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்படுதல் வேண்டும்.

III. அந்நபர் ஒரு ஊழியர் அல்லது ஒரு பிரதிநிதியாக இருப்பின் அவரது பெயர் பிரதேச சபை அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(2) கடைக்கு வெளியிலுள்ள பகுதியில் அமைக்கப்பட்டுள்ள எந்தவொரு தட்டினையோ அல்லது நிலப்பகுதியினையோ பயன்படுத்துவதற்காக,

I. இப்பகுதியின் துணைவிதிகளின் கட்டளைகளின் கீழ் பிரதேச சபை அதிகாரத்தின் அடிப்படையிலோ அல்லது அதன் கீழோ வழங்கப்பட்ட, இங்கு 1ஆம் உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட செல்லுபடியான அனுமதிச் சீட்டினை வைத்திருப்பவர் அல்லது அவரது ஊழியர் அல்லது பிரதிநிதியாக இருத்தல் வேண்டும்.

II. இத்துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்படுதல் வேண்டும்.

III. ஒரு ஊழியர் அல்லது ஒரு பிரதிநிதியாக இருந்தால் அவரது பெயரை பிரதேச சபை அலுவலகத்தில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

5. நகர சபையினால் நிர்மாணிக்கப்பட்டு பேணிவரப்படுகின்ற ஏதேனும் பொதுச்சந்தை தொடர்பில் இந்த துணைவிதிகளின் கீழ் குறிப்பிடப்பட்ட பணிப்புக்களை பிரதேச சபை கடைப்பிடித்தல் வேண்டும்.

அதாவது அத்தகைய பொது சந்தையின் -

(1) நிரந்தரக் கட்டிடங்கள் அனைத்தும் செங்கற்களால், சீமெந்துக் கற்களால் அல்லது கபூக் கற்களால் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு சுவர்களின் உயரம் குறைந்த பட்சம் தரை மட்டத்தில் இருந்து 3 மீற்றர் உயரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) கூரை ஏதேனும் நிலையான பொருட்களினால் ஆக்கப்பட்டு முழுநிறைவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(3) உள்ளே இருக்கின்ற கடை அறைகளின் கூரைக்கு, உட்கூரை (சீலிங்) பொருத்தப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு அத்தகைய உட்கூரை தரை மட்டத்தில் இருந்து 2.85 மீற்றர் உயரத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.

(4) கட்டிடத்திற்கு உள்ளே கடை அறைக்கு முன்னால் குறைந்த பட்சம் 2.5 மீற்றர் அகலமுடைய கொரிடோரைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதோடு, ஒவ்வொரு கடை அறையும் கொரிடோருடன் தொடர்புபடுகின்ற இடத்தில், மடிக்கும் கதவு அல்லது பாகங்களாகக் கழற்றித் திறக்கக்கூடிய கதவினைக் கொண்டதாக இருத்தலும் வேண்டும்.

(5) கடை அறைகளைக் கொண்ட கட்டிடத்தின் சுவர்களின் வெளிப்புற எல்லையிலும் கொரிடோரின் வெளிப்புற எல்லையிலும் குறைந்த பட்சம் ஒரு மீற்றர் அகலமுடைய மேடை மதிலும், மழைநீர் வழிந்தோடுவதற்கான வடிகான்களும் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(6) கட்டிடத்தில் கடை அறைகளைக் கொண்ட பகுதிக்குப் புறம்பாக தற்காலிக வியாபாரிகளுக்கான கொட்டில்கள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(7) உள்ளே நிர்மாணிக்கப்படுகின்ற ஒவ்வொரு விற்பனைக் கொட்டிலும் செங்கற்களினால் அல்லது சீமெந்துக் கல்லினால் அல்லது கபூக் கல்லினால் நிர்மாணிக்கப்பட்ட சிறுமதிலின் மீது கொங்கிறீட் தகட்டினாலோ துருப்பிடியாத உலோகத் தகட்டினாலோ முழுநிறைவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். எவ்வாறாயினும் கொங்கிறீட் தகட்டினால் தட்டு முழுநிறைவு செய்யப்பட்டுள்ளவிடத்து அத்தட்டு, சாந்து பூசப்பட்டு சீமெந்தினால் மெருகூட்டப்பட்டோ அல்லது மாபிள் ஓடு பதிக்கப்பட்டோ இருத்தல் வேண்டும். அவ்வாறு விற்பனைக் கொட்டில்களை அமைக்க இயலாத ஏதேனும் சந்தர்ப்பத்தில், நிலத்தின் மீது தட்டையான இடப்பகுதிகள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அப்பகுதிகள் செங்கல்லினால், சீமெந்துக் கல்லினால் அல்லது கபூக் கல்லினால் முழுநிறைவு செய்யப்பட்டு சீமெந்து சாந்து பூசப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு ஒவ்வொரு பகுதியையும் பிரிக்கின்ற கோட்டுக் குறியீடுகள் வெள்ளை நிறத்தால் அடையாளம் இடப்பட்டிருத்தல் வேண்டும்.

(8) ஒவ்வொரு விற்பனைக் கொட்டிலினதும் பரப்பளவு குறைந்த பட்சம் இரண்டு சதுர மீற்றர்களுக்கு குறையாததாக இருத்தல் வேண்டும்.

(9) ஒவ்வொரு விற்பனைக் கொட்டிலையும் உள்ளடக்கக்கூடியதாக செங்கல்லினால் அல்லது சீமெந்துக் கல்லினால் அல்லது கல்வனைஸ் பண்ணப்பட்ட இரும்புக் குழாய்களினால் அல்லது பலப்படுத்தப்பட்ட அலுமினியக் குழாய்கள் இடப்பட்ட தூண்களின் மீது குறைந்த பட்சம் தரை மட்டத்தில் இருந்து 2.25 மீற்றர் உயரத்தைக் கொண்ட கூரை அமைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, தாழ்வாரம் குறைந்த பட்சம் தரை மட்டத்தில் இருந்து 2.1 மீற்றர் உயரத்தில் அமைந்திருத்தல் வேண்டும். அத்துடன் மேற்படி தூண்கள் செங்கல்லினால், சீமெந்துக் கல்லினால் அல்லது கபூக் கல்லினால் கட்டப்பட்டிருப்பின் சாந்து பூசப்பட்டு வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு கல்வனைஸ் பண்ணப்பட்ட இரும்பினால் முழுநிறைவு செய்யப்பட்டிருப்பின் அத்தூண்களில் வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டும்.

(10) ஒவ்வொரு கூரையும் நிலையான பொருளினால் ஆக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு மழைநீர் கீழே வழிந்தோடப் போதுமான குழாய்கள் பொருத்தப்பட்டிருத்தலும் வேண்டும். மழைநீர் வழிந்தோடும் குழாய்களில் நீர் தேங்கி நிற்காதவாறு இலைகள் அல்லது வேறு குப்பைகளை அகற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

(11) ஒவ்வொரு விற்பனைக் கொட்டிலையும் சுற்றி தரை மட்டத்தில் இருந்து குறைந்த பட்சம் ஒரு மீற்றர் அகலம் கொண்ட மேடைச் சிறுமதில் கட்டப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, மழைநீர் வழிந்து செல்லப் போதுமான வடிகான்கள் அமைக்கப்பட்டிருத்தலும் வேண்டும்.

(12) நேரடியாக உள்ளேயும் கூரை மீதும் விழுகின்ற மழை நீரும், மரக்கறி மற்றும் பழவகைகளைக் கழுவுவதற்காக ஒதுக்கியுள்ள இடத்தில் இருந்து அப்புறப்படுத்தும் நீரும் முறையாகப் பாய்ந்தோடப் போதுமான அளவில் வடிகான் தொகுதியொன்று அமைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய கழிவு நீர் தடையின்றிப் பாய்ந்து செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(13) வளவினுள்ளே பொது நீர்க்குழாய் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(14) மரக்கறி அல்லது பழவகைகளைக் கழுவுவதற்காக தனிவேறான இடம் ஒதுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(15) வியாபாரத்தின் தன்மைக்கேற்ப நீர் பாவிக்க வேண்டிய அவசியம் நிலவுகின்ற ஒவ்வொரு கடை அறைக்கும் ஒரு நீர் இணைப்பு வீதம் வழங்கப்படல் வேண்டும். அத்தகைய ஒவ்வொரு நீர் இணைப்புத் தொடர்பிலும் வெவ்வேறான நீர்மானி வீதம் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, பொது நீர்க்குழாய் வாயிலிலும் மரக்கறி மற்றும் பழவகைகளைக் கழுவும் பொருட்டு ஒதுக்கப்பட்ட இடத்தின் நீர்ப் பாவனையை அளப்பதற்காகவும் தனிவேறான நீர்மானியொன்று வீதம் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(16) பாவனைக்கு எடுக்கின்ற நீர் மனித நுகர்வுக்குப் பொருத்தமானதென தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையினால் விநியோகிக்கப்பட்ட தரச் சான்றிதழ் பெறப்பட்டிருத்தல் மாத்திரமன்றி குறைந்த பட்சம் ஒவ்வோர் ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை வீதம் இத்தரச் சான்றிதழ் பெறப்படல் வேண்டும். இடத்தின் பாவனைக்காக தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையினால் வழங்கப்படுகின்ற நீரைப் பயன்படுத்துவதாயின் அத்தகைய தரச் சான்றிதழ் கிடைத்துள்ளதாகக் கருதப்படல் வேண்டும்.

(17) இடத்தின் கருமங்களுக்காக பாவிக்கப்படும் நீரைக் களஞ்சியப்படுத்தி வைத்திருப்பின் அவ்வாறு களஞ்சியப்படுத்தி வைக்கின்ற நீர் மாசடைவதைத் தடுக்கும் பொருட்டு போதியளவு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(18) ஆண்-பெண் இருபாலருக்கும் வெவ்வேறாக ஒதுக்கப்பட்ட மலசலகூடங்கள் போதுமான எண்ணிக்கையில் கட்டப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய ஒவ்வொரு மலசலகூடத்தினது தரைகளிலும், குறைந்த பட்சம் நிலமட்டத்தில் இருந்து இரண்டு மீற்றர் உயரம் வரை சுவர்களிலும் மாபிள் ஓடுகள் பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(19) பொது விற்பனை சந்தையில் இருக்கும் மலசலகூடங்கள் குறைந்த பட்சம் ஒரு நாளைக்கு மூன்று தடவையாவது கிருமிநாசினி கொண்டு கழுவி தூய்மையாக வைத்திருக்க வேண்டுமென்பதோடு, நீர் வழிந்தோடுவதற்காக அமைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு வடிகான்களும் குறைந்த பட்சம் ஒரு நாளைக்கு இரு தடவையாகிலும் கழுவிச் சுத்தம் செய்வதற்குத் தலைவரினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(20) எல்லாக் கடை அறைகளுக்கும், விற்பனைக் கொட்டில்களுக்கு அருகிலும், மலசலகூடங்கள் மற்றும் அலம்பகங்களுக்கு உள்ளேயும், கொரிடோர் உள்ளிட்ட பொதுப் பகுதிகளுக்கு உள்ளேயும் போதியளவு மின்சார வெளிச்சம் வழங்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு ஒவ்வொரு மின்சுற்றும் மின்காவற்கட்டுப் பொருளினால் ஆக்கப்பட்ட உறையினால் மூடப்பட்டிருத்தலும் வேண்டும்.

(21) ஒவ்வொரு கடை அறையிலும் மின்சார மானியொன்று வீதம் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, பொது இடங்களுக்கு ஒளியூட்டுவதற்காக செலவாகும் மின்சார அலகுகளின் எண்ணிக்கையை அளக்கும் பொருட்டு தனிவேறான மானியொன்று பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(22) உள்ளே போதுமான அளவில் தீப்பாதுகாப்பிற்கான வேலைத் திட்டம் வகுக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, மின்சாரம் காரணமாக தோன்றக்கூடிய தீ, எரிபொருள் மூலமாகத் தோன்றக்கூடிய தீ மற்றும் வேறுவிதமாகத் தோன்றக்கூடிய தீயைக் கட்டுப்படுத்த அவசியமான வெவ்வேறு வகையைச் சார்ந்த தீயணைப்புக் கருவிகள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(23) பொதுச் சந்தையில் பொருத்தப்பட்டுள்ள தீயணைப்புக் கருவிகளின் செயற்பாடுகள் முறையாக காணப்படுகின்றதா என குறைந்த பட்சம் ஒரு தடவையாவது பரீட்சித்துக் கொள்வதுடன் செயலிழந்த தீயணைப்புக் கருவிகளுக்குப் பதிலாக புதிய கருவிகளைப் பொருத்துவதற்குத் தலைவரினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(24) பாவனையாளர்களால் கொள்வனவு செய்யப்படுகின்ற பொருட்களின் நிறையை அளந்து உறுதி செய்துகொள்ளும் பொருட்டு பொதுவான நியம தராசு, அதற்காக ஒதுக்கப்பட்டதும் தெளிவாகப் புலப்படக்கூடியதுமான இடத்தில் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(25) பொதுச் சந்தையில் கடை அறைகளின் இட அமைவினைக் கருத்திற் கொண்டு நகர சபையினால் இறைச்சி, மீன், பழங்கள், சில்லறைச் சாமான்கள் மற்றும் பிற வர்த்தகப் பொருட்களை விற்பனை செய்வதற்காக சந்தையைப் பகுதிகளாகப் பிரித்து ஒதுக்குவதும் பிரதேச சபையின் கருமமாக அமைதல் வேண்டும்.

(26) துவிச்சக்கர வண்டிகளையும் மோட்டார் சைக்கிள்களையும் நிறுத்தி வைப்பதற்கான இடமொன்று அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(27) சந்தைக்கு வரும் வாடிக்கையாளர்களினது வாகனங்கள் மற்றும் பொருட்களின் போக்குவரத்தில் ஈடுபட்டுள்ள வாகனங்களை நிறுத்தி வைப்பதற்குப் போதுமான அளவில் இடவசதி ஒதுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(28) வளவில் பிறப்பிக்கப்படுகின்ற கழிவுப் பொருட்கள் -

(vi) உயிர்ச் சிதைவுக் கழிவுப் பொருட்கள்

(vii) கண்ணாடிப் பொருட்கள்

(viii) கடதாசியும் கடதாசி சார்ந்த பொருட்களும்

(ix) பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் அல்லது பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் சார்ந்த பொருட்கள் மற்றும் ரிஜிபோம்

(x) இரும்பு மற்றும் ஏனைய உலோகப் பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் ஏனைய உலோகப் பாகங்கள்

(xi) ஊறு விளைவிக்கக்கூடிய கழிவுப் பொருட்கள்

தனித்தனியாக சேகரிக்கக்கூடிய கிடங்குகளோ பாத்திரங்களோ அல்லது தொட்டிகளோ மேற்படி பொதுச் சந்தையில் தனிவேறான ஓரிடத்தில் அமைந்திருக்க வேண்டுமென்பதோடு, உயிர்ச் சிதைவுக் கழிவுப் பொருட்களை இடுவதற்காக அமைக்கப்பட்ட கிடங்குகள், பாத்திரங்கள் அல்லது தொட்டிகளுக்குள் பூனைகள், இலையான்கள், பிற பூச்சிகள் அல்லது ஏதேனும் பறவைகள் நுழைய இயலாத வண்ணம் நன்கு மூடக்கூடிய மூடியொன்றும் பொருத்தப்பட்டு இருத்தல் வேண்டும்.

(29) பொதுச் சந்தைக்கு வருகின்றவர்களால் அப்புறப்படுத்துகின்ற கழிவுப் பொருட்களை இடுவதற்காக (28) பந்தியில் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள அப்புறப்படுத்தல்களை இலகுபடுத்துகின்ற சிறிய அளவிலான பாத்திரங்களைப் பொதுச் சந்தையின் பொருத்தமான இடங்களில் வைக்கச் செய்வித்தல் மற்றும் பொதுச் சந்தையில் உள்ள ஏதேனும் கடை அறையொன்றின் குத்தகை பெறுநரோ ஏதேனும் வியாபாரக் கொட்டிலொன்றைப் பாவிக்க அல்லது கையாள்வதற்கு அனுமதிச் சீட்டினைப் பெற்றுள்ள எவரேனும் ஆளோ வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள கடை அறையில் அல்லது அதன் அருகில் அல்லது வியாபாரக் கொட்டிலில் அல்லது அதற்கு அருகில் பிறப்பிக்கப்படுகின்ற கழிவுப் பொருட்கள் அனைத்தையும் (28) பந்தியின் கீழ் வகைப்படுத்தப்பட்டு அத்தகைய

ஒவ்வொரு வகையினத்தையும் சேர்ந்த கழிவுப் பொருட்களை இடுவதற்காக நகர சபையின் தலைவரினால் அமைக்கப்பட்டுள்ள தனித்தனியான கிடங்குகளில் அல்லது பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில் இட வேண்டியது மேற்படி குத்தகை பெறுநரது அல்லது மேற்படி வியாபாரக் கொட்டிலில் அனுமதிச் சீட்டு பெற்றுள்ளவரினதும் வருகை தருகின்றவர்களதும் கருமமாக அமைதல் வேண்டும்.

(30) 28ஆம் பந்தியில் பணிக்கப்பட்ட விதத்தில் வைக்கப்பட்டுள்ள அனைத்து கிடங்குகள், பாத்திரங்கள், தொட்டிகளில் சேகரிக்கப்பட்ட கழிவுப் பொருட்களை ஆகக்குறைந்தது ஒருநாளைக்கு ஒரு தடவையாவது அல்லது தேவையேற்படின் அதற்கு மேற்பட்ட தடவைகளிலோ அவ்விடத்திலிருந்து அகற்றச் செய்தல் தலைவரது கடமையாகும். அவ்வாறே அக்கழிவுப் பொருட்களை அவ்விடத்திலிருந்து அகற்றும்போது கழிவுப் பொருட்களை ஏற்றிய பகுதியை முழுமையாக மூடிய ஒரு வாகனத்தில் கொண்டு செல்வதற்கும் உரிய நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும்.

(31) பொதுச் சந்தையில் உள்ள கடை அறையுள் அல்லது விற்பனைத் தட்டுகளில் விற்பனைக்காக அல்லது காட்சிக்காக வைக்கப்பட்டுள்ள விற்பனைப் பொருட்கள் பொதுமக்களது சுகாதாரத்திற்கு கேடுவிளைவிக்கக்கூடியதா அல்லது ஆபத்துக்களை விளைவிக்கக்கூடியதா என்பதை அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரை ஈடுபடுத்தி தேடிப்பார்த்து அவ்வாறு இல்லையென உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டியது தலைவரது கடமையாகும்.

(32) பொதுச் சந்தையில் உள்ள கடை அறையின் உட்சுவர் தவிர்ந்த ஏனைய சுவர்கள், அனைத்து விற்பனைக் கொட்டில்களும் சீமெந்தினால் சாந்து பூசப்பட்ட பகுதிகள், கல்வனைஸ் செய்யப்பட்ட இரும்பினால் முழுநிறைவு செய்யப்பட்டுள்ள நிர்மாணிப்புக்கள் மற்றும் கடை அறைகளின் உட்புறக் கூரையைத் தவிர்ந்த ஏனைய பகுதிகளை ஆகக்குறைந்தது வருடத்திற்கு ஒரு தடவையேனும் வர்ணப் பூச்சு பூசப்பட வேண்டியது சபைக்குப் பதிலாக தலைவரது கடமையாக அமைதல் வேண்டும்.

6. சபையினால் பேணப்பட்டு வருகின்ற பொதுச் சந்தை தொடர்பில் குத்தகைதாரர், விற்பனைக் கொட்டில் அல்லது தரையினைப் பயன்படுத்துவதற்கு அனுமதிச்சீட்டொன்றினைப் பெற்றுக் கொண்டுள்ள ஒரு நபர் அல்லது அவரது பிரதிநிதி அல்லது பொதுமக்கள் கீழே காட்டப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

(1) உள்ளே அநாகரீகமாக நடந்து கொள்ளுதல், கலகம் செய்தல், ஆபாசமான வார்த்தைகளைப் பிரயோகித்தல் அல்லது பிச்சை எடுத்தல்,

(2) அன்றாடப் பணிகளின் நிறைவின் போது சந்தையை மூடிவிட்ட பின்னர் அந்த வளவில் தரித்திருத்தல்,

(3) ஏதேனும் கட்டிடத்திற்கு, நிர்மாணிப்புக்கு, பொருத்தப்பட்டுள்ளவற்றுக்கு அல்லது அலங்காரத்தின் பொருட்டு வளர்க்கப்பட்டுள்ள மலர்ச்செடிகளுக்கு அல்லது பெயர்ப்பலகைக்கு அல்லது வேறு பொருட்களுக்கு சேதமேற்படுத்துதல், நட்டம் விளைவித்தல், அலங்கோலப்படுத்துதல் அல்லது உருக்குலைத்தல்,

(4) நீர் இணைப்பினை வழங்குவதற்காக கட்டிடத்திற்குள்ளே போடப்பட்டுள்ள பிரதான நீர்க்குழாயொன்றிலிருந்து வஞ்சகமான முறையில் நீர் இணைப்பினைப் பெற்றுக் கொள்ளுதல்,

(5) தலைவரால் முறைசார்ந்த வகையில் அனுமதி வழங்கப்பட்டாலொழிய தனது கடை அறையின் பெயர்ப்பலகை அல்லாத வேறு ஏதேனும் விதத்திலான விளம்பர அறிவித்தல் பலகையைப் பொருத்துதல், பதாதைகளைக் காட்சிப்படுத்துதல் அல்லது வேறு ஏதேனும் விதத்திலான பிரச்சாரப் பணியைச் செய்தல்,

(6) மின்சார இணைப்பு வழங்கப்பட்டுள்ள பிரதான ஆளிப் பலகையை நெருங்குவதில் தடையேற்படுத்தக்கூடிய விதத்தில் பொருட்களை வைத்தல் அல்லது பிரதான ஆளிப்பலகையை சேதப்படுத்துதல்,

(7) மின்சார இணைப்பினை வழங்குவதற்காக கட்டிடத்திற்குள்ளே போடப்பட்டுள்ள பிரதான மின்கம்பியிலிருந்து வஞ்சகமான முறையில மின் இணைப்பினைப் பெற்றுக் கொள்ளுதல்,

(8) பாவனைக்காக வழங்கப்பட்டுள்ள நீரை அசுத்தமாக்குதல், விரயமாக்கல், விரயமாக்க இடமளித்தல் அல்லது வேறு விதமாக விரயமாக்குதல் அல்லது அந்த நீரில் குளித்தல், துணிகள் அல்லது விலங்குகளைக் கழுவுதல் மற்றும் மரக்கறிவகைகளையும் பழங்களையும் கழுவுவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தைத் தவிர்ந்த வேறு ஏதேனும் இடத்தில் மரக்கறிகள் மற்றும் பழங்களைக் கழுவுதல்,

(9) கட்டிடத்தில் இணைக்கப்பட்டுள்ள தீயணைப்பு உபகரணங்களை நெருங்கமுடியாத வண்ணம் தடையேற்படுத்தக்கூடியதாக பொருட்களை வைத்தல் அல்லது பிரதான ஆளிப் பலகைக்கு சேதம் விளைவித்தல்,

(10) அக்கருமத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்திலன்றி எந்தவொரு வகையையும் சேர்ந்த மரக்கறி, இறைச்சி அல்லது மீன் விற்பனை செய்தல் அல்லது விற்பனைக்காக காட்சிக்கு வைத்தல் அல்லது அவ்வாறு செய்ய இடமளித்தல்,

(11) விற்பனை நிலையத்திற்குள் துவிச்சக்கர வண்டியையோ அலல்து மோட்டார் சைக்கிளையோ கொண்டு வருதலும் அவ்வாறு செய்ய இடமளித்தலும்,

(12) ஏதேனும் வியாபாரம் செய்யும் இடத்திலிருந்து அகற்றப்படுகின்ற கழிவுப் பொருட்களை 5ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு அமைய பிரதேச சபையினால் வழங்கப்பட்டுள்ள ஏதேனும் கிடங்கில் அல்லது தொட்டியில் அல்லாது பொதுச் சந்தையில் வேறு ஏதேனும் இடத்தில் இடுதல்,

(13) பொதுச் சந்தையில் வைக்கப்பட்டுள்ள கழிவுப் பொருட்களைச் சேகரிக்கின்ற எந்தவொரு பாத்திரத்திலும், கிடங்கிலும் அல்லது தொட்டியிலும் இடுவதற்கென குறித்தொதுக்கப்பட்டுள்ள வகையிலான கழிவுப் பொருட்களைத் தவிர வேறு வகையிலான கழிவுப் பொருட்களை அப்பாத்திரத்தில், கிடங்கில் அல்லது தொட்டியில் இடுதல்,

என்பன எந்தவொரு நபராலும் புரியப்படுதல் கூடாது.

(14) 5ஆம் பந்தியில் 28ஆம் உபபந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைகளின் கீழ் உயிர்ச்சிதைவுக் கழிவுப் பொருட்களை இடுவதற்காக வைக்கப்பட்டுள்ள கிடங்கில், அல்லது பாத்திரத்தில் அல்லது தொட்டியில் கழிவுப் பொருட்களை இடும் சந்தர்ப்பத்திலேயே அதன் மூடியை நன்றாக மூடி வைத்தல் வேண்டும்.

(15) 5ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் பொதுச் சந்தையில் எந்தவொரு கடை அறை அல்லது விற்பனைக் கொட்டிலைப் பயன்படுத்துகின்ற எந்தவொரு நபரும் நாளாந்தப் பணிகளின் ஆரம்பத்திலும் முடிவிலும், தேவைப்படின் அதற்கிடையிலான ஒரு தடவையில் அல்லது அதற்கு மேற்பட்ட தடவையில் அக்கடை அறையின் உள்ளே மற்றும் அதன் முன்புறமுள்ள கொரிடோர் மற்றும் மேடைச் சுவர் அல்லது விற்பனைக் கொட்டில் மீதும் மற்றும் அதனைச் சுற்றியும் கூட்டித் துப்பரவு செய்தல் மற்றும் அவ்வாறு கூட்டியதன் பின்னர் சேருகின்ற கழிவுகளை 5ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விதத்தில் பிரதேச சபையினால் வழங்கப்பட்டுள்ள கிடங்கில் அல்லது தொட்டியில் இடுதல் அல்லது இடச் செய்வதற்கு பொறுப்பாதல் வேண்டும்.

(16) பொதுச் சந்தையில் மரக்கறிகள், பழங்கள், இறைச்சி, மீன் அல்லது வேறு உணவு அல்லது பான வகைகளை விற்பனை செய்கின்ற அல்லது விற்பனைக்காக காட்சிப்படுத்துகின்ற ஒவ்வொரு கடை அறையும், விற்பனைக் கொட்டிலும், ஹோட்டல், சாப்பாட்டுக்கடை, சிற்றுண்டிச்சாலை உள்ளிட்ட தேநீர் அல்லது கோப்பிக் கடை என்பன தமது அன்றாடப் பணிகள் நிறைவடைந்ததன் பின்னர் அத்தகைய வியாபார நிலையத்தில் விற்பனைக்காக பொருட்களைக் காட்சிப்படுத்துகின்ற ஒவ்வொரு கடை அறை மேசை, வாங்கு, பொருட்களை வைக்கும் பலகை, அலுமாரி என்பனவற்றை சந்தர்ப்பத்திற்கேற்ற வகையில் கழுவ வேண்டியதோ, சுரண்டிச் சுத்தம் செய்யவேண்டியதோ அவ்வாறு செய்விக்க வேண்டியதோ அத்தகைய இடத்தில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளவரின் பணியாக அமைதல் வேண்டும்.

(17) பொதுச்சந்தைக்கு உள்ளே அமைந்துள்ள ஹோட்டல், சாப்பாட்டுக் கடை, சிற்றுண்டிச்சாலை அல்லது தேநீர் அல்லது கோப்பிக் கடை அல்லாத வேறு எந்தவொரு இடத்திலும் சமைத்தல் எந்தவொரு நபராலும் செய்யப்படுதல் கூடாது.

(18) பொதுச் சந்தையில் கடை அறைகளுக்குப் புறம்பாக நிருமாணிக்கப்பட்டுள்ள ஏதேனும் வியாபாரக் கொட்டிலின் அன்றாடப் பணிகளின் இறுதியில் எந்தவொரு பண்டமோ, பொருளோ, கழிவுப் பொருளோ எவராலும் வைக்கப்படல் கூடாது.

(19) ஊன் அறுக்கும் கட்டளைச் சட்டத்தின் பணிப்புகளின் கீழ் முறைசார்ந்த அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொண்டுள்ள அல்லது ஊன் அறுக்கும் நிலையத்தில் கொல்லப்பட்ட ஏதேனும் விலங்கின் இறைச்சியாக அமைந்தாலொழிய எவரும் பொதுச் சந்தையில் இறைச்சி விற்கும் இடமொன்றில் சந்தைப்படுத்தவோ அல்லது சந்தைப்படுத்துவதற்காக காட்சிப்படுத்தவோ அல்லது களஞ்சியப்படுத்தவோ கூடாது.

(20) ஏதேனும் ஊனறுக்கும் நிலையத்தில், என்றாவது ஒரு நாள் இறைச்சிக்காக விலங்குகள் கொல்லப்படுவதை தடை செய்தோ அல்லது ஊனறுத்தல் கட்டளைச் சட்டத்தின் 17ஆவது பிரிவின் தத்துவங்களின் பிரகாரம் உரிய அதிகாரம் கொண்டவரால் கட்டளையொன்று வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டோ உள்ள சந்தர்ப்பத்தில் பொதுச்சந்தைக்கு உள்ளே பேணிவரப்படுகின்ற ஏதேனும் இறைச்சிக் கடையொன்றில் வியாபாரத்திற்காக இறைச்சியை வைத்திருத்தல் அல்லது வியாபாரத்திற்காக இறைச்சியை காட்சிப்படுத்துதல் அல்லது களஞ்சியப்படுத்துதல் கூடாது.

(21) எவரேனும் ஆளொருவரினால் பொதுச்சந்தை வளவினுள் நாய் அல்லது பூனை அல்லது வேறு ஏதேனும் விலங்கு அல்லது பறவையைக் கொண்டுவர இடமளித்தல் ஆகாது. இக்கட்டளையை ஏதேனும் பரிசோதனைக்காக எவரேனும் பொலிஸ் உத்தியோகத்தரால் உத்தியோகபூர்வ பொலிஸ் நாய் ஒன்றினை பொதுச்சந்தைக்குள்ளே கொண்டுவருவதைத் தடுப்பதற்கான கட்டளையெனக் கருதுதல் ஆகாது.

(22) பொதுச்சந்தையின் வியாபார நடவடிக்கைகள் நிறைவடைந்து பொதுச் சந்தையை முழுமையாக மூடிவிடுகின்ற சந்தர்ப்பத்திலும் பொதுச் சந்தையின் ஏதேனும் கடை அறையை மூடிவிட்டு நீங்கிச் செல்கின்ற ஒவ்வொரு சந்தரப்பத்திலும் அத்தகைய கடை அறையின் மின்விளக்குகள், மின்விசிறிகள், மற்றும் பிற மின்சார உபகரணங்கள் அனைத்தையும் செயலிழக்கச் செய்விக்க வேண்டுமென்பதுடன் ஏற்றிவைக்கப்பட்ட ஏதேனும் தீ மற்றும் தேற்காய் எண்ணெய் விளக்குகளை அணைக்க வேண்டியது குத்தகைதாரரின் கடமையாகும். ஆயினும் உணவு அல்லது பான வகைகளை நீண்ட காலம் பேணிப் பாதுகாப்பதற்காகப் பாவிக்கின்ற குளிர்சாதனப் பெட்டிகளோ மிகை குளிர்சாதனப் பெட்டிகளோ இதன் கீழ் உள்ளடக்கப்படலாகாது. அத்துடன் பொதுச்சந்தையின் பாதுகாப்புக்கு மேலும் அச்சுறுத்தலாக அமையக் கூடிய ஏதேனும் வகையிலான தீச்சுடரை ஏற்றிவைத்தலோ அல்லது எரியச் செய்வித்தலோ அல்லது பொதுச் சந்தை வளவினுள்ளே எந்தவோர் இடத்திலும் பட்டாசு கொளுத்தலோ அல்லது கொளுத்தச் செய்வித்தலோ எவராலும் புரியப்படலாகாது.

(23) ஏதேனும் பொதுச் சந்தைக்கு வெளியில் உள்ள இடமொன்றில் இருக்கின்ற ஏதேனும் கழிவுப் பொருட்களை பொதுச் சந்தையில் பிறப்பிக்கப்படுகின்ற கழிவுப் பொருட்கள் இடப்படுகின்ற ஏதேனும் கிடங்கில், பாத்திரத்தில் அல்லது தொட்டியில் எவரேனும் இடுதல் கூடாது.

(24) கடை அறைகளின் உட்புறச் சுவர் நீங்கலாக ஏனைய சுவர்கள், கடை அறைகளில் உள்ளே கல்வனைஸ் பண்ணப்பட்டு இரும்பினால் முழுநிறைவு செய்யப்பட்ட நிருமாணிப்புகள் மற்றும் கடை அறைகளின் உட்கூரையை குறைந்தபட்சம் ஒரு வருடத்திற்கு ஒரு தடவையேனும் வர்ணப் பூச்சு பூச வேண்டியது மேற்படி கடை அறையின் குத்தகை பெறுநரது கடமையாக அமைதல் வேண்டும்.

(25) பொதுச் சந்தையில் ஏதேனும் விற்பனைக் கொட்டிலொன்றைப் பாவிக்க அல்லது கையாள 4ஆம் பந்தியின் கீழ் அனுமதிச்சீட்டினைப் பெற்றுள்ள எவரேனுமொருவரினால் அத்தகைய அனுமதிச்சீட்டினைக் கைமாற்றுதலோ அத்தகைய அனுமதிச்சீட்டு எந்த விற்பனைக் கொட்டிலுக்காக விநியோகிக்கப்பட்டுள்ளதோ அது தவிர்ந்த பிறிதொரு இடத்தில் வியாபாரம் செய்தலோ ஆகாதென்பதுடன், எவரேனும் அவ்வாறு செய்துள்ளார் என தலைவர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் திருப்தியடைந்துள்ளவிடத்து அவரை உரிய இடத்தில் வியாபாரத்திற்காக ஆற்றுப்படுத்த அல்லது அன்றைய நாளில் வியாபார நடவடிக்கையிலிருந்து தடுத்து பொதுச் சந்தையிலிருந்து நீக்க அல்லது அவருக்கு விநியோகித்துள்ள அனுமதிச்சீட்டை செல்லுபடியற்றதாக்க தலைவர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தருக்கு அதிகாரம் உண்டு.

(26) ஏதேனும் பொதுச் சந்தையில் கடை அறையினைக் குத்தகைக்கு எடுத்துள்ள எவரேனுமொருவராலோ ஏதேனும் விற்பனைக் கொட்டிலைப் பாவிக்க அல்லது கையாள்வதற்கான அனுமதிச்சீட்டினைப் பெற்றுள்ள எவரேனுமொருவராலோ தனது வியாபாரக் கருமங்களுக்காக ஒதுக்கிக் கொண்ட அத்தகைய கடை அறையின் அல்லது விற்பனைக் கொட்டிலின் இடத்தை அல்லது அதில் ஒரு பகுதியை ஏதேனும் பண்டங்கள் அல்லது பொருட்களை விற்பனை செய்யவோ அல்லது வியாபாரத்திற்காகக் காட்சிப்படுத்தவோ அல்லது வேறு ஏதேனும் கருமத்திற்காக எவருக்குமே இடமளித்தல் ஆகாது.

(27) பிரதேச சபையினால் முன்கூட்டியே தீர்மானித்துக் கொள்ளப்பட்ட கருமத்திற்காக அதிகாரம் வழங்கப்பட்டிருந்தாலொழிய எவராலும் பொதுச் சந்தையின் ஏதேனும் கடை அறையின் நிர்மாணத் திட்டத்தினை மாற்றியமைக்கின்ற அல்லது அத்திட்டத்திற்கு சேதம் விளைவிக்கின்ற வகையிலான எந்தவொரு நிர்மாணிப்பையோ அல்லது பொருத்துகையையோ அல்லது மாற்றத்தையோ அல்லது கூடு அமைத்தலையோ செய்தலாகாது.

(28) பிரதேச சபையினால் முன்கூட்டியே தீர்மானித்துக் கொள்ளப்பட்ட கருமத்திற்காக அதிகாரம் வழங்கப்பட்டிருந்தாலொழிய எவராலும் பொதுச்சந்தையின் ஏதேனும் விற்பனைக் கொட்டிலின் நிர்மாணத் திட்டத்தினை மாற்றியமைக்கின்ற அல்லது அத்திட்டத்திற்கு சேதம் விளைவிக்கின்ற வகையிலான எந்தவொரு நிர்மாணிப்பையோ அல்லது பொருத்துகையையோ

அல்லது மாற்றத்தையோ செய்தலாகாதென்பதுடன் பொதுச் சந்தைக்கு உள்ளே எங்கேனும் விற்பனைக் கொட்டிலை நிர்மாணித்தலோ கூடு அமைத்தலோ ஆகாது.

(29) விற்பனைக்காக பொதுச்சந்தைக்கு எடுத்துவரப்படுகின்ற ஏதேனும் பொருள் அல்லது உபகரணம் அல்லது வியாபாரத்திற்காகப் பாவிக்கப்படுகின்ற ஏதேனும் உபகரணம் அல்லது வேறேதும் ஒன்று, அத்தகைய பொருள், அல்லது பண்டம் சந்தைக்குள்ளே எடுத்து வருகின்ற வேளையிலோ அன்றி வேறு எச்சந்தரப்பத்திலும் ஏதேனும் கொரிடோரில் அல்லது மேடைச் சிறுமதில் மீது வைக்கப்படுதலோ அவ்வாறு செய்ய இடமளித்தலோ கூடாது.

(30) பொதுச் சந்தைக்குள்ளே ஏதேனும் கொரிடோர் மீதோ அல்லது மேடைச் சிறுமதில் மீதோ எவ்விதத்திலும் வியாபாரமொன்றை மேற்கொள்ளுதல் ஆகாதென்பதுடன், அத்தகைய கொரிடோர் அல்லது மேடைச் சிறுமதில் மீது பயணிக்கின்றவர்களுக்கு தடையேற்படக்கூடிய எந்தவொரு செயலையும் புரிதல் ஆகாது.

(31) பிரதேச சபையினால் தடைசெய்யப்பட்ட அல்லது விட்டுவிடப்பட்ட அல்லது வேறு ஏதேனும், எந்தவிதத்திலும் பொதுமக்களது சுகாதாரத்திற்கு ஆபத்தை விளைவிக்கக்கூடிய அல்லது தீங்கை விளைவிக்கக்கூடிய பொருளொன்றை தமது கடை அறையில் அல்லது விற்பனைக் கொட்டிலில் விற்பனைக்காக வைத்திருத்தல் அல்லது காட்சிப்படுத்தி வைத்திருத்தல் எந்தவொரு நபராலும் செய்யப்படுதல் கூடாது.

(32) ஏதேனும் நோய்த்தொற்று, தொடுகை அல்லது சரும நோயினால் பீடிக்கப்பட்டுள்ள அல்லது அத்தகைய நோயினால் அண்மையில் பீடிக்கப்பட்டிருந்த எந்தவோர் ஆளும் அல்லது அத்தகைய நோயினால் பீடிக்கப்பட்டிருந்த ஒருவருக்கு அண்மையில் பணிவிடை செய்வதில் ஈடுபட்டிருந்த எவரேனும் ஆளும் அத்தகைய நோய்த்தொற்று அல்லது நோய்விருத்திக் காலம் நிறைவடைந்திருந்தாலேயொழிய பொதுச் சந்தையில் எந்தவொரு விதத்திலுமான விற்பனையிலோ அல்லது அவ்வாறு விற்பனையில் ஈடுபட்டுள்ள ஒரு நபரது உதவியாளராகவோ ஈடுபடுதல் அல்லது ஈடுபடுத்துதல் அல்லது எந்தவொரு கருமத்திலும் ஈடுபட இடமளித்தல் கூடாது.

(33) நன்றாகக் கழுவிச் சுத்தம் செய்யப்பட்ட ஆடையை அணந்திருந்தாலன்றி எந்தவொரு நபராலும் பொதுச் சந்தையில் எந்தவிதத்திலுமான விற்பனையில் ஈடுபடுதல் அல்லது ஈடுபடுவதற்கு இடமளித்தல் கூடாது.

7. ஏதேனும் பொதுச் சந்தையில் வியாபாரத்திற்காக ஒதுக்கப்பட்ட இடத்தின் அளவு என்பது –

(1) கடை அறையினைப் பொறுத்தமட்டில், அத்தகைய கடை அறையின் பின்புறச் சுவரில் இருந்து 5ஆவது துணைவிதியின் (4)ஆம் உபபந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கதவு பொருத்தப்பட்டுள்ள எல்லை வரையான பகுதியாகவும்,

(2) வியாபாரக் கொட்டிலைப் பொறுத்தமட்டில், அத்தகைய வியாபாரக் கொட்டிலின் மேற்புறப் பரப்பளவு மற்றும் வியாபாரத்தில் ஈடுபடுகின்றவருக்கு இருப்பதற்காக இடமளிக்கப்பட்டுள்ள அத்தகைய வியாபாரக் கொட்டிலின் பின்புறமாக உள்ள நிலப்பகுதியெனவும்,

கருதப்படுதல் வேண்டும்.

8. பொதுச் சந்தைக் கட்டிடத்தின் கடை அறையொன்றினை குத்தகைக்கு விடும்போது:

(1) இறைச்சிக்கடை அல்லாத ஏதேனும் கடை அறையினை பாவிக்க அல்லது கையாள குத்தகை பெறுநரொருவரைத் தெரிவு செய்து மேற்படி கடை அறையினைத் தெரிவு செய்து, குத்தகை பெறுநருக்கு குத்தகை வழங்கும் பணியைப் பகிரங்கமான கேள்விப் பத்திரம் மூலம் கோரவேண்டியது பிரதேச சபையின் கருமமாக அமைதல் வேண்டும்.

(2) இங்கு 1ஆம் உபபந்தியின் கீழ் எந்தவொரு கடை அறையினையும் குத்தகைக்குக் கொடுப்பதற்கான கேள்விப்பத்திரங்களைக் கோரும்போது அக்கடை அறைக்காகச் செலுத்த வேண்டிய மாதாந்தக் குத்தகையைத் தீர்மானித்தலானது பிரதான விலை மதிப்பீட்டாளரது மதிப்பீட்டுக்கு அமைவாக இடம்பெறல் வேண்டும்.

(3) இங்கு 1ஆம் உபபந்தியின் கீழ் குத்தகைதாரர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கான கேள்விப்பத்திரம் கோரப்படவேண்டிய சந்தர்ப்பங்களாக;

(i) குத்தகை பெறுநரால் தனது சுயவிருப்பின் பேரில் குத்தகை உடன்படிக்கையை செல்லுபடியற்றதாக்கி உள்ளவிடத்து; அல்லது

(ii) இப்பிரிவின் துணைவிதிகளின் பணிப்புக்களை மீறுதல் அல்லது குத்தகை உடன்படிக்கையின் பணிப்புக்களை மீறியமை காரணமாக குத்தகை உடன்படிக்கை செல்லுபடியற்றதாக்கப்பட்டுள்ள அல்லது செல்லுபடியற்றதாகி உள்ளதாகக் கருதப்படுகின்றவிடத்து; அல்லது

(iii) ஏதேனும் குத்தகை பெறுநரின் வாழ்க்கைத்துணை அல்லது பிள்ளை இல்லாத நிலையில் குத்தகை பெறுநர் மரணமடைந்தவிடத்து;

கருதப்படவேண்டுமென்பதுடன், 12ஆவது துணைவிதியில் குறிப்பிட்ட பணிப்பின் பிரகாரம் எவரேனும் குத்தகை பெறுநரால் ஏதேனும் எதிர்வரும் ஆண்டுக்காக அத்தகைய குத்தகை உடன்படிக்கை புதுப்பிக்கப்படுவது மறுக்கப்பட்டிருப்பின் அல்லது அத்தகைய செல்லுபடியாகும் தன்மையை வேண்டுமென்றே தவிர்த்திருந்தாலொழிய நகர சபையும் அத்தகைய குத்தகை பெறுநரும் இணங்கி கைச்சாத்திட்ட குத்தகை உடன்படிக்கை செல்லுபடியற்றதாகிவிட்டதாகக் கருதப்படலாகாது.

9. 8ஆவது துணைவிதியின் பணிப்புக்களின் கீழ் பகிரங்க கேள்விப்பத்திரக் கோரல் மூலமாக ஏதேனும் கடை அறையைப் பாவித்தல் அல்லது கையாளலின் பொருட்டு தெரிவு செய்யப்பட்ட குத்தகை பெறுநர் பிரதேச சபையுடன் உடன்படிக்கையொன்றுக்கு வருதல் வேண்டும்.

10. 8ஆவது துணைவிதியில் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருப்பினும் இப்பிரிவின் துணைவிதிகள் வலுவுக்கு வருகின்ற திகதியாகும் போது பிரதேச சபைக்குச் சொந்தமாக உள்ள ஏதேனும் பொதுச் சந்தையில் ஒவ்வொரு கடை அறை சம்பந்தமாகவும் பிரதேச சபையுடன் இறுதியாகக் கைச்சாத்திட்ட உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குத்தகை பெறுநர் அத்தகைய வலுவுக்கு வரும் தினத்தில் இருந்து அமுலாக்கக்கூடியவாறு 8ஆவது துணைவிதியின் கீழ் அத்தகைய கடை அறையினைப் பாவிக்கவோ அல்லது கையாளவோ தெரிவு செய்யப்பட்ட குத்தகை பெறுநராகக் கருதப்படுவது சட்டமுறையானதாகும். அத்துடன் தொடர்ந்தும் இந்த துணைவிதி ஏற்புடையதாகின்ற எவரேனும் குத்தகை பெறுநர் இப்பிரிவின் துணைவிதிகள் வலுவுடையதாக வருகின்ற நாளில் இருந்து மூன்று மாத காலத்திற்குள் 9ஆது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள பணிப்புகளுக்கு அமைவாக புதிய குத்தகை உடன்படிக்கைக்கு வருதல் வேண்டும்.

11. எந்தவொரு குத்தகை ஒப்பந்தமும்:

(1) 9ஆவது மற்றும் 10ஆவது துணைவிதிகளின் பணிப்புக்களின் கீழ் நகரசபையுடன் கைச்சாத்திடப்பட்ட ஏதேனும் உடன்படிக்கை ஒரு வருட காலத்திற்காக மாத்திரம் வலுவுடையதாக இருத்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஒரு வருட காலம் நிறைவடைய ஒரு மாதத்திற்கு முன்னர் எதிர்வரும் ஆண்டுக்காக பிரதேச சபையுடன் புதிய உடன்படிக்கையைச் செய்து கொண்டதன் பின்னர் மேலும் ஒரு வருட காலத்திற்காக மேற்படி கடை அறையின் குத்தகைக் காலத்தைச் செல்லுபடியானதாக்கிக் கொள்ளலாம். அவ்வண்ணமே ஏதேனும் தொடர்ச்சியான வருடத்திற்காக மேற்படி கடை அறையின் குத்தகைக் காலத்தை வருடந்தோறும் செல்லுபடியாக்கிக் கொண்டு அக்கடை அறையைப் பாவிக்கவோ அல்லது கையாளவோ அத்தகைய குத்தகை பெறுநருக்கு உரிமை இருத்தல் வேண்டும்.

(2). 1ஆம் உபபந்தியின் கீழ் எவரேனும் குத்தகை பெறுநரினால் தொடரும் வருடத்திற்கான குத்தகைக் காலத்தை செல்லுபடியாக்கிக் கொண்டு அத்தகைய கடை அறையைப் பாவிக்கின்றமைக்காக அல்லது கையாளுவதற்காக அத்தகைய தொடரும் ஆண்டில் செலுத்த வேண்டிய மாதாந்த வாடகையை பிரதம விலை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டுக்கிணங்க தீர்மானிக்க வேண்டியது நகர சபையின் பணியாக அமைதல் வேண்டும்.

12. ஏதேனும் கடை அறையின் குத்தகைக் காலம் நிறைவடைகின்ற நாளில் இருந்து ஒரு மாதகாலம் கழிவதற்கு முன்னராக 11ஆவது துணைவிதியின் கீழ் எதிர்வரும் ஆண்டுக்காக குத்தகைக் காலத்தை நீடித்திருந்தாலோழிய எவரேனும் குத்தகை பெறுநருக்குப் பாவிக்க அல்லது கையாள

வழங்கப்பட்டுள்ள அத்தகைய கடை அறையை அந்த மாதம் முடிவடைகின்ற திகதிக்குப் பின்னர் பாவிக்கவோ கையாளவோ உரிமை இருத்தல் ஆகாது.

13. பொதுச் சந்தையின் ஏதாவது கடை அறையை எவரேனும் கீழ்க்குத்தகைக்கு எடுத்தலாகாது. எவரேனுமொருவரால் ஏதேனும் கடை அறையை கீழ்க் குத்தகைக்கு எடுத்ததன் காரணமாக அத்தகைய கடை அறையின் குத்தகை பெறுநருடன் பிரதேச சபை செய்துள்ள உடன்படிக்கை செல்லுபடியற்றதாக்கப்பட்டமை காரணமாகவும் அத்தகைய கடை அறை மீண்டும் நகரசபையினால் கையேற்கப்பட்டமை காரணமாகவும் அத்தகைய கீழ்க் குத்தகை பெறுநருக்கு விளைகின்ற ஏதேனும் நட்டம் அல்லது சேதம் அல்லது இழப்பு அத்தகைய குத்தகை பெறுநரையே சாரும் என்பதுடன் பிரதேச சபையோ அல்லது நகரசபையின் செயலாளரோ அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரோ அது தொடர்பான பொறுப்பு வகிக்க கடப்பாடு உள்ளவராக மாட்டார்கள்.

14. பிரதேச சபையினால் பேணிவரப்படுகின்ற ஏதேனும் பொதுச் சந்தையில் ஏதேனும் கடை அறையின் குத்தகை பெறுநரால் அத்தகைய கடை அறையை கீழ்க் குத்தகைக்கு விடுதலோ வாடகைக்கு விடுதலோ ஆகாதென்பதோடு, எவரேனும் குத்தகை பெறுநரால் அத்தகைய கடை அறை கீழ்க் குத்தகைக்கு விடப்பட்டோ அல்லது வாடகைக்கு விடப்பட்டோ உள்ளதாக அல்லது இப்பிரிவின் துணைவிதிகளின் பணிப்புக்களை அல்லது அத்தகைய கடை அறையைக் குத்தகைக்கு விடுவதுடன் தொடர்புடைய குத்தகை உடன்படிக்கையில் குறிப்பிட்டுள்ள பணிப்புக்களை மீறியுள்ளதாக திருப்தியுறக்கூடிய அளவுக்குப் போதுமான காரணங்கள் உள்ளதாக தலைவரால் அபிப்பிராயப்படுமிடத்து சம்பந்தப்பட்ட குத்தகை பெறுநருக்கு அது பற்றி எழுத்து மூலமாக விடயங்களை அறிவித்து அத்தகைய கீழ்க்குத்தகைக்கு வழங்கப்பட்டமையை அல்லது வாடகைக்கு விடப்பட்டமையை முடிவுறுத்துமாறு அறிவிக்க வேண்டியது தலைவரது பணியாக அமைதல் வேண்டும்.

15. இங்கு 14ஆம் துணைவிதியில் குறிப்பிட்டவாறான அறிவித்தல் கிடைக்கப்பெற்ற எந்தவோர் ஆளும் அத்தகைய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு எதிராக ஏதேனும் எதிர்ப்பினையோ, எதிர்ப்புக்களையோ தெரிவிக்கும் அளவுக்கு தம்வசம் விடயங்கள் இருப்பின் அத்தகைய அறிவித்தலின் திகதியில் இருந்து 14 நாட்களுக்குள் அத்தகைய எதிர்ப்பு அல்லது எதிர்ப்புக்கள் தொடர்பில் தம்மால் சமர்ப்பிப்பதற்கு உள்ள காரணங்களை எழுத்து மூலமாகக் குறிப்பிட்டு தலைவருக்கு மேன்முறையீட்டினைச் சமர்ப்பிப்பதற்கான உரிமை அத்தகைய குத்தகை பெறுநருக்கு உண்டு. அத்துடன் அத்தகைய குத்தகை பெறுநரால் எழுத்தில் முன்வைக்கப்பட்ட எதிர்ப்பு அல்லது எதிர்ப்புக்கள் உள்ளிட்ட விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ள அறிவித்தல் தலைவருக்குக் கிடைத்த தினத்தில் இருந்து 14 நாட்களுக்குள் அத்தகைய எதிர்ப்பு அல்லது எதிர்ப்புக்கள் பற்றிய விசாரணையொன்றை நடாத்துதல் தலைவரின் பணியாக அமைதல் வேண்டும்.

16. இங்கு 15ஆவது துணைவிதிக்கிணங்க எதிர்ப்புக்கள் தொடர்பாக தலைவரால் நடாத்தப்படுகின்ற விசாரணையின் போது 14ஆவது துணைவிதியின் பணிப்புக்களின் பிரகாரம் தலைவரால் அனுப்பப்பட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் சரியானவையென உறுதியாகியுள்ள

சந்தர்ப்பத்தில் அல்லது அத்தகைய எதிர்ப்புக்கள் தொடர்பான விசாரணைத் திகதி வரை அத்தகைய கீழ்க் குத்தகைக்கு விடுதல் அல்லது வாடகைக்கு விடுதலை சரிசெய்ய குத்தகை பெறுநர் தவறியுள்ள சந்தர்ப்பத்தில் நகரசபையுடன் அத்தகைய குத்தகை பெறுநர் கைச்சாத்திட்டுள்ள குத்தகை உடன்படிக்கை செல்லுபடியற்றதாகியுள்ளதாக கருதப்படல் வேண்டுமென்பதுடன் அத்தகைய எதிர்ப்பு தொடர்பான விசாரணை நடத்தப்பட்ட நாளில் இருந்து 7 நாட்களுக்குள் அத்தகைய கடை அறையினை நகர சபைக்குக் கையேற்க வேண்டியது தலைவரது பணியாக அமைதல் வேண்டும். அத்துடன் தொடர்ந்தும் மீளக் கையேற்கப்பட்ட ஏதேனும் கடை அறையை மீண்டும் குத்தகைக்குக் கொடுப்பதற்காக தலைவரால் 8ஆவது துணைவிதியின் பணிப்புக்கள் கடைப்பிடிக்கப்படுதல் வேண்டும்.

17. இங்கு 13ஆம் துணைவிதியில் இருந்து 16ஆம் துணைவிதி வரையான துணைவிதிகளில் எது எவ்வாறு குறிப்பிடப்பட்டிருப்பினும் பிரதேச சபைக்குச் சொந்தமான ஏதேனும் கடை அறையொன்றின் குத்தகை பெறுநரின் கோரிக்கையின் பேரிலோ குத்தகை பெறுநர் இறக்குமிடத்தோ அத்தகைய குத்தகை பெறுநரின் வாழ்க்கைத் துணைக்கு அல்லது பிள்ளைக்கு அத்தகைய கடை அறையின் உரிமையைக் கையளிப்பதற்கு அத்தகைய துணைவிதிகளின் பணிப்புக்கள் தடையாக அமையலாகாது.

18. (1) பிரதேச சபையினால் பேணப்பட்டு வருகின்ற ஏதேனும் பொதுச் சந்தையில் கடை அறையொன்றை பாவிக்க அல்லது கையாளத் தெரிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு குத்தகை பெறுநரும்,

i. குத்தகை பெறுநர்களைத் தெரிவுசெய்யும் பொருட்டு கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்ற தருணமாகின்ற போது பிரதேச சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ள பெறுமதியைக் கொண்டதும் மீளச் செலுத்தக் கூடியதுமான பிணை வைப்புத் தொகையினை,

ii. இங்கு 9ஆம் துணைவிதி அல்லது 10ஆவது துணைவிதியின் பணிப்பின் கீழ் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட மாதாந்த குத்தகை வாடகையைப் போல் மும்மடங்கிற்குச் சமமான வைப்புத் தொகையினை,

பிரதேச சபையில் வைப்புச் செய்தல் வேண்டும்.

(2) இங்கு 1ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட பணிப்புக்கள் அவ்வாறே பூர்த்தி செய்யப்பட்டிருந்தாலொழிய எவருக்கேனும் நகரசபையினால் பேணிவரப்படுகின்ற ஏதேனும் பொதுச்சந்தையில் கடை அறையொன்றைப் பாவிக்கவோ கையாளவோ இடமளித்தல் ஆகாது.

(3) இங்கு 10ஆவது துணைவிதி ஏற்புடையதாகின்ற எவரேனும் குத்தகை பெறுநர் அத்தகைய துணைவிதியில் குறிப்பிட்டவாறு பிரதேச சபையுடன் உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட நாளில் இருந்து ஆறு மாதங்கள் கழிவதற்கு முன்னர் 1ஆம் உப பந்தியின் பணிப்புக்களைப் பூர்த்தி செய்திருந்தாலேயன்றி அத்தகைய கடை அறையினைப் பாவித்தலோ கையாள்வதோ சட்டபூர்வமானதாக அமையாது.

19. எந்தவொரு குத்தகை பெறுநராலும்,

1. பொதுச் சந்தையின் ஏதாவது கடை அறைக்காக குத்தகை பெறுநரால் பிரதேச சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய ஒவ்வொரு மாதத்திற்குமான குத்தகை வாடகை செலுத்தப்பட வேண்டிய திகதி அத்தகைய கடை அறையை குத்தகைக்கு கொடுத்ததுடன் தொடர்புடைய உடன்படிக்கையில் திட்டவட்டமாக குறிப்பிடப்படல் வேண்டுமென்பதோடு, அத்தேதியன்றோ அதற்கு முன்னராகவோ அத்தகைய குத்தகைப் பணத்தை பிரதேச சபைக்குச் செலுத்த வேண்டியது குத்தகை பெறுநரது கருமமாகும்.

2. எவரேனும் குத்தகை பெறுநரால் 1ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டவாறு கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைக்கிணங்க உடன்பட்ட தினத்திலோ அல்லது அதற்கு முன்னரோ சம்பந்தப்பட்ட மாதாந்த குத்தகை வாடகையை நகரசபைக்குச் செலுத்தத் தவறுகின்ற சந்தர்ப்பத்தில் ஏற்புடைய மாதாந்த வாடகையின் நூற்றுக்குப் பத்து வீத தாமதக் கட்டணத்தைச் செலுத்த குத்தகை பெறுநர் கட்டுப்படுவதோடு அத்தகைய பணிப்பு சம்பந்தப்பட்ட உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிருத்தலும் வேண்டும்.

3. எவரேனும் குத்தகை பெறுநரால் பிரதேச சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய மாதாந்த குத்தகை வாடகை செலுத்தப்படாமல் தவறவிடப்பட்டுள்ளவிடத்து, அத்துடன் அத்தகைய நிலுவைக் குத்தகை வாடகை மூன்று மாதங்களை விஞ்சுகின்ற ஏதேனும் சந்தர்ப்பத்தில், இங்கு 4 மற்றும் 5ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதி விளைவுகளையும் குறிப்பிட்டு அத்தகைய நிலுவைத் தொகையையும் 2ஆம் உபபந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தாமதக் கட்டணத்தையும் செலுத்துவதைத் தொடர்ந்தும் தவறிவிடுவாரெனின் கடை அறைக்கு சீல் வைத்த பின்னர் அதிலுள்ள குத்தகை பெறுநருக்குச் சொந்தமான எந்தவோர் ஆதனத்தையும் விற்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்பதையும் அவ்வாறு செயலாற்றப் போகின்ற எதிர்காலத் திகதி யாதென்பதையும் அத்தகைய அறிவித்தலில் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

4. இங்கு 3ஆம் பந்தியின் கீழான அறிவித்தல் கிடைத்த எவரேனும் குத்தகை பெறுநர் தனக்கு அறிவித்தல் கிடைத்த திகதியில் இருந்து ஏழு நாட்களுக்குள் அத்தகைய நிலுவைக் குத்தகைப் பணத்தையும் தாமதக் கட்டணத்தையும் செலுத்தத் தவறின் சம்பந்தப்பட்ட கடை அறைக்கு சீல் வைக்க வேண்டியது செயலாளரது பணியாக அமைதல் வேண்டும்.

20. 19ஆம் பந்தியில் -

4ஆம் உபபந்தியின் பணிப்புக்களின் கீழ் செயலாற்றி, ஒருநாள் கழிந்த பின்னரும் ஏழு நாட்கள் கழிவதற்கு முன்னராகவும் ஏற்புடைய குத்தகை பெறுநரோ அல்லது அவரிடமிருந்து எழுத்துமூலமாக அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் முகவர் அந்த இடத்திற்கு வருகை தந்திருப்பின் அவரின் முன்னிலையிலும், குத்தகை பெறுநரோ அவரது முகவரோ வருகை தந்திராவிடின் பிரதேச சபையின் வேறு ஏதேனும் உத்தியோகத்தர்கள் இருவர் முன்னிலையிலும் அத்தகைய கடை அறையின் கதவு அல்லது கதவுகளுக்குப் பொறிக்கப்பட்ட சீலை உடைத்து

கதவுகளைத் திறந்து அத்தகைய கடை அறையில் உள்ள குத்தகை பெறுநருக்குச் சொந்தமான ஏதேனும் ஆதனத்தை பகிரங்கமாக விற்பனை செய்து அத்தகைய நிலுவைக் குத்தகைப் பணம், நிலுவைக் கட்டணம் ஆகியவற்றுடன் கடை அறையினை சீல் வைக்கவும், குத்தகை பெறுநருக்குச் சொந்தமான ஏதேனும் ஆதனத்தை விற்பனை செய்யவும் செலவாகிய ஏதேனும் பணத்தொகையை, அறவிட்டு நகர சபையின் நிதியத்திற்கு வரவு வைப்பதற்குமான அதிகாரம் செயலாளருக்கு இருத்தல் வேண்டுமென்பதோடு அவ்வாறு செய்வது சட்டமுறையானதாகவும் அமையும்.

21. 19 (4) உபபந்தியிலும் 20 பந்தியிலும் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருப்பினும், அத்தகைய பந்திகளில் குறிப்பிட்டவாறு செயலாற்றத் தயாராகும் ஏதேனும் சந்தர்ப்பத்திலோ அத்தகைய இரண்டு சந்தரப்பங்களுக்கிடையில் இடம்பெறுகின்ற எந்தவொரு சந்தரப்பத்திலும் அத்தகைய நிலுவைக் குத்தகைப் பணம், தாமதக் கட்டணம் மற்றும் அவ்வாறு செயலாற்ற முனைந்தமையால் அவ்வேளையாகும்போது பிரதேச சபைக்கு ஏற்றுக்கொள்ளப்பட நேர்ந்த ஏதேனும் பணத்தொகை இருப்பின் அப்பணத்தொகையையும் பிரதேச சபைக்குச் செலுத்துவதன் மூலம் 19(4) ஆம் உபபந்தி அல்லது 20ஆவது பந்தியில் குறிப்பிட்டவாறு செயலாற்றுவதை நிறுத்துவதற்கு, குத்தகை பெறுநருக்கு உரிமை இருத்தல் வேண்டுமென்பதோடு அத்தகைய பணத்தை முழுமையாக அறவிட்டுக் கொண்டதன் பின்னர் அவ்வாறு செயலாற்றுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டியது செயலாளரது பணியாக அமைதல் வேண்டும்.

22. இங்கு 19 (3)உபபந்தி மற்றும் 20, 21ஆம் பந்தியின் கீழ் அல்லது அவற்றின் ஒரு சிலவற்றின் கீழ் அல்லது அனைத்துப் பந்திகளின் கீழும் செயலாற்றியமை காரணமாக, அத்தகைய கடை அறையை குத்தகைக்குக் கொடுத்தலுடன் தொடர்புடையதாகக் கைச்சாத்திட்ட உடன்படிக்கை செல்லுபடியற்றதாகுதல் இடம்பெற்றுள்ளதாகக் கருதுதல் ஆகாது.

23. 21ஆவது உபபந்தியில் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருப்பினும் எவரேனும் குத்தகை பெறுநரால் ஏதேனும் கடை அறையின் குத்தகைப் பணம் செலுத்துதலைத் தவறவிட்டுள்ளமை காரணமாக ஒரு வருடத்திற்குள் 19 (4) பந்தியில் பணிக்கப்பட்ட விதத்தில் அத்தகைய கடை அறைக்கு சீல் வைக்கப்படுகின்ற இரண்டு சந்தர்ப்பங்களுக்குப் பிறகு தொடர்ந்தும் குத்தகைப் பணம் செலுத்துவதைத் தவறவிடுவாராயின், செயலாளரால் அதுபற்றி அத்தகைய குத்தகை பெறுநருக்கு கடிதம் மூலமாக அறிவித்தல் விடுக்க வேண்டுமென்பதுடன் அத்தகைய அறிவித்தல் குத்தகை பெறுநருக்கு கிடைத்த தினத்திலிருந்து பிரதேச சபையுடன் அத்தகைய குத்தகை பெறுநரால் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை செல்லுபடியற்றதாதல் வேண்டும்.

24. பொதுச் சந்தைக்குள்ளே ஒவ்வொரு கடை அறையும் சார்பில் பெறப்பட்டுள்ள நீர் இணைப்பு மற்றும் மின்சார இணைப்பு மூலமாக எவரேனும் குத்தகை பெறுநரால் நுகரப்படுகின்ற நீர் அலகுகளின் எண்ணிக்கை மற்றும் மின்சார அலகுகளின் எண்ணிக்கைக்காக மாதாந்தம் செலுத்தவேண்டிய விலைச் சிட்டைகளின் செலவுகளை அத்தகைய குத்தகையாளர் ஏற்க வேண்டும்.

25. பொதுச்சந்தை வளவில் பொதுவான பாவனைக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள ஏதேனும் மின்சுற்றில் இருந்தோ அல்லது பொது நீர்வழிக்குழாய் வாயில் மூலமாகவோ, கடை அறைக்கான மின்சார இணைப்பையோ நீர்வழங்கலையோ பெற்றுக் கொள்ளல் அல்லது அவ்வாறு பெற்றுக் கொள்ள இடமளித்தல் ஆகாது.

26. பொதுச் சந்தையில் விற்பனைக் கொட்டில்கள் அல்லது நிலத்தினைப் பயன்படுத்துவதற்காக அனுமதிச் சீட்டுக்களை வழங்கும் சந்தர்ப்பத்தில் கட்டணங்களை அறவிடும்போது;

(1) இங்கு 4ஆவது பந்தியின் கீழ் பொதுச் சந்தையின் கட்டிடமொன்றில் கடை அறைகளைக் கொண்ட பகுதிக்குப் புறம்பாக அமைக்கப்பட்டுள்ள விற்பனைக் கொட்டில்களுக்காக பிரதேச சபைக்குச் செலுத்த வேண்டிய கட்டணத்தை இங்கு இரண்டாம் உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணைக்கு ஏற்ப பிரதேச சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படுகின்ற விதத்தில் பணிக்க முடியும். அவ்விதத்திலேயே அக்கட்டணங்களை பிரதேச சபையினால் காலத்திற்குக் காலம் மாற்ற அல்லது திருத்தியமைக்க முடியும்.

(2) பொதுச் சந்தையின் கடை அறைகளைத் தவிர விற்பனைக் கொட்டில்களைப் பாவிக்க அல்லது கையாள வேண்டிய தேவை நிலவுகின்ற எவரேனும் ஆட்களுக்கு அனுமதிச் சீட்டுக்களை விநியோகிக்கவும் அத்தகைய அனுமதிச் சீட்டுகளுக்கான பணத்தை அறவிடவும் செயலாளரிடமிருந்து அதிகாரம் பெற்ற எவரேனும் உத்தியோகத்தரொருவரை ஈடுபடுத்த முடியும்.

I. அவ்வாறே எவரேனும் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரால் அத்தகைய அனுமதிச்சீட்டுக்களை விநியோகிப்பதன் மூலமாக தினந்தோறும் சேகரிக்கப்படுகின்ற பணம் அன்றைய தினத்தின் பிற்பகல் 3.00 மணிக்கு முன்னராக பிரதேச சபையின் பொது நிதியத்திற்கு வரவு வைக்கச் செய்வித்தல் அத்தகைய அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரின் பணியாக அமையும்.

II. ஏதேனும் தினமொன்றில் அத்தகைய அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரால் சேகரிக்கப்படுகின்ற பணம் நகரசபையின் பொது நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டதன் பின்னர் பொதுச் சந்தையில் அனுமதிச்சீட்டு விற்பனை மூலமாக சேகரிக்கப்பட்ட பணமேதும் இருப்பின் அது தொடர்ந்து வரும் வேலைநாளில் பிரதேச சபையின் பொது நிதியத்திற்கு வரவு வைக்கப்படல் வேண்டும்.

(3) பொதுச்சந்தையின் கடை அறைகளைத் தவிர்ந்த விற்பனைக் கொட்டில்களைப் பாவிக்கவோ கையாளவோ ஆட்கள் எவருக்கேனும் அனுமதிச்சீட்டுக்களை விநியோகித்தலும் அதற்காக பணம் சேகரித்தலும் தொடர்பில், 2ஆவது துணைவிதியில் பணிக்கப்பட்டவாறு செயலாளரின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரொருவர் ஈடுபடுத்தப்பட இயலாதெனின் அக்கருமத்தை பகிரங்க கேள்விப் பத்திரக் கோரல் மூலமாகத் தெரிவுசெய்யப்படுகின்ற (இங்கு இதன் பின்னர் ''கட்டணம் சேகரிப்பவர்'' என குறிப்பிடப்படுகின்ற) நபருக்கு வழங்குவதற்கு பிரதேச சபைக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும்.

(4) இங்கு 3ஆம் உபபந்தியின் கீழ் தெரிவு செய்யப்பட்ட எந்தவொரு கட்டணம் சேகரிப்பவருக்கும் அந்நடவடிக்கைகளை ஒப்படைப்பதற்கான காலப்பகுதி ஒரு வருடத்திற்கு செல்லுபடியானதாக இருக்கவேண்டுமென்பதுடன் தொடரும் வருடத்திற்காக மீண்டும் கேள்விப்பத்திரம் கோரல் மூலம் கட்டணம் சேகரிப்பவரைத் தெரிவு செய்தல் வேண்டும். ஆயினும் முந்திய வருடத்திற்காக தெரிவு செய்யப்பட்ட எவரேனும் கட்டணம் சேகரிப்பவருக்கு தொடரும் வருடத்திற்காக கேள்விப்பத்திர விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கவும் அத்தகைய கேள்விப்பத்திர விண்ணப்பத்தை ஏற்றுக் கொள்ள நகர சபை தீர்மானிக்குமேயானால் அவர் தொடரும் வருடத்திற்கான கட்டணம் சேகரிப்பவராக தெரிவு செய்யப்படவும், இத்துணைவிதிகளின் பணிப்புகளினூடாக தடுக்கப்பட்டுள்ளதாக கருதப்படுதல் ஆகாது.

(5) இங்கு 3ஆம் உபபந்தியின் பணிப்புகளுக்கு அமைய கட்டணம் சேகரிக்கும் நபரொருவர் தெரிவுசெய்யப்படின் அவர் -

I. அத்தகைய தெரிவு செய்யப்படுதலுக்கான கேள்விப்பத்திரம் கோரப்படுகின்ற சந்தர்ப்பத்தில் நகர சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ள பெறுமதியைக் கொண்டதும் மீளச் செலுத்தக்கூடியதுமான பிணை வைப்புத் தொகையை பிரதேச சபையில் வைப்புச் செய்யவும்,

II. அத்தகைய அனுமதிச்சீட்டு விநியோகித்தல் மற்றும் கட்டணம் சேகரித்தல் தொடர்பில் பிரதேச சபையுடன் உடன்படிக்கை செய்து கொள்ளவும்,

III. IIஆவது பந்தியின் பணிப்பின் கீழ் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையில் இணங்கியுள்ள வருடாந்தக் கட்டணத்தின் மூன்றிலொன்றுக்குச் சமமான அல்லது அதற்கு மேற்பட்ட வைப்புத் தொகையை பிரதேச சபையில் வைப்புச் செய்யவும்,

IV. இங்கு Iஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பணிப்புக்களை அதே விதத்தில் பூரணப்படுத்தியிருந்தாலன்றி எந்தவொரு நபருக்கும் பிரதேச சபையினால் பேணிச் செல்லப்படுகின்ற எந்தவொரு பொதுச் சந்தையிலும் உள்ள விற்பனைக் கொட்டில்களைப் பயன்படுத்துவதற்கு அல்லது கையாள்வதற்கு, நபர்களுக்கு அனுமதிச்சீட்டினை விநியோகிப்பதற்கு மற்றும் அவ்வனுமதிச் சீட்டுக்களுக்காக பணம் சேகரிப்பதற்கு இடமளித்தல் ஆகாது.

(6) இங்கு (1) ஆம் உபபந்தியின் பணிப்புக்களின் கீழ் ஏதேனும் பொதுச்சந்தையில் விற்பனைக் கொட்டிலைப் பாவிக்கவோ கையாளவோ நகர சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ள கட்டணத்தை விஞ்சிய அளவிலான கட்டணத்தை அல்லது கட்டணங்களை எந்தவொரு கட்டணம் சேகரிப்பவரும் அறவிடல் ஆகாது.

(7) இங்கு (5)ஆம் உபபந்தியின் (i) ஆம் பந்தியின் பணிப்புகளுக்கிணங்க எவரேனும் கட்டணம் சேகரிப்பவருடன் கைச்சாத்திடப்படுகின்ற உடன்படிக்கையில் -

1ஆம் பந்தியின் கீழ் அறிவித்தலொன்று கிடைக்கப்பெற்ற எந்தவொரு கட்டணம் சேகரிப்பவராலும் தனக்கு அந்த அறிவித்தல் கிடைத்து ஏழு நாட்களுக்குள் அத்தகைய நிலுவைப் பணத்தையும்

தாமதக் கட்டணத்தையும் பிரதேச சபைக்குச் செலுத்தத் தவறின், அத்தகைய அறிவித்தல் அவருக்குக் கிடைத்த தினத்தில் இருந்து ஏழு நாட்கள் கழிந்த நாளில் இருந்து அத்தகைய கட்டணம் சேகரிப்பவருடன் பிரதேச சபை கைச்சாத்திட்ட உடன்படிக்கை செல்லுபடியற்றதாக வேண்டுமென்பதுடன் அவ்வாறு செல்லுபடியற்றதாதல் சட்டமுறையானதாகும். அவ்வாறே அத்தகைய உடன்படிக்கை செல்லுபடியற்றதென கருதப்படுகின்ற தினத்திலேயே அத்தகைய கட்டணம் சேகரிப்பவருக்கு அதுபற்றி கடிதமூலமாக அறிவிக்க வேண்டியது செயலாளரின் பணியாதல் வேண்டும்.

1ஆம் பந்தியின் பணிப்புக்களின் கீழ் ஏதேனும் உடன்படிக்கை செல்லுபடியற்றதான தினத்தின் பின்னர் எந்தவொரு சந்தரப்பத்திலும் அத்தகைய உடன்படிக்கையின் ஒரு கட்சிக்காரரான கட்டணம் சேகரிப்பவரால் அத்தகைய பொதுச் சந்தையில் விற்பனைக் கொட்டிலைப் பாவிக்க அல்லது கையாள்வதற்காக எவரேனும் ஆளுக்கு அனுமதிச்சீட்டு விநியோகிக்கப்படுதலோ அத்தகைய அனுமதிச்சீட்டினை விநியோகித்தமைக்கான பணம் சேகிரிக்கப்படுதலோ ஆகாது.

2ஆம் பந்தயின் பணிப்புக்களின் கீழ் ஏதேனும் உடன்படிக்கை செல்லுபடியற்றதான தினத்திற்குப் பின்னர் அடுத்து வருகின்ற தினத்தில் இருந்து அத்தகைய பொதுச் சந்தையில் விற்பனைக் கொட்டில்களைப் பாவிக்கவோ, கையாள்வதற்கோ அனுமதிச்சீட்டுக்களை விநியோகிக்கவும் அத்தகைய அனுமதிச்சீட்டுக்களுக்காக பணம் சேகரிக்கவும் பிரதேச சபையின் எவரேனும் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரை ஈடுபடுத்த வேண்டியது செயலாளரது பணியாக அமைதல் வேண்டும். அத்துடன் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரொருவரைக் கொண்டு அப்பணியைத் தொடர்ந்தும் மேற்கொள்ள இயலாதென்பது செயலாளரது அபிப்பிராயமாகுமிடத்து 3ஆவது துணைவிதியில் குறிப்பிடப்பட்ட பணிப்புகளுக்கிணங்க செயலாற்றும் பொருட்டு தனது அபிப்பிராயத்தை தலைவர் ஊடாக பிரதேச சபைக்குச் சமர்ப்பிக்க வேண்டும். அவ்விதமான செயலாளரது அபிப்பிராயம் நகர சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் 3ஆவது துணைவிதியின் பிரகாரம் செயலாற்ற வேண்டுமென பிரதேச சபையினால் தீர்மானிக்கப்பட முடியும்.

(iii) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் 3ஆவது துணைவிதிக்கு அமைவாக செயலாற்ற நகரசபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ள ஏதேனும் சந்தர்ப்பத்தில், அத்தகைய கேள்விப்பத்திர கோரல்களுக்கிணங்க கேள்விப்பத்திர விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிக்க செல்லுபடியற்றதாகியுள்ள உடன்படிக்கையின் ஒரு கட்சிக்காரரான கட்டணம் சேகரிப்பவருக்கு உரிமை இருத்தல் வேண்டும்.

(9)

i. விற்பனைக் கொட்டிலைப் பாவித்தல் அல்லது கையாளல் தொடர்பாக அனுமதிச்சீட்டு வியோகிக்கப்பட வேண்டிய விதம்;

ii.அத்தகைய அனுமதிச்சீட்டுக்காக பணம் அறவிடப்படுகின்ற விதமும் உச்சப் பணத்தொகையும்;

iii. கட்டணம் சேகரிப்பவரால் உடன்படிக்கை செய்துகொள்ளப்படுகின்ற வருடத்திற்காக பிரதேச சபைக்குச் செலுத்த வேண்டிய முழுப் பணத்தொகை;

iv. அத்தகைய வருடாந்தப் பணத்தொகையைச் சமமான பன்னிரண்டு தவணைகளில் பிரதேச சபைக்குச் செலுத்த வேண்டுமென்பதும் ஒரு தவணைப் பணத்தின் பெறுமதியும் ;

v. ஒவ்வொரு மாதத்திற்காகவும் செலுத்த வேண்டிய பணத்தொகையை பிரதேச சபைக்குச் செலுத்த வேண்டிய திகதி;

vi. உரிய தினத்தில் மாதாந்த பணத்தொகையைச் செலுத்தத் தவறுமிடத்து அத்தகைய பணத்தொகையில் நூற்றுக்கு பத்து வீதத்திற்குச் சமமான தொகையை தாமதக் கட்டணமாக பிரதேச சபைக்குச் செலுத்தக் கட்டணம் சேகரிப்பவர் கட்டுப்படுகிறார் என்பது;

vii. பிரதேச சபைக்குச் செலுத்த வேண்டிய கட்டணத்தை மூன்று மாதங்களுக்கு மேலாக செலுத்தத் தவறுமிடத்து 8ஆவது துணைவிதியின் பணிப்புகளுக்கு இணங்க உடன்படிக்கையை இரத்துச் செய்யக் கட்டுப்படுவதாகவும், அத்தகைய உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டதாக செயலாளரிடமிருந்து கடித மூலமான அறிவித்தல் கிடைத்த தினத்தில் இருந்து அத்தகைய சந்தையில் விற்பனைக் கொட்டில்களைப் பாவிக்கவோ கையாளவோ ஆட்களுக்கு அனுமதிச்சீட்டுக்களை விநியோகிக்கவும் அத்தகைய அனுமதிச்சீட்டுக்களுக்காக பணம் அறவிடுவதற்கும் கட்டணம் சேகரிப்பவருக்கு அளிக்கப்பட்டிருந்த அதிகாரம் முடிவுறுத்தப்படுகின்றதென்பது;

உடன்பட்ட நிபந்தனைகளாக உள்ளடக்க வேண்டியது பிரதேச சபையின் கருமமாகும்.

(10) கட்டணம் சேகரிப்பவரால் பிரதேச சபைக்குச் செலுத்தப்பட வேண்டியுள்ள மாதாந்தக் கட்டணத்தை செலுத்தாமல் தவறவிட்டுள்ள மற்றும் அத்தகைய நிலுவைக் கட்டணம் மூன்று மாதங்களுக்கான கட்டணத்தை விட அதிகமாக உள்ள ஏதேனும் சந்தர்ப்பத்தில் அத்தகைய நிலுவைப் பணத்தையும் தாமதக் கட்டணத்தையும் செலுத்துமாறு கட்டணம் சேகரிப்பவருக்கு கடிதமூலமான அறிவித்தலை ஒப்படைக்க வேண்டியது செயலாளரின் கருமமாக அமைதல் வேண்டும்.

27. இப்பிரிவின் துணைவிதியின் கீழ் விநியோகிக்கப்பட்ட ஒவ்வொரு அனுமதிப்பத்திரமும் முன்கூட்டியே செல்லுபடியற்றதாக்கப்பட்டிருந்தாலேயொழிய அந்த அனுமதிப்பத்திரம் எவ்வாண்டுக்காக விநியோகிக்கப்பட்டதோ அவ்வாண்டின் முப்பத்தோராம் திகதியில் முடிவுறுத்தப்படல் வேண்டும்.

28. தலைவர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரால் ஏதேனும் பொதுச்சந்தையில் அல்லது தனியார் சந்தையில் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள அல்லது காட்சிக்காக வைக்கப்பட்டுள்ள அல்லது களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள ஏதேனும் உணவுப் பொருளின் மாதிரியொன்றை அதற்கான விலையைச் செலுத்திப் பெற்றுக் கொள்வது சட்டமுறையானதாக அமைய வேண்டுமென்பதுடன், எவரேனுமொருவரால் அத்தகைய கொள்வனவு மறுக்கப்படுதலோ அதற்குத் தடையேற்படுத்தலோ ஆகாது.

29. இப்பிரிவின் துணைவிதிகளின் பணிப்புக்களைப் பரிசீலிக்க தலைவருக்கு அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தருக்குப் பரிசோதிப்பதற்கான அதிகாரம் கிடைக்கின்ற உரிய காலம் என்பது, ஏதேனும் பொதுச்சந்தையை அல்லது தனியார் சந்தையை வியாபார நடவடிக்கைகளுக்காகத் திறந்து வைக்கின்ற எந்தவொரு தருணமும் எனப் பொருள்படும்.

30. பதங்கள் சம்பந்தமாக வேறு பொருள் கோடல் அவசியப்பட்டாலேயொழிய இப்பகுதிக்கான துணைவிதிகளில் -

''வாழ்க்கைத் துணை'' என்பது, எவரேனும் குத்தகை பெறுநரின் மனைவி அல்லது கணவரையும்,

''பொதுச் சந்தை'' என்பது, வியாபாரத்தில் ஈடுபடுவதற்காக அமைக்கப்பட்ட கடை அறை மற்றும் தத்தமது வீட்டுத் தோட்டத்தில் அல்லது வீட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற காய்கறிகள் அல்லது பழங்களை உள்ளடக்கிய வேறு பொருட்கள் அல்லது பண்டங்களை விற்பனை செய்வதற்கான இடங்களை ஏற்படுத்தியுள்ளதும், பிரதேச சபையினால் நிர்மாணிக்கப்பட்டு பேணிவரப்படுகின்ற, ஏதேனும் உற்பத்தியை மொத்தமாகக் கொள்வனவு செய்கின்ற அல்லது விற்பனை செய்கின்ற இடமும் அதில் உள்ளடக்கப்படல் வேண்டும்.

''பிரதம விலைமதிப்பீட்டாளர்'' என்பவர், விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தின் பிரதம விலைமதிப்பீட்டாளர் எனக் கருதப்படுவதுடன் பிரதேச சபை அடங்குகின்ற நிர்வாக மாவட்டத்திற்காக அத்தகைய திணைக்களத்தினால் நியமிக்கப்பட்டுள்ள எவரேனும் உத்தியோகத்தரும் அதில் உள்ளடங்க வேண்டும்.

''குத்தகை பெறுநர்'' என்பது, நகரசபையுடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கை சகிதம் ஏதேனும் பொதுச் சந்தையில் ஏதேனும் கடை அறையினைப் பேணிவருகின்ற ஆள் எனக் கருதப்படல் வேண்டும்.

''விற்பனைக் கொட்டில்'' என்பது, ஏதேனும் சந்தையில் கடை அறைகளிலிருந்து பிரிக்கப்பட்டதும் அத்தகைய பொதுச் சந்தைக்குள்ளே அன்றாடம் வியாபாரத்தை மேற்கொள்வதற்காக அமைக்கப்பட்டுள்ளதுமான ஏதேனும் வாங்கு அல்லது தட்டு அல்லது

பெட்டி போன்றன கருதப்படுவதோடு அத்தகைய பொதுச் சந்தையில் தரையின் மீது கோடுகளால் குறியீட்டு அடையாளமிடப்படுவதன் மூலமாக வியாபார நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள ஏதேனும் இடமும் அதில் உள்ளடங்க வேண்டும்.

''தலைவர்'' என்பது பிரதேச சபையின் தலைவர் என்பதையும்,

''அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்'' என்பது, தலைவரினால் எழுத்து மூலமாக குறித்த கருமத்திற்காக அதிகாரம் கையளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தர் ஒருவரையும்,

குறிக்கும்.

## XXVII. பிரதேச சபை நியாயாதிக்க பிரதேசத்திற்குள் வாகனங்களை நிறுத்தி வைத்தல் தொடர்பான துணை விதிகள்

1. 1987 ஆம் இலக்க 15 வது பிரதேச சபை சட்டத்தின் 122 வது பந்தியுடன் வாசிக்க வேண்டிய குறித்த சட்டத்தின் 126 வது பந்தியின் (viii) (ஏ) உப பந்தியின் கீழ் இத்துணைவிதிகளை ஆக்குவதற்குப் பிரதேச சபைக்கு அதிகாரம் கிடைத்துள்ளது.

2. இப்பகுதியின் துணை விதிகள் பிரதேச சபை நியாயாதிக்க பிரதேசத்தினுள் வாகனங்கள் நிறுத்தி வைப்பதற்கான இடத்தை ஏற்படுத்துதல் மற்றும் அவ்விடத்தில் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்குரிய கட்டணத்தைத் தீர்மானித்து அறவிடுதல் போன்றவற்றை ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணை விதிகளென எடுத்துக்காட்டப்படும்.

3. இத்துணைவிதிகள் பிரதேச சபை எல்லையினுள் வாகனங்கள் நிறுத்தி வைத்தல் தொடர்பான துணைவிதிகளாகக் கருதப்படும்.

4. இங்கு, இதன்பின் தலைவர் என்று கருதப்படும் பிரதேச சபையின் தலைவர், நியாயாதிக்கப் பிரதேசத்தினுள் வாகனத்தை நிறுத்தி வைத்தல் அல்லது வாகனத்தை நிறுத்தி வைத்தலை தடை செய்தல் அல்லது வரையறுத்தல் அல்லது மேற்பார்வை செய்யும் ஏனுமொரு வீதியின், வீதியின் ஒரு பகுதியில், வாகனங்களுக்காக

ஒதுக்கிவைக்கப்பட்டுள்ள ஏதேனும் வாகனங்களை நிறுத்தி வைக்கும் இடங்கள் எனக் குறிப்பிடப்பட்ட அறிவித்தலொன்றை, குறித்த வீதியில் அல்லது, வீதியின் ஒரு பகுதியில் பிரசித்தமான இடத்திலிருந்து தெரியக்கூடியவாறு காட்சிக்கு வைத்தல் வேண்டும்.

5. இத்துணைவிதிகளின் கீழ் தலைவரினால் வழங்கப்படுகின்ற செல்லுபடியான அனுமதிப்பத்திரத்தை தன்னிடம் வைத்திருந்தாலேயொழிய எந்தவொரு நபரும் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் வாகனங்களை நிறுத்தி வைத்தல் ஆகாது.

6. மேற்குறித்த 4 வது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவித்தல் மூலம் வாகனங்களை நிறுத்தல் அல்லது வாகனங்களை நிறுத்துதல் தடைசெய்யப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் வாகன சாரதியினால் ;

   1) எந்தவொரு உத்தியோகத்தரினால் அல்லது அதிகாரம் பெற்ற ஒருவரினால் அவ்வீதியில் அல்லது அவ்வீதியின் பகுதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள அல்லது காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள ஏதேனும் வாகன சமீக்ஞைகளுக்கு அல்லது அறிவித்தல்களுக்கு ஏற்ப செயல்படுதல் அல்லது,

   2) அவ்வீதியின் பகுதியில் அச்சந்தர்ப்பத்தில் உள்ள ஏதேனும் வாகன போக்குவரத்து ஒழுங்குகள் சரியான முறையில் பின்பற்றுகின்றமை அல்லது,

   3) எந்தவொரு நபருக்கும் அவ்வாகனத்திலிருந்து இறங்குவதற்கு அல்லது ஏறுவதற்கு இடமளித்தல் அல்லது,

   4) அவ்வாகனத்திற்கு பொருட்களை ஏற்றுதல் அல்லது இறக்குதலுக்குத் தேவையான காலம் தவிர்ந்த மற்றைய நேரத்தில் அவ்வாகனத்தை வீதியின் அல்லது வீதியின் ஏதேனும் பாகத்தில் நிறுத்தி வைத்தல் ஆகாது.

7. … வது பந்தியின் கீழ் வழங்கப்பட்ட ஒவ்வொரு அனுமதிப்பத்திரத்திற்கும் சபையின் பிரேரனைகளின் மூலம் தீர்மானிக்கப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டணத்தினை அறவிடுதல் வேண்டும்.

8. தலைவரால் பிரதேச சபை நியாயாதிக்கப் பிரதேசத்தினுள் ஏதேனும் வீதியில், வீதியின் ஒரு பகுதியில், பொது இடத்தில் வாகனத்தை நிறுத்தி வைத்திருத்தல், நிறுத்தி வைப்பதைத் தடுத்து, வரையறுத்து, கட்டுப்படுத்தி அறிவித்தலொன்றை காட்சிப்படுத்துதல் வேண்டும்.

9. மேற்குறித்த 4 வது பந்தியின் கீழான அறிவித்தலின் பிரகாரம் வாகனத்தை நிறுத்தி வைப்பதற்காக ஒதுக்கப்படுகின்ற இடங்கள் காலத்திற்குக் காலம் சபையினால் தீர்மானித்து வெளியிடப்படுதல் வேண்டும்.

10. அரச திணைக்களம் அல்லது கூட்டுத்தாபனம், கூட்டுத்தாபனமல்லாத தனியார் சபைகளினால் அல்லது சபையினால் காலத்திற்குக் காலம் நிர்ணயிக்கப்படுகின்ற மாதாந்தக் கட்டணம் அல்லது வருடாந்தக் கட்டணங்களை சபைக்குச் செலுத்தியதன் பின்னர் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு அத்திணைக்களத்திற்கு அல்லது தனியார் சபைக்கு அல்லது தனிநபருக்குச் சொந்தமான மோட்டார் வாகனத்திற்கு மாதாந்த அல்லது வருடாந்த அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

11. இத்துணைவிதியின் கீழ் வழங்கப்படுகின்ற ஒவ்வொரு அனுமதிப்பத்திரமும் அது ஏதேனும் மோட்டார் வாகனத்திற்காக வழங்கப்பட்ட ஒரு அனுமதிப்பத்திரமா என அம்மோட்டார் வாகனத்தை அடையாளப்படுத்தும் இலக்கத்தைக் குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன் அது அவ்வனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கால எல்லைக்கு மட்டும் செல்லுபடியானதாதல் வேண்டும்.

12. இத்துணைவிதிகளின் கீழ் அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக் கொள்ளும் ஒவ்வொரு நபராலும் அவ்வனுமதிப்பத்திரமானது வாகனத்திற்கு வெளியே தெரியக் கூடிய விதத்தில் வாகனத்திற்குள் பிரசித்தமாகத் தெரியக் கூடிய ஒரு இடத்தில் காட்சிப்படுத்தப்படுதல் வேண்டும்.

13. பொலிஸ் உத்தியோகத்தர் அல்லது வாகன கட்டுப்பாட்டாளர் ஒருவரால் வாகனங்களை நிறுத்தி வைக்கும் பொது இடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ஒரு வாகனத்தின் உரிமையாளரிடம் அல்லது சாரதியிடம், அம்மோட்டார் வாகனத்திற்காக வழங்கப்பட்ட வாகனத்தை நிறுத்தி வைக்கும் அனுமதிப்பத்திரத்தைச் சமர்ப்பிக்குமாறு கோரும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவ்வனுமதிப்பத்திரத்தை குறித்த உரிமையாளர் அல்லது சாரதி சமர்ப்பித்தல் வேண்டும்.

14. வாகனங்களை நிறுத்தி வைக்கும் பொது இடத்தில், குறித்த வகுப்பைச் சேர்ந்த அல்லது வகையைச் சேர்ந்த மோட்டார் வாகனத்திற்காக இடம் ஒதுக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் எந்தவொரு நபராலும் அவ்வகுப்பைச் சாராத அல்லது வகையைச் சாராத மோட்டார் வாகனத்தை அவ்விடத்தில் நிறுத்தி வைத்தல் கூடாது.

15. வாகனங்களை நிறுத்தி வைக்கும் பொது இடத்திற்கு உள்ளே செல்லும் அல்லது வெளியே செல்லும் வேறு மோட்டார் வாகனங்களுக்கு இடைஞ்சல் ஏற்படும் வகையில்,

எந்தவொரு நபராலும் வாகனங்களை நிறுத்தி வைக்கும் பொது இடத்தில் தமது மோட்டார் வாகனங்களை நிறுத்தி வைத்தல் கூடாது.

16. வாகனங்களை நிறுத்தி வைப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள பொது இடத்தில் உள்ளே செல்லுவதற்கும் வெளியே வருவதற்கும் வெவ்வேறாக பாதைகளை அமைத்து அது தொடர்பாக அறிவித்தலொன்றின் மூலம் அல்லது சமிக்ஞை பலகை மூலம் அறிவிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் உரிய பாதையில் அன்றி எந்தவொரு மோட்டார் வாகனமும் அவ்விடத்திற்கு உள்ளே செல்லுதல் அல்லது வெளியே செல்லுதல் கூடாது.

17. சங்கிலிகள் அல்லது தூண்கள் அல்லது சங்கிலித் தூண்கள் ஆகிய இரண்டு வகைகளும் வழங்கப்பட்டுள்ள பொது நிறுத்தும் இடங்களில் நிறுத்தப்படுகின்ற மோட்டார் வாகனங்கள் அனைத்தும் அவை வந்துள்ள வரிசைக்கிரமத்தின்படி ஒன்றிற்குப் பின் ஒன்றாக ஒரே பக்கமாக முகம்பார்த்து நிறுத்தி வைக்கப்படுதல் வேண்டும்.

18. மோட்டார் வாகனங்களை நிறுத்தி வைக்கும் பொது இடத்தில் மோட்டார் வாகனத்தை நிறுத்தி வைத்திருக்கும்போது எந்தவொரு நபராலும் அவ்வாகனத்தைக் கழுவுதல் / கழுவுவதற்கு முயலுதல் கூடாது.

19. எந்தவொரு நபராலும் வாகனங்களை நிறுத்தி வைக்கும் பொது இடத்தில் வாகனங்களை அகற்றிக் கொள்வதற்காகத் திருத்தமொன்றை மேற்கொள்ளவேண்டிய தேவையேற்பட்டால் அன்றி வாகனத்தை நிறுத்தி வைக்கும் பொது இடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள மோட்டார் வாகனத்திற்கு எந்தவொரு திருத்தங்களையும் மேற்கொள்ளுதல் கூடாது.

20. இத்துணைவிதிகளின் ஏற்பாடுகள் மீறப்படுதல் குற்றமாவதுடன், அவ்வாறு மீறப்பட்டுள்ள ஒரு நபர் தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு குற்றவாளியாக்கப்பட்டதன் பின்னர் பிரதேச சபைச் சட்டத்தின் 122ஆம் பந்தியின் கீழ் விதிக்கப்பட்டுள்ள தண்டனைக்கு உட்படுதல் வேண்டும்.

21. பதங்கள் தொடர்பாக பிற அர்த்தங்கள் அவசியப்பட்டாலொழிய, இத்துணைவிதிகளில்;

‘‘தலைவர்’’ என்பது அக்காலப்பகுதியில் பிரதேச சபையில் தலைவர் பதவியை வகிக்கும் நபரையும்;

‘‘பொலிஸ் உத்தியோகத்தர்’’ என்பது பொலிஸ் பரிசோதகர் பதவிக்குக் கீழான பதவியொன்றை வகிக்கும் இலங்கைப் பொலிஸ் சேவையின் உத்தியோகத்தரொருவரையும் ;

‘‘வாகனக் கட்டுப்பாட்டாளர்’’ என்பது பொது நிறுத்தி வைக்கும் இடத்தில் மோட்டார் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்காகத் தலைவருக்குப் பதிலாக அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்குத் தலைவரால் அதிகாரமளிக்கப்பட்ட நபரொருவரையும் ;

‘‘மோட்டார் வாகனம்’’ என்பது பாதைகளில் பயன்படுத்துவதற்காகத் தயாரிக்கப்பட்ட இயந்திர ரீதியாக சக்தியை வழங்குகின்ற ஏதேனுமொரு வாகனத்தினையும் ;

‘‘வாகனங்களை நிறுத்தி வைக்கும் பொது இடம்’’ என்பது பிரதேச சபையின் பிரேரணைத் தீர்மானம் ஒன்றின் மூலமாக ஒதுக்கப்படுகின்ற இடத்தினையும்;

குறிக்கும்.

## XXVIII. குளிர்பானத் தொழிற்சாலைகள் பற்றிய துணை விதிகள்

1. 1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 126ஆவது பந்தியின் (ix)(க) உபபந்தியின் கீழ் இத்துணைவிதிகளை உருவாக்குவதற்குப் பிரதேச சபைகளுக்கு அதிகாரம் கிடைத்துள்ளது.

2. குளிர்பானத் தொழிற்சாலைகளை ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல், பரிசோதணை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் போன்றவற்றுக்கு இந்த துணைவிதிகள் விதிக்கப்படுகின்றன.

3. இந்த துணை விதிகள் குளிர்பானத் தொழிற்சாலை தொடர்பான துணை விதிகளாகக் கருதப்படும்.

4. தலைவரினால் குறித்த காலத்திற்காக விநியோகிக்கப்பட்ட செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்டாலொழிய எந்த ஒரு நபரும் குளிர்பானத் தொழிற்சாலையொன்றைக் கொண்டுநடாத்துதல் ஆகாது.

5. இப்பகுதியின் துணைவிதிகளின் கீழ் விநியோகிக்கப்பட்ட எல்லா அனுமதிப் பத்திரங்களும் இப்பிரிவின் துணை விதிகளின் ஏற்பாடுகளுக்கமைய முன்கூட்டியே இரத்துச் செய்யப்பட்டாலன்றி, அது எவ்வருடத்திற்காக விநியோகிக்கப்பட்டதோ அவ்வருடத்தின் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

6. இப்பகுதியின் துணைவிதிகளில் கீழே காட்டப்பட்டுள்ள நிபந்தனைகள் பூரணப்படுத்தப்பட்டிருந்தாலன்றி தலைவரினால் எந்தவோர் ஆளுக்கும் குளிர்பானத் தொழிற்சாலையொன்றைக் கொண்டுநடாத்துவதற்கான அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படல் ஆகாது.

(1) தொழிற்சாலை தூய்மையாகவும் நன்றாகப் பழுதுபார்க்கப்பட்ட நிலையிலும் கொண்டு நடாத்தப்படுதல் வேண்டும்.

(2) எல்லா அறைகளினதும் சுவர்களின் ஆகக்குறைந்த உயரம் 2.14 மீற்றர்களுக்கு குறையாமல் இருத்தல் வேண்டுமென்பதுடன், அச்சுவர்கள் செங்கற்கள், சீமெந்து அல்லது கபூக் கற்களால் கட்டப்பட்டவையாயின் அவை சீமெந்துச் சாந்து பூசப்பட்டிருக்க வேண்டுமென்பதோடு, உட்பக்கங்களுக்கு வர்ணப்பூச்சு பூசப்படுதலும் வேண்டும். இல்லையேல் அலுமினியம் அல்லது வேறு உலோகப் பொருட்களுடன் மரப்பலகைகளை உபயோகித்து சுவர்கள் நிர்மாணிக்கப்பட்டால் மரப் பலகை மீது வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டும்.

(3) கூரை நிலையான பொருட்களை உபயோகித்து வேயப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, கூரையின் ஓரம் நில மட்டத்திலிருந்து குறைந்த பட்சம் 02 மீற்றர் உயரத்தில் இருப்பதுடன், தாழ்வாரம் ஆகக் குறைந்தது ஒரு மீற்றராகவும் இருத்தல் வேண்டும்.

(4) கூரைக்கு உபயோகிக்கப்பட்ட இரும்பு, வேறு உருக்கு அல்லது மரங்களுக்கு மேற்புறத்தில் எண்ணைச் சாயம் அல்லது வர்ணப்பூச்சு பூசப்பட்டு துப்பரவாகப் பேணப்படுதல் வேண்டும்.

(5) தரை சீமெந்திடப்பட்டு சீமெந்தினால் மெருகூட்டப்பட்டோ அல்லது மாபிள் ஓடுகள் பதிக்கப்பட்டோ இருத்தல் வேண்டும்.

(6) தொழிற்சாலையின் சகல கட்டடங்களும் நல்ல காற்றோட்டம் மற்றும் வெளிச்சம் கிடைக்கப்பெறும் வகையில் அமைதல் வேண்டும். எல்லா அறைகளுக்கும் திறந்து வைக்கக்கூடிய யன்னல்கள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, திறக்கும் போது அந்த யன்னல்களின் பரப்பளவு அறையின் தரைப்பகுதியின் பரப்பளவின் பதினைந்திலொரு பங்கிற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.

(7) குளிர்பான தயாரிப்புக்கென உபயோகிக்கப்படும் அறைகளில், வெற்றுப் போத்தல்களைக் கழுவும் இடத்திலிருந்து வெளியேறும் கழிவு நீர் மற்றும் ஊழியர்களின் குளியல் அறைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீர் என்பன தடையின்றி பாய்ந்தோடுவதற்குப் போதுமானளவு வடிகான் முறைகள் ஏற்பாடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(8) குளிர்பான தயாரிப்புக்கு பாவிக்கும் சிரப் வகைகள், வேறு இரசாயனப் பொருட்கள், குளிர்பானங்களைத் தயாரிக்க உபயோகப்படுத்தும் போத்தல்கள் அல்லது வேறு ஏதேனும் பாவனைப் பொருட்களைக் களஞ்சியப்படுத்தி வைப்பதற்கென குறைந்தது, ஒரு தனியான அறை இருத்தல் வேண்டுமென்பதோடு, அந்த அறை எலிகள் மற்றும் வேறு பூச்சி, பிராணிகள் நுழையாதவாறு பேணுவதற்குப்போதியளவு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(9) குளிர்பானங்கள் தயாரிப்பதற்கு உபயோகிக்கும் நீர் மனிதப் பாவனைக்கு உகந்தது என தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினால் வழங்கப்பட்ட தரச் சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டுமென்பதோடு, இத்தரச் சான்றிதழ் குறைந்தது ஒவ்வோர் ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை வீதம் பெறப்படல் வேண்டும். தேசிய நீர் வழங்கள் மற்றும் வடிகாலமைப்பு சபையினால் வழங்கப்படும் நீர் குளிர் பானங்கள் தயாரிக்கப் பயன்படுத்தப்படுமேயானால் அப்படியான தரச் சான்றிதழ் பெறப்பட்டுள்ளதாகக் கருதப்படல் வேண்டும்.

(10) குளிர்பானத் தொழிற்சாலைக்கும் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட கருமங்களுக்கும் பாவிக்கப்படும் நீரைக் களஞ்சியப்படுத்தி வைப்பதாயின், அவ்வாறு களஞ்சியப்படுத்தி வைக்கப்படும் நீர் அசுத்தமாவதைத் தடுப்பதற்குப் போதுமானளவு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(11) வெற்றுப் போத்தல்களைக் கழுவுவதற்குரிய இடம் குளிர் பானங்கள் தயாரிக்கும் அறைகளிலிருந்து தனிவேறான ஒரு இடத்தில் இருத்தல் வேண்டுமென்பதுடன், மேலே 9 ஆம் பந்தியில் குறிப்பிட்டவாறு தரச் சான்றிதழ் வழங்கப்பட்ட நீரையே அதற்காகப் பாவித்தல் வேண்டும்.

(12)குளிர்பான தொழிற்சாலையின் கருமங்களிலிருந்து பிறப்பிக்கப்படும் கழிவுப் பொருட்கள் 14வது துணைவிதியில் குறிப்பிட்டவாறு வகைப்படுத்தி அகற்றுவதற்கேதுவாக தனித்தனியான பாத்திரங்கள் அல்லது தொட்டிகள் இருத்தல் வேண்டும்.

(13)குளிர்பான தொழிற்சாலைஊழியர்களுக்காக குறைந்தது பத்துப் பேருக்கு ஒரு மலசலகூடம் வீதம் இருத்தல் வேண்டுமென்பதோடு, பெண்கள் மற்றும் ஆண்களுக்கென தனிவேறான மலசலகூடங்கள் இருத்தல் வேண்டும். அத்துடன் அம்மலசலகூடங்கள் குளிர்பானங்கள் தயாரிக்கும் அறைகளிலிருந்து குறைந்தது 15 மீற்றர் தூரத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.

(14)குளிர்பானங்கள் தயாரிக்கப் பாவிக்கப்படும் நீர், நிலத்துக்கடியிலுள்ள நீர்த்தொட்டியில் களஞ்சியப்படுத்துவதாயின் அவ்விடத்திலிருந்து 18 மீற்றருக்குக் குறைந்த தூரத்தில் குப்பைக் கிடங்கு, பசளைக் கிடங்கு அல்லது சாம்பல் கிடங்கு இருத்தல் ஆகாது.

7. அனுமதிப்பத்திரம் உடையவரினால்,

(01)6வது துணைவிதியின் (2) ஆம் மற்றும் (4) ஆம் பிரிவுகளில் காட்டப்பட்டுள்ளவாறு வர்ணப்பூச்சு பூசுவதற்கென குறிப்பிடப்பட்ட பகுதிகள், குறைந்த பட்சம் வருடத்திற்கு ஒரு தடவை வீதம் வர்ணப்பூச்சு பூசப்படுதல் வேண்டும்.

(02)குளிர்பானங்களைத் தயாரிப்பதற்கு உபயோகிக்கும் எல்லா அறைகளையும் தினந்தோறும் ஒரு தடவையேனும் கழுவுவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(03)குளிர்பானங்களைத் தயாரிப்பதற்கு உபயோகிக்கும் எல்லா அறைகளும் அவற்றின் சுற்றாடல், வடிகான்கள், மரத்தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் என்பன சுத்தமாகவும் நன்றாகப் பழுதுபார்க்கப்பட்டும் இருத்தல் வேண்டும்.

8. அனுமதிப்பத்திரதாரரால் குளிர்பானத் தயாரிப்புத் தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் குளிர்பான வகைகளை பொதியிடுவதற்கு உபயோகிக்கும் போத்தல்களைச் சுத்தம் செய்கையில்,

(01)அப்போத்தல்களில் முன்னர் ஒட்டப்பட்டிருந்த லேபிள்களை அகற்றுவதற்கும் முதற் தடவைச் சுத்திகரிப்புக்கு ஒரு தொட்டியும்,
அத்துடன்

(02) அந்தப் போத்தல்களை இறுதியாகதச் சுத்தஞ் செய்வதற்கு பிறிதொரு தொட்டியும்,என குறைந்த பட்சம் இரண்டு தொட்டிகள் பாவிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அவற்றை ஓடும் நீரில் சுத்தம் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

9. குளிர்பான பொதியிடலுக்காக கண்ணாடியால் தயாரிக்கப்பட்ட போத்தல்கள் தவிர்ந்த வேறு ஏதேனும் பொதியிடல் வகை அல்லது பொதியிடல் வகைகள் உபயோகிக்கப்படும் சந்தர்ப்பத்தில், அத்தகைய பொதியிடல் வகையானது ஒரு தடவை மாத்திரம் பாவிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அவை சுகாதார பாதுகாப்பு மிக்க பொருட்களால் தயாரிக்கப்பட்ட பொதியிடல் வகையென்பதை உறுதி செய்துகொள்ளல் அனுமதிப்பத்திரம் பெறுநரின் பணியாக இருத்தல் வேண்டும். இச்செயற்பாட்டின் போது அத்தகைய பொதியிடல் பொருட்களை உற்பத்தி செய்பவரால் அல்லது தலைவரினால் வழங்கப்படும் எழுத்து மூலமான சான்றிதழ் போதுமானதெனக் கருதப்படல் வேண்டும்.

10. குளிர்பானங்கள் தயாரிப்பதற்கு உபயோகிக்கப்படும் சிரப் வகைகள் மற்றும் ஏனைய இரசாயனப் பொருட்களின் காலாவதியாகும் தினம், போதியளவு எதிர்காலத்தைக் கொண்டிருந்தாலன்றி, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அப்பொருட்களை குளிர்பானங்களைத் தயாரிக்க உபயோகித்தல் ஆகாது.

11. அனுமதிப்பத்திரம் உடையவரினால்,

(1) ஏதேனும் நோய்த்தொற்று, தொடுகை அல்லது சரும நோயினால் பீடிக்கப்பட்டுள்ள அல்லது அத்தகைய நோயினால் அண்மையில் பீடிக்கப்பட்டிருந்த எந்தவோர் ஆளும் அல்லது அத்தகைய நோயினால் பீடிக்கப்பட்டிருந்த பீடிக்கப்பட்டுள்ள அல்லது அத்தகைய நோயினால் அண்மையில் பீடிக்கப்பட்டிருந்த எந்தவோர் ஆளும் அல்லது அத்தகைய நோயினால் பீடிக்கப்பட்டிருந்த ஒருவருக்கு அண்மையில் பணிவிடை செய்வதில் ஈடுபட்டிருந்த எவரேனும் ஆளும் அத்தகைய நோய்த்தொற்று அல்லது நோய்விருத்திக் காலம் நிறைவடைந்திருந்தாலொழிய எந்தவொரு குளிர்பான தொழிற்சாலையிலும் சேவையில் ஈடுபடுதலும் அல்லது சேவைநிறைவடைந்திருந்தாலொழிய எந்தவொரு குளிர்பான தொழிற்சாலையிலும் சேவையில் ஈடுபடுதலும் அல்லது சேவையில் ஈடுபட்டுள்ள ஒருவரின் உதவியாளராகவோ ஈடுபடுதல் அல்லது ஈடுபடுத்தப்படுதல் அல்லது ஏதேனும் கருமத்தில் ஈடுபட இடமளித்தல் ஆகாது.

(2) நன்றாகக் கழுவிச் சுத்தஞ் செய்யப்பட்ட உடைகளை அணிந்திருந்தாலன்றி எந்தவொரு ஆளினாலும் குளிர்பானத் தொழிற்சாலையில் எவ்வகையிலுமான பணியிலும் ஈடுபடுதல் அல்லது ஈடுபடுத்த இடமளித்தல் ஆகாது.

(3) குளிர்பான தொழிற்சாலையில் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சகல ஊழியர்களையும் குறைந்தது வருடத்திற்கு ஒரு தடவை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தல் அனுமதிப் பத்திரம் பெபற்றுள்ளவரின் கடமையாகும்.

12. குளிர்பானங்கள் தயாரிப்பில் ஈடுபடும் சகல ஊழியருக்கும் பாதுகாப்பான முகக்கவசம், கைக்கவசம் மற்றும் தேவைப்படும் வேறு பாதுகாப்பு அணிகள் வழங்கப்படுதலும், அவ்வூழியர் குளிர்பான தயாரிப்பு பணியில் ஈடுபட்டுள்ள எல்லாச் சந்தர்ப்பத்திலும் பாதுகாப்பு அணிகள் அணிந்திருப்பதை உறுதி செய்து கொள்ளலும் அனுமதிப்பத்திரம் பெற்றுள்ளவரின் பொறுப்பாகும்.

13. குளிர்பானங்கள் தயாரிப்பதற்கு உபயோகிக்கப்படும் சிரப் மற்றும் ஏனைய இரசாயனப் பொருட்களைக் களஞ்சியப்படுத்துவதற்கு ஊடுருவமுடியாத அத்துடன் இலகுவாகச் சுத்தஞ் செய்யக்கூடிய பாத்திரங்கள் உபயோகிக்கப்படல் வேண்டுமென்பதுடன், அப்பொருட்கள் குளிர்பானங்களைத் தயாரிப்பதற்காக, குளிர்பானங்கள் தயாரிக்கும் அறையில் வைத்திருக்க வேண்டுமே தவிர அவற்றை களஞ்சியப்படுத்தும் இடத்திற்கு வெளியே வைத்திருத்தல் ஆகாது.

14. (1)அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் பிறப்பிக்கப்படுகின்ற சகலவிதமான கழிவுப் பொருட்களும் மீண்டும் பாவனைக்கு எடுக்கப்படுமாயின் அன்றி, அக் கழிவுப் பொருட்கள்,

- (xii) உயிர்ச் சிதைவுக் கழிவுப் பொருட்கள்,
- (xiii) கண்ணாடிப் பொருட்கள்,
- (xiv) கடதாசியும் கடதாசி சார்ந்த பொருட்களும்,
- (xv) பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் அல்லது பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் சார்ந்த பொருட்கள்,
- (xvi) இரும்பு மற்றும் ஏனைய உலோகப் பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் ஏனைய உலோகப் பாகங்கள்,
- (xvii) உற்பத்திக்காக உபயோகிக்கப்படும் ஏனைய மூலப் பொருட்களிலிருந்து எஞ்சும் பாகங்கள் அல்லது உற்பத்தியின் போது கிடைக்கின்ற துணை உற்பத்திப் பொருட்கள் அல்லது பாகங்கள்,
- (xviii) ஊறு விளைவிக்கக்கூடிய கழிவுப் பொருட்கள்

என்றவாறு வகைப்படுத்த முடியுமென்பதுடன், அத்தகைய ஒவ்வொரு வகையான கழிவுப் பொருட்களை இடுவதற்குள்ள தனித்தனியான பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில் சேர்த்தல் அனுமதிப் பத்திரம் பெற்றுள்ளவரின் பொறுப்பாகும்.

(2) மேலே (1) ம் பிரிவில் கூறியவாறு வகைப்படுத்தப்பட்ட பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில் போடப்பட்ட கழிவுப் பொருட்கள், நகர சபையின் கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ வேலைத்திட்டத்தின் கீழ் அப்புறப்படுத்தவதாயினன்றி தலைவரினால் பணிக்கப்பட்டவாறு இறுதியான அப்புறப்படுத்தகை இடம்பெறல் வேண்டும்.

15. இப்பிரிவின் துணை விதிகளின் பணிப்புக்களைப் பரிசோதிப்பதற்கு தலைவருக்கு அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தருக்கு பரிசோதனை செய்வதற்குப் பொருத்தமான நேரமாக, தொழிற்சாலையில் தயாரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எந்தவொரு சந்தர்ப்பமும் கருதப்படும்.

16. தலைவரினால் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரால் ஏதேனும் குளிர்பான தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் அல்லது விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள ஏதேனும் குளிர்பான வகையின் மாதிரியொன்றை, அதற்கான விலை கொடுத்து பெற்றுக்கொள்ளல் சட்டரீதியானதாக அமையுமென்பதோடு, எந்தவோர் அனுமதிப்பத்திரம் பெற்றுள்ளவராலும் அத்தகைய கொள்வனை நிராகரித்தல் அல்லது தடை செய்தல் ஆகாது.

17. இப்பிரிவின் துணைவிதிகளின் கீழ் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ள ஏதேனும் குளிர்பான தொழிற்சாலை கொண்டுநடாத்தப்படும் இடம் 6வது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு பணிப்பிற்கும் அமைய நிலவுதல் முடிவுறுமாயின் அல்லது இப்பிரிவின் துணை விதிகளில் வேறு ஏதேனும் துணைவிதியின் பணிப்புக்களுடன் முரண்பாடு எழும் சந்தர்ப்பத்தில் திட்டவட்டமாக குறிப்பிடப்பட்ட தினத்திற்கு முன்னர் அந்த இடத்தை அந்த பணிப்பிற்கு அமைவான நிலைக்கு கொண்டுவருவதற்கு தேவையான சகலவற்றையும் மேற்கொள்ளுமாறு அனுமதிப்பத்திரம் பெறுநருக்கு கட்டளையிடும் அறிவித்தலொன்றை தலைவர் அந்த அனுமதிப்பத்திரம் பெறுநருக்கு வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

18. 17வது துணை விதியில் குறிப்பிட்டவாறான அறிவித்தலொன்றைப் பெற்றுக்கொண்ட எவரேனும் அனுமதிப்பத்திரம் பெறுநரால் அறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினத்திற்கு முன்னர் அவ்வறிவித்தலில் பணிக்கப்பட்டுள்ளவாறு செயற்பட வேண்டும். ஏற்றுக்கொள்ளக்கூடியவாறு விடயங்களை எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனும் சந்தர்ப்பத்தில் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினத்தை நீடிப்பதற்கான தத்துவம் தலைவருக்கு இருத்தல் வேண்டும். எப்படியாயினும் அவ்வாறு நீடிக்கப்படும் காலம் பதினான்கு நாட்களை விஞ்சாததாக இருத்தல் வேண்டும்.

19. 18வது துணைவிதியில் குறிப்பிட்டவாறு அறிவித்தலொன்றைப் பெற்றுக்கொண்ட எவரேனும் அனுமதிப்பத்திரம் பெறுநரால் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினம் அல்லது நீடிக்கப்பட்ட தினத்திற்கு முன்னர் அவ்வறிவித்தலில் பணிக்கப்பட்டுள்ளவாறு செயற்படுவதை தவறவிட்டுள்ள சந்தர்ப்பத்தில் அவ்விடத்திற்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தை தலைவர் இரத்துச்செய்தல்சட்டமுறையானதாதல் வேண்டும்.

20. பதங்கள் சம்பந்தமாக வேறு பொருள்கோடல் அவசியப்பட்டாலொழிய இப்பகுதிக்கான துணைவிதிகளில்

> ‘‘தலைவர்’’ என்பது குறித்த காலத்தில் பிரதேச சபையின் தலைவர் பதவியை வகிப்பவரையும்,
>
> ‘‘அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்’’ என்பது பிரதேச சபைத் தலைவரினால் எழுத்து மூலமாக அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ள எந்தவொரு உத்தியோகத்தரையும்,
>
> ‘‘குளிர்பானம்’’ என்பது பழங்கள், எசன்ஸ், சிரப் போன்ற அனைத்தையும் அல்லது ஒரு வகையை உபயோகித்து தயாரிக்கப்படுகின்றதும் போத்தல்களில் அல்லது வேறு பொதியிடல் வகையில் பொதியிடப்படுகின்ற பானங்கள் எனக் கருதப்படுவதுடன் சோடா பானத்தினையும்,
>
> இது குறிக்கும்.